# ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள்

## 2024 – 2025

**தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**

எண். 76, மவுண்ட் சாலை, கிண்டி, சென்னை – 600 032

# பொருளடக்கம்


| அத்தியாயம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|

## பிரிவு – I

## ஆண்டறிக்கை – 2024 - 2025

### அத்தியாயம் – I

### முன்னுரை

| | | |
|---|---|---|
| 1.1 | தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய உருவாக்கம் | 1 |
| 1.2 | செயல்பாடுகள் | 2 |

### அத்தியாயம் – II

### வாரியத்தின் நிர்வாக அமைப்பு

| | | |
|---|---|---|
| 2.1 | வாரியத்தின் அமைப்பு | 5 |
| 2.2 | நிறுவன அமைப்பு | 7 |
| 2.3 | ஆய்வகங்கள் | 7 |
| 2.4 | வாரிய பணியாளர்களின் விவரம் | 13 |

### அத்தியாயம் – III

### வாரியத்தால் அமைக்கப்பட்ட குழுக்கள்

| | | |
|---|---|---|
| 3.1 | வாரியத்தின் பல்வேறு குழுக்கள் | 17 |
| 3.2 | மாசு அளவு மதிப்பீட்டுக் குழு (மா.அ.ம.கு) | 19 |
| 3.3 | 2024–2025 ஆம் ஆண்டில் குழுக்கள் நடத்திய கூட்டங்களின் விவரம்... | 20 |
| 3.4 | மாவட்ட ஒருங்கிணைப்பு குழு | 21 |

### அத்தியாயம்– IV

### வாரியக் கூட்டங்கள் மற்றும் முக்கிய முடிவுகள்

| | | |
|---|---|---|
| 4.1 | வாரியக் கூட்டங்கள் | 22 |
| 4.2 | வாரியத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் | 22 |

# பொருளடக்கம்


| அத்தியாயம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|

**அத்தியாயம் –V**

**வாரியத்தின் செயல்பாடுகள்**

| | | |
|---|---|---|
| 5.1 | தொழிற்சாலைகளை கண்காணித்தல் மற்றும் இசைவாணை வழங்குதல். | 26 |
| 5.1.1 | தொழிற்சாலைகளின் வகைப்பாடு | 26 |
| 5.1.2 | தொழிற்சாலை ஆய்வு மற்றும் மாதிரிகள் சேகரிப்பின் கால இடைவெளி... | 28 |
| 5.2 | இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை (Online Consent Management and Monitoring System) | 28 |
| 5.3 | பொதுகழிவுநீர்சுத்திகரிப்புநிலையங்கள் | 29 |
| 5.3.1 | தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கான பொதுக் கழிவுநீர்சுத்திகரிப்புநிலையங்கள் | 30 |
| 5.3.2 | துணி சலவை மற்றும் சாயதொழிற்சாலைகளுக்கான பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் | 32 |
| 5.3.3 | மின் முலாம் பூசும் தொழிற்சாலைகளில் உள்ள தொழிற் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் | 35 |
| 5.3.4 | பிற பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | 35 |
| 5.3.5 | பொது கடல் சார் கழிவுநீர் வெளியேற்ற திட்டம் | 35 |
| 5.4 | கழிவு மேலாண்மை | 36 |
| 5.4.1 | திடக்கழிவு மேலாண்மை | 36 |
| 5.4.2 | உள்ளாட்சி அமைப்புகளின் பொது வடிகால் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் | 37 |
| 5.4.3 | கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை | 42 |
| 5.4.4 | பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை | 43 |
| 5.4.5 | தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மேலாண்மை | 63 |
| 5.4.6 | மருத்துவக் கழிவு மேலாண்மை | 70 |
| 5.4.7 | மின் கழிவு மேலாண்மை | 73 |
| 5.4.8 | மின்கல கழிவுகள் மேலாண்மை | 74 |

**அத்தியாயம் –VI**

**சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டங்கள்**

| | | |
|---|---|---|
| 6.1 | காற்றின் தன்மை கண்காணிப்பு | 75 |
| 6.1.1 | சென்னை நகரில் சுற்றுப்புற காற்றின் தரம் கண்காணித்தல் | 75 |
| 6.1.2 | தமிழ்நாட்டில் பெரிய நகரங்களில் சுற்றுப்புற காற்றின் தரம் கண்காணித்தல் | 76 |
| 6.1.3 | நடமாடும் தொடர் காற்றுத்தர கண்காணிப்பு நிலையம் | 78 |
| 6.1.4 | பண்டிகைக் காலங்களில் சுற்றுச்சூழல் மாசு கண்காணிப்பு | 79 |
| 6.1.5 | ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம் | 79 |

# பொருளடக்கம்


| அத்தியாயம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 6.1.6 | காற்று தரம் எட்டாத நகரங்கள் | 80 |
| 6.2 | நீர் கண்காணிப்பு திட்டம் | 81 |
| 6.2.1 | தேசிய நீர் தர கண்காணிப்பு திட்டம் | 83 |
| 6.2.2 | சென்னை மாநகர நீர்வழி கண்காணிப்பு திட்டம் | 86 |
| 6.2.3 | கடற்கரையோர நீர் தர கண்காணிப்பு | 87 |
| 6.2.4 | மாசடைந்த ஆற்று பகுதிகள் | 88 |
| 6.3 | தேசிய சுற்றுப்புற ஒலி அளவு கண்காணிப்பு திட்டம் | 89 |
| 6.4 | வாகனப்புகை கண்காணிப்பு | 90 |

**அத்தியாயம் –VII**

**சட்ட நடவடிக்கைகள்**

| | | |
|---|---|---|
| 7.1 | முன்னுரை | 91 |
| 7.2 | பசுமை தீர்ப்பாயம் | 91 |
| 7.3 | மேல்முறையீட்டு ஆணையம் | 92 |
| 7.4 | தேசிய பசுமைத் தீர்ப்பாயம் | 92 |
| 7.5 | சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு விதி மீறல் வழக்குகள் | 93 |
| 7.6 | முக்கியமான தீர்ப்புகள் / உத்தரவுகள் | 93 |
| 7.6.1 | மாண்புமிகு உச்ச நீதிமன்றம் | 93 |
| 7.6.2 | மாண்புமிகு உயர்நீதிமன்றம் | 94 |
| 7.6.3 | மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம் (தென்மண்டலம்), சென்னை | 97 |
| 7.7 | சுற்றுச்சூழல் தரநிலைகளை நிறைவேற்றத் தவறியதற்கு எதிரான நடவடிக்கை | 98 |
| 7.7.1 | அங்கிகரிக்கப்படாத தொழிற்சாலைகளை தகர்க்கப்பட்ட விவரம் | 99 |
| 7.7.2 | சுற்றுச்சூழல் இழப்பீடு வசூலித்தல் | 99 |

**அத்தியாயம் –VIII**

**சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம்**

| | | |
|---|---|---|
| 8.1 | சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் | 101 |
| 8.2 | ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை சுற்றுச்சூழல் பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் பயிற்சிகள் | 102 |

# பொருளடக்கம்


| அத்தியாயம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | **அத்தியாயம் –IX.** | |
| | **சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பொது மக்கள் பங்கேற்பு** | |
| 9.1 | சுற்றுச்சூழல் விழிப்புணர்வு | |
| 9.2 | பொதுமக்கள் பங்கேற்பு | 108 |
| | **அத்தியாயம் –X** | |
| | **வாரியம் ஆற்றும் இதர முக்கிய பணிகள்** | |
| 10.1 | மிக்சாம் புயல் காரணமாக தி/ள். சென்னை பெட்ரோலிய எண்ணெய் கழகத்தின் (CPCL) வளாகத்திலிருந்து எண்ணெய் கசிவு ஏற்பட்டதை தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய குறிப்பு | 110 |
| 10.2 | தி/ள்.கோரமண்டல் இண்டர்நேஷனல் லிமிடெட், எண்ணூர், தொழிற்சாலையில் ஏற்பட்ட அம்மோனியா வாயு கசிவு பற்றிய குறிப்பு | 112 |
| 10.3 | மணலி–எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துயிரமைப்பு மன்றம் | 115 |
| 10.4 | தமிழ்நாட்டில் உள்ள கல் உடைக்கும் தொழிற்சாலைகள் மற்றும் எம்–சாண்டு தொழிற்சாலைகள் நிலை தொடர்பான குறிப்பு | 117 |
| 10.5 | கோயம்புத்தூர், தடாகம் மற்றும் தடாகம் அல்லாத பகுதிகளில் அமைந்துள்ள செங்கல் சூளைகள் பற்றிய குறிப்பு | 118 |
| 10.6 | தி/ள். தமிழ்நாடு குரோமேட்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் (டிசிசிஎல்) நிறுவனம் ராணிப்பேட்டை பற்றிய குறிப்பு | 119 |
| 10.7 | தி/ள். இந்துஸ்தான் யூனிலிவர் லிமிடெட், கொடைக்கானலில் பற்றிய குறிப்பு | 121 |
| 10.8 | தி/ள். பாரத் பெட்ரோலியம் கார்பரேஷன் லிமிடெட், தண்டையார் பேட்டை, சென்னை பற்றிய குறிப்பு | 123 |
| 10.9 | சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்யப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை | 124 |
| 10.10 | பொது மக்கள் கேட்புரை | 127 |
| 10.11 | புகார் பிரிவு | 131 |
| 10.12 | மற்ற துறைகளுக்கு நிதியளித்தல் | 132 |
| 10.13 | அலுவலக கட்டிடங்கள் கட்டுமானம் | 135 |
| 10.14 | தகவல் பெறும் உரிமை சட்டப் பிரிவு | 135 |
| 10.15 | நூலகம் | 137 |
| 10.16 | சுற்றுச்சூழல் அறிக்கை | 137 |
| 10.17 | வாரியத்தின் இணையவழி சேவைகள் | 138 |
| 10.18 | நீடித்த வளர்ச்சி இலக்குகள் | 139 |

# பொருளடக்கம்

| அத்தியாயம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|

## இணைப்புகள்


| | | |
|---|---|---|
| I | நிர்வாக அமைப்பு ........................................ | 144 |
| II | வாரியத்தின் அலுவலகங்கள் ........................................ | 145 |
| III A | ஆய்வகங்களின் செயல்பாடு (ஏப்ரல் 2024 – மார்ச் 2025) – நீர் மாதிரிகள் | 146 |
| III B | ஆய்வகங்களின் செயல்பாடு (ஏப்ரல் 2024 – மார்ச் 2025) – காற்று மாதிரிகள் / ஒலி ஆய்வு ........................................ | 147 |
| IV | வாரிய அலுவலர்களின் எண்ணிக்கை (வருடவாரியாக) ........................................ | 148 |
| V | வாரிய ஆளுகையின் கீழ் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை (மாவட்ட அலுவலகம் வாரியாக) ........................................ | 149 |
| VI A | தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் காற்றின் தன்மை–தேசிய காற்று மண்டலத் தர கண்காணிப்பு திட்டத்தின் – வருடாந்திர காற்றுத்தர சராசரி அளவுகளின் அட்டவணை – 2024–2025 ........................................ | 150 |
| VI B | தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் காற்றின் தன்மை–தேசிய காற்று மண்டலத் தர கண்காணிப்பு திட்டத்தின் – வருடாந்திர காற்றுத்தர சராசரி அளவுகளின் அட்டவணை – 2024–2025 ........................................ | 151 |
| VII | நடமாடும் தொடர் காற்றுத் தர கண்காணிப்பு நிலையத்தின் விவரம் ஏப்ரல் –2024 – மார்ச்–2025 ........................................ | 156 |
| VIII A | தமிழ்நாட்டின் சுற்றுப்புற காற்றின் தரம் – 2024 தீபாவளி பண்டிகையின்போது, தீபாவளி, தீபாவளிக்கு முந்தைய மற்றும் பிந்தைய நாட்களில் தமிழ்நாட்டின் சுற்றுப்புற காற்றின் தரம் – 2024 ........................................ | 159 |
| VIII B | போகி மற்றும் போகிக்கு முந்தைய நாட்களில் பெருநகர சென்னை மாநகராட்சியில் சுற்றுப்புற காற்றின் தரம் – 2025 ........................................ | 162 |
| IX | ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரையிலான காலகட்டத்தில் தேசிய நதி பராமரிப்பு திட்டத்தின் கீழ் நதி நீர் தரத்தின் நிலை அடையார் &கூவம் ........ | 163 |
| X | காவிரி ஆற்று நீர் தரம் (தேசிய நீர் தர கண்காணிப்பு திட்டத்தின் கீழ்) ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 ........................................ | 164 |
| XI | தாமிரபரணி ஆற்று நீர் தரம் (தேசிய நீர் தர கண்காணிப்பு திட்டத்தின் கீழ்) ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 ........................................ | 167 |
| XII | அமராவதி மற்றும் பாலாறு ஆற்றுநீர் தரம் (தேசிய நீர் தர கண்காணிப்பு திட்டத்தின் கீழ்) ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 ........................................ | 168 |
| XIII | பவானி – ஆற்றுநீர் தரம் (தேசிய நீர் தர கண்காணிப்பு திட்டத்தின் கீழ்) ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 ........................................ | 169 |
| XIV | வெண்ணாறு, வைகை, திருமணிமுத்தாறு, சரபங்கா மற்றும் வசிஸ்டா ஆறுகளின் நீர் தரம் (தேசிய நீர் தர கண்காணிப்பு திட்டத்தின் கீழ்) ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 ........................................ | 170 |
| XV | ஏரிகளின் நீரின் தன்மை (தேசிய நீர் தர கண்காணிப்பு திட்டத்தின் கீழ்) ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 ........................................ | 171 |

# பொருளடக்கம்


| அத்தியாயம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| XVI A | 2024–2025 – ஆம் ஆண்டின் அடையாறு ஆற்றுநீரின் தன்மை (சென்னை நீர்வழிகள் தர கண்காணிப்பு திட்டம்) | 162 |
| XVI B | 2024–2025 ஆம் ஆண்டின் பக்கின்காம் கால்வாய் நீரின் தன்மை (சென்னை நீர்வழிகள் தர கண்காணிப்பு திட்டம்) | 174 |
| XVI C | 2024–2025 ஆம் ஆண்டின் கூவம் ஆற்றுநீரின் தன்மை (சென்னை நீர் வழிகள் தர கண்காணிப்பு திட்டம்) | 175 |
| XVI D | 2024–2025 ஆம் ஆண்டின் ஓட்டேரி கால்வாய் நீரின் தன்மை (சென்னை நீர்வழிகள் தர கண்காணிப்பு திட்டம்) | 177 |
| XVII | ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரையிலான தேசிய நீர் தர கண்காணிப்பு திட்டத்தின் கடலோர நீரின் பகுப்பாய்வு வருடாந்திர அறிக்கை | 178 |
| XVIII A | சென்னை மாநகரத்தின் ஒலி மாசு அளவின் வருடாந்திர அறிக்கை ஏப்ரல் 2024–மார்ச் 2025 –(பகல்நேரம்) | 181 |
| XVIII B | சென்னை மாநகரத்தின் ஒலி மாசு அளவின் வருடாந்திர அறிக்கை ஏப்ரல் 2024–மார்ச் 2025– (இரவு நேரம்) | 182 |


# பிரிவு – II

## ஆண்டு கணக்குகள் – 2024-2025


| | | |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உறுப்பினர்களுக்கு 2025, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் நிதி ஆண்டுக்குரிய தனிப்பட்ட தணிக்கையாளர்களின் அறிக்கை. | 183 |
| 2 | 2025, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு | 190 |
| 3 | 2025, மார்ச்31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு | 191 |
| 4 | 2025, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இருப்புநிலைக் குறிப்பு | 193 |
| 5 | 2025, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடைந்த – பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கான விவர அட்டவணை | 196 |
| 6 | 2025, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடைந்த – வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கான விவர அட்டவணை – செலவுகள் | 198 |
| 7 | 2025, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடைந்த – இருப்புநிலைக் குறிப்பிற்கான விவர அட்டவணை | 203 |
| 8 | 2025, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடைந்த ஆண்டுக்கான – கணக்குகளின் பகுதிக்குறிப்புகள் | 206 |


-oOo-

# அத்தியாயம் – I

## முன்னுரை

### 1.1 தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய உருவாக்கம்

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 (மத்திய சட்டம் 6)–ன் படி, தமிழ்நாடு அரசு (சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் கீழ் 19–02–1982 நாளிட்ட அரசாணை எண்.340–ன் மூலம்) தமிழ்நாடு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு வாரியம் ஏற்படுத்தப்பட்டது. இது தொடர்பான அறிவிக்கை, 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி 27–ம் நாள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டு, அதே நாளில் வாரியம் செயல்பட தொடங்கியது. தமிழ்நாடு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள் 1983 வெளியிடப்பட்டதை தொடர்ந்து, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியமானது பல்வேறு சுற்றுச்சூழல் சட்டங்கள், விதிகள் மற்றும் அறிவிப்புகளை செயல்படுத்தும் சட்டபூர்வமான ஒழுங்குமுறை அமைப்பாகும். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்புடைய பல்வேறு சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் விதிகள் பின்வருமாறு.:

- திருத்தப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974
- தமிழ்நாடு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 1983
- திருத்தப்பட்ட காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981
- தமிழ்நாடு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 1983
- சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 மற்றும் இதன் அடிப்படையில் இயற்றப்பட்ட விதிகள் கீழ்கண்டவாறு:
    - சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகள், 1986
    - தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் உற்பத்தி, சேமிப்பு மற்றும் இறக்குமதி விதிகள், 1989
    - பறக்கும் சாம்பல் பயன்படுத்துதல் அறிவிக்கை, 1999
    - ஒலி மாசு (ஒழுங்கமைவு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 2000
    - சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006
    - கடலோர ஒழுங்குமுறை மண்டலம் அறிவிக்கை, 2011

# I. முன்னுரை

- ○ 2022 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள், 2016
- ○ மருத்துவக் கழிவுகள் மேலாண்மை விதிகள், 2016
- ○ திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016
- ○ கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவு மேலாண்மை விதிகள், 2016
- ○ மின்கலக் கழிவு மேலாண்மை விதிகள், 2022
- ○ மின்கழிவு (மேலாண்மை) விதிகள், 2022
- ○ பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள், 2024

**தற்போது தமிழ்நாடு அரசின், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் நிர்வாக அதிகாரத்தின் கீழ் வாரியம் செயல்பட்டு வருகிறது.**

**1.2 செயல்பாடுகள்**

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981ன் கீழ் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் முக்கியப் பணிகள் பின்வருமாறு:

- நீர் நிலைகள் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுக்க, கட்டுப்படுத்திட மற்றும் குறைக்க, ஒருமித்த விரிவான பாதுகாப்புடன் கூடிய செயலாக்கத்தினை திட்டமிடல் மற்றும் அதனை செயல்படுத்துதல்.
- நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் குறித்த வழிமுறைகள் பற்றிய கருத்துரைகளை மாநில அரசுக்கு வழங்குதல்.
- நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் தொடர்புடைய தகவல்களைத் திரட்டுதல் மற்றும் பரப்புதல்.
- இச்சட்டத்தின்படி இசைவாணை வழங்க தேவையாக இருக்கக்கூடிய தகவல்களான அன்றாட கழிவுநீர் மற்றும் தொழிற்கழிவு நீரின் உற்பத்தி, அதனை சுத்திகரிப்பதற்கான சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவுதல் மற்றும் அவற்றின் அளவு குறிப்பீடுகள் மற்றும் பிற விபரக் குறிப்புகள் மற்றும் சுத்திகரிப்பு தொடர்புடைய பிற பணிகள் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட அன்றாட கழிவுநீர் மற்றும் தொழிற்கழிவு நீரின் வெளியேற்றம் போன்றவற்றை ஆய்வு செய்தல்.
- காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள தொழிற்சாலைகளின் உற்பத்தி முறையில் மாசினை குறைக்கும் உபகரணங்களை ஆய்வு செய்து தொழிற்சாலைகளுக்கு வழிகாட்டுதல்.

# I. முன்னுரை

- குறிப்பிட்ட கால இடைவெளி எல்லைக்குள், காற்று மாசுபடும் பகுதிகள் ஆய்வு செய்தல், அதுவும் அவை தேவையெனில் காற்றின் தன்மை குறித்து கணிப்பு செய்து அதற்குரிய நடவடிக்கை எடுத்தல், அந்த இடங்களில் காற்று மாசடைதலை தடுத்தல் அல்லது குறைத்தல்.
- தொழிற் கழிவுநீர் அல்லது அன்றாட கழிவுநீர் தர அளவுகளை நீர் நிலைகளில் சேரும் இடத்தின் அளவுக்கேற்ப நிர்ணயம் செய்தல், மாற்றி அளவிடுதல் அல்லது நீக்குதல் செய்தல் மற்றும் அம்மாநிலத்தின் நீர் அமைப்புகளை வகைப்படுத்துதல்.
- மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் கலந்தாராய்ந்து தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் புகையின் தரம் மற்றும் வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் புகையின் தரம் மற்றும் பிற ஆதாரங்களிலிருந்து வெளியேற்றப்படும் வாயுக்கழிவுகளுக்கான தரம் ஆகியவற்றை நிர்ணயம் செய்தல்.
- அன்றாட கழிவுநீர் மற்றும் தொழிற்சாலை கழிவுநீரை சிறந்த முறையில் பொருளாதார ரீதியாக உகந்த வழியில் சுத்திகரிப்பு செய்வதற்கான தொழில்நுட்பத்தை உருவாக்குதல்.
- அன்றாட கழிவுநீர் மற்றும் தொழிற்கழிவு நீரினை விவசாய பயன்பாட்டுக்கு உள்ளாக்குவதற்கான வழிமுறைகளை உருவாக்குதல்.
- அன்றாட கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீரினை நிலத்தில் வெளியேற்றுவதற்கான வழிமுறைகளை உருவாக்குதல்.
- மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் இணைந்து, நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுக்க, கட்டுப்படுத்த மற்றும் குறைப்பது சம்பந்தமான திட்டங்களில் ஈடுபட்டுள்ள மற்றும் ஈடுபடுத்தப்படும் நபர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் விழிப்புணர்வு கல்வி நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- நீர் மாசுபடுதலை தடுத்தல், கட்டுப்படுத்துதல் அல்லது குறைத்தலுக்குரிய ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகள் ஆகியவற்றிக்கு ஊக்கம் அளித்தல்.
- தொழிற்சாலைகள் அமையவிருக்கும் இடம் நீர்நிலைகள் அல்லது காற்று மாசு ஏற்படுத்தக்கூடுமாயின் அது பற்றி மாநில அரசுக்கு அறிவுறுத்தல்.
- வாரிய செயல்பாடுகளை சீரியமுறையில் மேற்கொள்ளுவதற்கும் மற்றும் நீர்நிலைகளின் நீர் மாதிரிகள், அன்றாட கழிவுநீர் மற்றும் தொழிற்சாலை கழிவுநீர் மாதிரிகள் பகுப்பாய்வு செய்வதற்கும் ஆய்வகங்கள் அமைத்தல் அல்லது ஆய்வகங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல்.

## I. முன்னுரை

- மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மாநில அரசு குறிப்பிடும் பிற பணிகளையும் நிறைவேற்றுதல்.

தமிழ்நாடு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 1983 விதி எண் 37–ன்படி ஒவ்வொரு ஆண்டும் வாரியத்தின் ஆண்டு அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அதன்படி 2024–2025 ஆம் நிதி ஆண்டிற்கான ஆண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு பின்வரும் அத்தியாயங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

-oOo-

## அத்தியாயம் – II

## வாரியத்தின் நிர்வாக அமைப்பு

### 2.1 வாரியத்தின் அமைப்பு

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974, பிரிவு 4 ன் படி மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியம் கீழ்க்கண்டவாறு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

**(அ)** சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான சிறப்பு நுண்ணறிவு அல்லது செயல்முறை திறனாய்வு அல்லது நிர்வாக செயல்பாடு சிறப்பறிவு பெற்றவராக மாநில அரசு நியமிக்கக்கூடிய தலைவர் பதவிக்குரியவராக இருத்தல் வேண்டும். எனினும் தலைவர் முழு நேரம் அல்லது பகுதி நேர பொறுப்புடன் இருக்க மாநில அரசு ஆணை பிறப்பிக்கலாம். மாண்புமிகு உச்சநீதிமன்றம் தனது சி.எ.எண்.1359/2017, வழக்கு, 22.09.2017 தேதிய ஆணைக்கு இணங்க, தமிழ்நாடு அரசு தனது அரசாணை (எம்.எஸ்) எண்.45, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை (சு.சூ.2) துறை தேதி: 13.05.2019 மூலம் வாரிய தலைவர் மற்றும் உறுப்பினர் செயலர் பதவிக்கான கல்வித்தகுதி மற்றும் அனுபவம் ஆகியவற்றை குறிப்பிடும் விதிகளை "வாரிய தலைவர் மற்றும் உறுப்பினர் செயலர் நியமனத்திற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய விதிகள், 2019"–ல் அறிவிக்கை செய்தது.

**(ஆ)** மாநில அரசு சார்புடைய அலுவலர்கள் ஐந்து நபர்களுக்கு அதிகமாகாமல் உறுப்பினர்களாக நியமிக்கலாம்.

**(இ)** மாநில அரசு, மாநிலத்திற்குள் செயல்படும் உள்ளாட்சி பிரதிநிதிகளை வாரிய (ஐந்து நபர்களுக்குள்) உறுப்பினர்களாக நியமனம் செய்யலாம்.

(ஈ) அரசு சாரா உறுப்பினர் (3 நபர்களுக்குள்) விவசாயம், மீன்வளம், தொழில் போன்றவற்றில் ஈடுபாடு உடையவர்களை உறுப்பினராக நியமனம் செய்யலாம்.

**(உ)** அரசு நிர்வகிக்கும் தொழிற்சாலைகள் அல்லது தொழிற்கழகங்களை சார்ந்த பொறுப்புடையவர்கள் இருவரை உறுப்பினராக மாநில அரசு நியமனம் செய்யலாம்.

## II வாரியத்தின் நிர்வாக அமைப்பு

**(ஊ)** வாரியத்தின் முழுநேர பணியின் பொருட்டு உறுப்பினர் செயலர் பதவிக்கு மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நோக்குடைய பொறியியல், அறிவியல் அல்லது மேலாண்மை சிறப்பறிவு பெற்றவரை மாநில அரசு நியமனம் செய்ய வேண்டும்.

**01.04.2023 முதல் 31.03.2024 வரை வாரிய உறுப்பினர்களாக செயல்பட்டவர்களின் விபரம் கீழ்கண்டவாறு:**

| வ. எண் | வாரிய உறுப்பினர்கள் | | பொறுப்பு | முதல் | வரை |
|---|---|---|---|---|---|
| | பதவி | பெயர் | | | |
| 1. | தலைவி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், | முனைவர் . ஜெயந்தி. M, இ.வ.ப., | உறுப்பினர் | 1.4.2024 | 31.3.2025 |
| 2. | அரசு கூடுதல் தலைமை செயலாளர் /அரசு முதன்மைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை | திருமதி. சுப்ரியா சாஹூ, இ.ஆ.ப., | உறுப்பினர் | 1.4.2024<br>9.2.2025 | 30.6.2024<br>31.3.2025 |
| | | முனைவர் . செந்தில்குமார். P, இ.ஆ.ப. | | 1.7.2024 | 8.2.2025 |
| 3. | சிறப்புச் செயலாளர்/ துணைச் செயலாளர், நிதித் துறை | திரு. சிபி ஆதித்யா செந்தில்குமார், இ.ஆ.ப. | உறுப்பினர் | 1.4.2024 | 8.9.2024 |
| | | திரு. G.K. அருண் சுந்தர் தயாளன், ஐ.ஏ.எஸ். | | 9.9.2024 | 31.3.2025 |
| 4. | நிர்வாக இயக்குனர் (ம) தலைமை நிர்வாக அதிகாரி தமிழ்நாடு தொழில்துறை வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு பணியகம் | திரு வி.விஷ்ணு, இ.ஆ.ப. | உறுப்பினர் | 1.4.2024 | 31.12.2024 |
| | | டாக்டர். தாரேஸ் அஹமது, இ.ஆ.ப., | உறுப்பினர் | 31.1.2025 | 31.3.2025 |
| 5. | இயக்குனர், நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநரகம் | திரு. பி.கணேசன், இ.ஆ.ப. | உறுப்பினர் | 1.4.2024 | 31.3.2025 |
| 6. | பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குனர் | டாக்டர் டி.எஸ். செல்வவிநாயகம், எம்.டி., டிபிஎச், டிஎன்பி., | உறுப்பினர் | 1.4.2024 | 31.3.2025 |
| 7. | இயக்குனர் தொழில்துறை பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகம், | திரு எம்.வி.செந்தில் குமார், எம்.இ., | உறுப்பினர் | 1.4.2024 | 22.8.2024 |
| | | திரு. S. அனந்த், எம்.இ., F.I.E., | உறுப்பினர் | 23.8.2024 | 31.3.2025 |

## II வாரியத்தின் நிர்வாக அமைப்பு

| வ. எண் | வாரிய உறுப்பினர்கள் | | பொறுப்பு | முதல் | வரை |
|---|---|---|---|---|---|
| | பதவி | பெயர் | | | |
| 8. | உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் | திரு.ஆர்.கண்ணன், எம்.டெக்., | உறுப்பினர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் | 1.4.2024 | 31.3.2025 |
| 9. | பொது மேலாளர் (திட்டம்) சிப்காட் | திருமதி. எச்.பிரபாவதி, பி.இ., | உறுப்பினர் | 1.4.2024 | 5.11.2024 |
| | | திரு. A.R சந்திரமோகன், பி.இ., எம்.பி.ஏ., | உறுப்பினர் | 6.11.2024 | 31.3.2025 |
| 10 | அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் பிரதிநிதிகள் | திரு. கே. தக்ஷிணாமூர்த்தி, | அலுவல் சாரா உறுப்பினர் | 1.4.2024 | 31.3.2025 |
| | | திரு. A. அழகரசன், பி.எஸ்சி., | அலுவல் சாரா உறுப்பினர் | 1.4.2024 | 31.3.2025 |
| | | திரு என். தமிழ்மணி, பி.ஏ., | அலுவல் சாரா உறுப்பினர் | 1.4.2024 | 31.3.2025 |

### 2.2 நிறுவன அமைப்பு

தலைமை அலுவலகம், மண்டல அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் என மூன்று அடுக்குகளாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய நிறுவன அமைப்பு செயல்பட்டு வருகிறது. சென்னையினைத் தலைமையிடமாக கொண்ட வாரியம், தலைவரின் தலைமையில் இயங்கி வருகிறது. வாரியம் / வாரிய தலைவர் ஆகியோரால் வரையறுக்கப்பட்ட அதிகாரத்துடன், உறுப்பினர் செயலர், செயல் தலைவராக உள்ளார். தொழிற்நுட்ப பிரிவு, ஆய்வகங்கள், நிதி மற்றும் கணக்கு பிரிவு, பணி மற்றும் நிர்வாக பிரிவு, உள்தணிக்கை பிரிவு என பல்வேறு செயல்பாட்டு பிரிவுகளை கொண்டு வாரியம் இயங்கி வருகிறது. 9 மாவட்டங்களில் உள்ள மண்டல அலுவலகங்கள், இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) அவர்களது தலைமையில் செயல்பட்டு வருகின்றன. மேலும் 44 மாவட்டங்களில் உள்ள மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் அனைத்தும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள், 7 பறக்கும் படை அலுவலகங்கள் மற்றும் 2 உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் வாரியம் ஏற்படுத்தியுள்ளது (இணைப்பு I & II).

### 2.3 ஆய்வகங்கள்

சுற்றுச்சூழல் காற்று / நீர் தரத்தினை மற்றும் தொழிற்சாலைகளை கண்காணிக்க வாரியத்திற்கு உதவி செய்யும் வகையில், மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் என இரு அடுக்குகளாக மொத்தம் 18 ஆய்வகங்களை வாரியம் கொண்டுள்ளது.

## II வாரியத்தின் நிர்வாக அமைப்பு

| வ. எண் | ஆய்வகங்களின் பெயர் மற்றும் முகவரி | நிர்வாக எல்லைகள் | ஆய்வகத்தில் அமைந்துள்ள சோதனை கருவிகள் / உபகரணங்கள்/மாதிரிகள் சேமிப்பு மற்றும் ஆய்வக விஞ்ஞானிகறுக்கான பகுப்பாய்வு நிர்ணய இலக்கு முதலியவை |
|---|---|---|---|
| **மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள்** | | | |
| 1 | **சென்னை** மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மவுண்ட் சாலை, கிண்டி, சென்னை–600032 | சென்னை, அம்பத்தூர், ஸ்ரீபெரும்புதூர் | அனாலிட்டிக்கல்பேலன்ஸ், ஏ.ஓ.எக்ஸ் அனலைசர், ஆடோமிக் அப்சார்ப்ஸன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர், பேக்டீரியாலாஜிக்கல் இன்குபேட்டர், பி.ஓ.டி இன்குபேட்டர், சி.ஓ. அனலைசர், சி.ஓ.டி.டைஜிஸ்டர், கண்டக்டிவிட்டி மீட்டர், டிசால்வுடு ஆக்ஸிஜன் மீட்டர், ஃபயிண்டு பர்ட்டிகுலேட் சாம்பிலர் பி.எம்.2.5,பிஃளேம் போட்டோ மீட்டர், எஃப்.டி.ஐ.ஆர், கேஸ் குரோமோட்டோகிராஃப், ஐ.சி.பி.எம்.எஸ், மெர்குரி அனலைசர், மபுல் பர்னேஸ், ஓசோன் அனலைசர், பி.எச். மீட்டர், ரெஸ்பிரபிள்டஸ்ட்சாம்பிலர் பி.எம்.10,ரோட்டரிஇவாப்போரேட்டர், சவுண்ட்லெவல்மீட்டர் ஸ்டாக் மானிடரிங் கிட், டி.கே.என். அனலைசர், டர்பிடிட்டி மீட்டர். யூ.வி. விசிபுள் ஸ்பெக்ட்ரோ போட்டோமீட்டர், வி.ஓ.சிஅனலைசர், விண்டு மானிடரிங் கிட். |
| 2 | **கோயமுத்தூர்** மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், 3–வது &4–வது தளம். எண்.5 ராமசாமிநகர், கவுண்டம்பாளையம், கோயமுத்தூர் – 641 030. | கோயமுத்தூர் & நீலகிரி | அனலிடிக்கல் பேலண்ஸ், ஆடோமிக் அப்சார்ப்ஸன் ஸ்பெக்ட்ரோபோட்டோ மீட்டர் வித் கிராபஃட் பஃர்நேஸ், ஆட்டோமிக் வெதர் ஸ்டேஷன், பி.ஓ.டி இன்குபேட்டர்,சி.ஓ– அனலைசர், சி.ஓ.டி.டைஜிஸ்டர், கண்டக்டிவிட்டி மீட்டர், பஃயிண்டு பர்ட்டிகுலேட் சாம்பிலர் பி.எம்.2.5, பிஃளேம் போட்டோ மீட்டர், மைக்ரோ பேலன்ஸ், ஓசோன் அனலைசர், பி.எச். மீட்டர், ரெஸ்பிரபிள்டஸ்ட்சாம்பிலர் பி.எம்.10, சவுண்ட் லெவல் மீட்டர், ஸ்டாக் மானிடரிங் கிட், டி.கே.என்.அனலைசர், யூ.வி. விசிபுள் ஸ்பெக்ட்ரோபோட்டோ மீட்டர், சீரோ ஹெட் ஸ்பேஸ் எக்ஸ்ட்ராக்டர் பிஃல்ட்ரேஷன் சிஸ்டம். |
| 3 | **கடலூர்** மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், பிளாட் எண்.ஏ3, சிப்காட் இண்டஸ்ட்ரியல் காம்பிளக்ஸ், குடிக்காடு, கடலூர் –607 005 | கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், மயிலாடுதுறை&திருவாரூர் | அனலிடிக்கல் பேலண்ஸ், ஆடோமிக் அப்சார்ப்ஸன் ஸ்பெக்ட்ரோ போட்டோமீட்டர் வித் கிராபஃட் பஃர்நேஸ், பி.ஓ.டி இன்குபேட்டர், சி.ஓ. அனலைசர், சி.ஓ.டி. டைஜிஸ்டர், கண்டக்டிவிட்டி மீட்டர், பஃயிண்டு பர்ட்டிகுலேட் சாம்பிலர் பி.எம்.2.5, பிஃளேம் போட்டோ மீட்டர், ஹுமிடிட்டிசேம்பர், மைக்ரோ பேலன்ஸ், பி.எச். மீட்டர், ஆர்.டி.எஸ் சாம்பிலர் பி.எம்.10, சவுண்ட் லெவல் மீட்டர், ஸ்டாக் மானிடரிங் கிட், டி.கே.என்.அனலைசர், யூ.வி. விசிபுள் ஸ்பெக்ட்ரோபோட்டோ மீட்டர், |

## II வாரியத்தின் நிர்வாக அமைப்பு

| வ. எண் | ஆய்வகங்களின் பெயர் மற்றும் முகவரி | நிர்வாக எல்லைகள் | ஆய்வகத்தில் அமைந்துள்ள சோதனை கருவிகள் / உபகரணங்கள்/மாதிரிகள் சேமிப்பு மற்றும் ஆய்வக விஞ்ஞானிகறுக்கான பகுப்பாய்வு நிர்ணய இலக்கு முதலியவை |
|---|---|---|---|
| 4 | **மதுரை** மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கப்பலூர், திருமங்கலம் தாலூக்கா, மதுரை–625 008. | மதுரை, சிவகங்கை, விருதுநகர்& ராமநாதபுரம் | அனலிடிக்கல் பேலன்ஸ், ஆடோமிக் அப்சார்ப்ஸன் ஸ்பெக்ட்ரோபோட்டோ மீட்டர் வித் கிராப∴ட் ப∴ர்நேஸ்,ஆட்டோ கிலேவ், பேக்டிரியாலாஜிக்கல் இன்குபேட்டர், பி.ஓ.டி இன்குபேட்டர், சி.ஓ. அனலைசர், சி.ஓ.டி.டைஜிஸ்டர், கண்டக்டிவிட்டி மீட்டர், ப∴யிண்டு பர்ட்டிகுலேட் சாம்பிலர் பி.எம்.2.5,பி∴ளேம் போட்டோ மீட்டர்,ம∴ப்லி பர்னேஸ்,ஓசோன் அனலைசர், பி.எச். மீட்டர், ஆர்.டி.எஸ் சாம்பிலர் (பி.எம்.10), செமி மைக்ரோ பேலண்ஸ், சவுண்ட் லெவல் மீட்டர்,ஸ்டாக் மானிடரிங் கிட், டாப் பான் பேலன்ஸ், டி.கே.என்.அனலைசர், டர்பிடிட்டி மீட்டர்,யூ.வி. விசிபுள் ஸ்பெக்ட்ரோபோட்டோ மீட்டர், சீரோ ஹெட் ஸ்பேஸ் எக்ஸ்ட்ராக்டர். |
| 5 | **சேலம்** மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், த.பெ.எண்.457, சிவா டவர், 1/276, மெய்யனூர் மெயின் ரோடு, சேலம் – 635 004. | சேலம், ஈராடு, நாமக்கல், தர்மபுரி | அனலிடிக்கல் பேலண்ஸ்,ஆடோமிக் அப்சார்ப்ஸன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர், பேக்டிரியாலாஜிக்கல் இன்குபேட்டர், பி.ஓ.டி இன்குபேட்டர், சி.ஓ. அனலைசர், சி.ஓ.டி.டைஜிஸ்டர், கண்டக்டிவிட்டி மீட்டர், டிசால்வுடு ஆக்ஸிஜன் மீட்டர், பி∴ளேம் போட்டோ மீட்டர்,புளூ கேஸ் அனலைசர்,ம∴ப்லி பர்னேஸ், ஓசோன் அனலைசர், பி.எச். மீட்டர், பி.எம்.2.5 சாம்பிலர், ரெட்ஸபிரபுள் டஸ்ட் சாம்பிலர்,சவுண்ட் லெவல் மீட்டர்,ஸ்டாக் சாம்பிலர், டி.கே.என். டைஜிஸ்டர்,டர்பிடிட்டி மீட்டர்,யூ.வி–விசிபிள் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர், வி.ஓ.சி. அனலைசர். |
| 6 | **வேலூர்** மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், அக்ஸீலியம் காலேஜ் ரோடு (அக்ஸீலியம் காலேஜ் எதிரில்), காந்தி நகர், வேலூர் –632 006. | வேலூர், வாணியம்பாடி & திருவண்ணா மலை | அனலிடிக்கல் பேலண்ஸ், ஆடோமிக் அப்சார்ப்ஸன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர்,பி.ஓ.டி இன்குபேட்டர், சென்ட்ரி பியூஜ்,சி.ஓ.டி.டைஜிஸ்டர், கண்டக்டிவிட்டி மீட்டர், டிசால்வுடு ஆக்ஸிஜன் மீட்டர், ப∴யிண்டு பர்ட்டிகுலேட் சாம்பிலர் பி.எம்.2.5,பி∴ளேம் போட்டோ மீட்டர்,புளூ கேஸ் அனலைசர், கேஸ் குரோமோட்டோகிரா∴ப்,மைக்ரோ பேலண்ஸ்,ம∴ப்லி பர்னேஸ், பி.எச். மீட்டர், ரெட்ஸபிரபுள் டஸ்ட் சாம்பிலர்பி.எம்.10,சவுண்ட் லெவல் மீட்டர்,ஸ்டாக் மானிடரிங் கிட், டாப் பான் பேலண்ஸ், டோட்டல் ஜெல்தால் நைட்ரஜன் டைஜிஸ்ட்டர், யூ.வி–விசிபிள் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர், |

## II வாரியத்தின் நிர்வாக அமைப்பு

| வ. எண் | ஆய்வகங்களின் பெயர் மற்றும் முகவரி | நிர்வாக எல்லைகள் | ஆய்வகத்தில் அமைந்துள்ள சோதனை கருவிகள் / உபகரணங்கள்/மாதிரிகள் சேமிப்பு மற்றும் ஆய்வக விஞ்ஞானிகறுக்கான பகுப்பாய்வு நிர்ணய இலக்கு முதலியவை |
|---|---|---|---|
| 7 | **திருச்சி** மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், 25, டெவலப்டு பிளாட்ஸ், துவாக்குடி, திருச்சி–15. | திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர்& அரியலூர் | அனலிடிக்கல் பேலண்ஸ், ஆடோமிக் அப்சார்ப்ஸன் ஸ்பெக்ட்ரோ போட்டோமீட்டர் வித் கிராபஃட் பஃர்நேஸ், பேக்டிரியாலாஜிக்கல் இன்குபேட்டர், பி.ஓ.டி இன்குபேட்டர், சி.ஓ.டி.டைஜிஸ்டர், கண்டக்டிவிட்டி மீட்டர், டிசால்வுடு ஆக்ஸிஜன் மீட்டர், பஃயின் பர்ட்டிகுலேட் சாம்பிலர் (பி.எம்.2.5), பிஃளேம் போட்டோ மீட்டர், புளூ கேஸ் அனலைசர், கேஸ் குரோமோட்டோகிராஃப்,மைக்ரோ பேலண்ஸ், பி.எச். மீட்டர், சென்ட்ரி பியூஜ்,ரெஸ்பிரபுள் டஸ்ட் சாம்பிலர்பி.எம்.10,ரோட்டோ எவாப்பிரேட்டர், சவுண்ட் லெவல் மீட்டர்,ஸ்டாக் மானிடரிங் கிட்,டோட்டல் ஜெல்தால் நைட்ரஜன் அனலைசர், யூ.வி–விசிபிள் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர். |
| 8 | **திருநெல்வேலி** மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், 30/2, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், பேட்டை, திருநெல்வேலி–627 010. | திருநெல்வேலி& நாகர்கோயில் | அனலிடிக்கல் பேலண்ஸ்,ஆடோமிக் அப்சார்ப்ஸன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர் வித் கிராபஃட் பஃர்நேஸ்,ஆட்டோ கிலேவ்,பேக்டிரியாலாஜிக்கல், இன்குபேட்டர்,பி.ஓ.டி இன்குபேட்டர், சென்ட்ரிபியூஜ், சி.ஓ.டி.டைஜிஸ்டர், கண்டக்டிவிட்டி மீட்டர், டிசால்வுடு ஆக்ஸிஜன் மீட்டர், பஃயிண்டு பர்ட்டிகுலேட் சாம்பிலர்பி.எம்.2.5, பிஃளேம் போட்டோ மீட்டர், கேஸ் குரோமோட்டோகிராஃப், மைக்ரோ பேலண்ஸ், மஃப்லி பர்னேஸ், பி.எச். மீட்டர், ரெட்ஸபிரபுள் டஸ்ட் சாம்பிலர்பி.எம்.10, சவுண்ட் லெவல் மீட்டர், ஸ்டாக் மானிடரிங் கிட், டாப் பான் பேலண்ஸ், டோட்டல் ஜெல்தால் நைட்ரஜன் யூனிட், டர்பிடிட்டி மீட்டர், யூ.வி–விசிபிள் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர். |
| **மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள்** | | | |
| 9 | **அம்பத்தூர்** மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், 77–ஏ, சவுத் அவன்யூ ரோடு, அம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 058. | திருவள்ளூர் | அனலிடிக்கல் பேலண்ஸ், பேக்டிரியாலாஜிக்கல் இன்குபேட்டர், பி.ஓ.டி இன்குபேட்டர்,சி.ஓ.டி.டைஜிஸ்டர், கண்டக்டிவிட்டி மீட்டர், டிசால்வுடு ஆக்ஸிஜன் மீட்டர்,பஃயின் பர்ட்டிகுலேட் சாம்பிலர் பி.எம்.2.5, பிஃளேம் போட்டோ மீட்டர், மஃப்லி பர்னேஸ், பி.எச். மீட்டர், ரெட்ஸபிரபுள் டஸ்ட் சாம்பிலர்பி.எம்.10, செமி மைக்ரோ பேலண்ஸ், சவுண்ட் லெவல் மீட்டர், ஸ்டாக் மானிடரிங் கிட், டர்பிடிட்டி மீட்டர், யூ.வி–விசிபிள் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர். |
| 10 | **திண்டுக்கல்** மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், கலெக்டர் ஆபீஸ் காம்பிளக்ஸ், திண்டுக்கல்– 624 004. | திண்டுக்கல், தேனி&கருர் | அனலிடிக்கல் பேலண்ஸ், பேக்டிரியாலாஜிக்கல் இன்குபேட்டர், பி.ஓ.டி இன்குபேட்டர், சி.ஓ.டி.டைஜிஸ்டர், கண்டக்டிவிட்டி மீட்டர், டிசால்வுடு ஆக்ஸிஜன் மீட்டர்,பிஃளேம் போட்டோ மீட்டர், மைக்ரோ பேலண்ஸ், மஃப்லி பர்னேஸ், பி.எச். மீட்டர்,பஃயின் பர்ட்டிகுலேட் சாம்பிலர் பி.எம்.2.5, ஆர்.டி.எஸ் சாம்பிலர் (பி.எம்.10), சவுண்ட் லெவல் மீட்டர், ஸ்டாக் மானிடரிங் கிட், டர்பிடிட்டி மீட்டர், யூ.வி–விசிபிள் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர். |

## II வாரியத்தின் நிர்வாக அமைப்பு

| வ. எண் | ஆய்வகங்களின் பெயர் மற்றும் முகவரி | நிர்வாக எல்லைகள் | ஆய்வகத்தில் அமைந்துள்ள சோதனை கருவிகள் / உபகரணங்கள்/மாதிரிகள் சேமிப்பு மற்றும் ஆய்வக விஞ்ஞானிகறுக்கான பகுப்பாய்வு நிர்ணய இலக்கு முதலியவை |
|---|---|---|---|
| 11 | **ஓசூர்** மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், 149–ஏ, சிப்காட்காம்பிளக்ஸ், (மரூதி அருகில்), ஓசூர் –635 126. | ஓசூர்& கிருஷ்ணகிரி | அனலிடிக்கல் பேலண்ஸ், பேக்டிரியாலாஜிக்கல் இன்குபேட்டர், பி.ஓ.டி இன்குபேட்டர், சி.ஓ.டி.டைஜிஸ்டர், கண்டக்டிவிட்டி மீட்டர், டிசால்வுடு ஆக்ஸிஜன் மீட்டர்,பஃயின் பர்ட்டிகுலேட் சாம்பிலர் பி.எம் 2.5, பிஃளேம் போட்டோ மீட்டர், கேஸ் குரோமோட்டோகிராஃப்,மைக்ரோ பேலண்ஸ், மைக்ரோவேவ் டைஜிஸ்டர்,மஃப்லி பர்னேஸ், ஓரியன் அனலைசர், பி.எச். மீட்டர்,சென்ட்ரி பியூஜ், ரெஸ்பிரபுள் டஸ்ட் சாம்பிரலர் பி.எம்.10,சவுண்ட் லெவல் மீட்டர், ஸ்டாக் மானிடரிங் கிட், டோட்டல் ஜெல்தால் நைட்ரஜன் டைஜிஸ்டர், டாப் பான் பேலண்ஸ், டர்பிடிட்டி மீட்டர்,யூ.வி–விசிபிள் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர், விண்டு மானிடரிங் சிஸ்டம். |
| 12 | **மணலி** மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், 950/1, பூந்தமல்லி நெடுஞ்சாலை, அரும்பாக்கம், (O/o. மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம்,மணலி) சென்னை–600106 | சென்னை, திருவள்ளூர் | அனலிடிக்கல் பேலண்ஸ், பி.ஓ.டி இன்குபேட்டர், சி.ஓ.டி.டைஜிஸ்டர், கண்டக்டிவிட்டி மீட்டர்,பிஃளேம் போட்டோ மீட்டர்,புளூ கேஸ் அனலைசர், மஃப்லி பர்னேஸ்,பஃயிண் பர்ட்டிகுலேட் சாம்பிலர் பி.எம்.2.5, பி.எச். மீட்டர்,ஆர்.டி.எஸ் சாம்பிலர்பி.எம்.10, சவுண்ட் லெவல் மீட்டர், ஸ்டாக் மானிடரிங் கிட், டாப் பான் பேலண்ஸ், டோட்டல்ஜெல்தால் நைட்ரஜன் அனலைஸர், யூ.வி–விசிபிள் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர், வி.ஓ.சி.அனலைசர். |
| 13 | **மறைமலை நகர்** மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், மறைமலை அடிகளார் தெரு அருகில், மறைமலை நகர் முனிசிபாலிட்டி அருகில், காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகர் – 603 209. | செங்கல்பட்டு | அனலிடிக்கல் பேலண்ஸ், பி.ஓ.டி இன்குபேட்டர், சி.ஓ.டி.டைஜிஸ்டர், கண்டக்டிவிட்டி மீட்டர், டிசால்வுடு ஆக்ஸிஜன் மீட்டர், பிஃளேம் போட்டோ மீட்டர், பஃயிண் பர்ட்டிகுலேட் சாம்பிலர் பி.எம்.2.5, மைக்ரோ பேலண்ஸ், மஃப்லி பர்னேஸ்,பி.எச். மீட்டர், ரெஸ்பிரபுள் டஸ்ட் சாம்பிலர்பி.எம்.10,சவுண்ட் லெவல் மீட்டர், ஸ்டாக் மானிடரிங் கிட், டாப் பான் பேலண்ஸ்,டோட்டல் ஜெல்தால் நைட்ரஜன் அனலைசர், யூ.வி–விசிபிள் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர், வி.ஓ.சி.அனலைசர். |
| 14 | **தூத்துக்குடி** மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், சி7/சி9, சிப்காட் இண்டஸ்ட்ரியல் காம்பிளக்ஸ், மீளவிட்டான் கிராமம், தூத்துக்குடி– 628 008. | தூத்துக்குடி | அனலிடிக்கல் பேலண்ஸ்,பி.ஓ.டி இன்குபேட்டர், சி.ஓ.டி.டைஜிஸ்டர், கண்டக்டிவிட்டி மீட்டர், டிசால்வுடு ஆக்ஸிஜன் மீட்டர், பஃயிண் பர்ட்டிகுலேட்சாம்பிலர் (பி.எம்.2.5),பிஃளேம் போட்டோ மீட்டர், புளூ கேஸ் அனலைசர், மைக்ரோ பேலண்ஸ், மஃப்லி பர்னேஸ்,பி.எச். மீட்டர்,ரெஸ்பிரபுள் டஸ்ட் சாம்பிலர்பி.எம்.10, சவுண்ட் லெவல் மீட்டர், டோட்டல் ஜெல்தால் நைட்ரஜன்அனலைஸர், டர்பிடிட்டி மீட்டர், யூ.வி–டபுள்பீம் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர், விண்டு மானிடரிங் சிஸ்டம். |

## II வாரியத்தின் நிர்வாக அமைப்பு

| வ. எண் | ஆய்வகங்களின் பெயர் மற்றும் முகவரி | நிர்வாக எல்லைகள் | ஆய்வகத்தில் அமைந்துள்ள சோதனை கருவிகள் / உபகரணங்கள்/மாதிரிகள் சேமிப்பு மற்றும் ஆய்வக விஞ்ஞானிகறுக்கான பகுப்பாய்வு நிர்ணய இலக்கு முதலியவை |
|---|---|---|---|
| 15 | **திருப்பூர்** மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், குமரன் கமர்சியல் காம்பிளக்ஸ், 2–வது மாடி, குமரன் ரோடு, திருப்பூர் – 641 601. | திருப்பூர் | அனலிடிக்கல் பேலண்ஸ், ஆட்டோ கிலேவ், ஆடோமிக் அப்சார்ப்ஸன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர் வித் கிராபஃட் பஃர்நேஸ்,பி.ஓ.டி இன்குபேட்டர், கண்டக்டிவிட்டி மீட்டர், டிசால்வுடு ஆக்ஸிஜன் மீட்டர், பிஃளேம் போட்டோ மீட்டர், பஃயிண் பர்ட்டிகுலேட்சாம்பிலர் (பி.எம்.2.5), மபுல் பர்னேஸ், பி.எச். மீட்டர்,ரெஸ்பிரபுள் டஸ்ட் சாம்பிலர்பி.எம்.10,செமி மைக்ரோ பேலண்ஸ், சவுண்ட் லெவல் மீட்டர், ஸ்டாக் மானிடரிங் கிட், யூ.வி–விசிபிள் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர், |
| 16 | **பெருந்துறை** மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், பிளாட் எண்: ஜே 2 (W), சிப்காட் ஆர்ச் கோவை பிரதான சாலை, ஓலப்பாளையம்– அஞ்சல், பெருந்துறை–638 052. | பெருந்துறை, ஈரோடு, | அனலிடிக்கல் பேலண்ஸ், ஆடோமிக் அப்சார்ப்ஸன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர் வித் கிராபஃட் பஃர்நேஸ், பி.ஓ.டி இன்குபேட்டர், சி.ஓ.டி.டைஜிஸ்டர்சிஸ்டம்,கண்டக்டிவிட்டி மீட்டர், டிசால்வுடு ஆக்ஸிஜன் மீட்டர், பஃயிண் பர்ட்டிகுலேட்சாம்பிலர் பி.எம்.2.5,பிஃளேம் போட்டோ மீட்டர், புளூ கேஸ் அனலைசர்,மஃப்லி பர்னேஸ்,பி.எச். மீட்டர்,ரெஸ்பிரபுள் டஸ்ட் சாம்பிலர்பி,எம்,10, செமி மைக்ரோ பேலண்ஸ்,ஸ்டாக் மானிடரிங் கிட், டோட்டல் ஜெல்தால் நைட்ரஜன் அனலைசர்,டர்பிடிட்டி மீட்டர்,யூ.வி–விசிபிள் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர். |
| 17 | **ஒரகடம்** மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், பிளாட் எண் சிபி–5பி, சிப்காட் தொழில்துறை வளர்ச்சி மையம், வண்டலூர், வாலஜாபாத் சாலை, ஒரகடம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம்–602 105 | ஸ்ரீபெரும்புதூர் | அனலிடிக்கல் பேலண்ஸ், ஆடோமிக் அப்சார்ப்ஸன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர் வித் கிராபஃட் பஃர்நேஸ், பி.ஓ.டி இன்குபேட்டர், சி.ஓ.டி.டைஜிஸ்டர்சிஸ்டம், கண்டக்டிவிட்டி மீட்டர், டிசால்வுடு ஆக்ஸிஜன் மீட்டர், பஃயிண் பர்ட்டிகுலேட்சாம்பிலர் பி.எம்.2.5,பிஃளேம் போட்டோ மீட்டர், புளூ கேஸ் அனலைசர்,மஃப்லி பர்னேஸ்,பி.எச். மீட்டர்,ரெஸ்பிரபுள் டஸ்ட் சாம்பிலர்பி,எம்,10, ஸ்டாக் மானிடரிங் கிட், டோட்டல் ஜெல்தால் நைட்ரஜன் அனலைசர்,யூ.வி–விசிபிள் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர், வி.ஓ.சி.அனலைசர், டாப் பான் பேலண்ஸ், சவுண்ட் லெவல் மீட்டர். |
| 18 | **நாகப்பட்டினம்**மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், மாவட்ட ஆட்சியர்அலுவலகம் , மாஸ்டர் பிளான் வளாகம், நாகப்பட்டினம்–611 001. | நாகப்பட்டினம் | அனலிடிக்கல் பேலண்ஸ், ஆடோமிக் அப்சார்ப்ஸன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர் வித் கிராபஃட் பஃர்நேஸ், பி.ஓ.டி இன்குபேட்டர், சி.ஓ.டி. டைஜிஸ்டர் சிஸ்டம், கண்டக்டிவிட்டி மீட்டர், டிசால்வுடு ஆக்ஸிஜன் மீட்டர், பஃயிண் பர்ட்டிகுலேட்சாம்பிலர் பி.எம்.2.5,பிஃளேம் போட்டோ மீட்டர், புளூ கேஸ் அனலைசர், மஃப்லி பர்னேஸ்,பி.எச். மீட்டர்,ரெஸ்பிரபுள் டஸ்ட் சாம்பிலர்பி,எம்,10, ஸ்டாக் மானிடரிங் கிட், டோட்டல் ஜெல்தால் நைட்ரஜன் அனலைசர்,யூ.வி–விசிபிள் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர், வி.ஓ.சி.அனலைசர், டாப் பான் பேலண்ஸ், சவுண்ட் லெவல் மீட்டர். |

*** மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம் சென்னையில் மட்டும் உள்ளது.**

## II வாரியத்தின் நிர்வாக அமைப்பு

மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களான கோயமுத்தூர், வேலூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆய்வகங்கள் ISO/IEC 17205:2017–ன்படி தேசிய ஆய்வகங்களுக்கான வாரியத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. சென்னை, கடலூர், மதுரை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் உள்ள மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் அங்கீகாரத்தைப் புதுப்பிக்கும் பணியில் உள்ளன. வாரியத்தின் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் தேசிய ஆய்வகங்களுக்கான வாரியத்திடமிருந்து அங்கீகாரம் பெறும் பணியில் ஈடுபட்டுள்ளன. மேலும் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களில் நுண்ணுயிரியல் பிரிவை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. 2024–2025 ஆம் ஆண்டு மொத்தம் 46529 நீர் மாதிரிகள், அன்றாட கழிவுநீர் மாதிரிகள் மற்றும் தொழிற்கழிவு நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன. புகை போக்கி மற்றும் காற்று தர ஆய்வுகள் 1718 தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வக வாரியான தகவல்கள் இணைப்பு IIல் கொடுக்கப்பட்டுள்ளன.

**2.4 வாரிய பணியாளர்களின் விவரம்**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமானது 1115 அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் பொறியாளர்கள், விஞ்ஞானிகள், நிர்வாகம், கணக்காளர்கள் மற்றும் இதர பணியாளர்களை கொண்டு செயல்பட்டு வருகிறது.

**31.03.2025 அன்றுள்ளபடி அலுவலர்களின் விவரம் கிழ்கண்டவாறு.**

| வ. எண் | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | தற்போதைய எண்ணிக்கை | காலி–யிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | தலைவர் | 1 | 1 | 0 |
| 2 | உறுப்பினர் செயலர் | 1 | 1 | 0 |
| 3 | நிதி ஆலோசகர் – (பிரதிநிதித்துவம்) | 1 | 1 | 0 |
| 4 | இயக்குனர் (ஆய்வகங்கள்) – (பிரதிநிதித்துவம்) | 1 | 0 | 1 |
| 5 | மூத்த மேலாளர் (நிதி மற்றும் கணக்குகள்) | 1 | 0 | 1 |
| 6 | மேலாளர் (சட்டம்) (பிரதிநிதித்துவம்) | 1 | 0 | 1 |
| 7 | மேலாளர் (பணியாளர் மற்றும் நிர்வாகம்) | 1 | 0 | 1 |
| 8 | மேலாளர் (உள் விவகாரங்கள்) | 1 | 0 | 1 |
| 9 | பொறியியல் பணியமைப்பு | 316 | 254 | 62 |
| 10 | பொறியியல் சார்புநிலை பணியமைப்பு | 10 | 6 | 4 |
| 11 | விஞ்ஞானப் பணியமைப்பு | 125 | 92 | 33 |
| 12 | விஞ்ஞான சார்புநிலை பணியமைப்பு | 94 | 56 | 38 |
| 13 | பொது பணியமைப்பு | 37 | 22 | 15 |
| 14 | பொது சார்புநிலை பணியமைப்பு | 420 | 166 | 254 |
| 15 | இதர பணியமைப்பு | 11 | 0 | 11 |

## II வாரியத்தின் நிர்வாக அமைப்பு

| வ. எண் | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | தற்போதைய எண்ணிக்கை | காலி–யிடங்கள் |
|---|---|---|---|---|
| 16 | தகவல் தொழில்நுட்பப் பிரிவு | 15 | 0 | 15 |
| 17 | அடிப்படை சேவைகள் | 79 | 10 | 69 |
| | **மொத்தம்** | **1118** | **1115** | **609** |

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் பணிபுரியும் அலுவலர்களின் வருடாந்திர எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு பிரிவு அலுவலர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

| வ. எண் | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | தற்போதைய எண்ணிக்கை | காலி–யிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | தலைவர் | 1 | 1 | 0 |
| 2 | உறுப்பினர் செயலர் | 1 | 1 | 0 |
| | **மொத்தம்–அ** | **2** | **2** | **0** |
| **பொறியியல் பணியமைப்பு** | | | | |
| 1 | தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் | 2 | 0 | 2 |
| 2 | கூடுதல் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் | 2 | 2 | 0 |
| 3 | இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் | 15 | 13 | 2 |
| 4 | சுற்றுச்சூழல் பொறியாளர் | 66 | 64 | 2 |
| 5 | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் | 60 | 51 | 09 |
| 6 | உதவி பொறியாளர் | 170 | 124 | 46* |
| 7 | உதவி பொறியாளர் (ஆட்டோ) | 1 | – | 1 |
| | **மொத்தம் – ஆ** | **316** | **254** | **62** |
| *46 பேரில், 6 பேர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இன்னும் பணியில் சேரவில்லை. மீதமுள்ள 40 உதவிப் பொறியாளர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நியமனம் செய்யப்படுவர். | | | | |
| **பொறியியல் சார்புநிலை பணியமைப்பு** | | | | |
| 1 | இளநிலை பொறியாளர் (சிவில்) | 1 | 1 | 0 |
| 2 | உதவி வரைவாளர் | 3 | 0 | 3 |
| 3 | மின் வினைஞர் | 5 | 4 | 1 |
| 4 | தொழில்நுட்ப உதவியாளர் | 1 | 1 | 0 |
| | **மொத்தம் – இ** | **12** | **10** | **6** |
| வாரிய பணியாளர் ஒருவரின் பணிக்காலம் முடிவடையும் பட்சத்தில் அல்லது அவர் பணியினை துறக்கும் பட்சத்தில் (அரசாணை (எம்.எஸ்) எண். 75, நாள்: 14.07.2016க்கு இணங்க) இளநிலை பொறியாளர் (கட்டுமானம்) பணியிடம் தொழிற்நுட்ப உதவியாளர் பணியிடமாக மாற்றப்படும் | | | | |
| **விஞ்ஞானப் பணியமைப்பு** | | | | |
| 1 | துணை இயக்குனர் (ஆய்வகம்) | 2 | 0 | 2 |
| 2 | உதவி இயக்குனர் (ஆய்வகம்) | 10 | 2 | 8 |
| 3 | தலைமை விஞ்ஞான அலுவலர் | 5 | 4 | 1 |
| 4 | துணை தலைமை விஞ்ஞான அலுவலர் | 29 | 16 | 13 |
| 5 | சுற்றுச்சூழல் விஞ்ஞானி | 77 | 70 | 7 |
| 6 | முதுநிலை வானவியலாளர் | 1 | 0 | 1 |
| 7 | வானவியலாளர் | 1 | 0 | 1 |

## II வாரியத்தின் நிர்வாக அமைப்பு

| வ. எண் | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | தற்போதைய எண்ணிக்கை | காலி–யிடங்கள் |
|---|---|---|---|---|
| | **மொத்தம் – ஈ** | **126** | **125** | **92** |
| **விஞ்ஞான சார்புநிலை பணியமைப்பு** | | | | |
| 1 | இளநிலை சுற்றுச்சூழல் விஞ்ஞானி | 6 | 3 | 3 |
| 2 | களப்பணி உதவியாளர் | 58 | 42 | 16 |
| 3 | ஆய்வக உதவியாளர் | 30 | 11 | 19 |
| | **மொத்தம் – உ** | **90** | **94** | **56** |
| **பொது பணியமைப்பு** | | | | |
| 1 | சட்ட உத்தியோகத்தர் | 1 | 0 | 1 |
| 2 | கூடுதல் மேலாளர் | 2 | 0 | 2 |
| 3 | நீதிமன்ற மாஸ்டர் | 1 | 1 | 0 |
| 4 | துணை மேலாளர் | 1 | 0 | 1 |
| | **மொத்தம் – ஊ** | 37 | 22 | 15 |
| **பொது சார்புநிலை பணியமைப்பு** | | | | |
| 1. | உதவி மேலாளர் | 64 | 49 | 15 |
| 2. | பொது உதவியாளர் | 97 | 21 | 76 |
| 3 | உதவியாளர் | 91 | 35 | 56* |
| 4 | தனி செயலர் | 3 | 1 | 2 |
| 5 | முதுநிலை நேர்முக உதவியாளர் (நிலை – I) | 5 | 5 | 0 |
| 6 | நேர்முக உதவியாளர் (நிலை – II) | 4 | 1 | 3 |
| 7 | நேர்முக உதவியாளர் (நிலை – III) | 17 | 0 | 17 |
| 8 | தட்டச்சர் | 69 | 44 | 25 |
| 9 | ஓட்டுநர் | 56 | 10 | 46 |
| 10 | மோட்டார் வாகன சவாரியாளர் | 1 | 0 | 1 |
| 11 | தொலைபேசி இயக்குபவர் | 2 | 0 | 2 |
| 12 | பதிவுரு எழுத்தர் | 11 | 0 | 11 |
| | **மொத்தம் – எ** | **420** | **166** | **254** |
| **இதர பணியமைப்பு** | | | | |
| 1 | புள்ளிவிவர அலுவலர் | 1 | 0 | 1 |
| 2 | உதவி புள்ளிவிவர அலுவலர் | 1 | 0 | 1 |
| 3 | நூலகர் (நிலை– II) | 2 | 0 | 2 |
| 4 | மென்பொருள் திட்டமிடுபவர் | 1 | 0 | 1 |
| 5 | இளநிலை மென்பொருள் திட்டமிடுபவர் | 2 | 0 | 2 |
| 6 | தகவல் பதிவு அலுவலர் | 4 | 0 | 4 |
| | **மொத்தம் – ஏ** | **11** | **0** | **11** |
| **அடிப்படை பணியமைப்பு** | | | | |
| 1 | அலுவலக உதவியாளர் | 74 | 5 | 69 |
| 2 | துப்புரவாளர் | 4 | 4 | 0 |
| 3 | காவலர் | 1 | 1 | 0 |
| | **மொத்தம் – ஐ** | **79** | **10** | **69** |
| **தகவல் தொழில்நுட்பப் பிரிவு** | | | | |
| 1 | புரோகிராமர் | 05 | 0 | **05** |
| 2 | டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் | 10 | 0 | 10 |
| | **மொத்தம் – ஒ** | **15** | **0** | **15** |

## II வாரியத்தின் நிர்வாக அமைப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| **பிரதிநிதித்துவப் பணியாளர்கள்** | | | | |
| 1 | நிதி ஆலோசகர் (பிரதிநிதித்துவம்) | 1 | 1 | – |
| 2 | இயக்குனர் (ஆய்வகம்)–(பிரதிநிதித்துவம்) | 1 | 0 | 1 |
| 3 | மேலாளர் (சட்டம்) – (பிரதிநிதித்துவம்) | 1 | 0 | 1 |
| | **மொத்தம் – ஓ** | **3** | **1** | **2** |
| **பதவி உயர்வு** | | | | |
| 1 | மூத்த மேலாளர் (நிதி மற்றும் கணக்குகள்) | 1 | 1 | 0 |
| 2 | மேலாளர் (பணியாளர் மற்றும் நிர்வாகம்) | 1 | 0 | 1 |
| 3 | மேலாளர் (உள் விவகாரங்கள்) | 1 | 0 | 1 |
| | **மொத்தம் – ஔ** | **3** | **1** | **2** |
| **மொத்த எண்ணிக்கை (அ+ஆ+இ+ஈ+உ+ஊ+எ+ஏ+ஐ+ஒ+ஓ+ ஔ )** | | **1115** | **609** | **506** |

ஆண்டு வாரியான பணியாளர் எண்ணிக்கையின் பட்டை வரைபடம் இணைப்பு–III இல் கொடுக்கப்பட்டுள்ளது

ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களின் 31.03.2025 தேதிய விபரங்கள்

| வ. எண் | விபரங்கள் | 31.03.**2025** வரை | **2024–25** ஆண்டில் | மொத்தம் **31.03.2025** வரை |
|---|---|---|---|---|
| 1 | ஓய்வூதியதாரர்கள் | 462 | 34 | 496 (இறந்தவர்கள் – 26) |
| 2 | குடும்ப ஓய்வூதியதாரர்கள் | 108 | 10 | 118 (இறந்தவர்கள் – 3) |
| | மொத்தம் | **570** | **44** | **614** |

**-oOo-**

# அத்தியாயம் – III

## வாரியத்தால் அமைக்கப்பட்ட குழுக்கள்

### 3.1 வாரியத்தின் பல்வேறு குழுக்கள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் முதன்மை பணி, நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981ன் கீழ் தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்குவது மற்றும் சுற்றுச் சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986ன் கீழ் உள்ள பல்வேறு விதிகளின் படி அங்கீகாரம் வழங்குவதும் ஆகும். மேற்கண்ட சட்டம் மற்றும் விதிகளை திறம்படவும், மேலும் பயனுள்ள வகையில் செயல்படுத்தவும் மற்றும் வாரியத்தின் செயல்பாட்டிற்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பிரிவு 9 நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 மற்றும் பிரிவு 11 காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981ன் கீழ் பல்வேறு குழுக்களை தலைமை அலுவலகம், மண்டல அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலக அளவில் அமைத்துள்ளது. அவ்வாறு அமைக்கப்பட்ட குழுக்கள் கீழ்கண்டவாறு:

### 3.1.1 தொழில் நுட்ப துணை குழு (தொ.நு.து.கு)

பதினேழு வகை தொழிற்சாலைகள் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டை ஈர்க்கும் தொழிற்சாலைகளுக்கு, நிறுவுவதற்கான மற்றும் இயக்குவதற்கான இசைவாணைகளை வழங்குவது தொடர்பாக முடிவெடுக்க வாரிய தொழில் நுட்ப துணை குழுவினை, வாரியம் தனது 06.02.2018 தேதிய நடப்பாணை எண் 1–ன் மூலம் வாரிய தலைமை அலுவலகத்தில் அமைத்துள்ளது. குழுவின் அமைப்பு பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | தலைவர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் | தலைவர் |
| 2 | உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் | கூட்டம் நடத்துபவர் |
| 3 | இயக்குனர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் | உறுப்பினர் |
| 4 | இயக்குனர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவம் | உறுப்பினர் |
| 5 | அனைத்து இணைதலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள் | உறுப்பினர் |

### 3.1.2 இசைவாணை அனுமதி குழு (இ.அ.கு)

பெரிய மற்றும் நடுத்தர வகை சிவப்பு தொழிற்சாலைகளுக்கு நிறுவுவதற்கான மற்றும் இயக்குவதற்கான இசைவாணைகளை வழங்குவது தொடர்பாக முடிவெடுக்க இசைவாணை அனுமதி குழுவினை வாரியம் தனது 02.07.2007 தேதிய அலுவலக ஆணை எண் த.நா.மா.க.வா / பணி / ப.1 / 18730 / 2007 மூலம் வாரிய தலைமை அலுவலகத்தில் அமைத்து பின்னர் 28.11.2017 தேதிய வாரிய நடப்பாணை எண். 63 மூலம் அக்குழுவினை கீழ்க்கண்டவாறு மாற்றியமைத்தது.

# III. வாரியத்தால் அமைக்கப்பட்ட குழுக்கள்

| | | |
|---|---|---|
| 1 | உறுப்பினர் செயலர், தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் | தலைவர் |
| 2 | கூடுதல் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள் (கூ.த..சு.சூ.பொ.), தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் | உறுப்பினர் |
| 3 | இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள் (இ.த..சு.சூ.பொ.), தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் | உறுப்பினர் |

**3.1.3 மண்டல அளவிலான இசைவாணை அனுமதி குழு (ம.அ.இ.அ.கு)**

சிறிய சிவப்பு வகை தொழிற்சாலைகள், பெரிய, நடுத்தர ஆரஞ்சு வகை தொழிற்சாலைகள் மற்றும் பெரிய பச்சை வகை தொழிற்சாலைகளுக்கு, நிறுவுவதற்கான மற்றும் இயக்குவதற்கான இசைவாணைகளை வழங்குவது தொடர்பாக முடிவெடுக்க மண்டல அளவிலான இசைவாணை அனுமதி குழுவினை வாரியம் தனது 18.03.2009 தேதிய திருத்தப்பட்ட நடப்பாணை எண் 4ன் மூலம் மண்டல அலுவலகங்களில் ஏற்படுத்தியுள்ளது. குழுவின் அமைப்பு பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) (இ.த.சு.சூ.பொ. (க)), | குழுவின் தலைவர் |
| 2 | மண்டலத்தில் உள்ள அனைத்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் (மா.சு.சூ.பொ.) | உறுப்பினர்கள் |
| 3 | சுற்றுச்சூழல் பொறியாளர் (சு.சூ.பொ.), மண்டல அலுவலகம் | கூட்டம் நடத்துபவர் |

**3.1.4 மாவட்ட அளவிளான இசைவாணை அனுமதி குழு (மா.அ.இ.அ.கு)**

சிறிய ஆரஞ்சு வகை தொழிற்சாலைகள் மற்றும் நடுத்தர சிறிய பச்சை வகை தொழிற்சாலைகளுக்கு, நிறுவுவதற்கான மற்றும் இயக்குவதற்கான இசைவாணைகளை வழங்குவது தொடர்பாக முடிவெடுக்க மாவட்ட அளவிளான இசைவாணை அனுமதி குழுவினை வாரியம் தனது 05.10.2012 தேதிய திருத்தப்பட்ட நடப்பாணை எண் 36ன் மூலம் மாவட்ட அலுவலகங்களில் ஏற்படுத்தியுள்ளது. குழுவின் அமைப்பு பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (மா.சு.சூ.பொ.) | குழுவின் தலைவர் |
| 2 | மாவட்ட அலுவலகத்தில் உள்ள அனைத்து உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்கள் (உ.சு.சூ.பொ.) | உறுப்பினர் மற்றும் கூட்டம் நடத்துபவர் |
| 3 | மாவட்ட அலுவலகத்தில் உள்ள அனைத்து உதவி பொறியாளர்கள் (உ.பொ.) | உறுப்பினர்கள் |

இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (**கண்காணிப்பு**) அவர்களால் இசைவாணை புதுப்பிக்க அதிகாரம் வழங்கப்பட்ட சிவப்பு பெரிய தொழிற்சாலை வகைப்பாட்டின் பட்டியல்

| வ.எண் | | தொழிற்சாலை–வகைகள் |
|---|---|---|
| 1 | 1001 | தீங்கு விளைவிக்கும் இரசாயனங்களின் தனிமைப்படுத்தப்பட்ட சேமிப்பு (திருத்தப்பட்ட தீங்கு விளைவிக்கும் இராசயனங்கள் உற்பத்தி மற்றும் சேமிப்பு விதிகள், 1989ன் பட்டியல்படி) |
| 2 | 1005 | DG செயல் திறன் ≥ 5 MVA |
| 3 | 1006 | மின்முனைகள் மற்றும் கிராஃபைட் கத்தைகள், செயலாக்கப்பட்ட கார்பன், கார்பன் கருப்பு உள்ளிட்ட தொழில்துறை கார்பன் |

# III. வாரியத்தால் அமைக்கப்பட்ட குழுக்கள்

| வ.எண் | | தொழிற்சாலை–வகைகள் |
|---|---|---|
| 4 | 1007 | லெட் ஆசிட் பேட்டரி உற்பத்தி (சிறு அளவில் லெட்– ஆசிட் பேட்டரியை அசெம்பிள் செய்தல் மற்றும் சார்ஜ் செய்தல் தவிர) |
| 5 | 1008 | பாஸ்பேட் பாறை செயலாக்கப்படும் ஆலை |
| 6 | 1009 | மின் உற்பத்தி நிலையம் [எல்லா திறன் கொண்ட காற்று மற்றும் சூரிய புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் <25MW திறன் கொண்ட நிறு நீர் மின் நிலையம் தவிர] |
| 7 | 1013 | ஃபைபர் கிளாஸ் உற்பத்தி மற்றும் செயலாக்கம் (மோல்டிங் தவிர்த்து) லெட் கொண்ட கண்ணாடி உட்பட |
| 8 | 1014 | பட்டாசு உற்பத்தி மற்றும் மொத்த சேமிப்பு வசதிகள் |
| 9 | 1016 | பால் செயல்முறைகள் மற்றும் பால் பொருட்கள் (ஒருங்கிணைந்த திட்டம்) |
| 10 | 1017 | பாஸ்பரஸ் மற்றும் அதன் கலவைகள் |
| 11 | 1018 | காகித கூழ் மற்றும் காகிதம் (வெளுக்கப்படாத வீணான காகிதத்தை பயன்படுத்தி செய்யப்படும் கிராஃப்ட் காகிதம்) |
| 12 | 1025 | அடிப்படை இரசாயனங்கள், மின் இரசாயனங்கள் மற்றும் அமிலம் உற்பத்தி |
| 13 | 1030 | கழிவு உற்பத்தி எவ்வளவுவாயினும் எரிப்பான் வைத்திருக்கும் சுகாதார பாதுகாப்பு நிலையங்கள் அல்லது கழிவுநீர் உற்பத்தி நாளொன்றுக்கு 100 கிலோலிட்டர் அல்லது அதற்கு மேல் உற்பத்தி செய்யும் சுகாதார பாதுகாப்பு நிலையங்கள் (BMW விதிகளில் வரையறுக்கப்பட்டபடி |
| 14 | 1031 | நாளொன்றிற்கு 100 கிலோ லிட்டர், அதற்கு மேல் உற்பத்தி செய்யும் ஹோட்டல்கள் அல்லது 100 அதற்கு மேற்பட்ட அறையை உடைய ஹோட்டல்கள். |
| 15 | 1038 | புகைப்படத் திரை மற்றும் அதன் இரசாயனங்கள் |
| 16 | 1039 | இரயில்வே இன்ஜின் பணிமனை / ஒருங்கிணைந்த சாலை போக்குவரத்து பணிமனை / நாளொன்றிற்கு 100 கிலோ லிட்டர் மற்றும் அதற்கு மேல் கழிவு நீர் உற்பத்தி செய்யும் அங்கீகரிக்கப்பட்ட சேவை மையங்கள் |
| 17 | 1042 | கப்பல் உடைக்கும் தொழிற்சாலைகள். |
| 18 | 1049 | ஸ்லாட்டர் ஹவுஸ் (26.03.2001 தேதியிட்ட S.O.270(E) அறிவிக்கையின்படி) மற்றும் இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலைகள், எலும்பு ஆலை, விலங்குகளின் கொம்பு, குளம்புகள் மற்றும் பிற உடல் பாகங்களை கையாளுதல் |
| 19 | 1061 | நாளொன்றிற்கு 100 கிலோ லிட்டர், அதற்கு மேல் உற்பத்தி செய்யும் செயற்கை சவர்க்காரம் மற்றும் வழலை (உருவாக்கம் தவிர) |
| 20 | 1062 | நாளொன்றிற்கு 100 கிலோ லிட்டர், அதற்கு மேல் உற்பத்தி செய்யும் வாகன சேவை, பழுது பார்த்தல் மற்றும் பெயிண்டிங் செய்தல் (எரிபொருள் விநியோகம் தவிர) |
| 21 | 1063 | 20,000 சதுர மீட்டருக்கு கட்டுமான பரப்பளவு மற்றும் நாளொன்றிற்கு 100 கிலோலிட்டர் அதற்கு மேல் கழிவுநீர் உற்பத்தி செய்யும் கட்டிட மற்றும் கட்டுமான திட்டம் |
| 22 | 1068 | கண்ணாடி உற்பத்தி (லெட் கண்ணாடி மட்டும்) |
| 23 | 1069 | நாளொன்றிற்கு 100 கிலோ லிட்டர், அதற்கு மேல் உற்பத்தி செய்யும் மது அல்லாத பானங்கள் (மென்பானங்கள்) மற்றும் மது/மது அல்லாத பானங்களை பாட்டிலில் நிரப்பும் தொழிற்சாலைகள் |
| 24 | 1070 | நாளொன்றிற்கு 100 கிலோ லிட்டர், அதற்கு மேல் கழிவுநீர் உற்பத்தி செய்யும், கரைப்பான் பயன்படுத்தி பிரித்தெடுக்கும் காய்கறி எண்ணெய் மற்றும் சுத்திகரிப்பு/ ஹைட்ரஜன் ஏற்றப்பட்ட எண்ணெய்கள் |
| 25 | 1071 | நாளொன்றிற்கு 100 கிலோ லிட்டர், அதற்கு மேல் கழிவுநீர் உற்பத்தி செய்யும், அல்லது நாளொன்றிற்கு 12 மெட்ரிக் டன் அதற்கு மேல் எரிபொருளை உபயோகிக்கும் அல்லது இரண்டையும் உபயோகிக்கும் அரிசி ஆலைகள் |
| 26 | 1077 | MSW சுகாதார நிலப்பரப்பு தளம் |
| 27 | 1081 | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் |
| 28 | 1083 | டயர், டியூப் மற்றும் ரப்பர் கூறுகள் |
| 29 | 1084 | பகுப்பாய்வு மற்றும் பொருள் சோதனை ஆய்வகம் |

### 3.2 மாசு அளவு மதிப்பீட்டுக் குழு (மா.அ.ம.கு)

மத்திய சுற்றுசூழல் வனம் மற்றும் பருவ நிலை மாற்றம் அமைச்சகம் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006 இல் சில திருத்தங்களை (S.O.3518(E), தேதி 23.11.2016) கொண்டு வந்தது. அதில் விதி 7(ii) இன் கீழ் "சுற்றுச்சூழல் அனுமதி பெற்று இயக்கத்தில் இருக்கும் தொழிற்சாலைகள் தனது தொழிற்சாலையினை விரிவாக்கம் செய்யும் முன்னரோ,

## III. வாரியத்தால் அமைக்கப்பட்ட குழுக்கள்

நவீனமயமாக்கும் முன்னரோ அல்லது உற்பத்தி பொருள்களில் சிலவற்றை மாற்றும் முன்னரோ சுற்றுச்சூழல் அனுமதி பெற்றிருத்தல் அவசியம்" என்று அறிவிக்கை செய்துள்ளது. அதனடிப்படையில், மாசு அளவில் ஏற்றம் இல்லை என்று குறிப்பிடும் சான்றிதழுக்காக தொழிற்சாலைகளிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் பொருட்டு மாசு அளவு மதிப்பீட்டுக் குழுவினை 02.11.2017 நாளிட்ட வாரிய நடப்பாணைமூலம் அமைத்துள்ளது

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | பொறுப்பு |
|---|---|---|
| 1. | உறுப்பினர் செயலர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 76, மவுண்ட் சாலை,<br>சென்னை – 600032 | தலைவர் |
| 2. | **தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்,**<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 76, மவுண்ட் சாலை,<br>சென்னை – 600032 | உறுப்பினர் |
| 3. | **கூடுதல் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் /<br>இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை** | கூட்டம் நடத்துபவர் |
| 4. | திருமதி.H.D.வரலட்சுமி,<br>**விஞ்ஞானி** – E. மண்டல இயக்குநர்,<br>மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>சென்னை. | உறுப்பினர் |
| 5. | **டாக்டர்.எஸ்.சீனிவாசன்,<br>முதுநிலை முதன்மை விஞ்ஞானி,<br>சி.எஸ்.ஐ.ஆர் – சி.எல்.ஆர்.ஐ,<br>சென்னை.** | உறுப்பினர் |
| 6. | **டாக்டர்.ஆர்.விஷ்னு,**<br>வேதியியல் துறை,<br>ஐ.ஐ.டி. சென்னை, | உறுப்பினர் |
| 7. | **டாக்டர்.எஸ்.அமல்ராஜ்.<br>பேராசிரியர், சுற்றுச்சூழல் துறை,<br>அண்ணா பல்கலைக்கழகம்,<br>சென்னை.** | உறுப்பினர் |
| 8. | **டாக்டர்.வி.டி.பேரரசு,<br>பேரராசிரியர், வேதியியல் துறை,<br>அண்ணா பல்கலைக்கழகம்,<br>சென்னை.** | உறுப்பினர் |

**3.3 01.04.2024 – 31.03.2025 ஆம் ஆண்டில் நடைபெற்ற கூட்டங்களின் விவரம்**

| கூட்டங்கள் | மொத்த கூட்டங்களின் எண்ணிக்கை | கூட்டங்களில் வைக்கப்பட்ட மொத்த திட்டங்களின் எண்ணிக்கை | அனுமதி வழுங்கப்–பட்டவை | கூடுதல் விவரங்கள் கேட்டு திருப்பி அனுப்பப்–பட்டவை |
|---|---|---|---|---|
| தொழில் நுட்ப துணை குழு | 13 | 192 | 180 | 12 |
| இசைவாணை அனுமதி குழு | 13 | 393 | 386 | 7 |
| மண்டல அளவிலான இசைவாணை அனுமதி குழு | 130 | 1304 | 1286 | 18 |
| மாவட்ட அளவிளான இசைவாணை அனுமதி குழு | 725 | 3573 | 3529 | 44 |
| மாசு அளவு மதிப்பீட்டுக் குழு | 2 | 6 | 5 | 1 |

## III. வாரியத்தால் அமைக்கப்பட்ட குழுக்கள்

மேற்கண்ட குழுக்களின் கூட்ட அறிக்கைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் சீரான இடைவெளியில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

**3.4 மாவட்ட ஒருங்கிணைப்பு குழு**

சட்ட விரோதமாக செயல்படும் தொழிற்சாலைகள், சுத்திகரிக்கப்படாத கழிவுநீரினை நிலம் மற்றும் நீர் நிலைகளில் வெளியேற்றுவதை தவிர்த்து, விலை மதிப்பில்லா நீர் நிலைகளை பாதுகாக்கும் பொருட்டு, கீழ்கண்ட உறுப்பினர்களை கொண்ட மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவினை அரசு தனது அரசாணை (எம்.எஸ்) எண்.23, சுற்றுச்சூழல் மற்றும் வனம் (சு.சூ.க.1) துறை தேதி: 01.03.2018–ன் மூலம் அமைத்துள்ளது. மின்சார துண்டிப்பு, நீர் துண்டிப்பு, பொருட்களை பறிமுதல் செய்தல், ஆலை வளாகம் மற்றும் கருவிகளை சீல் வைத்தல், ஆலையினை தற்போதுள்ள இடத்திலிருந்து அப்புறப்படுத்துதல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ள அதிகாரம் பெற்ற குழுவாக விளங்குகிறது. ஆலை மற்றும் நில உரிமையாளர்கள் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்யும் அதிகாரமும் அக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | குழு உறுப்பினர்கள் | குழு |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| 2 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் | கூட்டம் நடத்துபவர் |
| 3 | சுற்றுச்சூழல் பொறியாளர் (பறக்கும் படை), தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் (இருப்பின்) | உறுப்பினர் |
| 4 | துணை காவல் கண்காணிப்பாளர் | உறுப்பினர் |
| 5 | கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் | உறுப்பினர் |
| 6 | செயற்பொறியாளர், பொதுப் பணித்துறை (நீர் வள பிரிவு) | உறுப்பினர் |
| 7 | வருவாய் கோட்டாட்சியர் | உறுப்பினர் |

**-oOo**

# அத்தியாயம் – IV

## வாரியக் கூட்டங்கள் மற்றும் முக்கிய முடிவுகள்

### 4.1 வாரியக் கூட்டங்கள்

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 பிரிவு 8ன்படி மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 பிரிவு 10ன் படி வாரியம் குறைந்தபட்சம் மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடி நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி அலுவல் பரிவர்த்தனைகள் குறித்து விவாதிக்க வேண்டும். 2024–2025 ஆம் ஆண்டில், 2 வாரியக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அதற்கான விவரங்கள் பின்வருமாறு::

**ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரையிலான காலகட்டத்தில் நடைபெற்ற வாரிய கூட்டங்களின் விவரங்கள்**

| வ. எண். | வாரிய கூட்ட எண் | வைக்கப்பட்ட கருத்துரு எண்ணிக்கை | நடைபெற்ற தேதி |
|---|---|---|---|
| 1 | 294 | 48 | 12.07.2024 |
| 2 | 295 | 44 | 25.11.2024 |
| | **மொத்தம்** | **92** | – |

### 4.2 வாரியத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள்

1. அமில காரத்தன்மை (pH), உயிர்வேதியியல் ஆக்ஸிஜன் தேவை (BOD) ஆகியவற்றைக் கொண்ட நுழையும் கழிவுநீரில் நிர்ணயத்தை நிர்ணயிக்கும் முன்மொழிவு. ரசாயன ஆக்சிஜன் தேவை (COD), மொத்த இடைநிறுத்தப்பட்ட திடப்பொருட்கள் (TSS), மொத்த கரைந்த திடப்பொருட்கள் (TDS), குளோரைடுகள் மற்றும் சல்பேட்டுகள் பொது அளவுருக்களாக மற்றும் குறிப்பிட்ட அளவுருக்கள் காரத்தன்மை மற்றும் மொத்த கடினத்தன்மை (பெருந்துறை பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு மட்டும்) பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் உறுப்பு பிரிவுகளுக்கு பொருந்தும், இதனால் உறுப்பு அலகுகளால் வெளியேற்றப்படும் கழிவுகளை பின்னர் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்க முடியும். இவை எதிர்மறை சவ்வூடுபரவல் (RO) நிராகரிப்பு மேலாண்மை அமைப்பு (RMS) மற்றும் அசைவூட்டப்பட்ட மெல்லிய படல உலர்த்தி (ATFD) அமைப்புகளைக் கொண்ட பூஜ்ஜிய திரவ வெளியேற்றம் (ZLD) அமைப்பினை நிறுவி இயக்கி பூஜ்ஜிய திரவ வெளியேற்ற நிலையை அடைய இயலும். (தீர்மானம் எண் 294–2–3).

2. இரண்டாம் கட்டமாக கோவளம் மீனவ கிராமத்தில் தூக்கி எறியப்பட்ட மீன்வலை சேகரிப்பு மையம் அமைக்க வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் / பயிலரங்கம், அடிப்படை ஆய்வுகள், தூக்கி எறியப்பட்ட மீன்வலை சேகரிப்பு

மையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு, தூக்கி எறியப்பட்ட மீன்வலைகளை சேகரித்து வரிசைப்படுத்துதல், நிராகரிக்கப்பட்ட மீன்வலைகளை சேகரித்து மறுசுழற்சி நிலையத்திற்கு கொண்டு செல்லுதல் மற்றும் ரூ.50 இலட்சம் செலவில் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன (தீர்மானம் எண். 294-2-5).

3. சென்னை மெரினா கடற்கரையில் பதினைந்து மின்சார துள்ளுந்து (Scooter) மற்றும் இரண்டு நிலைய வேகன் கார்கள் (மூன்று சக்கர வாகனங்கள்) மற்றும் பதினேழு பணியாளர்களைக் கொண்ட நீலப் படையினை தமிழ்நாடு கடற்கரை திட்டத்தின் கீழ் சரக்கு மற்றும் சேவை வரி உட்பட சுமார் ரூ.1,09,04,080/- செலவில் அமைக்கவும், மேற்கண்ட செலவான ரூ.1,09,04,080/- இலிருந்து ரூ. 23,39,400/- செலவில் பதினைந்து (15) மின்சார இருசக்கர வாகனங்கள் வாங்குதல். (தீர்மானம் எண்.294-2-6) (ரூ.294-2-6).

4. கோயம்புத்தூர் மாவட்டம், நீலகிரி மாவட்டம் (ஊட்டி நகராட்சி) மற்றும் திண்டுக்கல் மாவட்டம் (கொடைக்கானல் நகராட்சி) ஆகிய மூன்று மஞ்சப்பை படைப்பிரிவு ரூ.1,24,13,487/- செலவில் அமைக்கவும், ரூ.32.75.160/- செலவில் 21 மின்சார இருசக்கர வாகனங்கள் வாங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. (தீர்மானம் எண் 294-2-7).

5. 2024-2025 ஆம் ஆண்டிற்கான மாபெரும் பிளாஸ்டிக் சேகரிப்பு இயக்கத்தை அனைத்து மாவட்டங்களிலும், பெருநகர சென்னை மாநகராட்சியிலும் மாதந்தோறும் ஒரு முறை பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ரூ.10 கோடி செலவில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது (தீர்மானம் எண் 294-2-9).

6. தமிழ்நாடு கடலோர மறுசீரமைப்பு இயக்கத்தின் கீழ் உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.100 கோடி மதிப்பீட்டில் ஐந்தாண்டுகளுக்கு மாசு தடுப்பு பணிகளை மேற்கொள்ள உத்தேசித்தல். (தீர்மான எண் 294-2-10).

7. 2023 - 24 ஆம் நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட பணிகளை நீலகிரி வரையாடு திட்டத்தை செயல்படுத்த 08.03.2024 நாளிட்ட நடப்பாணையின் படி ரூ.83.00 இலட்சத்தை விடுவிப்பதற்கான முன்மொழிவு (தீர்மானம் எண்.294-2-11).

8. கோயம்புத்தூர் மாவட்டம் தடாகம் பகுதியில் அமைந்துள்ள செங்கல் சூளைகளுக்கான சுற்றுச்சூழல் இழப்பீட்டை ரூ.1,21,70,349/- நடத்த புதுடில்லியில் உள்ள எரிசக்தி மற்றும் வள நிறுவனத்திற்கு (TERI) திட்ட ஒதுக்கீடு (தீர்மானம் எண் 294-2-12).

9. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால், சென்னை பெருங்குடி மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் திருக்கட்டளை ஆகிய இடங்களில் அமைந்துள்ள திடக் கழிவு கொட்டிடங்களில், சட்டவிரோதமாக நடைபெறும் நகர்ப்புற கழிவு கொட்டுதல் மற்றும்

எரிப்பு நடவடிக்கைகளை கண்காணிக்கும் நோக்கில், வெப்பப் படக்கருவி மற்றும் வாயு உணரி அமைப்பதற்கான முன்மொழிவு. 2024–2025 ஆம் ஆண்டிற்கான அறிவிப்பாக, மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான கட்டளை மென்பொருளை (கமன்ட் software) பயன்படுத்தி, பெயர் பெற்ற நிறுவனத்தின் மூலம், தமிழ்நாடு வெளிப்படைத்தன்மை உள்ள டெண்டர் சட்டம், 1998–ஐ பின்பற்றி, ரூ.4.00 கோடி என்ற வரையறுக்கப்பட்ட செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது (தீர்மானம் எண் 294–2–13).

**10.** தமிழ்நாட்டில் ஹாட் மிக்ஸ் பிளான்ட் (Hot Mix Plant) தொடர்பாக, 29.07.2016 அன்று வெளியிடப்பட்டுள்ள தற்போதைய "தமிழ்நாட்டிற்கான ஹாட் மிக்ஸ் பிளான்ட் வழிகாட்டி நெறிமுறைகள்" மற்றும் சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் (MoEF & CC) வெளியிட்டுள்ள அறிவிப்பு எண் G.S.R. 376 (E), நாள் 18.05.2023 ஆகியவற்றின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஹாட் மிக்ஸ் பிளான்டிற்கான சுற்றுச்சூழல் தரநிலைகளுக்கு ஏற்ப, திருத்தப்பட்ட "தமிழ்நாட்டிற்கான ஹாட் மிக்ஸ் பிளான்ட் வழிகாட்டி நெறிமுறைகள்" வெளியிடுவதற்காக (தீர்மானம் எண் 294–2–14).

**11.** தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நிதியிலிருந்து ரூ.1 கோடியை மணலி எண்ணூர் புனரமைப்பு மற்றும் புத்துயிரூட்டல் நிறுவனத்திற்கு அரசாணை அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமாக விடுவித்தல். எண்.43, நாள்: 15.03.2024 (தீர்மானம் எண். 294–2–16).

**12.** ஆலோசனைப் பணிகளை வழங்குவதற்கான முன்மொழிவு. பிரைஸ் வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட், தமிழ்நாட்டில் மின்னணுக் கழிவுகள், பேட்டரி கழிவுகள், டயர் கழிவுகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட எண்ணெய் ஆகியவற்றில் மின்சாரக் கழிவுகள், டயர் கழிவுகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட எண்ணெய் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கான தொழில்நுட்ப ஆதரவிற்காக, 12 மாத காலத்திற்கு 18 சதவீத சரக்கு மற்றும் சேவை வரி உட்பட சுமார் ரூ.56,64,000/– இரண்டு நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு ஒருங்கிணைப்பாளர்களை நியமித்து 12 மாத காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஏற்கும் அலுவலர் அனுமதிக்கப்படுவார். தமிழ்நாடு ஒளிவுமறைவு இல்லா ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000 விதி 14 துணை விதி (9) இன் படி ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவை விதம். பிரைஸ்வாட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தற்போதைய குழுவில் இருந்து மற்றொரு ஒருங்கிணைப்பாளரை மாற்றலாம். (தீர்மானம் எண் 294–2–18).

**13.** 2023–2024 ஆம் நிதியாண்டில் 26 பள்ளிகளில் பசுமைப்பள்ளிகள் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை செயல்படுத்த வாரியத்தின் நிதியிலிருந்து ரூ.4.40 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. (தீர்மானம் எண் 295–2–1).

14. தமிழ்நாடு பருவநிலை மாற்ற இயக்கத்தின் கீழ் 2024–2025 ஆம் ஆண்டிற்கான "பருவநிலை மாற்றத்திற்கான வாழ்க்கை முறை" திட்டத்தை செயல்படுத்த வாரியத்தின் நிதியிலிருந்து ரூ.50.00 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. (தீர்மான எண் 295–2–2).

15. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பள்ளிக்கரணை சதுப்பு நிலம் பாதுகாப்பு ஆணையத்திற்கு ரூ.20.30 கோடியை அரசின் வழிகாட்டுதலின்படி விடுவித்துள்ளது (தீர்மானம் எண். 295–2–3).

16. மாசுபாட்டைக் குறைக்கும் பொருட்டு சூரிய உதயம் முதல் சூரிய அஸ்தமனம் வரை சுற்றுலாப் பயணிகளின் பயணத்திற்காக 4 பேட்டரி கார்கள் மற்றும் 20 கியர் மிதிவண்டிகள் வாங்குவதற்காக கன்னியாகுமரி மகளிர் திட்டம் இயக்குநருக்கு ரூ.51,78,000/– (ரூபாய் ஐம்பத்தொரு இலட்சம் எழுபத்தெட்டாயிரம் மட்டும்) வழங்குதல். (தீர்மானம் எண் 295–2–6).

17. 2024–2025 ஆம் ஆண்டிற்கான நீலகிரி வரையாடு திட்டத்தை செயல்படுத்த ரூ.1.44 கோடி விடுவிக்கப்பட்டு, புலிகள் அறக்கட்டளைக்கு திரும்பப் பெறுவதற்காக ரூ.0.6 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது (தீர்மானம் எண்.295–2–9).

18. 255 நிறுவனங்கள் கொள்முதல் செய்ய ரூ.76.50 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மாசு தடுப்பு நிதியிலிருந்து காற்று ஒலியால் ஏற்படும் அதிகப்படியான இரைச்சலைக் கண்டறிய போக்குவரத்துத் துறையின் அனைத்து செயலாக்க அலுவலகங்களுக்கும் அச்சுப்பொறியுடன் கூடிய டெசிபல் மீட்டர்களை வழங்குதல். (தீர்மானம் எண் 295–2–12).

19. கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவர பாதுகாப்பு ஆய்வு மைய இயக்குநரிடமிருந்து "திடக்கழிவுகளை மதிப்புமிக்க பொருட்களாக மாற்றுதல் மற்றும் கருப்பு வீரர் ஈக்களைப் பயன்படுத்தி மாசுபாட்டைத் தணித்தல்" குறித்த கருத்துரு.

**-oOo-**

## அத்தியாயம் – V

**வாரியத்தின் செயல்பாடுகள்**

### 5.1 தொழிற்சாலைகளை கண்காணித்தல் மற்றும் இசைவாணை வழங்குதல்

பிரிவு 25 நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 மற்றும் பிரிவு 21 காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981ன் படி எந்த ஒரு தொழில் முனைவோரும் மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இசைவு இன்றி ஒரு தொழிற்சாலையை இயக்கவோ தொழிற்சாலைக் கழிவுநீரை நீர் ஆதாரங்களிலோ, கழிவு நீர் கால்வாய்களிலோ, நிலப்பரப்புகளிலோ வெளியேற்றக் கூடாது. மேலும் காற்று மாசினையும் வெளியேற்றக் கூடாது. எனவே அனைத்துத் தொழில் முனைவோர்களும் வாரியத்திடம் இருந்து மேற்கண்ட இரு சட்டங்களின் படி இசைவாணை பெறவேண்டும். தொழிற்சாலைகளுக்கு இரண்டு கட்டமாக இசைவாணை வழங்கப்படுகிறது. முதல் கட்டமாக, தொழிற்சாலையினை நிறுவ 'நிறுவுதல் இசைவாணை', அந்த தொழிற்சாலை அமைந்துள்ள இடம் மற்றும் தொழிற்சாலையின் கட்டுமானம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு வழங்கப்படுகிறது.

இரண்டாவது கட்டமாக, தொழிற்சாலையினை இயக்க 'இயக்குதல் இசைவாணை', அந்த தொழிற்சாலை நிறுவுதல் இசைவாணையின் படி தொழிற்சாலையினை நிறுவி மற்றும் அதில் உள்ள நிபந்தனைகளை நிறைவேற்றி இயக்கும் தருவாயில் வழங்கப்படுகிறது. இதன் பின்னர் தொழிற்சாலையானது இயக்குதல் இசைவாணையை முறையாக புதுப்பித்து எப்பொழுதும் இசைவாணை செல்லுபடியாகும் நிலையில் வைத்திருக்கவேண்டும். இசைவாணையை உரிய முறையில் வழங்க, வாரியத்தின் களப்பணி அலுவலர்கள் அவர்களுக்குரிய எல்லைக்குள் உள்ள தொழிற்சாலைகளை ஆய்வு செய்து, தொடர்ந்து கண்காணித்து உரிய முறையில் மாசுக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும், தொழிற்சாலைக் கழிவு நீர் மற்றும் வடிகால் கழிவு நீரை முறையாக வெளியேற்றுகிறதா என்பதையும் ஆய்வு செய்து அதன் பின்னரே இசைவாணை வழங்க பரிந்துரைக்கின்றனர். அதன்படி இசைவாணை புதுபிக்கப்படுகிறது. மேலும் பொது மக்கள், பிற நிறுவனங்கள் மற்றும் அரசிடம் இருந்து பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில் ஆய்வு செய்யப்படுகிறது. தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் நேரத்தில் சரியான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு அதனடிப்படையில் தொழிற்சாலைகள் நடவடிக்கைகள் மேற்கொள்கின்றன.

#### 5.1.1 தொழிற்சாலைகளின் வகைப்பாடு

இசைவாணை பெறும் முறையை எளிதாக்குவதற்கும், திறம்பட கண்காணிப்பதற்கும் மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம், மாசு குறியீட்டு மதிப்பெண்ணை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சாலைகளை சிவப்பு, ஆரஞ்சு, பச்சை மற்றும் வெள்ளை என வகைப்படுத்தியுள்ளது.

## V. வாரியத்தின் செயல்பாடுகள்

அனைத்து மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியங்களுக்கும் (SPCBs) ஒப்புதல் வழங்குதல், கண்டுபிடிப்புகள் மற்றும் பிற தொடர்புடைய செயல்பாடுகளுக்கு இதையே பின்பற்றுமாறு அறிவுறுத்தியுள்ளது. மேற்கூறிய வகைப்படுத்தலைப் பின்பற்றி, வாரியம், தொழிற்சாலைகளின் மாசுபடுத்தும் திறன் மற்றும் கண்காணிப்பு நோக்கத்திற்காக அதன் மொத்த நிலையான சொத்துக்களின் (GFA) மதிப்பை இணைத்து பல்வேறு வகைகளில் தொழிற்சாலைகளை வகைப்படுத்தியுள்ளது. இவ்வாறு, தொழிற்சாலைகள் சிவப்பு, ஆரஞ்சு, பச்சை அல்லது வெள்ளை மற்றும் பெரிய, நடுத்தர அல்லது சிறிய என வகைப்படுத்தப்படுகின்றன. மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டுதலின்படி, வெள்ளை வகை தொழில்களுக்கு ஒப்புதல் பெற வேண்டிய அவசியமில்லை, இருப்பினும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடம் தகவல் தெரிவிக்க வேண்டும்.

**தொழிற்சாலைகளின் வகைப்பாடு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| மொத்த நிலையான சொத்துகளின் (GFA) அடிப்படையிலான தொழிற்சாலைகளின் வகை | மொத்த நிலையான சொத்து மதிப்பு (ரூ. கோடியில்) | மாசுபடுத்தும் திறனை அடிப்படையாகக் கொண்ட வகை | | | |
|---|---|---|---|---|---|
| | | சிவப்பு | ஆரஞ்சு | பச்சை | வெள்ளை |
| பெரியது | >10 | அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்–சாலைகள் | நடுத்தர மாசு ஏற்படுத்தும் தொழிற்–சாலைகள் | குறைவான மாசு ஏற்படுத்தும் தொழிற்–சாலைகள் | மிகக்குறை வாக மாசு ஏற்படுத்தும் தொழிற்–சாலைகள் |
| நடுத்தரம் | 5 – 10 | | | | |
| சிறியது | <5 | | | | |

வாரிய இசைவாணையின் கீழ் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| அளவு / வகை | சிகப்பு | ஆரஞ்சு | பச்சை | மொத்தம் |
|---|---|---|---|---|
| பெரியது | 2233 | 3568 | 1414 | 7215 |
| நடுத்தரம் | 318 | 1220 | 705 | 2243 |
| சிறியது | 11484 | 26405 | 12345 | 50234 |
| மொத்தம் | **14035** | **31193** | **14464** | **59692** |

மாவட்ட அலுவலகம் வாரியாக, தொழிற்சாலைகளின் எண்ணிக்கை இணைப்பு–IV ல் கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் 1982 ஆம் ஆண்டு முதல் வாரியத்தின் கீழ் வரும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை இணைப்பு–V ல் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், சர்க்கரை (36), அனல் மின் நிலையங்கள் (49), சிமெண்ட் (26), மருந்து தயாரிக்கும் ஆலை (26), வடிகட்டுதல் ஆலைகள் (17), பெட்ரோ கெமிக்கல்ஸ் (10), உரங்கள் (6), தோல் பதனிடும் தொழிற்சாலைகள் (11) காஸ்டிக் சோடா (3), காகித கூழ் & காகித உற்பத்தி ஆலை (3), சாயம் மற்றும் சாயப் பொருட்கள் (2), எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் (2), பூச்சிக்கொல்லி

மருந்து தயாரிப்பு ஆலை (2) இரும்பு மற்றும் எஃகு (1) என் மொத்தம் 198 அதிக மாசு ஏற்படுத்தும் 17–வகை தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகிறது.

### 5.1.2 தொழிற்சாலை ஆய்வு மற்றும் மாதிரிகள் சேகரிப்பின் கால இடைவெளி

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 25.02.2004 நாளிட்ட வாரிய நடப்பாணை எண். 22–ல் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி அவ்வப்போது ஆய்வு மற்றும் மாதிரி சேகரிப்பு மூலம் தொழிற்சாலைகளை கண்காணிக்கிறது.

**மேற்கொள்ளப்பட வேண்டிய / மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் விவரங்கள் கீழ்கண்டவாறு:**

| தொழிற்சாலை வகை | பிரிவு | தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை | சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| பெரியது | சிவப்பு | 2233 | 8612 | 13545 |
| | ஆரஞ்சு | 3568 | 4537 | 2942 |
| | பச்சை | 1414 | 611 | 274 |
| நடுத்தரம் | சிவப்பு | 318 | 842 | 586 |
| | ஆரஞ்சு | 1220 | 1123 | 367 |
| | பச்சை | 705 | 285 | 34 |
| சிறியது | சிவப்பு | 11484 | 6163 | 1597 |
| | ஆரஞ்சு | 26405 | 8295 | 967 |
| | பச்சை | 12345 | 3398 | 296 |
| **17 வகை தொழிற்சாலைகள்** | | **198** | **1981** | **2040** |
| இதர ஆய்வுகள் | | | **2311** | **2631** |

### 5.2 இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை (Online Consent Management and Monitoring System)

இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமையானது (OCMMS) இணையதளத்தினை அடிப்படையாக கொண்ட பொதுவான பயன்பாட்டு மென்பொருள் 2015 முதல் செயல்படுத்திவருகின்றது. இந்த மென்பொருள் வாரியத்தின் அடிப்படை செயல்பாடுகளாக விளங்கக்கூடிய இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பினை தானியங்கு முறையில் மேற்கொள்ள கூடியதாகும். நிறுவுவதற்கான இசைவாணை, இயங்குவதற்கான இசைவாணை, இசைவாணை புதுப்பித்தல், ஆவணங்கள் பதிவேற்றல், இசைவாணை கட்டணம் செலுத்தல், விளக்கங்கள் சமர்ப்பித்தல், விண்ணப்பங்களின் நிலையினை அறிதல் ஆகிய செயல்பாடுகளை தொழிற்சாலைகள் இணையதள வழியாகவே தெரிந்து கொள்ள வழிவகுக்கிறது. மேலும் விண்ணப்ப மறு ஆய்வு, விளக்கங்களைக் கேட்டல், ஆய்வு மேற்கொள்ளல், ஆய்வறிக்கையினை சமர்ப்பித்தல், இசைவாணையினை தயாரித்தல் ஆகிய இசைவாணை மேலாண்மை செயல்முறைகளை இணையதளம் வாயிலாகவே மேற்கொள்ளவும் மற்றும் வாரியத்தின் செயல்பாடுகளை வாரிய அதிகாரிகள் இணையதளம்

வாயிலாகவே (இணையதள முகவரி ocmms.tn.gov.in) மேற்பார்வையிடவும் இந்த முறைமை வழி வகுக்கிறது.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு திட்டத்தின் கீழ் வரும் தொழிற்சாலைகளுக்கு ஏழு வருட காலத்திற்கும், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு திட்டத்தின் கீழ் வராத தொழிற்சாலைகளுக்கு ஐந்து வருட காலத்திற்கும், செல்லத்தக்கபடி நிறுவுவதற்கான இசைவாணைகளை வாரியம் வழங்குகின்றது. தொழிற்சாலைகளை இயக்குவதற்கான இசைவாணை சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை வகையான தொழிற்சாலைகளுக்கு முறையே 5, 10 மற்றும் 14 வருடங்கள் செல்லத்தக்கபடி, வாரிய நிபந்தனைகளை பூர்த்தி செய்த தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகிறது. சிறிய சிவப்பு வகை தொழிற்சாலைகள் மற்றும் அனைத்து ஆரஞ்சு மற்றும் பச்சை வகை தொழிற்சாலைகளுக்கு தானியங்கு முறையில் இசைவாணைப் புதுப்பித்தல் முறையை வாரியம் அறிமுகம் செய்துள்ளது. இதன்படி தொழிற்சாலைகள், முன் ஆய்வு செய்யப்படாமல் அவர்கள் அளிக்கும் சுய சான்றிதழ் அடிப்படையில் இசைவாணை புதுப்பித்து வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு மாசுக் கட்டுபாடு வாரியத்தால் 2024–25 ஆம் ஆண்டு நிறுவுவதற்கு மற்றும் இயக்குவதற்கு வழங்கப்பட்ட இணைவாணைகளில் விவரம் கீழ்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

| காலம் | நிறுவுவதற்கான இசைவாணை | | இயக்குவதற்கான இசைவாணை | |
|---|---|---|---|---|
| | நீர் சட்டம் | காற்று சட்டம் | நீர் சட்டம் | காற்று சட்டம் |
| 31.03.2024 வரை வழங்கப்பட்டவை | 26984 | 26913 | 68398 | 65586 |
| 2024–25 ஆம் ஆண்டு வழங்கப்பட்டவை | 1135 | 1135 | 13289 | 13286 |
| **மொத்தம்** | **28119** | **28048** | **81684** | **78872** |

### 5.3 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

குறு, சிறு, நடுத்தர தொழிற்சாலைகளின் முக்கியத்துவத்தையும் மற்றும் மாசுக் கட்டுப்பாடு தர அளவீடுகளை அடைவதற்கு அவர்களுக்கு ஏற்படும் சிரமத்தையும் கருத்தில் கொண்டு, சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் தொழிற்சாலைகள் இயங்கி அவைகள் முன்னேற்றம் அடைய, ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் மற்றும் தமிழ்நாடு அரசின் வாயிலாக இத்தகைய தொழிற்சாலைகளுக்கு புதிய தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவி செய்யும் திட்டத்தை அறிமுகம் செய்தது. இத்திட்டம், தொகுப்பாக அமைந்துள்ள குறு, சிறு, நடுத்தர தொழிற்சாலைகள், பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு நிதி உதவி பெறுவதற்கு வழிவகை செய்தது. அதன்படி, தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தொகுப்பாக அமைந்திருக்கும் குறு, சிறு, நடுத்தர தொழிற்சாலைகளுக்கு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதில் வாரியம் முக்கிய பங்காற்றி வருகிறது. மேலும், பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான தொழில் நுட்பத்துடன் கூடிய திட்ட அறிக்கையை

பரிசீலனை செய்வதற்கும் வாரியம் உதவி புரிகிறது. தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய திட்டங்களின் விபரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | தொழிற்சாலை வகை | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 13 |
| 2 | துணி சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் | 30 |
| 3 | மின் முலாம் பூசும் தொழிற்சாலைகள் | 2 |
| 4 | உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் | 1 |
| 5 | மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள் | 1 |
| 6 | பொது கடல்சார் கழிவு வெளியேற்ற திட்டங்கள் | 1 |
| | மொத்தம் | **48** |

### 5.3.1 தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கான பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில் தோல் தொழிற்சாலைகளில் உருவாகும் கழிவுநீரை சுத்திகரிப்பதற்காக 13 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (CETPs) நிறுவப்பட்டுள்ளன. அவற்றில், 10 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பூஜ்ய கழிவு நீர் வெளியேற்றும் அமைப்பு (ZLD) முறையை பின்பற்றி இயங்குகின்றன. மற்ற 3 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (மாதவரம் (மொத்த தொழில் கழிவு நீர்), பல்லாவரம் மற்றும் திண்டுக்கல் (பகுதி தொழில் கழிவு நீர்), சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை, சுத்திகரிக்கபட்ட அன்றாட கழிவுநீருடன் கலந்து வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்ட தரத்தை பூர்த்தி செய்கின்றன.

பெருந்துறையில் உள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமானது இசைவாணையில் உள்ள நிபந்தனைகளை மீறியதால் வாரியத்தால் மூடப்பட்டுள்ளது. திருச்சியில் உள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அதன் உறுப்பினர் தொழிற்சாலைகள் வாரியத்தால் மூடப்பட்டுள்ளதால் செயல்படவில்லை.

## V. வாரியத்தின் செயல்பாடுகள்

தொழிற்சாலைகளின் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் பட்டியல் :

| வ. எண். | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் பெயர் | உறுப்பினர் தொழிற் சாலைகள் எண்ணிக்கை | இசைவாணையில் அனுமதிக்கப்பட்ட அளவு (கிலோ லிட்டர் நாள் ஒன்றிற்கு) | அனுமதிக்கப்பட்ட அளவு (கிலோ லிட்டர் நாள் ஒன்றிற்கு) |
|---|---|---|---|---|
| 1 | தி/ள்.டால்கோ திருச்சி டேனரி எஃப்ளுவண்ட் டிரிட்மென்ட் கம்பெனி லிட்., திருச்சி (தன்னிச்சையாக மூடப்பட்ட நிறுவனம்) | 5 | 201.4 | 201.4 |
| 2 | தி/ள்.பெருந்துறை லெதர் இன்டஸ்ட்ரீஸ் எக்கோ செக்யூரிட்டி பிரைவேட் லிட், பெருந்துறை, ஈரோடு மாவட்டம். (வாரியத்தால் மூடப்பட்ட நிறுவனம்) | 14 | 2000 | 1000 |
| 3 | தி/ள்.ஆம்பூர் டேனரி எஃப்ளுவண்ட் டிரிட்மென்ட் கம்பெனி (துத்திப்பெட்), ஆம்பூர், வேலூர் திருப்பத்தூர் மாவட்டம். | 44 | 2219 | 2219 |
| 4 | தி/ள்.ஆம்பூர் டேனரி எஃப்ளுவண்ட் டிரிட்மென்ட் கம்பெனி (மல்லிகை தோப்பு), ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம். | 17 | 1100 | 1100 |
| 5 | தி/ள் வாணிடெக் லிமிடெட், வளையாம்பேட் வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம். | 133 | 3342 | 3342 |
| 6 | தி/ள்.டால்கோ பெர்னாம்பெட் டேனரி எஃப்ளுவண்ட் டிரிட்மென்ட் கம்பெனி, பேர்னாம்பேட்டை, வேலூர் மாவட்டம். | 36 | 891 | 891 |
| 7 | தி/ள். இராணிபேட்டை டேனரி எஃப்ளுவண்ட் டிரிட்மென்ட் கம்பெனி லிமிடெட் (ராணிடெக்), இராணிப்பேட்டை மாவட்டம். | 92 | 4500 | 4500 |
| 8 | தி/ள். இராணிப்பேட்டை சிட்கோ ஃபினிஷ்டு லெதர் எஃப்ளுவண்ட் டிரிட்மென்ட் கம்பெனி, ராணிப்பேட்டை மாவட்டம். | 79 | 2500 | 2500 |
| 9 | தி/ள்.சிப்காட் சிட்கோ (Phase–II) எண்ட்ரபிரினர் ஃபினிஷ்டு லெதர் எஃப்ளுவண்ட் டிரிட்மென்ட் கம்பெனி லிமிடெட், ராணிப்பேட்டை மாவட்டம். | 20 | 1560 | 1000 |
| 10 | தி/ள்.விசாரம் டேனர் என்வய்ரோ கண்ட்ரோல் சிஸ்ட்டம் (பி) லிட், மேல் விசாரம், ராணிப்பேட்டை மாவட்டம். | 36 | 3400 | 600 |
| 11 | தி/ள் மாதவரம் லெதர் மேனுஃபாக்சர்ஸ் ஃபெசிலிட்டி (பிரைவேட்) லிமிடெட், மாதவரம் (நீர்த்தல்) | 14 | 400.00 | 400.00 |
| 12 | தி/ள் பல்லாவரம் டேனர்ஸ் இண்டஸ்ட்ரியல் எஃப்ளுயன்ட் ட்ரீட்மென்ட் கம்பெனி லிமிடெட், குரோம்பேட்டை, சென்னை (நீர்த்தல்) | 130 | 3000.00 | 3000.00 |
| 13 | தி/ள் டால்கோ திண்டுக்கல் டேனர்ஸ் என்விரோ கண்ட்ரோல் சிஸ்டம் பிரைவேட் லிமிடெட், திண்டுக்கல் (நீர்த்தல்) | 49 | 2533.00 | 2533.00 |
| | **மொத்தம்** | **669** | **27646.40** | **23286.40** |

- தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் (பொது மற்றும் தனி) பூஜ்ய கழிவு நீர் வெளியேற்றும் அமைப்பிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சுமார் 127773.674 மெட்ரிக் டன் கலப்பு உப்பானது தோல் பதனிடும் தொழிற்சாலைகள்/பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் வளாகங்களில் பாதுகாப்பாக சேகரித்து வைக்கப்பட்டுள்ளது.
- குஜராத், பாவ்நகரில் உள்ள மத்திய உப்பு மற்றும் கடல் இரசாயன ஆராய்ச்சி நிறுவனத்தின் (CSMCRI), மூலம் ஆய்வு மேற்கொள்ள வாரியம் ஊக்குவித்துள்ளது. இந்நிறுவனமானது, கலப்பு உப்பை, பொது உப்பை மூலப்பொருட்களுகாக பயன்படுத்தும் குளோரா ஆல்கலி சோடா சாம்பல் கலவை, ஜவுளி, கூழ் மற்றும் காகிதத் தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ற தரத்தில் கலப்பு உப்பைச் சுத்திகரிக்கும் ஒரு முறையைக் கண்டறிந்துள்ளது.
- தி/ள். தூத்துக்குடி ஆல்கலி இரசாயனங்கள் மற்றும் உரங்கள் லிமிடெட் (தூத்துக்குடி) தங்கள் உற்பத்தி செயல்முறையில் சுத்திகரிக்கப்பட்ட உப்பை மூல பொருளாகப் பயன்படுத்த ஒத்துக்கொண்டுள்ளது. இது தொடர்பான முன்மாதிரி ஆலையை நிறுவுவதற்கான பணிகளை விரைவுபடுத்துமாறு AISHTMA விற்கு வாரியம் உத்தரவிட்டுள்ளது.
- இருப்பினும், தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கழிவுநீரைச் சுத்திகரிப்பதன் மூலம் உருவாக்கப்படும் கலவை உப்பைப் பயன்படுத்துவதற்கான நிலையான செயல்பாட்டு நடைமுறை (SOP), மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் இன்னும் வெளியிடப்படவில்லை.
- கலப்பு உப்பை சுத்திகரிக்க உப்பு சுத்திகரிப்பு நிலையத்தை உள்ளடக்கிய மேம்படுத்துதல் பணிகளின் திருத்திய முன்மொழிவை (DPR) தி/ள். இராணிப்பேட்டை பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் மத்திய அரசிடம் சமர்ப்பித்துள்ளது. கலப்பு உப்பை சுத்திகரிக்கும் தொழில்நுட்பம், நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பிரச்சனைக்குத் தீர்வாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**5.3.2 துணி சலவை மற்றும் சாய தொழிற்சாலைகளுக்கான பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்**

சிறிய அளவிலான துணி சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளின் நன்மைக்காக, 1996–2000 ஆம் ஆண்டில், 30 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் முதல் மற்றும் இரண்டாம்

சுத்திகரிப்பு அமைப்பினை நிறுவி இயக்கப்பட்டன. இப்பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களால் மொத்த கரைந்துள்ள திடப்பொருட்களின் தர அளவான 2100 மிகி/லி–யினை அடைய முடியாததால் அவர்கள் பூஜ்ஜிய நிலை கழிவுநீர் வெளியேற்ற முறையினை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டார்கள்.

அதற்கிணங்க, தற்போது, 19 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (18 திருப்பூர், 1 பெருந்துறை) சவ்வூடு பரவுதலுடன் கூடிய மூன்றாம் நிலை சுத்திகரிப்பு அமைப்பு, பல்லடுக்கு ஆவியாக்கும் கலன் மற்றும் அடர் கலப்பு உப்பினை பிரித்தெடுக்கும் உலர்த்தி ஆகியவற்றை அமைத்து பூஜ்ஜியநிலை கழிவுநீர் வெளியேற்றத்தை அடைந்துள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அய்யம்பேட்டை முத்தியால்பேட்டை பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பூஜ்ஜிய நிலை கழிவுநீர் வெளியேற்றத் திட்டத்தை உத்தேசித்துள்ளது. இதற்கான நிதியினை ஒன்றிய அரசின் துணி, நூல்துறை மற்றும் மாநில அரசின் கைத்தறி கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்துறையிடமிருந்து பெற விண்ணப்பித்துள்ளது.

மீதமுள்ள 10 (8 கரூர், 2 திருப்பூர்) பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பூஜ்ஜிய நிலை கழிவுநீர் வெளியேற்றத்தினை அடைய இயலாததால் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் ஆணையின்படி மூடப்பட்டுள்ளது.

**பூஜ்ஜிய திரவ வெளியேற்றத்தில் இயங்கும் சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளின் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் பட்டியல் பின்வருமாறு:**

| வ. எண். | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் பெயர் | உறுப்பினர் தொழிற் சாலைகள் எண்ணிக்கை | சுத்திகரிப்பு திறன் (கிலோ லிட்டர் நாள் ஒன்றிற்கு) |
|---|---|---|---|
| 1. | தி/ள்.அருள்புரம் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் பிரைவேட் லிமிடெட், சர்வே எண். 133, கிரண் கார்டன், அருள்புரம், திருப்பூர் – 641 605 | 10 | 5500 |
| 2. | தி/ள்.ஈஸ்டர்ன் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் பிரைவேட் லிமிடெட், சர்வே எண். 3/1, 4/2, காசிபாளையம், நல்லூர் (கிராமம்), விஜயபுரம் (அஞ்சல்), திருப்பூர் – 641 606 | 24 | 6000 |
| 3. | தி/ள்.கள்ளிக்காடு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் பிரைவேட் லிமிடெட், சர்வே எண். 158/5, கள்ளிக்காடு தோட்டம், கே.வி.ஆர் நகர், கருவம்பாளையம், திருப்பூர் – 641 687. | 12 | 3000 |
| | | | |
| 4. | தி/ள்.திருப்பூர் முருகம்பாளையம் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் பிரைவேட் லிமிடெட் | 50 | 11000 |
| 5. | தி/ள்.மங்களம் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் பிரைவேட் லிமிடெட் | 13 | 4000 |
| 6. | தி/ள்.ராயபுரம் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் | 12 | 5500 |

V. வாரியத்தின் செயல்பாடுகள்

| வ. எண். | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் பெயர் | உறுப்பினர் தொழிற் சாலைகள் எண்ணிக்கை | சுத்திகரிப்பு திறன் (கிலோ லிட்டர் நாள் ஒன்றிற்கு) |
|---|---|---|---|
| | பிரைவேட் லிமிடெட் | | |
| 7. | தி/ள்.வீரபாண்டி பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் பிரைவேட் லிமிடெட் | 62 | 12000 |
| 8. | தி/ள்.அங்கேரிப்பாளையம், பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் பிரைவேட் லிமிடெட் | 46 | 10000 |
| 9. | தி/ள்.சின்னக்கரை பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் பிரைவேட் லிமிடெட் | 20 | 8000 |
| 10. | தி/ள்.கரைப்புதூர் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் பிரைவேட் லிமிடெட் | 19 | 4500 |
| 11. | தி/ள்.காசிபாளையம் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் பிரைவேட் லிமிடெட் | 11 | 4400 |
| 12. | தி/ள்.குன்னங்கல்பாளையம் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் பிரைவேட் லிமிடெட் | 15 | 5500 |
| 13. | தி/ள்.மன்னாரை பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் பிரைவேட் லிமிடெட் | 18 | 4200 |
| 14. | தி/ள்.சிறுபுலுவப்பட்டி பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் பிரைவேட் லிமிடெட், | 19 | 5000 |
| 15. | தி/ள்.வேட்டுவப்பாளையம் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் பிரைவேட் லிமிடெட், சர்வே எண். 7/110, சம்பாவயல் தோட்டம், வேட்டுவப்பாளையம், மங்களம் (கிராமம்), திருப்பூர் (வட்டம்), திருப்பூர் – 641 663. | 9 | 1500 |
| 16. | தி/ள்.ஆண்டிபாளையம் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் பிரைவேட் லிமிடெட், சர்வே எண். 96/1, 97/3, மங்களம் ரோடு, ஆண்டிப்பாளையம் (கிராமம்), திருப்பூர் – 641 687. | 10 | 4500 |
| 17. | தி/ள்.எஸ்.பெரியபாளையம் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் பிரைவேட் லிமிடெட், சர்வே எண். 224/2, அக்ரஹார பெரியபாளையம், எஸ்.பெரியபாளையம், பெருந்துறை வட்டம், திருப்பூர் – 641 607. | 6 | 1500 |
| 18. | தி/ள்.பார்க் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் பிரைவேட் லிமிடெட், சர்வே எண். 327, பிச்சம்பாளையம் புதூர் (அஞ்சல்), பி.என். ரோடு, திருப்பூர் – 641 603. | 4 | 2500 |
| 19. | தி/ள்.பெருந்துறை பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் பிரைவேட் லிமிடெட், 6வது குறுக்கு தெரு, சிப்காட் பெருந்துறை வட்டம், ஈரோடு மாவட்டம் – 638 052. | 14 | 4050 |
| | மொத்தம் | **369** | **102650** |

### 5.3.3 மின் முலாம் பூசும் தொழிற்சாலைகளில் உள்ள தொழிற் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

மின் முலாம் பூசும் தொழிற்சாலைகளுக்கென அமைக்கப்பட்ட பூஜ்ஜிய நிலை கழிவுநீர் வெளியேற்ற அமைப்புடன் கூடிய இரண்டு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் பெயர் | உறுப்பினர் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பபட்ட அளவு (நாள் ஒன்றுக்கான கிலோ லிட்டர்) |
|---|---|---|---|
| 1 | தி/ள். ஜே.பி.ஆர் டெக்னாலஜிஸ் லிமிடெட், கொரட்டூர் கிராமம், அம்பத்தூர் தாலுக்கா | 223 | 200 |
| 2 | தி/ள். மதுரை எலக்ட்ரோபிளேட்டிங் இண்டஸ்டிரியல் பார்க், கரிசல்குளம் கிராமம், திருப்புவனம் தாலுக்கா, சிவகங்கை மாவட்டம். | சிறியது: 48<br>நடுத்தரம்: 16<br>பெரியது: 16 | 49.6 |
| 3 | தி/ள். திருமுடிவாக்கம் இண்டஸ்ட்ரியல் என்விரோ பிரைவேட் லிமிடெட், திருமுடிவாக்கம் கிராமம், குன்றத்தூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம். | 02 | 200 |

### 5.3.4 பிற பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

| வ. எண் | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் பெயர் | உறுப்பினர் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பபட்ட அளவு (நாள் ஒன்றுக்கான கிலோ லிட்டர்) |
|---|---|---|---|
| 1 | தி/ள் கொடைக்கானல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் லிமிடெட், கொடைக்கானல் வட்டம், திண்டுக்கல் மாவட்டம் – ஹோட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரை சுத்திகரித்து, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை ஓடையில் சுத்திகரித்து வெளியேற்ற | 35 | 850 |

### 5.3.5 பொது கடல் சார் கழிவுநீர் வெளியேற்ற திட்டம்

கியூசெக்ஸ் என்று அழைக்கப்படும் கடலூர் சிப்காட் தொழிற்சாலைகள் பொது பயன்பாட்டு நிறுவனம் ஜனவரி 2000 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு இயங்கி வரும் பொது கடல் சார் கழிவுநீர் வெளியேற்ற திட்டம் ஆகும். ஜவுளி தொழிற்சாலைகள், மருந்து தயார் செய்யும் தொழிற்சாலைகள், சாய உற்பத்தி தொழிற்சாலைகள், இரசாயன தொழிற்சாலைகள், பூச்சி கொல்லி உற்பத்தி தொழிற்சாலைகள் மற்றும் இது போன்ற இதர தொழிற்சாலைகளை உள்ளடக்கிய கடலூர் சிப்காட் பகுதி 1 மற்றும் 2ல் உற்பத்தி ஆகும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினை சேகரித்து கடலில் வெளியேற்றும் பொது பயன்பாட்டு நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் 6 சேகரிக்கும்

தொட்டிகளையும், 2.2 கிலோ மீட்டர் நீளமுள்ள இணைப்பு குழாய்களையும் கொண்டுள்ளது. இக்குழாய் உப்பனாறு ஆற்றின் குறுக்கே சென்று பின்பு நிலத்தின் மீது சென்று இறுதியாக சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் கடலில் கலக்கப்படுகிறது. கடலில் கலக்கும் அந்த இடத்தில் குழாய்கள் கான்கீரிட் மூலம் நங்கூரம் இடப்பட்டு டிஃபியூசர் அமைப்பு மூலம் கடலின் மேற்பகுதியிலிந்து 8 மீட்டர் ஆழத்தில் கலக்கப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை ஒரு மணி நேரத்திற்கு 500 கன மீட்டர் என்ற விகிதத்தில் கடலில் கலக்க வாரியம் இசைவாணை வழங்கியுள்ளது.

## 5.4 கழிவு மேலாண்மை

### 5.4.1 திடக்கழிவு மேலாண்மை

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–யை அறிவிக்கை செய்துள்ளது. மேற்படி திடக்கழிவுகளை, சேகரித்து, சுத்திகரிப்பு செய்து அகற்றுவது அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் கடமையாகும். திடக்கழிவு மேலாண்மை தொடர்பான உள்ளாட்சி அமைப்புகளின் கடமைகள், திடக்கழிவு மேலாண்மை விதிகள் பிரிவு 15 ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் பிரிவு 16 ன் படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் இவ்விதிகளை செயல்படுத்துகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 25 மாநகராட்சிகளும் 141 நகராட்சிகளும் மற்றும் 481 பேரூராட்சிகளும் உள்ளன. 2024–2025 ஆண்டறிக்கையின் படி திடக்கழிவு உற்பத்தியின் மொத்த அளவு நாளொன்றுக்கு 16563 டன் (TPD) ஆகும். இதில் 16443 டன் (TPD) திடக்கழிவு உள்ளாட்சி அமைப்புகளால் சேகரிக்கப்படுகிறது. மொத்த திடக்கழிவு உற்பத்தியில் 56.57% திடக்கழிவு உள்ளாட்சி அமைப்புகளால் சுத்திகரிக்கப்படுகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 245 திடக்கழிவுகளை மேலாண்மை நிலையங்களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி, உள்ளாட்சி அமைப்புகள் உயிரி கழிவுகளை அகழ்ந்தெடுத்து (Bio–mining) நிலத்தை மீட்க வேண்டும். அதன்படி, மாநிலத்தில் உள்ள 290 இடங்களில் உள்ளாட்சி அமைப்புகளால் உயிரி கழிவுகளை அகழ்ந்தெடுக்கும் பணி தொடங்கப்பட்டு, அதில் 241 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 49 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை பணிகள் முடிக்கப்பட்ட இடங்களில் 1206 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பழைய குப்பை கிடங்குகளின் அருகிலுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் மற்றும் காற்றின் தரத்தை அவ்வப்போது ஆய்வு செய்து வருகின்றது. திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016–ன் படி விதிகளை மீறும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மற்றும் மரபு கழிவுகளை அகழ்ந்தெடுக்கும் பணிகளை தொடங்காத உள்ளாட்சி அமைப்புகளுக்கும் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 இன் பிரிவு 5 இன் கீழ், வாரியம் முகாந்திர அறிவிப்புகள் / உத்தரவுகள் / சுற்றுச்சூழல் இழப்பீடு விதிப்பு உத்தரவுகளை வழங்குகின்றது. ஒவ்வொரு

ஆண்டும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் திடக்கழிவு மேலாண்மை பற்றிய ஆண்டு அறிக்கையை படிவம்–Vல் மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு சமர்ப்பிக்கின்றது. இந்த அறிக்கை வாரிய இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்படுகின்றது.

மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் தயார் செய்த ஆண்டு அறிக்கையின் அடிப்படையில் 23.07.2018 அன்று திடக்கழிவு மேலாண்மையினை புது டெல்லியில் உள்ள மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம், புனராய்வு செய்து அதில் குறைபாடுகள் இருப்பதை கண்டறிந்தது. அதனடிப்படையில், மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு 2018ன் அசல் விண்ணப்ப எண். 606ல், 2016 ஆம் ஆண்டின் திடக்கழிவு மேலாண்மை விதிகளுக்கு கட்டுப்படுவது தொடர்பாக, தன்னிச்சையாக முன் வந்து வழக்கு பதிவு செய்து, ஒவ்வொரு மாநிலத்திற்குமான மாநில கண்காணிப்பு குழு, ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பு செயல் குழு, காலாண்டு அறிக்கை சமர்ப்பித்தல் போன்ற ஆணைகள் / வழிகாட்டுதல்களை வழங்கியது.

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 யை முறையாக செயல்படுத்தாத உள்ளாட்சி அமைப்புகள் மீது நடவடிக்கை எடுக்கவும், மேலும் இடைக்கால சுற்றுச்சூழல் இழப்பீடு தொகையினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் செலுத்த வேண்டும் எனவும் உத்தரவிட்டது. அதன்படி, தமிழ்நாடு மாசுக் கட்டுபபாடு வாரியம் 4 நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சுற்றுச்சூழல் இழப்பீடு தொகை செலுத்த வேண்டும் என சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 பிரிவு 5–ன் கீழ் உத்தரவிட்டுள்ளது. மேலும் 4 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு முகாந்திர கடிதம் அனுப்பியுள்ளது. மேலும், சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் பிரிவு 5 ன் கீழ் 7 நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு திடக்கழிவு மேலாண்மை தொடர்பான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 5.4.2 உள்ளாட்சி அமைப்புகளின் பொது வடிகால் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் மொத்தம் 2337.332 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட 109 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்பாட்டில் உள்ளன. உள்ளூர் / நகர்ப்புற பகுதிகள் முழுவதையும் உள்ளடக்கும் வகையில் நிலத்தடி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பது உட்பட, போதுமான கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்குமாறு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

**தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் இயக்கத்தில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிக்கப்படும் அன்றாட கழிவுநீர் அளவு விவரங்கள்**

**1. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்**

**V. வாரியத்தின் செயல்பாடுகள்**

| வ. எண். | உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் இயங்கும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் பெயர் | சுத்திகரிப்பு திறன் மில்லியன் லிட்டர் – நாளொன்றுக்கு |
|---|---|---|
| 1 | எழும்பூர் | 10 |
| 2 | கோயம்பேடு | 120 |
| 3 | கோயம்பேடு | 45 |
| 4 | நெசப்பாக்கம் | 50 |
| 5 | நெசப்பாக்கம் | 54 |
| 6 | கொடுங்கையூர் | 110 |
| 7 | சோழிங்கநல்லூர் | 18 |
| 8 | நெசப்பாக்கம் | 40 |
| 9 | பெருங்குடி | 54 |
| 10 | பெருங்குடி | 60 |
| 11 | கோட்டூர்புரம் | 0.6 |
| 12 | கோயம்பேடு | 34 |
| 13 | கோயம்பேடு | 60 |
| 14 | நெசப்பாக்கம் | 10 |
| 15 | கொடுங்கையூர் மண்டலம் 1 | 120 |
| 16 | கொடுங்கையூர் மண்டலம் 2 | 120 |
| 17 | கொடுங்கையூர் | 45 |
| 18 | திருவொற்றியூர் | 31 |
| 19 | பெருங்குடி | 12 |
| 20 | சேத்பட் | 1 |
| 21 | நுங்கம்பாக்கம் | 1.2 |
| 22 | தாடண்டர் நகர் | 4.0 |

2. நகராட்சி நிர்வாக இயக்குனர் (DMA)

| வ. எண் | உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் இயங்கும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் பெயர் | சுத்திகரிப்பு திறன் மில்லியன் லிட்டர் – நாளொன்றுக்கு |
|---|---|---|
| 23 | கோயம்புத்தூர்– உக்கடம் | 70 |
| 24 | கோயம்புத்தூர்– ஒண்டிபுதூர் | 60 |
| 25 | கோயம்புத்தூர்– நஞ்சுண்டாபுரம் | 40 |
| 26 | கோயம்புத்தூர் (கெகெயுஜிஎஸ்எஸ்) வெல்லலூர் | 30.53 |
| 27 | திருச்சிராப்பள்ளி– பஞ்சப்பூர் | 58 |
| 28 | வேலூர் | 10.28 |
| 29 | திண்டுக்கல் | 5 |
| 30 | ஈரோடு | 50.55 |
| 31 | திருநெல்வேலி | 24.2 |
| 32 | ஆவடி | 36 |
| 33 | ஆவடி | 4 |
| 34 | மதுரை– வெல்லக்கல்STP | 125 |
| 35 | மதுரை– சகிமங்கலம்STP | 45.7 |
| 36 | சேலம்– வெல்லகுட்டைSTP | 13 |
| 37 | சேலம்– ஆணைமேடுSTP | 6 |
| 38 | சேலம்– மண்குட்டைSTP | 35 |
| 39 | சேலம்– வண்டிபட்டைSTP | 44 |
| 40 | தஞ்சாவூர் | 28 |
| 41 | திருப்பூர்(சர்க்கார்பெரியபாளையம்) | 36 |
| 42 | திருப்பூர்(சின்னன்டிபாளையம்) | 20 |
| 43 | தூத்துக்குடி(Smart Clity fund) | 28 |
| 44 | காஞ்சிபுரம் | 14.7 |
| 45 | தாம்பரம் | 30 |
| 46 | கரூர் | 15 |
| 47 | கும்பகோணம் | 17 |
| 48 | கடலூர் | 12.25 |
| 49 | நாகர்கோவில் | 17.66 |
| 50 | திருவண்ணாமலை | 8.7 |
| 51 | காரைக்குடி | 16 |
| 52 | நாமக்கல் | 7 |

| வ. எண் | உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் இயங்கும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் பெயர் | சுத்திகரிப்பு திறன் மில்லியன் லிட்டர் – நாளொன்றுக்கு |
|---|---|---|
| 53 | புதுக்கோட்டை | 10.62 |
| 54 | மறைமலைநகர் | 2.2 |
| 55 | திருவள்ளூர் | 6.2 |
| 56 | சிதம்பரம் | 9.44 |
| 57 | விழுப்புரம்– (காகுப்பம்) | 9 |
| 58 | விழுப்புரம்(எருமந்தாங்கல்) | 3.5 |
| 59 | அரக்கோணம் | 11.04 |
| 60 | திருப்பத்தூர் | 11.43 |
| 61 | ஆம்பூர் | 16.71 |
| 62 | தேனி–அல்லிநகரம்/ கருவேல்நாயக்கன்பட்டிSTP | 12.05 |
| 63 | சின்னமன்னூர்/ ராதாகிருஷ்ணாரைஸ்மில்தெரு, STP | 3.99 |
| 64 | இராமநாதபுரம்/ கழுகொரனிகிராமம்STP | 8.19 |
| 65 | பெரியகுளம் | 5.47 |
| 66 | சிவகங்கை/ முத்துப்பட்டிகிராமம்STP | 4.92 |
| 67 | போடிநாயக்கனூர்/மாயனகரைராஸ்தாSTP | 12.08 |
| 68 | தர்மபுரி | 4.86 |
| 69 | கிருஷ்ணகிரி | 9 |
| 70 | மேட்டூர்சேலம்கேம்ப்சர்க்கார்தோட்டம் | 0.924 |
| 71 | மேட்டூர்தங்கமாபுரிபட்டிணம் | 0.823 |
| 72 | ராசிபுரம் | 6.96 |
| 73 | திருவாரூர் | 6.92 |
| 74 | பெரம்பலூர் | 4.2 |
| 75 | மயிலாடுதுறை | 5.85 |
| 76 | நாகப்பட்டினம் | 9.63 |
| 77 | நாகப்பட்டினம்(நாகூர்) | 2.96 |
| 78 | அரியலூர் | 4.16 |
| 79 | உதகமண்டலம் | 5 |
| 80 | சத்தியமங்கலம் | 4.08 |
| 81 | பொள்ளாச்சி | 11.25 |
| 82 | மேட்டுப்பாளையம் | 8.64 |

| வ. எண் | உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் இயங்கும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் பெயர் | சுத்திகரிப்பு திறன் மில்லியன் லிட்டர் – நாளொன்றுக்கு |
|---|---|---|
| 83 | உடுமலைபேட்டை | 7.81 |
| 84 | விருதுநகர் | 7.65 |
| 85 | ராஜபாளையம் | 21.85 |
| 86 | சாத்தூர் | 4.63 |
| 87 | திருச்செந்தூர் | 4.39 |
| 88 | உளுந்துர்பேட்டை | 3.15 |
| 89 | புதியதிருப்பூர்பகுதிமேம்பாட்டுக்கழகம் | 30 |
| 90 | வந்தவாசிநகராட்சி | 0.02 |
| 91 | உதகமண்டலம் | 2 |
| 92 | மேட்டூர், சம்பள்ளி | 3.36 |
| 93 | கம்பம் | 40 |
| 94 | கூடலூர் | 20 |
| 95 | திருச்சிராப்பள்ளி, கீழகல்கண்டார்கோட்டை | 37 |
| 96 | குன்றத்தூர் | 0.8 |

**3. பேரூராட்சி ஆணையகம் (CTP)**

| வ. எண் | உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் இயங்கும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் பெயர் | சுத்திகரிப்பு திறன் மில்லியன் லிட்டர் – நாளொன்றுக்கு |
|---|---|---|
| 97 | மாமல்லபுரம் | 2.34 |
| 98 | திருமழிசை | 3.00 |
| 99 | பெருந்துறை | 3.14 |
| 100 | மணச்சநல்லூர் | 6.41 |
| 101 | ஒரத்தநாடு | 2.3 |
| 102 | வல்லம் | 2.35 |
| 103 | வேளாங்கன்னி | 2.33 |
| 104 | திருப்போரூர் | 4.02 |
| 105 | ஸ்ரீபெரும்புதூர் | 8.5 |
| 106 | செங்கம் | 0.02 |
| 107 | பென்னாகரம் | 0.35 |
| 108 | வைத்தீஸ்வரன்கோயில் | 0.02 |
| 109 | சூலூர் | 0.425 |
| | **மொத்தம்** | 2337,332 |

இந்த நிலையங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர், வாரியம் பரிந்துரைத்த தர நிலைகளைப் பூர்த்தி செய்த பிறகு பாசனத்திற்கு பயன்படுத்தப்படுகிறது அல்லது நீர் நிலைகளில் விடப்படுகிறது.

தமிழ்நாட்டில் 100% கழிவுநீரை சுத்திகரிப்பதற்காக, பாதாளசாக்கடை இல்லாத பகுதிகளில் பாதாளசாக்கடை அமைப்பை செயல்படுத்தி பராமரிக்க சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் (CMWSSB), நகராட்சி நிர்வாக இயக்குனர் (DMA) மற்றும் பேரூராட்சி ஆணையர் (CTP) ஆகியோருக்கு வாரியம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், 15.02.2021 தேதியிட்ட மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் வழிகாட்டுதலின் படி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், pH, TSS, COD, BOD அளவுருக்களுக்கு தொடர் நிகழ்நிலை கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பை (OCEMS) நிறுவவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

நீர் நிலைகளில் சட்டவிரோதமாக டேங்கர் லாரிகள்மூலம் கழிவுநீர் வெளியேற்றப்படுவதை தடுக்கும் நோக்கில், உள்ளாட்சி அமைப்புகள் பதிவுசெய்துள்ள டேங்கர் லாரிகளில் புவியிடக் காட்டி செயலி (Global Positioning System) கண்காணிப்புடன் கூடிய டிஜிட்டல் லாக் சிஸ்டம் பொருத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், சட்டவிரோதமாக கழிவுநீர் வெளியேற்றுவது தொடர்பான விதிமீறல்கள் கண்டறியப்பட்டால், இப்படிப்பட்ட தவறு செய்யும் டேங்கர் லாரிகளின் பதிவு சான்றிதழ்களை (Registration Certificate) ரத்து செய்யுமாறு போக்குவரத்து துறைக்கு வாரியம் அறிவுறுத்துகிறது.

2024–2025 ஆம் ஆண்டில் இப்படி தவறிழைத்த 4 லாரிகளின் பதிவு எண்கள் ரத்து செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளன. விதிமீறல்கள் கண்டறியப்படும் பட்சத்தில் வாரியம் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு சுற்றுச்சூழல் இழப்பீடுகளை விதிக்கிறது.

### 5.4.3 கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை

மத்திய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவு மேலாண்மை விதிகள் 2016–யை அறிவிக்கை செய்துள்ளது. கட்டுமானம் மற்றும் இடிப்பு நடவடிக்கைகளின் போது உண்டாகும் கழிவுகளை மேலாண்மை செய்வதற்காக பிரத்யேகமாக இவ்விதிகள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இவ்விதிகள் தனி நபர் அல்லது நிறுவனம் அல்லது குழுமம் மூலம் மேற்கொள்ளப்படும் கட்டிடக் கட்டுமானம், பழுது பார்த்தல், இடித்தல் போன்ற செயல்களிலிருந்து வெளியேற்றப்படும் கட்டுமான பொருட்கள், இடிமான கழிவுகள் ஆகியவற்றை மேலாண்மை செய்வதற்கு பொருந்தும். விதிகளின்படி

உள்ளாட்சி அமைப்புகள் கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவுகளை சரியான முறையில் மேலாண்மை செய்வதை உறுதி செய்ய வேண்டும். மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியம் இவ்விதிகள் முறையாக அமல்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கிறது. மேலும், கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் நிலையங்களுக்கு அங்கீகாரம் வழங்குகிறது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும், விதிகளின்படி தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும், மேலும் கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவுகளை சேமித்தல் மற்றும் மறுசுழற்சி செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

கொடுங்கையூர் மற்றும் பெருங்குடியில், சென்னை பெருநகர மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவு மறுசுழற்சி நிலையங்களுக்கு நீர் (பாதுகாப்பு மற்றும் மாசு கட்டுப்பாடு) சட்டம், 1974 மற்றும் காற்று (பாதுகாப்பு மற்றும் மாசு கட்டுப்பாடு) சட்டம் 1981ன் கீழ் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இசைவாணை வழங்கியுள்ளது. கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவுகளை முறையாக சேகரித்தல், சேமித்தல் மற்றும் மறுசுழற்சி செய்தல் போன்றவற்றை கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவு மேலாண்மை விதிகள் 2016ல் கூறியுள்ளபடி செய்திடல் வேண்டும் என செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981, பிரிவு 31 (அ) ன் கீழ் கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவு மேலாண்மை விதிகள் 2016யை முறையாகக் கடைபிடிக்கவும், மேலும், கட்டுமானப் பொருட்கள் மற்றும் கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவுகளை கையாளுதலின் போது உருவாகும் தூசுகளை தணிப்பதற்கான நடவடிக்கை குறித்த வழிகாட்டுதல்களைக் கடைபிடிக்கவும், அனைத்து துறைகளுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

### 5.4.4 பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை

மக்கள் தொகை அதிகரிப்பு, நகரமயமாக்கல், பொருளாதார நிலைகள் மற்றும் தொழிற்துறை வளர்ச்சி ஆகியவை பிளாஸ்டிக் கழிவு உற்பத்தியில் மிகப்பெரிய அதிகரிப்புக்கு வழிவகுத்தன.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சமர்ப்பித்த 2024–2025 ஆம் ஆண்டிற்கான ஆண்டு அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் உள்ள 25 மாநகராட்சிகள், 141 நகராட்சிகள், 481 பேரூராட்சிகளில் மற்றும் 2 இராணுவ முகாம் வாரியம் ஆகியவற்றில் இருந்து மொத்தம் நாளொன்றிற்கு 2,170 டன் பிளாஸ்டிக் கழிவுகள் உருவாகியுள்ளன. இதில் 99.7% (2,163 டன்/நாள்) கழிவுகள் சேகரிக்கப்பட்டு மறுசுழற்சி மற்றும் பிற நோக்கங்களுக்காக அனுப்பப்பட்டன. சேகரிக்கப்பட்ட கழிவுகள் பின்னர் பிரிக்கப்பட்டு வள மீட்பு மையங்களுக்கு அனுப்பப்பட்டு, மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகள் பதிவுசெய்யப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களுக்கு

அனுப்பப்படுகின்றன, மற்றும் மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகள் சிமெண்ட் உற்பத்தியாளர்களிடம் இணை செயலாக்கத்திற்காக அனுப்பப்படுகின்றன.

2016 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகளின்படி, தமிழ்நாட்டில் 105 அங்கீகரிக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவு மறுசுழற்சி செய்பவர்கள் உள்ளனர். சேகரிக்கப்பட்ட மொத்த பிளாஸ்டிக் கழிவுகளிலிருந்து மறுசுழற்சி செய்வதற்காக நாள் ஒன்றுக்கு 695 டன் பிளாஸ்டிக் கழிவுகள் அனுப்பப்படுகின்றன.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் பதிவுசெய்யப்பட்ட 38 மக்கும் பிளாஸ்டிக் உற்பத்தி அலகுகள் நம் மாநிலத்தில் உள்ளன.

**ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் மீதான தடை (SUP)**

அரசாங்கம் அரசாணை எண். 84 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் (EC.2) 25.06.2018 தேதியிட்ட உத்தரவின்படி, தடிமன் மற்றும் அளவு வரையறையின்றி பிளாஸ்டிக் கேரி பேக்குகள் உட்பட ஒருமுறை மட்டுமே பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய சில வகையான பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்து உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. இந்தத் தடை ஜனவரி 2019 முதல் அமலுக்கு வந்தது.

இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், 12.08.2021 தேதியிட்ட அறிவிப்பின் மூலம், சில வகையான ஒற்றைப் பயன்பாட்டுப் பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி, இறக்குமதி, இருப்பு, விநியோகம், விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவற்றை தடை செய்துள்ளது. இந்தத் தடை ஜூலை 1, 2022 முதல் அமலுக்கு வந்தது.

**ஒற்றைப் பயன்பாட்டுப் பிளாஸ்டிக் (SUP) மீதான தடையை அமல்படுத்துதல்**

தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் உற்பத்திப் பொருட்களை தயாரிப்பதில் ஈடுபட்ட 273 தொழிற்சாலைகளுக்கு (ஜனவரி 2019 முதல் மார்ச் 2025 வரை) மூடல் உத்தரவு வழங்கப்பட்டு மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டது. இதில் நெய்யப்படாத கேரி பேக்குகள், பிளாஸ்டிக் கேரி பேக்குகள், தண்ணீர் பைகள் போன்றவை அடங்கும்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அலுவலர்களால் அடிக்கடி சோதனைகள் நடத்தப்பட்டு, ஒற்றைப் பயன்பாடு பிளாஸ்டிக்குகளை (SUPs) பயன்படுத்துபவர்களுக்கு எதிராக அபராதம் விதிக்கப்படுகிறது. ஜனவரி 2019 முதல் 17,96,644 சோதனைகள் நடத்தப்பட்டன. இதில் 2,709 டன் தடைசெய்யப்பட்ட ஒற்றைப் பயன்பாடு பிளாஸ்டிக்குகள் பறிமுதல் செய்யப்பட்டு, மார்ச் 2025 வரை ரூ.22.38 கோடி ரூபாய் அபராதத் தொகையாக விதிக்கப்பட்டுள்ளது.

**சிறப்பு அமலாக்க நடவடிக்கைகள்**

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஒற்றைப் பயன்பாட்டுப் பிளாஸ்டிக் தடையைக் கடுமையாக அமல்படுத்தியுள்ளது, மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் அறிவுறுத்தல்களின்படி

தெருவோர வியாபாரிகள், பூ மற்றும் பழ விற்பனையாளர்கள், உள்ளூர் சந்தைகள், மொத்த சந்தைகள், தொழிற்சாலை பகுதிகள், மாநிலங்களுக்கு இடையேயான எல்லைகள், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளை ஆய்வு செய்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை மேற்கொள்ளப்பட்ட சிறப்பு அமலாக்க நடவடிக்கையின் போது, 44,000 நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அவற்றில் 13,684 விதி மீறல்கள் காணப்பட்டன. மேலும் 30.32 டன் தடைசெய்யப்பட்ட SUP பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, ரூ. 25.73 லட்சம் அபராதத் தொகை உள்ளாட்சி அமைப்பால் வசூலிக்கப்பட்டது.

**SUP தடை குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகள்**

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

- தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களின் சேமிப்பு, விநியோகம், போக்குவரத்து, விற்பனை மற்றும் பயன்பாட்டைத் தடுப்பதை உறுதி செய்யும் பொறுப்பில் உள்ள மாவட்ட ஆட்சியர்களுடன் ஒருங்கிணைந்து வாரியத்தின் அனைத்து மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலர்களும் விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடத்தி வருகின்றனர். பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு பிரச்சாரங்களில் வாகனப் பிரச்சாரம், பொதுமக்களுக்கு துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல், மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட அலுவலகங்கள், அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள், வணிக நிறுவனங்கள், மருத்துவமனைகள், ஹோட்டல்கள், தொழிற்சாலை வளாகங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், திரையரங்குகள் போன்ற பொதுமக்கள் கூடும் இடங்களில் சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.
- தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் வெளியிடப்பட்ட ஆங்கிலம் மற்றும் தமிழ் செய்திக்குறிப்பில் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக்கின் தீமைகள் SUP மீதான தடையை அமல்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் ஆகியவை விரிவாக தெரிவிக்கப்பட்டு, அவற்றை அகற்ற மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் கோரப்பட்டது.

**தேனியில் நடைபெற்ற சுருளி சாரல் விழா 2024 இல் வாரியம் மேற்கொண்ட சுற்றுச்சூழல் முனைப்புகள்**

- தேனி மாவட்டத்தில் 28.09.2024 முதல் 02.10.2024 வரை சுருளி சாரல் விழா 2024 நடைபெற்றது. இந்த ஐந்து நாள் விழாவின் போது, தேனி மாவட்ட தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு

## V. வாரியத்தின் செயல்பாடுகள்

வாரியம் (TNPCB) சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை ஊக்குவிக்கும் பல்வேறு முனைப்புகளை வெளிப்படுத்தியது.

- கண்காட்சியில், தடைசெய்யப்பட்ட ஒற்றை பயன்பாட்டுப் பிளாஸ்டிக் (SUP) பொருட்கள் மற்றும் அவற்றிற்கு மாற்றாக உள்ள சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மாற்றுப்பொருட்கள், மஞ்சப்பை விற்பனை இயந்திரம், மேலும் மாவட்ட அலுவலகம் மேற்கொண்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகளை விளக்கும் தகவல் பதாகைகள் இடம் பெற்றிருந்தன.
- இந்த முனைப்புகளை மாவட்ட ஆட்சியர் பாராட்டி, சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மேற்கூறிய முக்கிய பங்களிப்புகளை அங்கீகரித்தார்.

**SUP இல்லாத கோயில்கள்**

- கோயில்கள் பொதுமக்களுக்கு முக்கிய மையங்களாக செயல்பட்டு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வை பரப்புவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு, மஞ்சப்பை படைப்பிரிவு, கோயில்களுக்கு அருகிலுள்ள தெருவோர வியாபாரிகள் மற்றும் பூ வியாபாரிகள் உடன் தொடர்பு கொண்டு ஒற்றை பயன்பாட்டுப் பிளாஸ்டிக் (SUP) தடை செயல்பட வழிகாட்டப்பட்டது. இவ்வியாபாரிகள் தங்கள் வணிகங்களில் பெரும்பாலும் ஒற்றை பயன்பாட்டுப் பிளாஸ்டிக் (SUP) பயன்படுத்துவதோடு, அவை கோயில்களுக்குள் நுழைவதற்கான முக்கிய வாயில்களாகவும் இருக்கின்றனர்.
- இந்த நோக்கத்துடன், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் (TNPCB) சென்னையில் உள்ள திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயில், மயிலாப்பூரில் உள்ள கபாலீஸ்வரர் கோயில் மற்றும் திருவல்லிக்கேணியில் உள்ள பார்த்தசாரதி கோயில் ஆகிய மூன்று கோயில்களை ஒற்றைப் பயன்பாட்டுப் பிளாஸ்டிக் இல்லாத (SUP Free) கோயில்களாக மாற்றும் முன்னோடித் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இம்முயற்சி இந்து சமய மற்றும் அறநிலையத் துறை (HR&CE) மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி (GCC) ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படுகிறது.
- இதனைத் தொடர்ந்து, இந்த மூன்று கோயில்களிலும் உள்ள வியாபாரிகளுக்கு பூஜை நோக்கங்களுக்காக 230 மூங்கில் கூடைகள் வழங்கப்பட்டன. மேலும், தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் கோயில்களுக்குள் நுழையாமல் இருப்பதை உறுதி செய்ய, நிர்வாக அதிகாரிகளுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. இதற்கான மாற்றத்தை உறுதி செய்ய TNPCB படைப்பிரிவுகள் வியாபாரிகளுடன் தொடர்ந்து கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன.

**திருவண்ணாமலையில் 2024ஆம் ஆண்டு கார்த்திகை மகா தீப விழாவில் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகள்**:

## V. வாரியத்தின் செயல்பாடுகள்

- ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மகா தீப விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து, ஒற்றைப் பயன்பாட்டுப் பிளாஸ்டிக்கைத் தவிர்ப்பது (SUP) குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது, மேலும் மாவட்டத் தலைமையகத்தில் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் சுற்றுச்சூழல் மாற்றுகளைப் பயன்படுத்துவதை ஊக்குவித்து வருகிறது. இதேபோல், இந்த 2024 ஆம் ஆண்டு கார்த்திகை மகா தீபத் திருவிழாவிற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் திருவண்ணாமலை நகரில் 13.12.2024 அன்று நடத்தப்பட்டன. விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக கிரிவலப் பாதையில் 10 மையங்கள் நிறுவப்பட்டு, பொதுமக்களுக்கு (மஞ்சப்பை) துணிப் பைகள் விநியோகிக்கப்பட்டன. பக்தர்களுக்கு SUP தடை மற்றும் மஞ்சப்பை விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன, மேலும் அரசு பேருந்துகள், தனியார் பேருந்துகள் மற்றும் பகிர்வு ஆட்டோ ரிக்ஷாக்களில் மஞ்சப்பை விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.
- கூடுதலாக, மாவட்டத்தில் உள்ள எட்டு நுழைவு வாயில்களில் மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரம் மற்றும் தடைசெய்யப்பட்ட SUPகளைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான வாசகங்களை விளக்கும் 25 மஞ்சப்பை விழிப்புணர்வு நிரந்தர காட்சி பலகைகள் (அளவு 6 அங்குலம் x 3 அங்குலம்) நிறுவப்பட்டன. மேலும், கற்பூரத்தை அதன் பிளாஸ்டிக் கவர்களுடன் எரிப்பதால் ஏற்படும் தீங்கு குறித்து விளக்கும் 5 நிரந்தர காட்சி தகடுகள் (அளவு 2 அங்குலம் x 1 அங்குலம்) நிறுவப்பட்டன மற்றும் 10,000 மஞ்சப்பை பைகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.
- மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரம் மற்றும் ஒற்றைப் பயன்பாட்டுப் பிளாஸ்டிக் (SUP) தடை அமலாக்கத்தின் ஒரு பகுதியாக, கார்த்திகை மகா தீபத் திருவிழா 2024 முன்னிட்டு, திருவண்ணாமலை மாநகராட்சி அதிகாரிகளுடன் இணைந்து, நகரின் கிரிவலப் பாதை மற்றும் பிற முக்கிய இடங்களில் உள்ள உள்ளூர் கடைகள், தெருவோர வணிகர்கள், மொத்த விற்பனை நிலையங்கள், சந்தைகள் ஆகிய இடங்களில் தொடர்ச்சியான பிளாஸ்டிக் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

**SUP இல்லாத கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம் (KCBT)**

- சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை நோக்கி எடுக்கப்பட்ட முக்கியமான நடவடிக்கையாக, சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம் (CMDA), கிளாம்பாக்கத்தில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தை (KCBT) ஒற்றைப் பயன்பாட்டுப் பிளாஸ்டிக் (SUP) இல்லாத பகுதியாக அறிவித்து உத்தரவு வெளியிட்டுள்ளது.

- இந்த உத்தரவின் மூலம், தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை G.O.(Ms) எண் 84 (EC.2), நாள்: 25.06.2018 அறிவிப்பின் படி, ஒற்றை பயன்பாடு பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி, பயன்பாடு, விற்பனை, சேமிப்பு மற்றும் விநியோகம் ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்ட

முழுமையான தடை கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தில் (KCBT–யில்) அமல்படுத்தப்பட்டுள்ளது.

- இதன்படி, பிளாஸ்டிக் பைகள், ஒருமுறை பயன்படுத்தப்படும் கரண்டி, முள்கரண்டி, உறிஞ்சுக் குழாய்கள், பேக்கேஜிங் பிலிம்கள் போன்ற பொருட்கள் இனி அனுமதிக்கப்படமாட்டாது. இதன் மூலம் பயணிகள், வியாபாரிகள் மற்றும் பிற பங்குதாரர்கள் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகின்றனர்.
- இந்த முனைப்பான நடவடிக்கை, பிளாஸ்டிக் கழிவுகளின் உருவாக்கத்தைக் குறைத்து, பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு சுத்தமான மற்றும் ஆரோக்கியமான சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மாற்றத்திற்கு ஆதரவாக, சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம் (CMDA), தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் (TNPCB) உடன் இணைந்து தெளிவான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- பொதுமக்களுக்கு மஞ்சப்பை எளிதில் கிடைக்கச் செய்யும் நோக்கில், பேருந்து நிலைய வளாகத்தில் 5 மஞ்சப்பை விற்பனை இயந்திரங்கள் தொடங்கப்பட்டன. மேலும், பேருந்து நிலையத்தில் உள்ள வியாபாரிகள் மற்றும் கடைக்காரர்கள், காகிதப் பொருட்கள், துணிப்பைகள் மற்றும் மக்கும் பொருட்கள் போன்ற சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மாற்றுப் பொருட்களை பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
- 20.05.2024 அன்று, கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலைய (KCBT) அதிகாரிகள் மற்றும் கடைக்காரர்களுக்கு உத்தரவு விவரங்களையும் பின்பற்ற வேண்டிய சிறந்த நடைமுறைகளையும் விளக்கும் வகையில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் (TNPCB) சார்பில் கூட்டம் நடத்தப்பட்டது. மேலும், ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் குடிநீர் பாட்டில்களின் பயன்பாட்டைத் தவிர்க்க, குடிநீர் விநியோக நிலையங்கள் மற்றும் மீண்டும் நிரப்பக்கூடிய பாட்டில்கள் எளிதில் கிடைக்கச் செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**SUP தடை மற்றும் மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரம் தொடர்பான பயிற்சி மற்றும் SUP இல்லாத தலைமைச் செயலகத் திட்டம்**

- 08.10.2024 அன்று, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் (TNPCB), GIZ அமைப்புடன் இணைந்து, தலைமைச் செயலக வளாகத்தை முழுமையாக ஒற்றைப் பயன்பாடு பிளாஸ்டிக் (SUP) இல்லாத வளாகமாக மாற்றும் நோக்கில், தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில் ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சியை வெற்றிகரமாக ஏற்பாடு செய்தது. இந்த முயற்சி, மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரத்தின் தொடர்ச்சியான செயல்பாடுகளின் ஒரு பகுதியாக, பிளாஸ்டிக் மாசுபாட்டை எதிர்க்கவும் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை ஊக்குவிக்கவும் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பயிற்சியின் மூலம், பல்வேறு துறைகளிலிருந்து வந்த பொறுப்பாளர் அலுவலர்கள்,

தங்களது துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு SUP பயன்பாட்டை ஒழிக்க மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களை பயன்படுத்த ஊக்குவிக்கும் காலநிலை தூதர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர்.

- இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் கலந்து கொண்டு, SUP இல்லாத தலைமைச் செயலகத்தை உருவாக்குவதற்கான அரசின் உறுதிப்பாட்டை வலியுறுத்தியதுடன், மாநிலம் முழுவதும் உள்ள பிற நிறுவனங்களுக்கு இது முன்மாதிரியாக அமையும் என்பதை எடுத்துரைத்தார்.
- இந்தப் பயிற்சி நிகழ்ச்சியில், தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த 36 துறைகள் கலந்து கொண்டதுடன், 65 அதிகாரிகள் பங்கேற்றனர். அரசு செயல்பாடுகளில் ஒற்றைப் பயன்பாடு பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சியும் உறுதிப்பாட்டையும் உருவாக்குவதே இப்பயிற்சியின் முக்கிய நோக்கமாக இருந்தது.

**சர்வதேச பிளாஸ்டிக் பை இல்லா நாள் 2024**

- சர்வதேச பிளாஸ்டிக் பை இல்லா நாள் 2024 முன்னிட்டு, பிளாஸ்டிக் மாசுபாட்டை எதிர்க்கும் உலகளாவிய அழைப்பாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் (TNPCB) செயல்பட்டது. பிளாஸ்டிக் பைகளின் பயன்பாட்டை குறைத்து, சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மாற்று வழிகளை ஏற்றுக்கொள்வதன் மூலம், எதிர்கால தலைமுறைகளுக்காக நமது சுற்றுச்சூழலை பாதுகாக்க முடியும் என்பதை இந்நிகழ்வு வலியுறுத்தியது.
- தமிழ்நாட்டில், இம்முக்கிய பிரச்சினை குறித்து பொதுமக்கள் விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் (TNPCB) முன்நோக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன் ஒரு பகுதியாக, மாநிலத்தின் 38 மாவட்டங்களிலும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் பிரச்சாரங்கள் நடத்தப்பட்டன. மொத்தமாக 45 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு, ஒற்றைப் பயன்பாடு பிளாஸ்டிக் பொருட்களின் தீங்குகள் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டதுடன், சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மாற்றுப் பொருட்களை பயன்படுத்த ஊக்குவிக்கப்பட்டனர்.
- இதில், 9 விழிப்புணர்வு பேரணிகள் இடம்பெற்று, மாணவர்கள், அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு மீண்டும் பயன்படுத்தக்கூடிய பைகளின் பயன்பாட்டை வலியுறுத்தினர். இந்த முயற்சிக்கு மேலும் ஆதரவாக, 5 மஞ்சப்பை விற்பனை இயந்திரங்கள் நிறுவப்பட்டு, பொதுமக்களுக்கு மஞ்சப்பைகள் எளிதில் கிடைக்க செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சிகளின் போது, மொத்தமாக 14,450 மஞ்சப்பை துணிப் பைகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இதன் மூலம், பிளாஸ்டிக் கழிவுகளை குறைப்பதற்கான உறுதிப்பாட்டையும், சுத்தமான, பசுமையான சூழலை உருவாக்குவதற்கான நோக்கமும் வலுப்படுத்தப்பட்டது.

## V. வாரியத்தின் செயல்பாடுகள்

- ஜூலை 3ஆம் தேதி ஆண்டுதோறும் கொண்டாடப்படும் சர்வதேச பிளாஸ்டிக் பை இல்லா நாள், பிளாஸ்டிக் பைகளின் சுற்றுச்சூழல் மீதான தீங்கான தாக்கங்களை வெளிப்படுத்தும் உலகளாவிய முனைப்பாகும். இந்நாள், பிளாஸ்டிக் பைகளின் பயன்பாட்டை முற்றிலும் ஒழித்து, நிலைத்த மாற்று வழிகளை ஏற்றுக்கொள்ள தனிநபர்களையும் சமூகங்களையும் ஊக்குவிக்கும் செயல் அழைப்பாக விளங்குகிறது.

**சர்வதேச கடற்கரை சுத்தம் இயக்கம் 2024**

- பிளாஸ்டிக் கழிவுகள், குறிப்பாக கைவிடப்பட்ட மீன்பிடி வலைகள், கடல் சூழலுக்கு ஏற்படுத்தும் பாதிப்புகள் குறித்து பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், ஆண்டுதோறும் செப்டம்பர் மாதத்தின் மூன்றாவது சனிக்கிழமை அனுசரிக்கப்படும் சர்வதேச கடற்கரை சுத்தம் நாள் (International Coastal Cleanup Day) முன்னிட்டு, 21.09.2024 அன்று, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் (TNPCB), சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEF&CC) உடன் இணைந்து, சென்னை மெரினா கடற்கரையில் கடற்கரை சுத்தம் செய்யும் நிகழ்வை நடத்தியது.
- இந்த நிகழ்வை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர் செயலர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை கூடுதல் இயக்குநர், MoEF&CC–யின் துணை செயலர், மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் (CPCB), சென்னை பிராந்திய இயக்குநர் மற்றும் பிற அதிகாரிகள் தொடங்கி வைத்தனர். இந்த நிகழ்வில் சுமார் 260 பேர் பங்கேற்று, மொத்தமாக 180 கிலோ கழிவுகளை சேகரித்தனர். இதில் 135 கிலோ பிளாஸ்டிக் கழிவுகளும், 45 கிலோ பிற கழிவுகளும் அடங்கும். சேகரிக்கப்பட்ட கழிவுகள், உரிய முறையில் அகற்றுவதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டன.

**பிளாஸ்டிக் பேக்கேஜிங்கிற்கான EPR தொடர்பான பயிற்சிகள்**

- GIZ அமைப்புடன் ஒருங்கிணைந்து, PIBOs, PWPs மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் (ULBs) ஆகியவற்றின் EPR பதிவேற்றம் (Registration) தொடர்பான திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய (TNPCB) அதிகாரிகள் மற்றும் EPR பொறுப்புடைய நிறுவனங்களுக்கு, பிளாஸ்டிக் பேக்கேஜிங்கிற்கான EPR பயிற்சிகள் வழங்கப்பட்டன.
- மேலும், 2024 ஆம் ஆண்டு ஜூன் 5 ஆம் தேதி கொண்டாடப்பட்ட உலக சுற்றுச்சூழல் தினம் முன்னிட்டு, PIBOs மற்றும் PWPs ஆகியோருக்கு EPR விண்ணப்ப செயல்முறை குறித்து விரிவான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

**"மீண்டும் மஞ்சப்பை" பிரச்சாரம்**

## V. வாரியத்தின் செயல்பாடுகள்

"தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக்குகளுக்கு எதிரான மக்கள் பிரச்சாரம்" என்ற பெயரில் டிசம்பர் 2021இல் தொடங்கப்பட்ட இந்த பிரச்சாரம் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, SUP–கள் மீதான தடையை அமல்படுத்துவதுடன், பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக சுற்றுசூழலுக்கு உகந்த பொருட்களை உபயோகிப்பதையும் ஊக்கப்படுத்துகிறது.

மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரம், பொதுமக்கள், தமிழ் கலாச்சாரத்தின் பாரம்பரிய அடையாளமான மஞ்சப்பையை, ஒற்றைப் பயன்பாடு பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாகப் பயன்படுத்துவதை வலியுறுத்துவதுடன், இயற்கை–சார்ந்த தீர்வுகளுடன் கூடிய அடிப்படைகளுக்கும் எதிர்காலத்திற்கும் திரும்புவதற்கான அழைப்பாகவும் விளங்குகிறது.

இந்த பிரச்சாரம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது, மேலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து விழிப்புணர்வு நடவடிக்கைகள் நடத்தப்படுகின்றன. SUP–களின் பயன்பாட்டை தவிர்க்க, கடைகள் / வணிக நிறுவனங்களை ஆய்வு செய்து உள்ளாட்சி அமைப்புகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன, மேலும் தமிழ்நாடு அரசால் தடைசெய்யப்பட்ட பொருட்களை பறிமுதல் செய்து வருகின்றன. மேலும், விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மூலம் 8.58 லட்சத்திற்கும் மேற்பட்ட மஞ்சப்பைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

### மஞ்சப்பை விற்பனை இயந்திரங்கள் அறிமுகம்

இந்த பிரச்சாரத்திற்கு ஆதரவாகவும், பொதுமக்களுக்கு மஞ்சப்பை கிடைக்கச் செய்யவும், பிளாஸ்டிக் பைகளின் பயன்பாட்டைக் குறைக்கவும், தமிழ்நாடு அரசு முதல்முறையாக துணிப்பை விற்பனை இயந்திரத்தைக் கொண்டு வந்தது. மார்ச் 2025 நிலவரப்படி, இந்த இயந்திரங்கள் தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களில் சந்தைகள், மால்கள், பொது கட்டிட வளாகங்கள் மற்றும் கோயம்பேடு சந்தை (மொத்த பழங்கள் மற்றும் காய்கறி சந்தை), சென்னை உயர்நீதிமன்ற வளாகம், சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை, மதுரை மாவட்ட நீதிமன்றம், சில மாவட்ட சந்தைகள் போன்ற அதிக மக்கள் நடமாட்டம் உள்ள 216 இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், வர்த்தகக் கண்காட்சிகள், சுற்றுச்சூழல் மாற்ற மாநாடு 2024, தமிழ்நாடு காலநிலை மாநாடு 3.0, தீவுத்திடல் மைதானத்தில் கண்காட்சி மற்றும் மாவட்ட அளவிலான நிகழ்வுகள் போன்ற பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளின் போது, இந்த இயந்திரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

### அனிமேஷன் வீடியோக்கள் மூலம் பள்ளி குழந்தைகளுக்கு விழிப்புணர்வு

- பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு பல்வேறு முயற்சிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. மாணவர்களே மாநிலத்தின் எதிர்காலம் என்பதைக் கருத்தில் கொண்டு, பள்ளி மாணவர்களிடையே ஒற்றை பயன்பாடு பிளாஸ்டிக் தடை மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மாற்றுப் பொருட்களின் பயன்பாடு குறித்த

விழிப்புணர்வை உருவாக்க அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு வீடியோக்கள் ஒளிபரப்பப்படும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிளாஸ்டிக்கினால் சுற்றுச்சூழல், விலங்குகள், இயற்கை வளங்கள் உள்ளிட்டவற்றிற்கு ஏற்படும் தீங்குகள் மற்றும் பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்தும் சிறந்த நடைமுறைகள் குறித்து தயாரிக்கப்பட்ட அனிமேஷன் விழிப்புணர்வு வீடியோக்கள் மாநிலம் முழுவதும் மாணவர்களுக்கு ஒளிபரப்பப்பட்டுள்ளன.

- இதுவரை, 21 அனிமேஷன் வீடியோக்கள் தயாரிக்கப்பட்டு, சுமார் 700 அரசுப் பள்ளிகள், 28 அரசு உதவி பெறும் பள்ளிகள், 9 ஆதிதிராவிடர் பள்ளிகள் ஆகியவற்றில் ஒளிபரப்பப்பட்டுள்ளன. இதன் மூலம் சுமார் 500 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இவ்வீடியோக்கள் மாணவர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதுடன், அவர்களிடையே நல் மாற்றங்களை உருவாக்குவதிலும் பயனுள்ளதாக இருந்து வருகிறது.

**கண்காட்சிகளில் அரங்கங்கள் அமைத்தல்**

சென்னை உணவு மேளா, இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தக கண்காட்சி, ரோட்டரி கிளப், காலநிலை மாநாடு 2.0 மற்றும் நல்வாழ்வு கண்காட்சி, இந்திய சர்வதேச மின்சார வாகன கண்காட்சி, G20 உச்சி மாநாடு, சுற்றுசூழலுக்கு உகந்த பொருட்களுக்கான மாநாடு 2024, தமிழ்நாடு காலநிலை மாநாடு 3.0, சுற்றுலா தீவு மைதானம் கண்காட்சி போன்ற பல்வேறு கண்காட்சிகளில் சுற்றுசூழலுக்கு உகந்த பொருட்கள் தயாரிப்புகள் மற்றும் மஞ்சப்பை விற்பனை இயந்திரங்களை விளம்பரப்படுத்தும் அரங்கங்கள் அமைக்கப்பட்டன. இது போன்ற அதிக மக்கள் வருகை தரும் நிகழ்வுகளில் அரங்கங்கள் வைப்பது, பொதுவாகப் பயன்படுத்தப்படும் SUP பொருட்களுக்கு பதிலாக கிடைக்கும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க உதவுகிறது.

**சர்வதேச கடற்கரை தூய்மைப்படுத்தும் இயக்கம் (ICC Day) 2024 மெரினா கடற்கரையில் நடைபெற்ற கடற்கரை சுத்தம் செய்யும் நிகழ்வு**

- சர்வதேச கடற்கரை தூய்மைப்படுத்தும் தினம் 2024 முன்னிட்டு, 21.09.2024 அன்று, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் (TNPCB) மற்றும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEF&CC) ஆகியவற்றுடன் இணைந்து, சென்னை மெரினா கடற்கரையில் கடற்கரை சுத்தம் செய்யும் நிகழ்வு நடத்தப்பட்டது.

- இந்த நிகழ்வை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர் தொடங்கி வைத்ததுடன், MoEF&CC, மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் (CPCB) மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை ஆகியவற்றைச் சேர்ந்த முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

- இந்த கடற்கரை சுத்தம் செய்யும் இயக்கத்தில் சுமார் 260 பேர் பங்கேற்று, மொத்தமாக 180 கிலோ கழிவுகள் சேகரிக்கப்பட்டன. இதில் 135 கிலோ பிளாஸ்டிக் கழிவுகளும், 45 கிலோ பிற கழிவுகளும் அடங்கும். சேகரிக்கப்பட்ட கழிவுகள், உரிய முறையில் அகற்றுவதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டு, கடற்கரையின் சுத்தம் மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்தும் வகையில் இந்நிகழ்வு பயனளித்தது.

**மஞ்சப்பை விருது**

- 2023–24 நிதியாண்டிற்கான சட்டமன்றக் கூட்டத்தில், மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர், தங்களது வளாகங்களில் ஒற்றை பயன்பாடு பிளாஸ்டிக் (SUP) மீதான தடையை திறம்பட அமல்படுத்தி, ஒற்றை பயன்பாடு பிளாஸ்டிக்கிற்கு (கேரி பைகள் மற்றும் பிற தடைசெய்யப்பட்ட SUP–கள்) மாற்றுகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் மற்றும் மஞ்சப்பை (மஞ்சள் பை) போன்ற பாரம்பரிய சுற்றுசூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களின் பயன்பாட்டை மீண்டும் உயிர்ப்பிக்கும் வகையில் செயல்படும் மூன்று சிறந்த பள்ளிகள், மூன்று சிறந்த கல்லூரிகள் மற்றும் மூன்று சிறந்த வணிக நிறுவனங்களுக்கு மஞ்சப்பை விருது வழங்கப்படும் என அறிவித்தார்.
- 28.08.2024 அன்று நடைபெற்ற மஞ்சப்பை விருது வழங்கும் விழாவில், 3 சிறந்த பள்ளிகள் மற்றும் 3 சிறந்த கல்லூரிகள் ஆகியவற்றிற்கு, ரூ.10 லட்சம் (முதல் பரிசு), ரூ.5 லட்சம் (இரண்டாம் பரிசு) மற்றும் ரூ.3 லட்சம் (மூன்றாம் பரிசு) ஆகிய பரிசுத் தொகைகளுடன் கூடிய மஞ்சப்பை விருதுகள், மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களால் வெற்றியாளர்களுக்கு வழங்கப்பட்டன.
- 2024–25 ஆம் ஆண்டிற்கான மஞ்சப்பை விருது, 2025 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தினத்தன்று வழங்கப்பட உள்ளது.

**TNPCB நடத்தும் Bag–athon 2024 – குறைந்த செலவில் சுற்றுசூழலுக்கு உகந்த பைகள்**

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் (TNPCB), குறைந்த செலவில் துணிப் பைகள் தயாரிக்கும் உற்பத்தியாளரை கண்டறியும் நோக்கில், Bag–athon போட்டி 2024–ஐ ஏற்பாடு செய்தது. 09.10.2024 அன்று நடைபெற்ற Bag–athon விளக்கவுரை நிகழ்வின் போது, தேர்வு செய்யப்பட்ட பங்கேற்பாளர்கள், ரூ.5 மட்டுமே செலவில் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற பைகளை தயாரிக்கும் தங்களது புதுமையான தீர்வுகளை முன்வைத்தனர். இந்த புதுமையான கருத்துகள், நிலைத்த உற்பத்தி நடைமுறைகளை ஊக்குவிக்கும் வகையில், வெளிப்புற நிபுணர்கள் அடங்கிய சிறப்பு மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டன.

**சுற்றுச்சூழல் மாற்று மாநாடு 2024**

## V. வாரியத்தின் செயல்பாடுகள்

- சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை நோக்கி எடுக்கப்பட்ட முக்கியமான நடவடிக்கையாக, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் (TNPCB), 13.11.2024 அன்று, சென்னை தாஜ் கோரமண்டல் ஹோட்டலில், சுற்றுச்சூழல் மாற்று மாநாடு 2024, மாநாட்டை நடத்தி வைத்தது. இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம், ஒற்றை பயன்பாடு பிளாஸ்டிக் (SUP) பயன்பாட்டிலிருந்து சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மாற்றுப் பொருட்கள் நோக்கி மாற்றத்தை வேகப்படுத்துவதுடன், இத்துறையில் உள்ள கொள்கைகள், சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்து விவாதிக்க ஒரு மேடையை வழங்குவதாகும்.
- இந்த மாநாட்டை மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலர், பல்வேறு மாநிலங்களின் மாசுக் கட்டுப்பாடு வாரியங்களின் பிரதிநிதிகள், நிதி நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் உள்ளிட்ட மூத்த அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர். மொத்தமாக சுமார் 250 பேர் மாநாட்டில் பங்கேற்று, பிளாஸ்டிக் கழிவுகளை குறைப்பது மற்றும் நிலைத்த மாற்று வழிகளை ஊக்குவிப்பது குறித்து பல்வேறு உத்திகள் மற்றும் அணுகுமுறைகளை விவாதித்தனர்.
- இந்நிகழ்வின் போது, மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள், சுற்றுசூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்கள் தொகுப்பு – 2024 இன் புதுப்பிக்கப்பட்ட பதிப்பை வெளியிட்டு, Bag–athon 2024 போட்டியின் வெற்றியாளர்களை பாராட்டி கௌரவித்தார்.
- இந்த மாநாட்டில், SUP தடை வெற்றிகரமாக அமல்படுத்தப்பட்ட அனுபவங்கள், தொழில்துறையின் சுற்றுசூழலுக்கு மாற்றுப் பொருட்களுக்கான தேவை, உற்பத்தி அளவைக் கூட்டுதல், மற்றும் சுற்றுசூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்கள் வணிகங்களுக்கு நிதி ஆதரவு உள்ளிட்ட தலைப்புகளை உள்ளடக்கிய நான்கு குழு விவாதங்கள் நடைபெற்றன.
- மேலும், சுற்றுசூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களின் விலை, கிடைப்புத்தன்மை போன்ற சவால்களை கடந்து செல்ல வலுவான கொள்கைகள், நிதி ஊக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் அவசியம் என்பதை மாநாடு வலியுறுத்தியது. இந்த மாநாட்டில் பெறப்பட்ட பரிந்துரைகள், தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் மாற்று வணிகங்களின் வளர்ச்சியை மேலும் ஆதரிக்க இந்திய அரசுக்கு TNPCB மூலம் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

**தமிழ்நாடு காலநிலை மாநாடு 3.0இல் TNPCB காட்சியகங்கள்**

- 04.02.2025 மற்றும் 05.02.2025 அன்று நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை மாநாடு 3.0 நிகழ்வை முன்னிட்டு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் (TNPCB), சுற்றுச்சூழல் பாதுகாப்பை மையமாகக் கொண்ட முக்கிய முன்னெடுப்புகளை வெளிப்படுத்தும் வகையில் நான்கு கருப்பொருள் அடிப்படையிலான காட்சியகங்களை அமைத்தது.

- இந்த காட்சியகங்களில், தமிழ்நாடு மீன்பிடி வலை முன்னெடுப்பு (TNFI), மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரம், SUP இல்லா படைப்பிரிவுகளின் செயல்பாடுகள், மற்றும் மஞ்சப்பை கியாஸ்க் ஆகிய முக்கிய முயற்சிகள் விளக்கமாக காட்சிப்படுத்தப்பட்டன. மேலும், கடல் உயிரியியல் பாதுகாப்பு, பிளாஸ்டிக் கழிவு குறைப்பு மற்றும் நிலைத்த நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வீடியோக்கள், மாதிரிகள் மற்றும் உரையாடும் அம்சங்கள் இடம்பெற்றிருந்தன.
- இந்த காட்சியகங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, இம்முன்னெடுப்புகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இக்காட்சிகள் பொதுமக்கள் பங்கேற்பை ஊக்குவித்ததுடன், நிலைத்த எதிர்காலத்தை உருவாக்கும் TNPCB–யின் நோக்கத்தை மேலும் வலுப்படுத்தின.

**பெண்கள் சுயஉதவி குழுக்களுக்காக 50 மின்சார ஆட்டோக்கள் தொடக்கம்**

- காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் பெண்களின் பங்கு மிக முக்கியமானது என்பதை உணர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 08.03.2025 அன்று பெண்கள் சுயஉதவி குழுக்களுக்காக 50 மின்சார ஆட்டோக்களை (e–autos) தொடங்கி வைத்தார். இந்த புதுமையான திட்டத்தின் மூலம், சுயஉதவி குழு (SHG) உறுப்பினர்கள் காலநிலை அறிவு மற்றும் நிலைத்த நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வில் ஈடுபடுத்தப்படுவதுடன், அவர்களின் வருமானத்தை உயர்த்தும் நோக்கில் மின்சார ஆட்டோக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- இந்த மின்சார ஆட்டோக்களில் பதிவு செய்யப்பட்ட ஒலிச் செய்திகள், விளம்பர தட்டிகள் மற்றும் விளக்கத் தாள்கள் பொருத்தப்பட்டு, சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மாற்றுப் பொருட்களை விளம்பரப்படுத்தும் விழிப்புணர்வு மேடைகளாக செயல்படுகின்றன.
- இந்த முயற்சி, 'மாற்றத்தின் சக்கரங்கள்' என்ற அடையாளமாக, காலநிலை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுவதோடு, பெண்களுக்கு நிலைத்த வாழ்வாதாரத்தை வழங்குகிறது.

**13.03.2025 அன்று துணை முதலமைச்சர் அவர்களால் மின்சார ஆட்டோக்கள் தொடக்கம்**

- தமிழ்நாடு அரசின் காலநிலை வீராங்கனைகள் ('Climate Warriors') முனைப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டையும் ஒருங்கே மாற்றி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், சுயஉதவி குழு உறுப்பினர்கள் காலநிலை அறிவு மற்றும் நிலைத்த நடைமுறைகளில் ஈடுபடுத்தப்பட்டு, அவர்களின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் மொத்தம் 100 மின்சார ஆட்டோக்கள் வழங்கப்பட்டது.
- இந்த மின்சார ஆட்டோக்கள், ஒலிச் செய்திகள், விளம்பர தட்டிகள் மற்றும் விளக்கத் தாள்களுடன் அமைக்கப்பட்டு, சுற்றுசூழலுக்கு உகந்த மாற்றுகளை ஊக்குவிக்கும்

ஊடகங்களாக செயல்படுகின்றன. இத்திட்டத்தின் முதல் கட்டமாக 08.03.2025 (மகளிர் தினம்) அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 50 மின்சார ஆட்டோக்களை தொடங்கி வைத்தார். தொடர்ந்து, 13.03.2025 அன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மீதமுள்ள 50 மின்சார ஆட்டோக்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

- இந்த முன்னெடுப்பு, 'மாற்றத்தின் சக்கரங்கள்' எனப்படும் கருத்தை உணர்த்தி, காலநிலை நடவடிக்கைகளை வேகப்படுத்துவதோடு, பெண்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை வழங்கும் முக்கிய முயற்சியாக திகழ்கிறது.

**மாபெரும் பிளாஸ்டிக் சேகரிப்பு இயக்கம் 2025**

- மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரத்தின் கீழ், 25.01.2025 அன்று தொடங்கப்பட்ட மாபெரும் பிளாஸ்டிக் சேகரிப்பு இயக்கம் 2025, தமிழ்நாடு முழுவதும் பிளாஸ்டிக் மாசுபாட்டை எதிர்கொள்ளும் நோக்கில் ஓராண்டு கால இயக்கமாக செயல்படுத்தப்பட்டது.
- இந்த இயக்கம், 2025 ஆம் ஆண்டு முழுவதும், ஒவ்வொரு மாதமும் நான்காவது சனிக்கிழமையன்று, மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், பேரூராட்சிகள் மற்றும் கிராமப் பகுதிகளில் தொடர்ந்து நடத்தப்பட்டு, பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்களின் தொடர்ச்சியான பங்கேற்பை உறுதி செய்யும் வகையில் அமல்படுத்தப்பட்டது.
- இந்த இயக்கத்தின் போது சேகரிக்கப்படும் மறுசுழற்சி செய்யக்கூடிய பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சிக்காக அனுப்பப்படுகின்றன. மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகள், சிமெண்ட் தொழிற்சாலைகளில் இணை செயலாக்கம் (co–processing) செய்யப்படுகின்றன.
- இந்த முனைப்பில், பொதுமக்கள், மாணவர்கள், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள் (NGOs) மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர் ஈடுபடுத்தப்பட்டு, சமூக பங்கேற்பை ஊக்குவித்து, நிலைத்த கழிவு மேலாண்மை நடைமுறைகளை வலுப்படுத்தும் நோக்கில் செயல்படுத்தப்பட்டது.

**இணைய வழி முயற்சிகள்**

**மீண்டும் மஞ்சப்பை வலைத்தளம்**

SUP–கள் மீதான தடை தொடர்பாக நடத்தப்பட்ட செய்திகள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய அனைத்து புதுப்பிப்புகளையும் பார்வையாளர்களுக்கு வழங்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் "மீண்டும் மஞ்சப்பை" வலைத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இது அனைத்து முக்கிய ஆவணங்களின் களஞ்சியத்தையும் கொண்டிருக்கும், மேலும் பிளாஸ்டிக் தடை மற்றும் "மீண்டும் மஞ்சப்பை" பிரச்சாரம் பற்றிய கண்ணோட்டத்தையும் வழங்கும்.

"மீண்டும் மஞ்சப்பை" வலைத்தளம் ஜூன் 6, 2023 அன்று மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களால் உலக சுற்றுச்சூழல் தினம் 2023

கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக தொடங்கப்பட்டது. மேலும், இதுவரை 34,000க்கும் மேற்பட்ட பார்வையாளர்களை ஈர்த்துள்ளது.

**மொபைல் செயலி பயன்பாடு**

SUP–களுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுகளுடன் கூடிய வலுவான சூழலை வழங்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் "மீண்டும் மஞ்சப்பை" மொபைல் செயலி பயன்பாட்டை அறிமுகப்படுத்தியுள்ளது. SUP–க்கு மாற்றாக உற்பத்தியாளர்கள் மற்றும் மஞ்சப்பை விற்பனை இயந்திரங்கள் இருப்பிடங்கள் பற்றிய விவரங்களை பயனர்கள் எளிதாக அறிந்து கொள்ள இந்த செயலி உதவும். இந்த செயலியில் பயன்பாடு குறித்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் ஒரு சாட் பாட் (Chat Bot)–ம் இடம்பெற்றுள்ளது. இது பயனர்களுக்கு தேவையான விவரங்களைக் கண்டறிய உதவும்.

மீண்டும் மஞ்சப்பை மொபைல் செயலியை ஜூன் 6, 2023 அன்று சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அறிமுகப்படுத்தினார், இது ஆண்ட்ராய்டு மற்றும் iOS தளங்களில் கிடைக்கிறது.

**மஞ்சப்பை கடற்கரை நிலையங்கள்**

மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக தமிழக அரசு பல விழிப்புணர்வு முயற்சிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. பல புதுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று, கடற்கரைகளில் 'மீண்டும் மஞ்சப்பை நிலையங்கள்' அமைப்பது. தடைசெய்யப்பட்ட SUP–களை முறையற்ற முறையில் அகற்றுவது மற்றும் பயன்படுத்துவதன் தாக்கம் மற்றும் SUP–களுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுகளைப் பயன்படுத்துவது குறித்து கடற்கரைக்கு வருபவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுவரை, சென்னையில் உள்ள பெசன்ட் நகர் மற்றும் நீலாங்கரை கடற்கரைகளில் 20 அடி நீளமுள்ள நிலையங்கள் கடற்கரையில் குப்பைகளைக் கொட்டாமல் இருப்பதை கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளன. மஞ்சப்பை விற்பனை இயந்திரங்களை நிலையங்களுக்குள் பொருத்தி அதனைப் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு (MVM) அமைக்கப்பட்டுள்ளது. நிலையங்கள் நிறுவப்பட்டதிலிருந்து (அக்டோபர் 2024 முதல் மார்ச் 2025 வரை) நிலையங்களில் உள்ள MVM மூலம் சுமார் 1,500 மஞ்சப்பைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையங்களில் SUPகளுக்கு மாற்றான சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுகளின் காட்சி மற்றும் தமிழ்நாடு முழுவதும் உள்ள சுற்றுச்சூழல் மாற்று உற்பத்தியாளர்களின் விவரங்கள் கொண்ட ஒரு கோப்பகம் உள்ளது. இந்த நிலையங்களில் கடற்கரை சுத்தம் செய்தல் அல்லது பிற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைப் பார்வையிட தோராயமாக 7,500 பார்வையாளர்கள் மற்றும் 14 பள்ளிகளைச் சேர்ந்த பள்ளி குழந்தைகள் வருகை தந்துள்ளனர்.

## V. வாரியத்தின் செயல்பாடுகள்

**மஞ்சப்பை படை**

- மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரத்தின் ஒரு முக்கிய அங்கமாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்படுத்துவதற்காக நடத்தப்பட்டு வருகிறது. ஒற்றைப் பயன்பாடு பிளாஸ்டிக்குகள் (SUPs) பயன்பாட்டிற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை பொதுமக்கள் ஏற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதற்கும், அதன் செயல்பாட்டை கண்காணிப்பதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. இந்த நோக்கத்தில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் (TNPCB) விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஒரு புதுமையான முயற்சியாக மஞ்சப்பை படை (Manjappai Brigade) எனப்படும் சிறப்பு படையணியை உருவாக்கியுள்ளது.
- நவம்பர் 2023 இல் சென்னையில் தொடங்கப்பட்ட பசுமைப் படை (Green Brigade), சந்தைகள் மற்றும் போக்குவரத்து மையங்கள் போன்ற மக்கள் அதிகம் கூடும் நகர்ப்புற பகுதிகளில் மின்சார வாகனங்களைப் பயன்படுத்தி தீவிர விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து, ஆகஸ்ட் 2024 இல் தொடங்கப்பட்ட நீலப் படை (Blue Brigade), சென்னை கடற்கரை பகுதிகளில் கவனம் செலுத்தி, கடல் மாசுபாட்டைத் தடுப்பதும், கடற்கரை சுற்றுலாப் பயணிகளிடையே பொறுப்புணர்வு கொண்ட நல் மாற்றத்தை உருவாக்குவதிலும் முக்கிய பங்காற்றியது.
- மேலும், செப்டம்பர் 2024 முதல் ஊட்டி, கோயம்புத்தூர் மற்றும் கொடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளில் பசுமைப் படைகள் செயல்படுத்தப்பட்டு, சுற்றுலாப் பயணிகள், உள்ளூர் மக்கள் மற்றும் வணிக நிறுவனங்களுடன் நேரடி தொடர்பு கொண்டு, இந்தப் பகுதிகளின் இயற்கை வளங்களை பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றி வருகின்றன. ஒவ்வொரு படையணியும் தங்களது புவியியல் மற்றும் சமூக சூழலுக்கு ஏற்றவாறு செயல்பட்டு, நேரடி பொதுமக்கள் தொடர்பு, சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுகளை ஊக்குவித்தல் மற்றும் சட்ட அமலாக்கத்திற்கு ஆதரவு அளித்தல் போன்ற நோக்கங்களை செயல்படுத்தி வருகின்றனர்.
- ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை, மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரத்தின் கீழ், பசுமைப் படைகள் தங்களது நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்தி, மாநிலம் முழுவதும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியையும் தாக்கத்தையும் ஏற்படுத்தின. இந்த 12 மாத காலப்பகுதியில், படையணிகள் இணைந்து 390 சாலை விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் (Roadshows) உட்பட 36,973 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- இதன் மூலம் 5,09,023 பொதுமக்களுடன் நேரடி தொடர்பு ஏற்படுத்தப்பட்டு, SUP தடையைக் குறித்த விழிப்புணர்வும், சுற்றுச்சூழல் நட்பு மாற்றுகளும் பரவலாக எடுத்துச் செல்லப்பட்டன. மேலும், 1,12,142 விழிப்புணர்வு பொருட்கள் அனைத்து செயல்பாட்டு பகுதிகளிலும் விநியோகிக்கப்பட்டன.

## V. வாரியத்தின் செயல்பாடுகள்

**மெரினா கடற்கரையில் சுற்றுச்சூழல் நட்பு விழிப்புணர்வை ஊக்குவிக்கும் நீலப் படை தொடக்கம்**

- 28.08.2024 அன்று, தமிழ்நாடு முதலமைச்சரின் பசுமைப் புத்தாய்வுத் திட்டம் முதல் ஆண்டு நிறைவு மற்றும் மீண்டும் மஞ்சப்பை விருது வழங்கும் விழா நிகழ்வின் போது, மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர், மெரினா கடற்கரைக்கான நீலப் படையை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்தார். இதனுடன், மஞ்சப்பை விருதுகள் மற்றும் பசுமை சாம்பியன் விருதுகளும் வழங்கப்பட்டன.
- இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, பயிற்சி பெற்ற நீலப் படை உறுப்பினர்களால் இயக்கப்படும் 15 மின்சார பைக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டு, கடற்கரை பகுதிகளில் பொதுமக்களிடையே விழிப்புணர்வையும் நல் மாற்றத்தையும் ஏற்படுத்த பயன்படுத்தப்பட்டன. தொடக்கம் முதல், 12,200க்கும் மேற்பட்ட இடங்களில் 21,000க்கும் அதிகமான நபர்களுடன் தொடர்பு கொண்டு, 13,000க்கும் மேற்பட்ட விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும், ஆகஸ்ட் 2024 முதல் மார்ச் 2025 வரை 55 சாலை விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் கொடைக்கானலில் பசுமைப் படைகள் தொடக்கம்

- பிளாஸ்டிக் மாசுபாட்டை கட்டுப்படுத்தவும், நிலைத்த சுற்றுச்சூழல் மாற்றுகளை ஊக்குவிக்கவும், TNPCB, கோயம்புத்தூர், நீலகிரி (ஊட்டி) மற்றும் திண்டுக்கல் (கொடைக்கானல்) ஆகிய மூன்று மாவட்டங்களில் 18 மின்சார பைக்குகளுடன் பசுமைப் படை திட்டம் தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டம்: 06.08.2024 அன்று கோயம்புத்தூரில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியரால், 07.08.2024 அன்று புதுமுந்தில் (நீலகிரி) மாவட்ட ஆட்சியரால், 08.08.2024 அன்று கொடைக்கானலில், துணைத் தலைவர் மற்றும் நகராட்சி ஆணையர் முன்னிலையில் தலைவர், கொடைக்கானல் நகராட்சி அவர்களால் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைக்கப்பட்டது.
- 31.03.2025 நிலவரப்படி, பசுமைப் படை மூலம் 4,05,439க்கும் மேற்பட்ட நபர்களுடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு, 12,813 இடங்களில் 57,467க்கும் மேற்பட்ட விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு, சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மாற்றுகளைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீன்பிடி வலை முயற்சி

- 2023-24 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் கூட்டத் தொடரில், கடலில் கைவிடப்படும் மீன்பிடி வலைகள் கடல் மாசுபாட்டை ஏற்படுத்தி, கடல்வாழ் உயிரினங்களை பாதிப்பதாகக் குறிப்பிட்டு, இதனைத் தடுக்கும் நோக்கில் ரூ.1 கோடி செலவில் "தமிழ்நாடு மீன்பிடி வலை முயற்சி (TNFI)"

என்ற தனித்துவமான மற்றும் புதுமையான திட்டத்தை மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு அறிவித்தார்.

- இந்த முயற்சியின் முதல் கட்டமாக, கைவிடப்பட்ட மீன்பிடி வலைகளைச் சேகரிக்கும் முதல் மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14.08.2024 அன்று சென்னை காசிமேட்டில் தொடங்கி வைத்தார்.
- கைவிடப்பட்ட மீன்பிடி வலைகளை முறையாக கையாளவும், பாதுகாப்பாக அகற்றவும் மீனவர்களுக்கு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. சேகரிக்கப்படும் ஒவ்வொரு கிலோ கைவிடப்பட்ட மீன்பிடி வலைக்காக ரூ.40 முதல் ரூ.46 வரை (இதில் ரூ.4 முதல் ரூ.6 வரை ஊக்கத் தொகை உட்பட) மீனவர்களுக்கு வழங்கப்படுகிறது.
- 31.03.2025 நிலவரப்படி, மொத்தம் 13,510 கிலோ கைவிடப்பட்ட மீன்பிடி வலைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதில் 10,710 கிலோ மீன்பிடி வலைகள் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மறுசுழற்சி நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.
- மைக்ரோபிளாஸ்டிக் தொடர்பான நார்வே–இந்தியா ஆய்வக மற்றும் களப் பயிற்சி திட்டம்
- இந்தியா–நார்வே ஒத்துழைப்பு திட்டம் (INOPOL), இந்தியாவில் பிளாஸ்டிக் மற்றும் இரசாயன மாசுபாட்டை கட்டுப்படுத்தும் நோக்கில், குறிப்பாக தமிழ்நாடு மற்றும் உத்தரகாண்ட் மாநிலங்களை மையமாகக் கொண்டு, 21.09.2024 முதல் 26.09.2024 வரை நார்வே நாட்டின் ஒஸ்லோ நகரில் அமைந்துள்ள Norwegian Institute for Water Research (NIVA) மூலம் மைக்ரோபிளாஸ்டிக் தொடர்பான ஒரு முக்கியமான பயிற்சி திட்டம் நடத்தப்பட்டது.
- நார்வேயில் நடைபெற்ற இந்தப் பயிற்சி திட்டத்தில், மைக்ரோபிளாஸ்டிக் குறித்த விரிவான அமர்வுகள் இடம்பெற்றன. இதில் ஆய்வக நுட்பங்கள், அல்னா ஆற்றில் கள மாதிரி சேகரிப்பு, மற்றும் மாசுபாடு கண்காணிப்பு தொடர்பான திட்ட விளக்கக்காட்சிகள் ஆகியவை அடங்கும். பங்கேற்பாளர்களுக்கு Pyrolysis Gas Chromatography மற்றும் Fourier Transform Infrared Spectroscopy (FTIR) போன்ற மேம்பட்ட பகுப்பாய்வு முறைகளில் நேரடி (Hands–on) பயிற்சியும் வழங்கப்பட்டது.
- இந்த பயிற்சி திட்டத்தில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ். சந்திரசேகரன், சுற்றுச்சூழல் பொறியாளர் மற்றும் திரு. எஸ். சத்தியமூர்த்தி, சுற்றுச்சூழல் விஞ்ஞானி (PWM) ஆகியோர் பங்கேற்று, பிளாஸ்டிக் மாசுபாட்டை எதிர்கொள்ள தேவையான முக்கியமான அறிவும் அனுபவமும் பெற்றனர்.
- பிளாஸ்டிக் மாசுபாட்டிற்கான புதுமையான தீர்வுகளை ஆராய பிளாஸ்டிக் ஒடிஸியுடன் TNPCB இணைப்பு

## V. வாரியத்தின் செயல்பாடுகள்

- உலகளாவிய தொழில் முனைவோர்கள் மற்றும் புதுமையாளர்களை இணைக்கும் நோக்கில், பிளாஸ்டிக் மாசுபாட்டை எதிர்கொள்ள அர்ப்பணிக்கப்பட்ட 40 மீட்டர் நீளமான ஆய்வுப் பயணக் கப்பலாக பிளாஸ்டிக் ஒடிஸி (Plastic Odyssey) செயல்படுகிறது. ஆய்வக வசதிகளுடன் கூடிய இந்தக் கப்பல், சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்த அறிவைப் பகிர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இரண்டு ஆண்டுகளாக உலகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்ட பயணங்களுக்குப் பிறகு, இந்தியா இந்தக் கப்பலின் 33–ஆவது தங்குமிடமாக அமைந்துள்ளது.

- பிளாஸ்டிக் மாசுபாட்டிற்கான புதுமையான தீர்வுகளை ஆராயும் நோக்கில், 12.03.2025 அன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் (TNPCB) ஒரு குழு, சென்னை துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த பிளாஸ்டிக் ஒடிஸி கப்பலைப் பார்வையிட்டது. இந்தப் பார்வையின் போது, புதுமையான மறுசுழற்சி தொழில்நுட்பங்களை நேரில் காண்பதும், உலகளாவிய சுற்றுச்சூழல் நட்பு மாற்றுகளை அறிதலும், பிளாஸ்டிக் மாசுபாட்டுக்கு எதிரான உலகளாவிய ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் கப்பல் குழுவினருடன் அறிவுப் பகிர்வில் ஈடுபடுவதும் முக்கியமாக இடம்பெற்றன.

- பிளாஸ்டிக் ஒடிஸி கப்பல் குழுவினர், ஒரு மணிநேரத்திற்கு 60 கிலோ பிளாஸ்டிக்குகளை துண்டாக்கம் செய்யும் மற்றும் எக்ஸ்ட்ரூஷன் அமைப்பு, அவற்றைக் கொண்டு நடைபாதைகள் போன்ற பொருட்களை உருவாக்கும் மைக்ரோ–மறுசுழற்சி நிலையம் உள்ளிட்ட பல நடைமுறை மறுசுழற்சி மற்றும் கழிவிலிருந்து வளமாக மாற்றும் தொழில்நுட்பங்களை விளக்கிக் காட்டினர். மேலும், பிளாஸ்டிக் கழிவுகளை ஒரு மணிநேரத்திற்கு 30–40 லிட்டர் எரிபொருளாக மாற்றும் பைரோலிசிஸ் அலகும் கப்பலில் பொருத்தப்பட்டுள்ளது.

- இந்தப் பார்வையின் போது, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய அதிகாரிகள் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மையில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் குறித்து விவாதித்ததுடன், மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரத்தின் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். மேலும், பிளாஸ்டிக் மாசுபாட்டைக் குறைப்பதற்காக சமூக அடிப்படையிலான அணுகுமுறைகளும், உலகளாவிய தொடர்புகளுடன் கூடிய ஒருங்கிணைந்த முயற்சிகளும் அவசியம் என்பதைக் குறிப்பிட்டனர்.

- சென்னை திருவொற்றியூரில் உள்ள ITC பேக்கேஜிங் மற்றும் பிரிண்டிங் பிரிவை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரிகள் பார்வையிட்டனர்

- EPR வழிகாட்டுதல்களின் படி, பிளாஸ்டிக் பேக்கேஜிங் தயாரிப்பு செயல்முறைகள் குறித்து (வகை-II : நெகிழ்வான பிளாஸ்டிக் மற்றும் வகை-III : பலஅடுக்கு பிளாஸ்டிக்) தெளிவாக அறிந்து கொள்வதற்காக, 15.02.2025 அன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் (TNPCB) அதிகாரிகள், சென்னை திருவொற்றியூரில் அமைந்துள்ள ITC பேக்கேஜிங் மற்றும்

பிரிண்டிங் பிரிவை பார்வையிட்டனர். இப்பார்வையின் போது, ITC நிறுவனத்தின் உற்பத்தி பிரிவு தலைவர் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களுடன் விரிவான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

- ITC குழுவினர், பேக்கேஜிங் தயாரிப்பு மற்றும் அச்சிடும் செயல்முறைகள் முழுமையாக எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைக் கூறி, பிளாஸ்டிக் மற்றும் காகித அடிப்படையிலான பேக்கேஜிங் பொருட்களின் மாதிரிகளை காட்சிப்படுத்தினர். இந்த உற்பத்தி நிலையத்தில் PE மற்றும் PP பிளாஸ்டிக் திரைப்படங்கள் (films) மட்டுமே தயாரிக்கப்படுவதாகவும், பலஅடுக்கு பிளாஸ்டிக் (MLP) பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
- மேலும், MLP–யின் அமைப்பு குறித்து விளக்கமளிக்கப்பட்டது. பொதுவாக, MLP மூன்று அடுக்குகளைக் கொண்டதாகும்: வெளிப்புற அடுக்காக BOPP, நடுத்தர தடுப்பு அடுக்காக MET PET, மற்றும் ஒட்டுவதற்கான உள் அடுக்காக PE ஆகியவை இடம்பெறுகின்றன. இத்தகைய பேக்கேஜிங், சிற்றுண்டி உணவுப் பொருட்கள் மற்றும் சுவையூட்டிகள் (condiments) போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுவதாக கூறப்பட்டது.
- மேலும், பல்வேறு பிளாஸ்டிக் தாள்களின் செயல்பாடு மற்றும் வெப்பத்தாங்கும் திறன் குறித்தும் விளக்கப்பட்டது; அதாவது PET பிளாஸ்டிக் 240°C வரை, PP பிளாஸ்டிக் 180°C வரை, மற்றும் PE பிளாஸ்டிக் 120°C வரை வெப்பத்தைக் தாங்கும் தன்மை கொண்டதாக உள்ளது.
- இந்த பார்வை மூலம், பேக்கேஜிங் பொருட்களின் தொழில்நுட்ப அம்சங்கள், EPR வகைப்பாடு, மறுசுழற்சி சாத்தியங்கள் மற்றும் நிலைத்த பேக்கேஜிங் நடைமுறைகள் குறித்த புரிதலை TNPCB அதிகாரிகள் மேம்படுத்திக் கொள்ள உதவியாக அமைந்தது.

**மாநில அளவிலான சிறப்புப் பணிக்குழு (STF)**

மாநில அளவில் தமிழக அரசின், தலைமை செயலாளர் தலைமையிலும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் தலைமையிலும் மற்றும் சென்னை மாநகர அளவில் சென்னை மாநகராட்சி ஆணையர் தலைமையிலும் சிறப்புப் பணிக் குழு அமைக்கப்பட்டு உள்ளது. மாநில அளவிலான சிறப்புப் பணிக்குழு கூட்டங்கள் 05.03.2022, 02.03.2023, 22.02.2024 மற்றும் 09.06.2025 ஆகிய தேதிகளில் நடைபெற்றன. இதன் தொடர்பாக, தமிழ்நாட்டில் பிளாஸ்டிக் தடை குறித்த செயல்திட்டங்களை செயல்படுத்தவும், முன்முயற்சிகளை மேற்கொள்ளவும் அனைத்து தொடர்புடைய துறைகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**நெகிழி கழிவுகளுக்கான திட்ட மேலாண்மை குழு உருவாக்கம்**

ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் நெகிழிகளுக்கான தடையை தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்திட தற்காலிக தொழில்நுட்ப ஆலோசகர்களைக் கொண்ட ஒரு திட்ட மேலாண்மை குழு வாரிய நடப்பாணை எண்.83, நாள் 26.10.2023–ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**5.4.5 தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மேலாண்மை**

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் சூழல் மாறுபாடு அமைச்சகம், தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள், 2016ஐ அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகளின்படி இயற்பியல், வேதியியல், மறுவினையாக்கம், நச்சு பண்பு, எரியக்கூடிய, வெடிக்கக்கூடிய அல்லது அரிமான பண்புகளால், மனிதநலம் அல்லது சுற்றுச்சூழலுக்கு அபாயம் தரும் எந்த ஒரு கழிவும் தீங்கு விளைவிக்கும் கழிவுகள் ஆகும். தீங்கு விளைவிக்கும் கழிவுகளை உற்பத்தி செய்வோர், அக்கழிவுகளை ஆரம்ப நிலையிலேயே தவிர்த்தல், குறைத்தல், மறு உபயோகம் செய்தல், மறு சுழற்சி செய்தல், மீட்டெடுத்தல், இணை செயலாக்கத்திற்கு பயன்படுத்துதல் மற்றும் பாதுகாப்பான முறையில் அகற்றுதல் போன்ற வழிமுறைகளை கையாளவேண்டும். இவ்விதிகளின்படி மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியம் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை கையாளுவதற்கான அங்கீகாரத்தை வழங்கவேண்டும்.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தீங்கு விளைவிக்கும் கழிவுகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை கண்டறிந்து இவ்விதிகளின் கீழ் 5259 தொழிற்சாலைகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. தமிழகத்தில் 2024–2025 ஆம் ஆண்டு 11.20 இலட்சம் டன் தீங்கு விளைவிக்கும் கழிவுகள் உற்பத்தியாகி உள்ளன. இவற்றில் 1.24 இலட்சம் டன் கழிவுகள் நிலத்தில் பாதுகாப்பாக கொட்டப்படக்கூடிய கழிவுகளாகும், 3.6 இலட்சம் டன் கழிவுகள் எரிப்பான் மூலமாக எரிக்கப்படுபவையாகவும், 6.19 இலட்சம் டன் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படுபவையாகவும், 3.39 இலட்சம் டன் பயன்படுத்தக் கூடியவையாகவும் அமைந்துள்ளன. தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைச் சுற்றுச்சூழலுக்கு எந்தவித பாதிப்புமின்றி விஞ்ஞான முறையில் பாதுகாப்பாக கையாளுவதற்கு தகுந்த மேலாண்மை நடவடிக்கையினை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் எடுத்து வருகிறது.

## V. வாரியத்தின் செயல்பாடுகள்

### 2024–25 ஆம் ஆண்டு உற்பத்தியான தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் அளவு விவரங்கள் மாவட்டம் வாரியாக

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | அங்கீகாரம் பெற்ற தொழிற்–சாலைகளின் எண்ணிக்கை | உற்பத்தியான தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் அளவுகள் (டன்) | | | | மொத்த அளவு (டன்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | நிலம் நிரப்ப ஏதுவானவை | எரித்து சாம்பலாக்க ஏதுவானவை | மறுசுழற்சி செய்ய ஏதுவானவை | உபயோகப் படுத்த ஏதுவானவை | |
| 1 | அரியலூர் | 15 | 0 | 0 | 40.83 | 1.23 | 42.06 |
| 2 | செங்கல்பட்டு | 336.00 | 8008.61 | 3676.79 | 4835.31 | 594.92 | 17115.6269 |
| 3 | சென்னை | 556.00 | 11270.70 | 4109.41 | 10659.86 | 6765.36 | 32805.33 |
| 4 | கோயம்புத்தூர் | 431 | 10574 | 3998 | 7149 | 29522 | 51243 |
| 5 | கடலூர் | 49 | 12335 | 304 | 3343 | 4845 | 20826.83 |
| 6 | தருமபுரி | 25 | 0.00 | 1.875 | 34.449 | 0.000 | 36.324 |
| 7 | திண்டுக்கல் | 69 | 579.4813 | 383.786 | 3008.20668 | 82.2777 | 4053.75168 |
| 8 | ஈரோடு | 461 | 5197 | 0 | 74 | 26094 | 31365 |
| 9 | கள்ளக்குறிச்சி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 10 | காஞ்சிபுரம் | 482 | 31194.3155 | 2598.44 | 8648.75275 | 11293.463 | 53734.971 |
| 11 | கன்னியாகுமரி | 30 | 15.56 | 0.60 | 68.90 | 0.00 | 85.06 |
| 12 | கரூர் | 137 | 1514 | 2 | 112360 | 168560 | 282436.3 |
| 13 | கிருஷ்ணகிரி | 221 | 4700.82 | 478.52 | 256398.74 | 21362.52 | 282940.6 |
| 14 | மதுரை | 115 | 10.415 | 0 | 245.11 | 364.396 | 619.921 |
| 15 | மயிலாடுதுறை | 12 | 0.00 | 30.96 | 20.61 | 0 | 51.57 |
| 16 | நாகப்பட்டினம் | 11 | 45.00 | 0 | 11.84 | 0 | 56.84 |
| 17 | நாமக்கல் | 129 | 17.6 | 0 | 11451.4402 | 0 | 11469.0402 |
| 18 | நீலகிரி | 19 | 0 | 15.35 | 25.171 | 98.567 | 139.088 |
| 19 | பெரம்பலூர் | 8 | 0 | 1139.544 | 690.986 | 59.332 | 1889.862 |
| 20 | புதுக்கோட்டை | 54 | 208.847 | 26.770 | 613.289 | 1553.810 | 2402.716 |
| 21 | ராமநாதபுரம் | 18 | 0.00 | 0.206 | 27.067 | 0.00 | 27.273 |
| 22 | ராணிப்பேட்டை | 235 | 6977.21 | 517.08 | 15808.55 | 25577.03 | 48879.8766 |
| 23 | சேலம் | 121 | 4821.31 | 1732.71 | 364.81 | 3493.88 | 10412.71 |
| 24 | சிவகங்கை | 26 | 38.733 | 0.597 | 5.4854 | 10.7 | 55.5154 |
| 25 | தென்காசி | 8 | 0 | 0 | 40.96 | 455.6 | 496.56 |
| 26 | தஞ்சாவூர் | 29 | 91.06 | 0 | 33.24 | 11.85 | 136.15 |
| 27 | தேனி | 29 | 439.774 | 3.5 | 23.855 | 2.64 | 469.769 |
| 28 | தூத்துக்குடி | 35.00 | 2285.80 | 1.61 | 1238.27 | 25.64 | 3551.3175 |
| 29 | திருச்சிராப்பள்ளி | 77 | 3193.07 | 51.09 | 677.29 | 145.22 | 4066.67 |
| 30 | திருநெல்வேலி | 41 | 130.580 | 42.520 | 3251.910 | 9971.9358 | 13396.9458 |
| 31 | திருப்பத்தூர் | 220 | 6818.41 | 0.21 | 3571.61 | 2104.91 | 12495.14 |
| 32 | திருப்பூர் | 616 | 65 | 8027 | 11565 | 18528 | 38186 |
| 33 | திருவள்ளூர் | 372 | 12080 | 9384 | 147349 | 3000 | 171813 |
| 34 | திருவண்ணாமலை | 39 | 37.3350 | 56.9010 | 307.9365 | 763.8700 | 1166.0425 |
| 35 | திருவாரூர் | 12.00 | 0.00 | 3.080 | 11.06 | 0.00 | 14.1375 |
| 36 | வேலூர் | 71 | 393.75 | 0.26 | 12574.26 | 682.49 | 13650.76 |
| 37 | விழுப்புரம் | 90 | 587 | 20 | 768.88 | 2113.24 | 3489.12 |
| 38 | விருதுநகர் | 60 | 887.40 | 6.76 | 2234.30 | 1598.10 | 4726.56 |
| | **மொத்தம்** | **5259.00** | **124518.98** | **36613.46** | **619533.19** | **339682.15** | **1120347.79** |

## V. வாரியத்தின் செயல்பாடுகள்

### தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மறுசுழற்சி செய்தல்

தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016, அட்டவணை – IV – ல் கொடுக்கப்பட்டுள்ள கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கு மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் கொடுத்துள்ள சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கழிவுகள் சுத்திகரிப்பு செய்வதற்கு தொழிற்சாலைகளை வாரியம் ஊக்குவித்து வருகின்றது. அதன்படி 31.03.2024 வரையில் மொத்தம் 107 தொழிற்சாலைகளுக்கு இரும்பு அல்லது (பித்தளை, துத்தநாகம், செம்பு), பயன்படுத்தப்பட்ட காரிய பேட்டரிகள், பெயின்ட், பயன்படுததப்பட்ட எண்ணெய் கழிவுகள் போன்ற ஏழு வகையான கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கு வாரியம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**2024–2025 ஆம் ஆண்டு தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மறுசுழற்சி செய்ததன் விபரம்**

| வ. எண் | மறுசுழற்சி செய்ய அட்டவணை – IV ல் கொடுக்கப்பட்ட கழிவுகள் | அங்கீகாரம் வழங்கப்பட்ட தொழிற்–சாலைகள் எண்ணிக்கை | அங்கீகாரம் கொடுக்கப்பட்ட அளவு (ஆண்டு ஒன்றுக்கு டன்களில்) | 2024–2025 ஆம் ஆண்டு மறுசுழற்சி செய்யப்பட்ட அளவு (டன்களில்) | |
|---|---|---|---|---|---|
| | | | | இறக்குமதி செய்யப்பட்டவை | இறக்குமதி செய்யப்பட்டவை தவிர |
| 1 | பித்தளைக் கழிவுகள் | 2 | 1120.000 | 0.000 | 64.685 |
| 2 | துத்தநாகக் கழிவுகள் | 10 | 9482 | 173.59 | 559.32 |
| 3 | செம்பு கலந்த கழிவுகள் | 8 | 149110 | 2264.9 | 7350.32 |
| 4 | நிக்கல், காட்மியம், துத்தநாகம், தாமிரம், ஆர்சனிக், வெனிடியம் மற்றும் கோபால்ட் ஆகியவற்றைக் கொண்ட கழிவு வினையூக்கி | 1 | 12000 | 0 | 2806.76 |
| 5 | காரீயக் கழிவுகள் மற்றும் காரீய பேட்டரிகள் | 16 | 431172 | 163613.2 | 84198.827 |
| 6 | மின் கழிவுகள் | 2 | 1385.16 | 0 | 0.17 |
| 7 | பெயின்ட் கழிவுகள் | 2 | 2800 | 0.000 | 125 |
| 8 | பயன்படுத்தப்பட்ட எண்ணெய் | 39 | 150538.55 | 0.000 | 12831.63 |
| 9 | கழிவு எண்ணெய் | 16 | 43540.99 | 0.000 | 1133.087 |
| | மொத்தம் | **96** | **801148.7** | **166051.69** | **109069.799** |

### தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மறு பயன்பாடு செய்தல்

தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016–ன் படி, கழிவுகளை முன் செயலாக்கம் செய்து மூலப்பொருளுடன் பயன்படுத்துவதற்கு நிலையான இயக்கு செயல்முறைகளை மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் வெளியிட்டுள்ளது. அதன்படி அட்டவனை

## V. வாரியத்தின் செயல்பாடுகள்

–1 ல் கொடுக்கப்பட்டுள்ள (1) பயன்படுத்தப்பட்ட கரைப்பான்கள் (2) பயன்படுத்தப்பட்ட டைகுரோமேட் திரவம் (3) உபயோகப்படுத்தப்பட்ட டிரம்ஸ் மற்றும் கொள்கலன்களை சுத்தம் செய்து (4) செயல்முறை எச்சம்

கசடுகள் மறு பயன்பாடு செய்வதற்கு வாரியம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. மேலும் தொழிற்சாலைகளின் சுய உபயோகத்திற்கு இரும்பு மற்றும் இரும்பு அல்லாத உலோக கழிவுகள், காகிதக் கழிவுகள் மற்றும் ரப்பர் கழிவுகளை மறுபயன்பாடு செய்வதற்கும் வாரியம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**2024–2025 ஆம் ஆண்டில் மறு பயன்பாட்டிற்கு அனுப்பப்பட்ட தீங்கு விளைவிக்கும் கழிவுகள் விபரம்**

| வ. எண் | மறு பயன்பாட்டிற்கு உகந்த தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் | அங்கீகாரம் வழங்கப்பட்ட வசதிகள் | அங்கீகாரம் வழங்கப்பட்ட அளவு (ஆண்டு ஒன்றுக்கு டன்களில்) | மறு பயன்பாடு செய்யப்பட்ட அளவு (டன்களில்) | |
|---|---|---|---|---|---|
| | | | | இறக்குமதி செய்யப்பட்டவை | இறக்குமதி செய்யப்பட்டவை தவிர |
| 1 | பயன்படுத்தப்பட்ட கரைப்பான்கள் | 10 | 24598 | 0 | 3817.566 |
| 2 | பயன்படுத்தப்பட்ட அமிலங்கள் | 0 | 0 | 0 | 0 |
| 3 | பயன்படுத்தப்பட்ட டிரம்ஸ் மற்றும் கொள்கலன்கள் | 18 | 59475.328 | 0 | 12764 |
| 4 | செயல்முறை எச்சம் | 1 | 0 | 0 | 406 |
| | மொத்தம் | **30** | **76073.328** | **0** | **16987.566** |
| **சுய உபயோகத்திற்கு மறு பயன்பாடு செய்யப்பட்ட கழிவுகள்** | | | | | |
| 1 | இரும்பு மற்றும் இரும்பு அல்லாத உலோகக் கழிவுகள் | 56 | 3389551.665 | 432165.0049 | 1033309.696 |
| 2 | அலுமினிய கழிவுகள், | 33 | 130880.78 | 19488.983 | 25077.719 |
| 3 | காரீயக் கழிவுகள் | 4 | 1384 | 118 | 531.346 |
| 4 | துத்தநாகம் கழிவுகள் | 4 | 16286 | 6452.17446 | 613.13954 |
| 5 | தகரம் கழிவுகள் | 1 | 120 | 0 | 0 |
| 6 | செம்பு கழிவுகள் | 8 | 13834 | 91.186 | 927.784 |
| 7 | கழிவு காகிதம் | 42 | 1129850.555 | 144055.0016 | 344436.5655 |
| 8 | **நிக்கல்** கழிவுகள் | 1 | 120 | 0 | 0 |
| 9 | கழிவு டயர் | 3 | 109300 | 31665.65 | 54865.03 |
| | **மொத்தம்** | **113** | **2827431.96** | **639548.938** | **931382.017** |

**அபாயகரமான கழிவுகளை முன்கூட்டியே செயலாக்குதல் மற்றும் பயன்படுத்துதல்**

அபாயகரமான கழிவுகளை சிமெண்ட் ஆலையில் இணைந்து செயலாக்குவது சுற்றுச்சூழலுக்கு உகந்த விருப்பமாக கருதப்படுகிறது, ஏனெனில் கழிவுகளை கூடுதல் எரிபொருளாகவும் மாற்று மூலப்பொருளாகவும் பயன்படுத்துவதில் இரட்டை நன்மை உள்ளது.

## V. வாரியத்தின் செயல்பாடுகள்

சிமென்ட் ஆலையில் உள்ள அபாயகரமான மற்றும் பிற கழிவுகளை முன் செயலாக்கம் மற்றும் இணை செயலாக்கத்திற்காக பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஜூலை 2017 இல் வெளியிட்டுள்ளது. வழிகாட்டுதல்களின் அடிப்படையில், சிமென்ட் சூளைகளில் அபாயகரமான மற்றும் பிற கழிவுகளை இணை செயலாக்கத்திற்கான (Co–Processing) மூலப்பொருளாகவோ அல்லது எரிசக்தி மீட்புக்கான எரிபொருளாகவோ குறிப்பிட்ட இணக்க அளவுகோல்களுக்கு உட்பட்டு பயன்படுத்த வாரியம் அனுமதித்துள்ளது. தீங்கு விளைவிக்கும் கழிவு விதிகள், 2016 இன் கீழ் ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் 1943165 டன் கழிவுகளை செயலாக்க 15 சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**இணை செயலாக்கத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட சிமெண்ட் தொழிற்சாலைகளின் விவரங்கள்**

| வ. எண் | சிமெண்ட் தொழில்துறையின் பெயர் & முகவரி | அனுமதிக்கப்பட்ட திறன் (எம்டிஏ) |
|---|---|---|
| 1 | தி/ள். செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட், கீழப்பலூர் கிராமம், அரியலூர் தாலுகா , அரியலூர் மாவட்டம் | 106300 |
| 2 | தி/ள். தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட், அரியலூர் | 12000 |
| 3 | தி/ள். அல்ட்ரா டெக் சிமெண்ட் லிமிடெட் சிமெண்ட் ரெட்டிபாளையம், அரியலூர் | 400000 |
| 4 | தி/ள். டால்மியா சிமெண்ட் பாரத் லிமிடெட் பழங்காநத்தம், அரியலூர் | 449560 |
| 5 | தி/ள். டால்மியா சிமெண்ட் பி லிமிடெட் சிமெண்ட் ஆலை தாமரைக்குளம், அரியலூர் | 41200 |
| 6 | தி/ள். ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட் சிமெண்ட் ஆலை கோவிந்தபுரம், அரியலூர் | 281760 |
| 7 | தி/ள். ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட், அலைத்தியூர், அரியலூர் | 50000 |
| 8 | தி/ள். இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், அரியலூர் | 6800 |
| 9 | தி/ள். செட்டிநாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட், புலியூர் கிராமம், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் | 50000 |
| 10 | தி/ள். தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித சிமெண்ட் ஆலை லிமிடெட், காகிதபுரம், புகளூர் தாலுக்கா, கரூர் | 330000 |
| 11 | தி/ள். இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட் (சங்கரி பணிகள்), குமாரபாளையம் தாலுக்கா, நாமக்கல் | 60895 |
| 12 | தி/ள். தி இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், சங்கர் நகர், மதுரை சாலை, திருநெல்வேலி மாவட்டம் – 627 357. | 30900 |
| 13. | தி/ள். செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், –சிமெண்ட் ஆலை– கரிகாளி மற்றும் டோலிப்பட்டி கிராமம், வேடசந்தூர் தாலுக்கா, திண்டுக்கல் | 95000 |
| 14. | தி/ள். ராம்கோ சிமெண்ட் லிமிடெட், விருதுநகர் மாவட்டம் | 25150 |
| 15. | தி/ள். தண்டபாணி சிமெண்ட்ஸ், தத்தமங்கலம் கிராமம், மண்ணச்சநல்லூர் தாலுக்கா, திருச்சி | 3600 |

சிமெண்ட் சூளைகளில் அபாயகரமான கழிவுகளை இணை செயலாக்கம் செய்வதை ஊக்குவிப்பதற்காக, 10 HW–முன்–செயலாக்க வசதிகளுக்கு அபாயகரமான மற்றும் பிற கழிவுகளை முன்கூட்டியே செயலாக்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன, இந்த நிறுவனங்கள்

இணை செயலாக்கத்திற்கு ஏற்ற பொருட்களின் ஒரே மாதிரியான கலவையை உருவாக்குகிறது. சிமென்ட் சூளைகளில் மூலப்பொருளுக்கு மாற்றாக அல்லது எரிபொருள் நிரப்பியாக நேரடி பயன்பாட்டிற்காக, இந்த வசதிகள் 2024–2025–இல் 97576.443 டன் அபாயகரமான மற்றும் பிற கழிவுகளை முன்கூட்டியே செயலாக்கி, சிமெண்ட் தொழிற்சாலைகளில் இணை செயலாக்கத்திற்கு அனுப்பியுள்ளன.

**தீங்குவிளைவிக்கும் கழிவுகளைக் கையாளும் நிறுவனங்கள்**

அபாயகரமான கழிவுகளை அறிவியல் மற்றும் பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்காக 3 பொதுவான கழிவு சுத்திகரிப்பு சேமிப்பு மற்றும் அகற்றும் வசதிகள் (HW–TSDFs) கும்மிடிப்பூண்டி, கிருஷ்ணகிரி மற்றும் விருதுநகரில் செயல்பாட்டில் உள்ளன.

**தமிழ்நாட்டில் உள்ள பொதுவான சுத்திகரிப்பு சேமிப்பு மற்றும் அகற்றும் வசதிகளின் பட்டியல்**

| வசதியின் பெயர் மற்றும் முகவரி | வசதி பற்றிய விவரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட திறன் | 2024–2025 ஆம் ஆண்டில் கையாளாப்பட்ட அளவு (டன்களில்) |
|---|---|---|---|
| M/ s. ரீ சுஸ்தானபில்ட்டி IWM சொலுஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், சிப்காட் தொழில் வளாகம், கும்மிடிப்பூண்டி , திருவள்ளூர் மாவட்டம். | நிலப்பரப்பில் நிரப்புதல் | 3 லட்சம் | 1.20 லட்சம் |
| | எரியூட்டல் | 0.12 லட்சம் | 0.079 லட்சம் |
| | முன்–செயலாக்கம் | 0.50 லட்சம் | Nil |
| M/ s. ரீ சுஸ்தானபில்ட்டி IWM சொலுஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், உண்டு உறுமிகிடாகுளம் கிராமம், திருச்சுழி தாலுகா , விருதுநகர் மாவட்டம். | நிலப்பரப்பில் நிரப்புதல் | 2.4 லட்சம் | Nil |
| | முன்–செயலாக்கம் | 0.1 லட்சம் | Nil |
| M/ s. ரீ சுஸ்தானபில்ட்டி IWM சொலுஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், கிருஷ்ணகிரி மாவட்டம். | நிலப்பரப்பில் நிரப்புதல் | 90000 | 0.013 லட்சம் |
| | முன்–செயலாக்கம் | 29880 | 4283.15 |

**தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மைக்கு இணையதளம் மூலம் அங்கீகாரம் வழங்குதல்**

இணையதளம் மூலமாக தீங்கு விளைவிக்கும் கழிவுகளை கையாள்வதற்கான அங்கீகார விண்ணப்பங்களைப் பெற்று, பரிசீலனை செய்து அங்கீகாரத்தையும் இணையதளம் மூலமாகவே வழங்குவதற்கான மென்பொருளை 01.03.2016 அன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிமுகம் செய்து நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன் மூலம் தொழிற்சாலைகள் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை கையாள்வதற்கான அங்கீகாரம் வேண்டி விண்ணப்பத்தினை இணையதளம் மூலம் தொழிற்சாலைகள் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு, இணையதளம் மூலம் அங்கீகாரம் வழங்கப்படும். இவ்வசதியின் மூலம் தொழிற்சாலைகள் தங்களது

விண்ணப்பத்தின் நிலையை அவ்வப்போது விரும்பிய வண்ணம் இணையதளம் மூலமாகவே அறிந்து கொள்ளலாம். மார்ச் 31, 2025 வரை 5259 தொழிற்சாலைகளிலிருந்து விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் பெறப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் தீங்கு விளைவிக்கும் கழிவு விதிகள் 2016–ன் அங்கீகாரம் பெற்ற தொழிற்சாலைகள் படிவம் –4–ல் ஆண்டு அறிக்கையினை ஜீன் 30 ஆம் தேதிக்குள் வாரியத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். இதனையும் இணைய வழி மூலமாக சமர்ப்பிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

**தோல் பதனிடும் தொழிற்சாலைகள்**

- தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் (பொது மற்றும் தனி) பூஜ்ய கழிவு நீர் வெளியேற்றும் அமைப்பிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சுமார் 127773.674 மெட்ரிக் டன் கலப்பு உப்பானது தோல் பதனிடும் தொழிற்சாலைகள்/பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் வளாகங்களில் பாதுகாப்பாக சேகரித்து வைக்கப்பட்டுள்ளது.
- குஜராத், பாவ்நகரில் உள்ள மத்திய உப்பு மற்றும் கடல் இரசாயன ஆராய்ச்சி நிறுவனத்தின் (CSMCRI), மூலம் ஆய்வு மேற்கொள்ள வாரியம் ஊக்குவித்துள்ளது. இந்நிறுவனமானது, கலப்பு உப்பை, பொது உப்பை மூலப்பொருட்களுகாக பயன்படுத்தும் குளோரா ஆல்கலி சோடா சாம்பல் கலவை, ஜவுளி, கூழ் மற்றும் காகிதத் தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ற தரத்தில் கலப்பு உப்பைச் சுத்திகரிக்கும் ஒரு முறையைக் கண்டறிந்துள்ளது.
- தி/ள். தூத்துக்குடி ஆல்கலி இரசாயனங்கள் மற்றும் உரங்கள் லிமிடெட் (தூத்துக்குடி) தங்கள் உற்பத்தி செயல்முறையில் சுத்திகரிக்கப்பட்ட உப்பை மூல பொருளாகப் பயன்படுத்த ஒத்துக்கொண்டுள்ளது. இது தொடர்பான முன்மாதிரி ஆலையை நிறுவுவதற்கான பணிகளை விரைவுபடுத்துமாறு AISHTMA விற்கு வாரியம் உத்தரவிட்டுள்ளது.
- இருப்பினும், தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கழிவுநீரைச் சுத்திகரிப்பதன் மூலம் உருவாக்கப்படும் கலவை உப்பைப் பயன்படுத்துவதற்கான நிலையான செயல்பாட்டு நடைமுறை (SOP), மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் இன்னும் வெளியிடப்படவில்லை.
- கலப்பு உப்பை சுத்திகரிக்க உப்பு சுத்திகரிப்பு நிலையத்தை உள்ளடக்கிய மேம்படுத்துதல் பணிகளின் திருத்திய முன்மொழிவை (DPR) தி/ள். இராணிப்பேட்டை பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவனம் மத்திய அரசிடம் சமர்ப்பித்துள்ளது. கலப்பு உப்பை சுத்திகரிக்கும் தொழில்நுட்பம், நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பிரச்சனைக்குத் தீர்வாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜவுளி தொழிற்சாலைகள்

V. வாரியத்தின் செயல்பாடுகள்

- தமிழ்நாட்டில், ஜவுளி தொழிற்சாலைகளின் பூஜ்ய கழிவுநீர் சுத்திகரிப்பு (ZLD) அமைப்பிலிருந்து பெறப்பட்ட சுமார் 2,07,605.053 டன் கலப்பு உப்புகள் தனி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள மற்றும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் வளாகத்தில் ஊடுருவாத தரையுடன் மூடப்பட்ட கொட்டகைகளில் சேமிக்கப்படுகின்றன. இவ்வாறு சேகரிக்கப்பட்டுள்ள அடர் கலவை உப்பினை சுத்திகரிப்பு செய்வதற்கான நிலையான செயல்பாட்டு நடைமுறை (Standard Operating Procedure) ஒன்றிய மாசுகட்டுப்பாடு வாரியம் வழங்கியுள்ளது. இராமநாதபுரத்தில் ஒரு நிறுவனமானது இதற்கான அமைப்பினை, நிறுவி, வாரியத்தால் 31.03.2028 வரை செல்லத்தக்க இயக்குவதற்கான இசைவாணையை பெற்றுள்ளது. இதுவரை 18707.465 டன் அடர்கலவை உப்பானது சாயத் தொழிற்சாலைகளிலிருந்து பெறப்பட்டு, இந்நிறுவனம் அதனை மீண்டும் சுத்திகரிப்பு செய்யவுள்ளது.

### 5.4.6 மருத்துவக் கழிவு மேலாண்மை

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகள், 2016–ஐ அறிவிக்கை செய்தது. இவ்விதிகளின்படி, மருத்துவக் கழிவுகளை சேகரித்து, சுத்திகரித்து, அகற்றுவது, மருத்துவக் கழிவுகளை உற்பத்தி செய்வோர் மற்றும் பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குபவர்களின் பொறுப்பாகும்.

மருத்துவமனைகள் மற்றும் பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அங்கீகாரம் வழங்கி, அந்நிறுவனங்கள் விதிகளை சரிவர கடைபிடிக்கின்றனவா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியத்தை சார்ந்ததாகும். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இவ்விதிகளின் கீழ் 31.12.2024 நிலவரப்படி 30,878 தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகள், மருத்துவ இல்லங்கள், புறநோயாளிகள் மையம், கால்நடை நிறுவனங்கள், நோயியல் ஆய்வகங்கள், இரத்த சேகரிப்பு மற்றும் சேமிப்பு வங்கிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. அனைத்து மருத்துவக் கழிவுகளை சேகரித்தல், கொண்டு செல்லுதல், சுத்திகரிப்பு செய்தல் மற்றும் விஞ்ஞான முறைப்படி அகற்றுதல் பொருட்டு பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுடன் அனைத்து மருத்துவமனைகளும் ஒப்பந்தம் செய்துள்ளன.

தமிழ்நாட்டில், பொதுமருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் மருத்துவக் கழிவுகளை சுத்திகரிக்கும் மற்றும் அகற்றும் பணிக்காக எரியூட்டி, ஆட்டோகிளேவ், ஷ்ரெட்டர் இயந்திரங்கள் மற்றும் ஷார்ப்ஸ் குழிகள் போன்ற வசதிகளை கொண்டுள்ளன. தமிழ்நாட்டில், 31.12.2024 நிலவரப்படி மொத்தம் 14 பொதுமருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன, இதில் 11 நிலையங்கள் செயல்பாட்டில் உள்ளன. மீதி 3 நிலையங்கள் (ஊட்டி, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர்) செயல்பாட்டில் இல்லை. இந்த 3 நிலையங்களுக்கு தொடர்புடைய மருத்துவமனைகள் மற்றும் சுகாதார அமைப்புகளிலிருந்து உருவாகும் மருத்துவ கழிவுகள், சுத்திகரிப்பு மற்றும் அகற்றம் செய்ய மற்ற நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

மேலும், இரண்டு புதிய நிலையங்களை (தி/ள். மெடிகேர் என்விரான்மென்டல் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட், செய்கலத்தூர் கிராமம், மாணமதுரை தாலுகா, சிவகங்கை மாவட்டம் மற்றும் தி/ள். எஸ் குரோத் அலையன்ஸ் எல்.எல்.பி, மேல்பாக்கம் கிராமம், உத்திரமேரூர்

தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம்) நிறுவுவதற்கான இசைவாணை 05.12.2024 தேதியிட்ட நடப்பாணை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட 2024–ஆம் ஆண்டிற்கான மருத்துவக் கழிவு ஆண்டு அறிக்கையின் படி, தமிழ்நாட்டில் உள்ள பொதுமருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் சராசரியாக நாளொன்றுக்கு 60.72 டன் மருத்துவக் கழிவுகளை சுத்திகரித்து வருகின்றன.

**மாவட்ட வாரியாக ஜனவரி 2024 முதல் டிசம்பர் 2024 ஆம் வரை சராசரியாக நாளொன்றுக்கு உற்பத்தியாகும் உயிரி மருத்துவக் கழிவுகளின் விவரங்கள் பின்வருமாறு:**

| வரிசை எண் | மாவட்டம் | நாளொன்றுக்கு உற்பத்தியாகும் மருத்துவ கழிவுகள் (கிலோகிராம்) |
|---|---|---|
| 1 | அரியலூர் | 270 |
| 2 | பெரம்பலூர் | 444 |
| 3 | புதுக்கோட்டை | 399 |
| 4 | தஞ்சாவூர் | 832 |
| 5 | திருச்சி | 1209 |
| 6 | சிவகங்கை | 493 |
| 7 | இராமநாதபுரம் | 228.34 |
| 8 | திருவாரூர் | 317 |
| 9 & 10 | நாகப்பட்டினம் & மயிலாடுதுறை | 634 |
| 11 | மதுரை | 1766 |
| 12 | திண்டுக்கல் | 729 |
| 13 | விருதுநகர் | 674 |
| 14 | தேனி | 519 |
| 15 | சேலம் | 765 |
| 16 | நாமக்கல் | 610 |
| 17 | கரூர் | 485 |
| 18 | ஈரோடு | 926 |
| 19 | தர்மபுரி | 625.53 |
| 20 | கிருஷ்ணகிரி | 1473.69 |
| 21 | கடலூர் | 1109 |
| 22 & 23 | விழுப்புரம் & கள்ளக்குறிச்சி | 908.005 |
| 24 | கோயம்புத்தூர் | 10542.9 |
| 25 | திருப்பூர் | 1644.786 |
| 26 | நீலகிரி | 274.4 |
| 27 | கன்னியாகுமரி | 1840 |
| 28 | தென்காசி | 574 |
| 29 | திருநெல்வேலி | 1141 |
| 30 | தூத்துக்குடி | 835 |
| 31 | செங்கல்பட்டு | 3964 |
| 32 | காஞ்சிபுரம் | 1125.09 |
| 33 | சென்னை | 16305.69 |
| 34 | திருவள்ளூர் | 784.73 |
| 35 | வேலூர் | 3511 |
| 36 | திருப்பத்தூர் | 257 |
| 37 | திருவண்ணாமலை | 559.643 |
| 38 | ராணிப்பேட்டை | 1910 |

## V. வாரியத்தின் செயல்பாடுகள்

**மருத்துவக் கழிவுகளை மேலாண்மை செய்யும் பொது சுத்திகரிப்பு நிலையங்களின் பட்டியல் கீழ்கண்டவாறு**

| வ. எண். | பொது மருத்துவக் கழிவுகள் சுத்திகரிப்பு நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மருத்துவக் கழிவுகள் சேகரிக்கும் பகுதிகள் |
|---|---|---|
| | **செயல்பாட்டில் உள்ளவை** | |
| 1. | தி/ள்.ஜி .ஜே மல்ட்டிகிளேவ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், தென் மேல்பாக்கம், செங்கல்பட்டு தாலுகா மற்றும் மாவட்டம் | காஞ்சிபுரம் மற்றும் சென்னை மாவட்டங்களின் பகுதி. |
| 2. | தி/ள். தமிழ்நாடு வேஸ்ட் மேனேஜ்மேன்ட் பிரைவேட் லிமிடெட் , கின்னார் கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம் | கடலூர், வட சென்னை , காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் பகுதி. |
| 3. | தி/ள். மெடிகேர் என்விரோ சிஸ்டம்ஸ், செங்கிப்பட்டி, தஞ்சாவூர் தாலுகா மற்றும் மாவட்டம் | தஞ்சாவூர், திருவாரூர், திருச்சி, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, சிவகங்கை, பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்கள் |
| 4. | தி/ள். கென் பயோ லிங்க்ஸ் பிரைவேட் லிமிடெட், காட்பாடி தாலுகா, வேலூர் மாவட்டம் | வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் |
| 5. | தி/ள். ரீசஸ்டெய்னபிலிட்டி ஹெல்த் கேர் சொல்யூசன்ஸ் லிமிடெட், சேலம் மாவட்டம் | சேலம், நாமக்கல், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்கள் |
| 6. | தி/ள். டெக்னோ தெர்ம் இண்டஸ்ட்ரீஸ், ஒரட்டுகுப்பை, கோயம்புத்தூர் மாவட்டம் | கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் திருப்பூர் மாவட்டங்கள் |
| 7. | தி/ள். ஏசெப்டிக் சிஸ்டம் பயோ மெடிக்கல் வேஸ்ட் மேனேஜ்மென்ட் கோ, திருநெல்வேலி மாவட்டம் | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் |
| 8. | தி/ள். ரீசஸ்டெய்னபிலிட்டி ஐ.டபுல்யூ.எம் சொல்யூசன்ஸ் லிமிடெட், யூனிட் 3, பாலேதோட்டம், போச்சம்பள்ளி தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம் | தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் |
| 9. | தி/ள். ரீசஸ்டெய்னபிலிட்டி ஐ.டபுல்யூ.எம் சொல்யூசன்ஸ் லிமிடெட், பீ.எம். டபுல்யூ. டிவிஷன், பாப்பன் குப்பம், கும்மிடிப்பூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் | சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் பகுதி. |
| 10. | தி/ள். கோவை பயோ வேஸ்ட் மேனேஜ்மென்ட் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர் மாவட்டம் | கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களின் பகுதி. |
| 11. | தி/ள்.பாண்டிச்சேரி சாலிட் வேஸ்ட் மேனேஜ்மேன்ட் கம்பெனி பிரைவேட் லிமிடெட், டி.படையூர், விருத்தாச்சலம் தாலுகா, கடலூர் மாவட்டம். | கடலூர், விழுப்புரம், பெரம்பலூர், அரியலூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் பகுதி. |
| | **செயல்பாட்டில் இல்லாதவை** | |
| 12 | தி/ள். சொசைட்டி பார் பயோ மெடிக்கல் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் ஒத்துபட்டரை கிராமம், குன்னூர் | நீலகிரி மாவட்டம் ( மருத்துவ கழிவுகள் சேகரிக்கப்பட்டு கோயம்பத்தூரில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரித்து அகற்றப்படுகிறது) |
| 13 | தி/ள். நீட் அனட் கிளீன் சர்வீசஸ் ஸ்குவாட், முத்துவயல், இராமநாதபுரம் மாவட்டம் | ராமநாதபுரம் மாவட்டம்( மருத்துவ கழிவுகள் சேகரிக்கப்பட்டு தஞ்சாவூரில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரித்து அகற்றப்படுகிறது) |
| 14 | தி/ள். ரீசஸ்டெய்னபிலிட்டி ஹெல்த் கேர் சொல்யூசன்ஸ் லிமிடெட், விருதுநகர் மாவட்டம் | மதுரை, விருதுநகர், திண்டுக்கல், ராமநாதபுரம் மாவட்டங்கள் ( மருத்துவ கழிவுகள் சேகரிக்கப்பட்டு சேலத்தில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரித்து அகற்றப்படுகிறது) |

### 5.4.7 மின்னணுக் கழிவு மேலாண்மை

இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், 2016 ஆம் ஆண்டின் மின்னணு கழிவு (மேலாண்மை) விதிகளை திருத்தி, சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986ன் கீழ் 2022 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட மின்னணு கழிவு (மேலாண்மை) விதிகளை அறிவித்தது. மேற்கண்ட விதிகள் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தது. சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் மின்னணுக் கழிவுகளை நிர்வகிப்பதும், மின்னணுக் கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கு மேம்படுத்தப்பட்ட விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு (EPR) முறையை நிறுவுவதும் விதிகளின் நோக்கமாகும்.

உற்பத்தியாளர்களின் விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பானது (EPR) பதிவுச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் மறுசுழற்சி இலக்குகள் / EPR கடமைகளை வழங்குவதன் மூலம் ஒழுங்குபடுத்தப்படுகிறது. இந்த விதிகளின்படி, அனைத்து மின்னணு சாதனங்களின் தயாரிப்பாளர்கள், உற்பத்தியாளர்கள், பழுதுபார்ப்பாளர்கள் மற்றும் மறுசுழற்சியாளர்கள், சம்பந்தப்பட்ட மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திலிருந்து இசைவாணை மற்றும் அபாயகரக் கழிவுகளைக் கையாள்வதற்கான அங்கீகாரம் ஆகியவற்றை பெற்ற பின்னர் , மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் (CPCB) உருவாக்கிய இணைய வழி EPR வலைத்தளத்தில் பதிவு செய்ய வேண்டும் மற்றும் மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரிய மின்னணுக் கழிவு EPR வலைத்தளத்தில் வருடாந்திர மற்றும் காலாண்டு அறிக்கைகளை தாக்கல் செய்ய வேண்டும்.

உற்பத்தியாளர்கள் தங்கள் விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பின் இலக்குகளை EPR பதிவு செய்யப்பட்ட மறுசுழற்சியாளர்களிடமிருந்து விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு சான்றிதழ்களை EPR வலைதளத்தில் வாங்குவதன் மூலம் நிறைவேற்றலாம். மேலும் அதனை காலாண்டு அறிக்கையாக இணைய வலைதளத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

மின்னணுக் கழிவுகளின் மேலாண்மைக்கான அதன் பங்குதாரர்களின் EPR பதிவானது மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் (CPCB) வழங்கப்படுகிறது. அதே நேரத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மீதான கண்காணிப்பு மற்றும் காலாண்டு தணிக்கை செயல்முறையானது மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய (CPCB) வழிகாட்டுதலின்படி மேற்கொள்ளப்படும்.

திருத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டின் மின்னணுக் கழிவு மேலாண்மை விதிகளின்படி, 2024–2025 நிதியாண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் 14மின் கழிவு மறுசுழற்சியாளர்கள் மற்றும் 898 மின்சாதன மற்றும் மின்னணு சாதன (EEE) உற்பத்தியாளர்கள் மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் (CPCB) EPR பதிவு செய்துள்ளனர். மேலும் விவரங்கள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் (TNPCB) இணையதளத்தில் https://tnpcb.gov.in மற்றும் மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் (CPCB) இணையதளத்தில் www.cpcb.nic.in மற்றும் https://eprewastecpcb.in/ இல் கிடைக்கிறது.

2024–2025 நிதியாண்டில் தமிழ்நாட்டிலுள்ள EPR பதிவு பெற்ற நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டறிக்கையின் படி,

| வ. எண் | வகை | அளவு |
|---|---|---|
| 1 | மின் கழிவு (E–Waste) சேகரிக்கப்பட்ட/செயலாக்கப்பட்ட அளவு (தோராயமாக.) | 29224.67 டன்கள் |
| 2 | மின்னணுக் கழிவுகளிலிருந்து மீட்கப்பட்ட பொருட்களின் அளவு தோராயமாக | 22943.54 டன்கள் |

**5.4.8 மின்கல கழிவு மேலாண்மை**:

இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், 22.08.2022 அன்று சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 இன் கீழ் திருத்தப்பட்ட பேட்டரி கழிவு (மேலாண்மை) விதிகள், 2022 ஐ அறிவித்தது. மேற்கண்ட விதிகள், உற்பத்தியாளர்கள் (உற்பத்தியாளர் & இறக்குமதியாளர்), விநியோகஸ்தர்கள், நுகர்வோர் மற்றும் கழிவு பேட்டரிகளை சேகரித்தல், பிரித்தல், போக்குவரத்து மற்றும் மறுசுழற்சி செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்குப் பொருந்தும். மேற்கண்ட விதிகளில் பயன்படுத்தப்பட்ட, ஆயுட்காலம் முடிந்த பேட்டரி மற்றும்/அல்லது அதன் கூறுகள் உதிரிபாகங்கள் அல்லது பாகங்கள் அல்லது நுகர்பொருட்கள் அடங்கும், அவை ஆபத்தானவை அல்லது இல்லாதவை. நுகர்வோருக்கு முன்பே பயன்படுத்தப்படாத ஆஃப்–ஸ்பெக் பேட்டரி, காலாவதியான பேட்டரி மற்றும் பயனரால் நிராகரிக்கப்பட்ட பேட்டரி ஆகியவையும் இதில் அடங்கும்.

–oOo–

# அத்தியாயம்– VI

## சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டங்கள்

### *6.1* காற்றின் தன்மை கண்காணிப்பு

நகர்ப்புறங்களில் பெருகி வரும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் வாயுக்கழிவுகளினாலும், வாகனங்களிலிருந்து வெளியேறும் மிக அதிகமான புகையினாலும் சுற்றுப்புற காற்றின் தன்மை மாசடைகிறது. மோட்டார் வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் கார்பன் மோனாக்ஸைடு, ஹைட்ரோகார்பன்கள் மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடுகள் ஆகிய வாயுக்கழிவுகள் காற்று மாசினை ஏற்படுத்துகின்றன. கட்டுமான வேலைகள், பழுதடைந்த சாலைகள், மற்றும் புதைபடிவ எரிபொருட்களை எரித்தல் ஆகியவை தூசி (நுண்துகள்கள்) மாசுபாட்டை ஏற்படுத்துகின்றன. குடியிருப்பு மற்றும் வணிக செயல்பாடுகளும் காற்று மாசுபாட்டை அதிகரிக்கின்றன. இந்த மாசுப்பொருட்கள் மனிதர்களின் சுவாச மற்றும் இதய ரத்த நாள அமைப்புகளில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981ன் படி, தமிழ்நாடு மாநிலம் முழுவதும் காற்று மாசு கட்டுப்பாடு பகுதியாக அரசு 28.09.1983 நாளிட்ட அரசாணை எண். 4 மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

### *6.1.1* சென்னை நகரில் சுற்றுப்புற காற்றின் தரம் கண்காணித்தல்

தேசிய காற்று மண்டல கண்காணிப்பு திட்டத்தின் கீழ் (NAMP) சென்னை நகரில் கீழ்க்கண்ட எட்டு இடங்களில் சுற்றுப்புற காற்றின் தரம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. சென்னையில் காற்று மண்டல கண்காணிப்பு நிலையங்கள் உள்ள இடங்கள்.

| வ.எண். | கண்காணிப்பு நிலையம் அமைந்துள்ள இடம் | நிலவகைப்பாடு |
|---|---|---|
| 1 | அடையாறு | குடியிருப்புப் பகுதி |
| 2 | அண்ணாநகர் | குடியிருப்புப் பகுதி |
| 3 | கீழ்ப்பாக்கம் | வாகனம் புழக்கப் பகுதி |
| 4 | கத்திவாக்கம் | தொழிற்சாலைப் பகுதி |
| 5 | மணலி | தொழிற்சாலைப் பகுதி |
| 6 | நுங்கம்பாக்கம் | வாகனம் புழக்கப் பகுதி |
| 7 | திருவொற்றியூர் | தொழிற்சாலைப் பகுதி |
| 8 | தி.நகர் | வர்த்தகம் மற்றும் வாகனம் புழக்கப் பகுதி |

***இவ்விடங்களில் வாரம் இருமுறை 24 மணிநேரமும் கண்காணிப்பு நடத்தி, மாதிரிகள் எடுக்கப்பட்டு, 10 மைக்ரானுக்கும் குறைந்த அளவுள்ள, சுவாசிக்கும்போது உட்செல்லக்கூடிய மிதக்கும் நுண்துகள்கள் (PM10), 2.5 மைக்ரானுக்கும் குறைந்த அளவுள்ள, சுவாசிக்கும்போது உட்செல்லக்கூடிய மிதக்கும் நுண்துகள்கள் (PM2.5), சல்ஃபர் டை ஆக்சைடு மற்றும் நைட்ரஜன் ஆக்சைடுகள் போன்ற வாயுக்கழிவுகளின் அளவுகள் கண்டறியப்படுகிறது. ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை சேகரிக்கப்பட்ட***

*மாதிரிகளின் ஆய்வு முடிவுகளின் படி ஆண்டு சராசரி PM10 மற்றும் PM2.5 அளவுகள் நிர்ணயிக்கப்பட்ட தர அளவுகளுக்கு உட்பட்டுள்ளது. சல்பர் டை ஆக்ஸைடு மற்றும் நைட்ரஜன் டை ஆக்ஸைடு அளவுகளும் நிர்ணயிக்கப்பட்ட தர அளவுக்கு உட்பட்டுள்ளது. மேலும், இந்த காற்று மாசின் சராசரி அளவீடுகள் இணைப்பு VI –ல் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி காற்று மாசு காரணிகளின் அளவுகள் வாரிய இணையதளத்திலும் மற்றும் கிண்டியில் உள்ள தலைமையக அலுவலகத்தின் வாயில் முன் வைக்கப்பட்டுள்ள மின்னனு காட்சிப் பலகையிலும் பொதுமக்களின் கவனத்திற்காக வெளியிடப்படுகிறது.*

### *6.1.2* தமிழ்நாட்டில் பெரிய நகரங்களில் சுற்றுப்புற காற்றின் தரம் கண்காணித்தல்

தேசிய காற்று தர கண்காணிப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் முக்கிய நகரங்களில் சுற்றுப்புற காற்றின் தரத்தினை வாரியம் கண்காணித்து வருகின்றது. கண்காணிப்பு நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் பின்வருமாறு:

**தேசிய காற்றுதர கண்காணிப்புதிட்டம் (NAMP) – பிற நகரங்கள் மற்றும் முக்கிய நகரங்கள்**

| வ.எண். | கண்காணிப்பு நிலையம் அமைந்துள்ள இடம் | நில பயன்பாடு |
|---|---|---|
| | **தூத்துக்குடி** (1988) | |
| 1 | என்.டி.பி.எல் குடியிருப்பு | குடியிருப்பு பகுதி |
| 2 | சிப்காட் | தொழிற்சாலை பகுதி |
| 3 | ஏ.வி.எம். கட்டிடம் | வணிக பகுதி |
| | **கோயம்புத்தூர்**(1991) | |
| 4 | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | வணிக பகுதி |
| 5 | கவுண்டம்பாளையம் | குடியிருப்பு பகுதி |
| 6 | சிட்கோ கட்டிடம் | தொழிற்சாலை பகுதி |
| | **சேலம்** (1996) | |
| 7 | சிவா டவர் | வணிக பகுதி |
| | **மதுரை** (1996) | |
| 8 | பிச்சை பிள்ளை சாவடி | தொழிற்சாலை பகுதி |
| 9 | பிர்லா கெஸ்ட் அவுஸ் | வணிக பகுதி |
| 10 | ஓட்டல் தமிழ்நாடு | குடியிருப்பு பகுதி |
| | **திருச்சி** (2012) | |
| 11 | காந்திபார்க், தென்னூர் | குடியிருப்பு பகுதி |
| 12 | மெயின் கார்டு கேட் | போக்குவரத்துப் பகுதி |
| 13 | பிஷப் ஹீபர் கல்லூரி | உணர்திறன்பகுதி |
| 14 | பொன்மலை | குடியிருப்பு பகுதி |
| 15 | திருச்சிமாநகராட்சிஇணைப்புகட்டிடம் | போக்குவரத்துப் பகுதி |
| | **கடலூர்** (2013) | |
| 16 | ஈச்சங்காடு கிராமம் | குடியிருப்பு பகுதி |
| 17 | இம்பீரியல் ரோடு | வணிக பகுதி |
| 18 | சிப்காட் | தொழிற்சாலை பகுதி |
| | **மேட்டூர்** (2013) | |
| 19 | இராமன் நகர் | குடியிருப்பு பகுதி |

## VI. சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டங்கள்

**தேசிய காற்றுதர கண்காணிப்புதிட்டம் (NAMP) – பிற நகரங்கள் மற்றும் முக்கிய நகரங்கள்**

| வ.எண். | கண்காணிப்பு நிலையம் அமைந்துள்ள இடம் | நில பயன்பாடு |
|---|---|---|
| 20 | சிட்கோ | தொழிற்சாலை பகுதி |
| | **திருவண்ணாமலை** | |
| 21 | சு.சூ.பொ. த.நா.மா.க.வா, அலுவலகம் | வணிக பகுதி |
| 22 | நகராட்சிஆணையர், அலுவலகம் | வணிக பகுதி |
| 23 | இணைஇயக்குனர், கால்நடைபராமரிப்புதுறைஅலுவலகம் | குடியிருப்பு பகுதி |
| | **சிவகங்கை** | |
| 24 | சு.சூ.பொ. த.நா.மா.க.வா, அலுவலகம் | வணிக பகுதி |
| 25 | சிட்கோதொழிற்பேட்டை | தொழிற்சாலை பகுதி |
| 26 | முத்துமஹால்வளாகம், போஸ்சாலை | வணிக பகுதி |
| | **தேனி** | |
| 27 | ராகவன் காலனி | குடியிருப்பு பகுதி |
| 28 | SAR வளாகம், பூதிபுரம் சாலை | வணிக பகுதி |
| 29 | சிட்கோவளாகம், ஆண்டிப்பட்டி | தொழிற்சாலை பகுதி |
| | **திருவாரூர்** | |
| 30 | திரு.வி.க. அரசினர்கலைக்கல்லூரி, என்.பி.எம்சாலை | குடியிருப்பு பகுதி |
| 31 | அரசுமருத்துவக்கல்லூரி | உணர்திறன்பகுதி |
| 32 | பாரத்மெட்ரிக்மேல்நிலைப்பள்ளிஅருகில் | வணிக பகுதி |
| | **விழுப்புரம்** | |
| 33 | சு.சூ.பொ. மாஸ்டர்பிளான்வளாகம், த.நா.மா.க.வா, அலுவலகம் | வணிக பகுதி |
| 34 | விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை | தொழிற்சாலை பகுதி |
| 35 | பொறியியல் பல்கலைக்கழக கல்லூரி | குடியிருப்பு பகுதி |
| | **பெரம்பலூர்** | |
| 36 | அரசு தலைமை மருத்துவமனை | உணர்திறன்பகுதி |
| 37 | தி/ள். ஆவின் பார்லர் கட்டிடம் | வணிக பகுதி |
| 38 | மறைமலைநகர், பெரம்பலூர் | குடியிருப்பு பகுதி |
| | **தர்மபுரி** | |
| 39 | கலெக்டர் அலுவலகம் அருகில் உள்ள குடியிருப்பு | குடியிருப்பு பகுதி |
| 40 | சிட்கோ வளாகம் | தொழிற்சாலை பகுதி |
| 41 | டி.என்.ஜி. கட்டிடம், சித்தவீரப்பசெட்டி தெரு | வணிக பகுதி |
| | **நாகர்கோயில்** | |
| 42 | அண்ணா பல்கலைக்கழக வளாகம் | தொழிற்சாலை பகுதி |
| 43 | ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி | குடியிருப்பு பகுதி |
| 44 | ஆவின் பார்லர் கட்டிடம் | வணிக பகுதி |

(வ.எண்.21 முதல் 44 வரையுள்ள தேசியகாற்றுத் தரகண்காணிப்பு நிலையங்கள் 2021–ல் நிறுவப்பட்டது)

***இத்திட்டத்தின் கீழ் உள்ள அனைத்து கண்காணிப்பு நிலையங்களும், வாரம் இருமுறை 24 மணி நேரமும் இயங்குகின்றன. இந்த நிலையங்களின் மூலம் சுவாசிக்கும் போது உட்செல்லக்கூடிய மிதக்கும் தூசுகள் (10 மைக்ரான் அளவும் மற்றும் 2.5 மைக்ரான் அளவுக்கு குறைந்தவை) மற்றும் சல்ஃபர் டை ஆக்சைடு, நைட்ரஜன் டை***

*ஆக்சைடு போன்ற வாயு காரணிகள் கண்காணிக்கப்படுகின்றன. 2023–2024 ஆண்டு ஆய்வு முடிவுகளின் படி சல்ஃபர் டை ஆக்சைடு மற்றும் நைட்ரஜன் ஆக்சைடு அளவுகள் நிர்ணயிக்கப்பட்ட தர அளவுகளுக்கு உட்பட்டுள்ளது. மேலும், தூத்துக்குடி மற்றும் மதுரையை தவிர்த்து PM10 அளவுகள் நிர்ணயிக்கப்பட்ட தர அளவுகளுக்கு உட்பட்டுள்ளது (இணைப்பு VI).*

*தூத்துக்குடியில், அதிகமான வாகன எண்ணிக்கை, வாகனப் போக்குவரத்தால் ஏற்படும் மேற்பரப்பு தூசு, அதிகமான வணிக மற்றும் தொழிற்சாலை நடவடிக்கைகளே சுவாசிக்கும் மிதக்கும் துகள்கள் அதிகரித்திருப்பதற்கு முக்கிய காரணமாகும். வரலாற்று சுற்றுலா தளமாக இருப்பதனால் மதுரையிலும் மாசு அதிகரித்துள்ளது.*

*தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் ஆகிய இரு வாரிய வலைதளங்களிலும் காற்று தர விவரங்கள் மற்றும் காற்று தர குறியீடு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.*

### *6.1.3* நடமாடும் தொடர் காற்றுத்தர கண்காணிப்பு நிலையம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடுவாரியம், சுற்றுச்சூழல் காற்று தரத்தை தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம் ஒரு நடமாடும் தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையத்தினை 2016ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த நடமாடும் நிலையத்தின் மூலம் காற்றில் கலந்துள்ள சல்ஃபர்டை ஆக்ஸைடு, நைட்ரஜன்டை ஆக்ஸைடு, அம்மோனியா, ஓசோன், கார்பன்மோனாக்ஸைடு, பென்சீன், டொலுவின், ஈத்தைல் பென்சீன், சைலீன், காற்றில் 10 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள் மற்றும் 2.5 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள் ஆகியவற்றை அளவீடு செய்யலாம். மேலும், இந்நிலையத்தில் காற்றின் திசை, காற்றின் வேகம், சுற்றுப்புற வெப்பநிலை, ஈரப்பதம், சூரிய கதிர்வீச்சு, மழை அளவு, காற்றின் அழுத்தம் போன்ற வானிலை சம்பந்தமான தகவல்களை அறியும் கருவிகள் உள்ளன. இந்த நடமாடும் நிலையத்தின் மூலம் சென்னை மாநகரின் அதிக மாசு பகுதிகள் மற்றும் இதர பகுதிகளின் காற்றின் தரம் அளவீடு செய்யப்படுகிறது. சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில், 2024–2025 ஆம் ஆண்டில், மொத்தம் 67 ஆய்வுகள் இந்த நடமாடும் கண்காணிப்பு நிலையம் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழிற்சாலை பகுதிகளில் மேற்கொள்ளப்படும் வழக்கமான ஆய்வுகள், பொதுமக்கள் புகார் மற்றும் வழக்குகள் தொடர்பான ஆய்வுகள் என அனைத்து வகையான ஆய்வுகளும் இந்த நடமாடும்

கண்காணிப்பு நிலையம் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தகவல் இணைப்பு VIIல் உள்ளது.

### *6.1.4* பண்டிகைக் காலங்களில் சுற்றுச்சூழல் மாசு கண்காணிப்பு

*தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சுற்றுச்சூழல் காற்று தரத்தை தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம் ஒரு நடமாடும் தொடர் சுற்றுச்சூழல் காற்று தர கண்காணிப்பு நிலையத்தினை 2016 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த நடமாடும் நிலையத்தின் மூலம் காற்றில் கலந்துள்ள சல்ஃபர் டை ஆக்ஸைடு, நைட்ரஜன் டை ஆக்ஸைடு, அம்மோனியா, ஓசோன், கார்பன் மோனாக்ஸைடு, பென்சீன், டொலுவின், ஈத்தைல் பென்சீன், சைலீன், காற்றில் 10 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள் மற்றும் 2.5 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள் ஆகியவற்றை அளவீடு செய்யலாம். மேலும், இந்நிலையத்தில் காற்றின் திசை, காற்றின் வேகம், சுற்றுப்புற வெப்பநிலை, ஈரப்பதம், சூரிய கதிர்வீச்சு, மழை அளவு, காற்றின் அழுத்தம் போன்ற வானிலை சம்பந்தமான தகவல்களை அறியும் கருவிகள் உள்ளன.*

*இந்த நடமாடும் நிலையத்தின் மூலம் சென்னை மாநகரின் அதிக மாசு பகுதிகள் மற்றும் இதர பகுதிகளின் காற்றின் தரம் அளவீடு செய்யப்படுகிறது. சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில், 2024–2025 ஆம் ஆண்டில், மொத்தம் 67 ஆய்வுகள் இந்த நடமாடும் கண்காணிப்பு நிலையம் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழிற்சாலை பகுதிகளில் மேற்கொள்ளப்படும் வழக்கமான ஆய்வுகள், பொதுமக்கள் புகார் மற்றும் வழக்குகள் தொடர்பான ஆய்வுகள் என அனைத்து வகையான ஆய்வுகளும் இந்த நடமாடும் கண்காணிப்பு நிலையம் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தகவல் இணைப்பு VII–ல் உள்ளது.*

### *6.1.5* ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம்

இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம் *14.08.2024* அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இம்மையம், கிண்டியிலுள்ள வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் செயல்படுகிறது. இந்தியாவிலேயே முதன்முறையாக செயல்படும் இந்நிலையமானது, சிமெண்ட், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், பெட்ரோ கெமிக்கல்ஸ், அனல் மின் நிலையங்கள். உரங்கள். இரும்பு மற்றும் எஃகு உள்ளிட்ட தொழிற்சாலைகள் வெளியிடும் மாசினை இணையவழியில் கண்காணிப்பதோடு அபாயகரமான கழிவுகள், மருத்துவக் கழிவுகள்,

## VI. சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டங்கள்

மின் கழிவுகளின் கண்காணிப்பு மற்றும் இசைவாணை மேலாண்மை போன்ற பல்வேறு தொகுதிகளை ஒருங்கிணைக்கும் காட்சி சித்தரிப்பு மையமாக இது நிறுவப்பட்டுள்ளது. காற்றின் தர அளவுருக்கள் நிர்ணயிக்கப்பட்ட தரத்தை மீறு பட்சத்தில், தானாக உருவாக்கப்படும் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல்கள் உடனடியாக தொழில்துறையினருக்கும். சம்பந்தப்பட்ட மண்டல இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களுக்கும் அனுப்பப்பட்டு, குறைபாடுகள் இருந்தால் அவற்றை சரிசெய்து உடனடியாக நடவடிக்கை எடுத்து தொழிற்சாலைகளின் சுய கண்காணிப்பு மற்றும் திருத்தம் ஆகியவற்றை உறுதி செய்கிறது.

இன்றைய நிலவரப்படி, அடுக்கு உமிழ்வு கண்காணிப்பு மற்றும் சுற்றுப்புற காற்றின் தரத்தை கண்காணிப்பதற்காக *820* தொழில் நிறுவனங்கள் இந்த மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

மேலும், நீர் தர கண்காணிப்பு தொகுதியையும் வாரியம் இம்மையத்தில் இணைத்துள்ளது. தோல் பதனிடும் தொழிற்சாலைகள், எரிசாராய ஆலைகள், சர்க்கரை ஆலைகள், மருந்து மற்றும் பூச்சிக்கொல்லி உற்பத்தி நிறுவனங்கள், ஜவுளி தொழிற்சாலைகள் மற்றும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் போன்ற முக்கிய நீர் மாசுபாடு ஏற்படுத்தக்கூடிய நிறுவனங்கள் இந்த மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இணைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் தரம். நிகழ்நேர அடிப்படையில் கண்காணிக்கப்படுகிறது. இதுவரை *390* தொழிற்துறை நிறுவனங்கள் இந்த மையத்துடன் இணைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

### *6.1.6* காற்று தரம் எட்டாத நகரங்கள்

**காற்றின் தரத்தை எட்டாத நகரங்கள்:**மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (CPCB) தேசிய தரநிலையை எட்டாத 130 நகரங்களைக் கண்டறிந்துள்ளது, இதில் பத்து லட்சத்திற்கு அதிகமான மக்கள்தொகை (Million Plus Cities) கொண்ட 42 நகரங்களும் அடங்கும். எந்த ஒரு நகரம் PM10 அல்லது NO2–க்கான தேசிய சுற்றுப்புறக் காற்றுத் தரத் தரநிலைகளை (NAAQS) 5 ஆண்டு காலமாக தொடர்ந்து காற்றுத் தரத் தரநிலையை விட அதிகமாக இருந்தால், அந்த நகரங்கள் **காற்றின் தரத்தை எட்டாத** நகரங்களாக அறிவிக்கப்படுகின்றன. ஜனவரி 2019–ல், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEF&CC), PM10 மாசுபாட்டை 2017–ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2026–ஆம் ஆண்டிற்குள் 40% குறைக்கும் நோக்கத்துடன், தேசிய தூய்மையான காற்றுத்

திட்டத்தை (NCAP) அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, தூத்துக்குடி மற்றும் திருச்சி ஆகிய நான்கு நகரங்கள் **காற்றின் தரத்தை எட்டாத நகரங்களாக** அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த நகரங்களில் PM10–க்கான சுற்றுப்புறக் காற்றுத் தர அளவுரு, ஆண்டு சராசரியாக 60 $\mu g/m^3$ என்ற அளவைத் தாண்டியுள்ளது. சென்னை, மதுரை, திருச்சி மற்றும் தூத்துக்குடி உட்பட ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட/தேசிய தரநிலையை எட்டாத நகரங்களுக்காக CPCB–யால் அங்கீகரிக்கப்பட்ட செயல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்திய அரசாங்கம், பதினைந்தாவது நிதிக் குழுவின் சுற்றுப்புறக் காற்றுத் தர மானியத்தின் (XVFC–AAQ) கீழ் சென்னை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய பத்து லட்சத்திற்கு அதிகமான மக்கள்தொகைகொண்ட நகரங்களுக்கு மொத்தம் ரூ. 635.94 கோடியும், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் மாசுக்கட்டுப்பாட்டுத் திட்டம் – தேசிய தூய்மையான காற்றுத் திட்டத்தின் (CoP–NCAP) கீழ் தூத்துக்குடி நகரத்திற்கு 2024–25 நிதியாண்டு வரை ரூ. 19.22 கோடியும் விடுவித்துள்ளது. தேசிய தூய்மையான காற்றுத் திட்டத்தின் கீழ், பல்வேறு துறைசார் அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து, வாகனம், சாலைத் தூசி, கட்டுமானம் மற்றும் இடிப்புப் பணிகள், உயிரிவளம் மற்றும் குப்பைகள், தொழிற்சாலைகள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு போன்ற கருப்பொருள் சார்ந்த பகுதிகளில் மாசுபாட்டைக் குறைக்கும் நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## *6.2* நீர் தரக்கண்காணிப்பு திட்டம்

### *6.2.1* தேசிய நீர் தர கண்காணிப்பு திட்டம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் இணைந்து உலகளாவிய சுற்றுச்சூழல் கண்காணிப்பு அமைப்பு (GEMS), இந்திய தேசிய நீர்வளங்களின் கண்காணிப்பு (MINARS), கடலோர நீர்நிலைகள்மற்றும் தேசிய நதி பாதுகாப்பு திட்டம் (NRCP) போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் மாநில நீர்நிலைகளின் தரத்தை கண்காணிக்கிறது. சமீபத்திய ஆண்டுகளில், இந்தத் திட்டங்கள் அனைத்தும்ஒற்றை குடையாக ஒருங்கிணைத்து முறைப்படுத்தப்பட்டு, தேசிய நீர் தரக் கண்காணிப்புத் திட்டம் (NWMP) என மறுபெயரிடப்பட்டுள்ளன. இந்த திட்டத்தின் கீழ், முக்கிய ஆறுகள் மற்றும் ஏரிகளின் நீரின் தரம் கண்காணிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம்70:30 என்ற விகிதத்தில் நிதியளிக்கின்றன.

## VI. சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டங்கள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் (TNPCB) தேசிய நீர்த்தரக் கண்காணிப்பு திட்டத்தின் கீழ் 158 இடங்களை உள்ளடக்கிய ஒரு விரிவான கண்காணிப்பு வலையமைப்பைப் மேற்பார்வையிட்டு பராமரிக்கிறது. அவ்விடங்கள் பின்வருமாறு,

- ஆறுகள்:காவிரி, வெண்ணாறு, பவானி, அமராவதி, அடையாறு, கூவம், சரபங்கா, வசிஸ்டா, திருமணிமுத்தாறு, தாமிரபரணி, பாலாறு மற்றும் வைகை ஆகிய 12 ஆறுகள் (71 இடங்கள்)கண்காணிக்கப்படுகின்றன.
- நிலத்தடி நீர்:நிலத்தடி நீரின் தரத்தை மதிப்பிடுவதற்கு 22 கண்காணிப்பு நிலையங்கள் (இடங்கள்) நிறுவப்பட்டுள்ளன.
- ஏரிகள்: உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வீராணம், போரூர், பூண்டி, செங்குன்றம் ஆகிய எட்டு ஏரிகள் கண்காணிக்கப்படுகின்றன.
- கடலோர நீர்நிலைகள்: கடலோர நீரின் தரத்தை மதிப்பிடுவதற்கு 34 கண்காணிப்பு நிலையங்கள்நிறுவப்பட்டுள்ளன.
- கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (STPs): கழிவுநீர் தரத்தை மதிப்பிடுவதற்காக 16 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கண்காணிக்கப்படுகின்றன.
- வடிகால்கள் மற்றும் கால்வாய்கள்: 7 இடங்களில், வடிகால்கள் மற்றும் கால்வாய்களில் உள்ள நீரின் தரம் கண்காணிக்கப்படுகின்றன.

மாதம் தோறும் 158 கண்காணிப்பு நிலையங்களில் ஒவ்வொன்றிலும் நீர் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன. விரிவான கண்காணிப்பு தரவுகள் இணைப்பு IX முதல் XIII வரை கொடுக்கப்பட்டுள்ளது.

பொதுவாக, ஆறுகள் மற்றும் ஏரிகளின் நீரின் தரம் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பரிந்துரைக்கப்பட்ட அளவுகோளின்படி 'ஏ' 'பி' 'சி', 'டி' மற்றும்'இ'எனப் பிரிக்கப்பட்டு அதன் பயன்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

வகுப்பு A – குடி நீர் ஆதாரம் முறையான சுத்திகரிப்பின்றி நோய்கிருமி நீக்கப்பட்டபின்;

வகுப்பு B – வெளிபுறக் குளியல் (முறைபடுத்தப்பட்ட);

வகுப்பு C – குடி நீர் ஆதாரம் முறையான சுத்திகரிப்பு மற்றும் நோய் கிருமி நீக்கப்பட்டபின்;

வகுப்பு D – வன மற்றும் மீன்வள அபிவிருத்திக்கு உகந்தது;

வகுப்பு E – நீர்பாசனத்திற்கும், தொழிற்சாலை வெப்ப குளிர்விப்பிற்கும், கட்டுப்படுத்தப்பட்ட கழிவுகளை அகற்றுவதற்குமான நீர்.

இந்த தரவுகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்திலும் மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்திலும் பதிவேற்றப்படுகிறது.

## VI. சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டங்கள்

### 6.2.1.1 அடையாறு மற்றும் கூவம் ஆறுகள் :

சென்னையின் முக்கிய கிழக்கு நோக்கி பாயும் ஆறுகளான அடையாறு மற்றும் கூவம் ஆறுகள், 12 இடங்களில் மாதந்தோறும் கண்காணிக்கப்படுகின்றன. சென்னையில் உள்ள மேம்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தில் (AEL) இவற்றின் இயற்பியல்–வேதியியல் மற்றும் உயிரியல் காரணிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன; இதன் விவரங்கள் இணைப்பு IX–இல் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து நிலையங்களிலும் பகுப்பாய்வு செய்யப்பட்ட தரவுகள் நீரின்தரம் 'E' பிரிவின் கீழ் வருகிறது. இது குடிப்பதற்கோ, குளிப்பதற்கோ அல்லது நீர்வாழ் உயிரினங்கள் வாழ்வதற்கோ தகுதியற்ற, அதிகளவு மாசுபட்ட நீர்நிலைகளைக் குறிக்கிறது.

### *6.2.1.2* காவிரி ஆறு மற்றும் அதன் உபநதிகள்

தமிழ்நாட்டின் மிக முக்கிய ஆறுகளில் ஒன்றான காவிரி, மாநிலத்தின் மூன்றில் ஒரு பகுதி நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி அளிக்கிறது. காவிரி நதியில் 27 நீர்தர கண்காணிப்பு நிலையங்கள்உள்ளன. மாதாந்திர நீர் தர மாதிரிகள் பல்வேறு வாரிய ஆய்வகங்களில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. காவிரி ஆறு மற்றும் அதன் துணை நதிகளில்உள்ள 27 நீர்தர கண்காணிப்பு நிலையங்களின் நீரின் தரவு குறித்த விவரங்கள் முறையே இணைப்பு X இல் கொடுக்கப்பட்டுள்ளன. காவிரி நதி நீரின் தரம் பொதுவாக, அனைத்து நிலையங்களிலும் வகுப்பு A முதல் C வரையிலான பிரிவின் கீழ் வருகிறது, இது ஆண்டு முழுவதும் முறையான சுத்திகரிப்பு மற்றும் நோய் கிருமி நீக்கப்பட்டபின் குடிக்க ஏற்றது. ஆற்றுப்படுகைகளில் குறைந்த நீரோட்டம் காரணமாக கொள்ளிடம், பிச்சாவரம் மற்றும் மயிலாடுதுறை போன்ற சில இடங்களில் மாசு அளவு உயர்ந்து நீரின்தரம் 'E' பிரிவில் உள்ளது. இவ்வாண்டின் ஆய்வு முடிவுகள் பொதுவாக சுகாதாரமற்ற நடவடிக்கைகள் மற்றும் முழுவதும் சுத்திகரிக்கப்படாத அல்லது பகுதி சுத்திகரிக்கப்பட்ட நகரக்கழிவுகள் ஆற்றில் நேரிடையாகவோ மறைமுகமாகவோ கலப்பதினால் காவிரி ஆறு மற்றும் அதன் உபநதிகள் மனிதக் கழிவினால் மாசடைந்துள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது.

### *6.2.1.3* தாமிரபரணி ஆறு

தாமிரபரணி நதியின் நீரின் தரம் 13 நிலையங்களில் மாதந்தோறும் கண்காணிக்கப்படுகிறது. திருநெல்வேலியில் உள்ள மேம்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தில் (AEL) இயற்பியல்–வேதியியல் அளவுருக்கள் மற்றும் உயிரியல்

அளவுருக்கள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன, விவரங்கள்இணைப்பு XI இல் வழங்கப்பட்டுள்ளன. தாமிரபரணி ஆற்றின் கண்காணிக்கப்பட்ட பெரும்பாலான நிலையங்களில் பகுப்பாய்வு செய்யப்பட்ட தரவுகள் நீரின் தரம் முக்கியமாக 'A' மற்றும் 'B' பிரிவுகளின் கீழ் வருகிறது. இது ஆற்றில் மாசுபாட்டின் அளவு குறைவாக இருப்பதையும், ஆண்டு முழுவதும் வழக்கமான சுத்திகரிப்பு மற்றும் கிருமி நீக்கம் செய்த பிறகு இந்த நீர் குடிப்பதற்கு ஏற்றது என்பதையும் குறிக்கிறது.

### *6.2.1.4* அமராவதி மற்றும் பாலாறு

அமராவதி மற்றும் பாலாறு ஆறுகளின் நீர்தரம் மாதந்தோறும் கண்காணிக்கப்படுகிறது. அமராவதி ஆற்றில் மூன்று இடங்களில் மற்றும் பாலாறு ஆற்றில் (வாணியம்பாடி) ஒரு கண்காணிப்பு நிலையத்தில் நீர்மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன. நீர்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், திண்டுக்கல் மற்றும் மாவட்ட மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், வேலூரிலும் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. அமராவதி ஆற்றின் நீரின்தரம் அனைத்து மூன்று நிலையங்களிலும் பெரும்பாலும் A மற்றும் B வகைகளில் உள்ளது, இது குறைந்த மாசுபாட்டை முறையான சுத்திகரிப்பு மற்றும் நோய் கிருமி நீக்கப்பட்ட பின்னர் குடிநீராகப் பயன்படுவதற்கு பொருந்துமென காட்டுகிறது. பாலாறு ஆற்றின் நீர்தரத்தை மதிப்பிட முடியவில்லை, ஏனெனில் ஆற்றில் நீரோட்டம் இல்லை. விவரங்கள் இணைப்பு XII இல் கொடுக்கப்பட்டுள்ளன.

### *6.2.1.5* பவானி ஆறு

பவானி ஆற்றின் நீர் தரம் மாதம் தோறும் 8 நிலையங்களில் கண்காணிக்கப்படுகிறது. இயற்பியல்–வேதியியல் அளவுருக்கள் மற்றும் உயிரியல் அளவுருக்கள் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல்ஆய்வகம் (AEL), கோயம்பத்தூர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம் (DEL) பெருந்துறையில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. பத்திரகாளியம்மன் கோயில், சிறுமுகை, பவானி, பவானி சாகர், சத்யமங்கலம், (b5) போன்ற நிலையங்களில் நீர் தரம் பெரும்பாலும் வகுப்பு 'B' எனும் தரவரிசையில் உள்ளது. எனினும், வழக்கத்தை விட நீர்வரத்து குறைவாக இருந்த போதிலும், மே மற்றும் ஜூன் மாதங்களில் ஆர்.என் புதூர் மற்றும் காலிங்கராயன் கால்வாய் (b5), காலிங்கராயன் கால்வாய் (b10) ஆகிய கண்காணிப்பு நிலையங்களிலும் நீரின் தரம் 'B' பிரிவின் கீழேயே வகைப்படுத்தப்பட்டுள்ளது. நீர் தரத்துக்கான முழுமையான தரவுகள் இணைப்பு XIII இல் கொடுக்கப்பட்டுள்ளன.

### *6.2.1.6* வெண்ணாறு, வைகை, திருமணிமுத்தாறு, சரபங்கா மற்றும் வசிஷ்டா

வெண்ணாறு, வைகை, திருமணிமுத்தாறு, சரபங்கா மற்றும் வசிஷ்டா ஆற்றுகளின் நீர் தரம் மாதம் தோறும் கண்காணிக்கப்படுகிறது. வைகை ஆற்றின் நீர் தரம், மதுரையில் மேல்சார்ந்த மற்றும் கீழ்சார்ந்த பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தில் (AEL), மதுரையில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. தஞ்சாவூரில் உள்ள வென்னார் ஆற்றின் மேலோட்டம் மற்றும் கீழோட்டம் நீர் மாதிரிகள் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம் (AEL), திருச்சியில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. ஆற்றின் நீர் மாதிரிகள் உத்தமசோழப்புரத்திலுள்ள திருமணிமுத்தாறு, துளுக்கன்னூரில் உள்ள வசிஷ்டா ஆறு மற்றும் எடப்பாடியில்உள்ள சரபங்கா ஆற்றின் நீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு, இயற்பியல்–வேதியியல் அளவுருக்கள் மற்றும் உயிரியல் அளவுருக்கள் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம் (AEL), சேலத்தில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

மேலே குறிப்பிடப்பட்ட இடங்களில் பகுப்பாய்வு செய்யப்பட்ட நீர் தரம் தகவல்கள்இணைப்பு XIV இல் வழங்கப்பட்டுள்ளன. நீர் தரம் தரவுகளின்படி, வென்னார் மற்றும் வைகை ஆற்றுகளின் நீர் தரம் A முதல் C வரை மாறுபடும், இது ஆற்று நீரோட்டத்தில் மாறுபாடு மற்றும் மனித செயல்பாடுகளால் ஏற்படும் மாசுபாட்டின் அளவையும் குறிக்கின்றது. அதே நேரத்தில், திருமணிமுத்தாறு, வசிஷ்டாமற்றும் சரபங்கா ஆற்றுகளில் நீர் தரம் தொடர்ந்து வகுப்பு E இல் உள்ளது, இது நேரடியாக அல்லது மறைமுகமாக சுத்திகரிக்கப்படாத வீட்டு குப்பைகள் மற்றும் கழிவுநீரை ஆற்றுகளுக்கு செல்ல அனுப்பப்படுவதை சுட்டிக்காட்டுகிறது.

### *6.2.1.7* ஏரிகள்

தேசிய நீர்த்தரக் கண்காணிப்புத் திட்டத்தின் கீழ், ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, வீராணம், போரூர், பூண்டி, பழவேற்காடு, செங்குன்றம் ஏரிகளின் நீர்தரம் மாதந்தோறும் கண்காணிக்கப்படுகிறது. மேற்கண்ட ஏரிகளின் நீர்தரம் தொடர்பான தரவுகள் இணைப்பு XVஇல் கொடுக்கப்பட்டுள்ளது. ஏரி நீர்தரம் தொடர்பான தரவுகள், அனைத்து எட்டு ஏரிகளின் நீர்தரம் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பரிந்துரைக்கப்பட்ட அளவுகோளின் படிவ குப்பு A மற்றும் C இடையேயான தர வரிசையில் உள்ளன. இது குறைந்த மாசுபாட்டை சுட்டுகிறது, முறையான சுத்திகரிப்பு மற்றும் நோய்கிருமி நீக்கப்பட்ட பின்னர் குடிநீராகப் பயன்படுவதற்கு பொருந்துமென காட்டுகிறது.

# VI. சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டங்கள்

## *6.2.2* சென்னை மாநகர நீர்வழி கண்காணிப்பு திட்டம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னையில் உள்ள அடையாறு, பக்கிங்காம் கால்வாய், கூவம் மற்றும் ஓட்டேரி கால்வாய் ஆகியவற்றின் நீரின் தன்மையை ஏப்ரல் 2003 லிருந்து மாதந்தோரும் நீர் மாதிரி எடுத்து பகுப்பாய்வு செய்து வருகின்றது. நீர் மாதிரிகள் மேற்படி நீர் நிலைகளிலும், அன்றாட கழிவுநீர் / தொழிற்சாலைக் கழிவுநீர் மேற்படி நீர் நிலைகளில் கலக்கும் இடங்களிலும் எடுக்கப்படுகின்றன. மொத்தம் 17 இடங்களில் மாதிரிகள் எடுக்கப்படுகின்றன. ஆய்வறிக்கையின் விபரங்கள் இணைப்பு–XIV A, XIVB, XIVC மற்றும் XIVDல் கொடுக்கப்பட்டுள்ளன. மாதிரி ஆய்வு முடிவுகளின்படி, மேற்படி நீர்நிலைகளில் பி.ஓ.டி, சி.ஓ.டி மொத்தம் கரைந்துள்ள திடப்பொருட்கள் மற்றும் குளோரைடு ஆகிய காரணிகள் நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக காணப்படுகிறது. திடக்கழிவுகளை கொட்டுதல், நீர் நிலைகளின் கரையோரத்திலிருக்கும் குடியிருப்புகளிலிருந்து வெளிவரும் வடிகால் கழிவுநீர் மற்றும் வடிகால் கழிவுநீர் ஓடைகள் அமைக்ககப்படாத பகுதிகள் ஆகியனஇந்நீர்நிலைகள் மாசடைய முக்கிய காரணமாக விளங்குகிறது.

| நீர்நிலைகள்மற்றும்அவற்றின்மாதிரிஇடங்களின்பட்டியல் | | |
|---|---|---|
| **வ.எண்.** | **நீர் நிலைகளின் பெயர்** | **நீர் மாதிரி சேகரிக்கும் இடங்கள்** |
| 1. | அடையாறு | • ஆலந்தூர் அப்கரஹம் பாலம்<br>• திரு.வி.கபாலம்<br>• நெசப்பாக்கம் 23 MLD STP<br>• நெசப்பாக்கம் 40 MLD STP<br>• நெசப்பாக்கம் 54 MLD STP |
| 2. | கூவம் | • திருமங்கலம்<br>• சித்ராடாக்கிஸ்பாலம்<br>• நேப்பியர்பாலம்<br>• கோயம்போடு 34 MLD STP<br>• கோயம்போடு 60 MLD STP<br>• கோயம்போடு 120MLDSTP |
| 3. | பக்கிங்காம் கால்வாய் | • வாலாஜாபாலம்<br>• கொடுங்கையூர் 40 MLD STP<br>• கொடுங்கையூர் 80 MLD STP<br>• கொடுங்கையூர் 1100 MLD STP |
| 4. | ஓட்டேரி நல்லா | • ஆஸ்பிரின் தோட்டம் பாலம்<br>• வியாசர்பாடி பாலம். |

மேலே உள்ள நிலையங்களின் பகுப்பாய்வு அறிக்கை இணைப்பு–XVI – A, XVI – B, XVI – C மற்றும் XVI – D இல் கொடுக்கப்பட்டுள்ளது. அடையாறு, கூவம், பக்கிங்காம் கால்வாய் மற்றும் ஓட்டேரி நல்லா நீரின் தரம் ஆகியவை பரிந்துரைக்கப்பட்ட மேற்பரப்பு நீர் தர தரநிலைகள் IS:2296 இன் எந்த ஒரு வகுப்பையும் உறுதிப்படுத்தவில்லை.

சென்னை நகர நீர்வழிகளை புனரமைக்கும் பொறுப்பு, சென்னை நதி மறுசீரமைப்பு அறக்கட்டளைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. பிற துறைகளுடன் இணைந்து திட்டங்களை வகுத்து, சென்னை நீர்வழிகளை புனரமைக்கும் பணிகளை அந்த அறக்கட்டளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில், ஒருங்கிணைந்த கூவம் ஆறு புனரமைப்பு திட்டம் மற்றும் அடையாறு புனரமைப்பு திட்டம் தயாரிக்கப்பட்டு சம்மந்தப்பட்டவர்களின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### *6.2.3* கடற்கரையோர நீர் தர கண்காணிப்பு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாநிலத்தின் 13 கடலோரமாவட்டங்களில் 34 இடங்களில் கடற்கரையோரங்களின் கடல்நீரின் தரத்தை மதிப்பிடுவதற்காக மாதாந்திர மாதிரிகள் சேகரித்து கண்காணித்து வருகிறது. கடல்நீரின் தரமானது SW–I இலிருந்து SW–IV வரை வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| SW–I | உப்பளங்கள், ஷெல் மீன்பிடித்தல், கடல்வளர்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலம் |
| SW–II | குளித்தல், கடல்நீர் விளையாட்டு, மீன்பிடித் தொழில் |
| SW–III | தொழிற்சாலைகளின் குளிரூட்டி, பொழுதுபோக்கு இடங்கள் |
| SW–IV | துறைமுகம் |
| SW–V | கடற்பயணம் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட கழிவு அகற்றல் |

கடலோர நீரின் பகுப்பாய்வு அறிக்கை இணைப்பு–XVII ல் கொடுக்கப்பட்டுள்ளது.

எண்ணூர் சிற்றோடை, ஆலம்பாறைக்குப்பம், தாழங்காடு, கோட்டக்குப்பம், தரங்கம்பாடி கடற்கரை, வேளாங்கண்ணி மற்றும் கொள்ளிடம் ஆகிய இடங்கள் SW–II பிரிவின் கீழ் வருகின்றன. காயல் கடலோரக் கோட்டிற்கு அருகிலுள்ள உப்பங்கழி, கீழத்தோட்டம், அதிராமப்பட்டினம், மல்லிப்பட்டணம், கோட்டைப்பட்டினம், ராமேஸ்வரம், ஏர்வாடி, திருச்செந்தூர், புன்னைக்காயல், வேம்பார், உவரி, கன்னியாகுமரி, கீழமணக்குடி, தேங்காய்ப்பட்டினம், சாந்தோம் கடற்கரை, ஈஞ்சம்பாக்கம், மாமல்லபுரம், கல்பாக்கம், கடலூர், பிச்சாவரம் மற்றும் கூடங்குளம் ஆகிய இடங்கள் SW–I பிரிவின் கீழ் வருகின்றன. மேலும் திருவொற்றியூர், சென்னை துறைமுகம், நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் கொளச்சல் ஆகியவை SW–III மற்றும் SW–IV பிரிவின் கீழ் வருகின்றன.

### *6.2.4* மாசடைந்த ஆற்று பகுதிகள்

தேசிய நீர் தர கண்காணிப்பு திட்டத்திலிருந்து பெறப்பட்ட ஆற்று நீரின் தரம் குறித்த தரவுகளின் அடிப்படையில், மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் (CPCB), 2022–ம்

## VI. சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டங்கள்

ஆண்டில் பத்து மாசுபட்ட நதி நீட்சிகளை (PRS) தமிழ்நாட்டில் அடையாளம் கண்டுள்ளது. ஆற்று நீரின் உயிரி–வேதியியல் ஆக்ஸிஜன் தேவை (BOD), ஆறுகளில் உள்ள மாசுபாட்டை கண்டறியப் பயன்படுகிறது. மாசுபட்ட நதி நீட்சிகள், அவற்றின் BOD மதிப்புகளின் அடிப்படையில் ஐந்து வகைகளாக முன்னுரிமைப்படுத்தப்படுகின்றன (முன்னுரிமை I : BOD > 30mg/L, முன்னுரிமை II: BOD 20 முதல் 30mg/L, முன்னுரிமை III: BOD 10 முதல் 20 mg/L, முன்னுரிமை IV: BOD 6 முதல் 10 mg/L, முன்னுரிமை V: 3 முதல் 6 mg/L). தமிழ்நாட்டில் உள்ள PRS விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | நதியின் பெயர் | மாசுபட்ட நதி நீட்சி | நீளம் ((km) | முன்னுரிமை |
|---|---|---|---|---|
| 1 | திருமணிமுத்தாறு | சேலம் முதல் பாப்பாரப்பட்டி வரை | 15 | I |
| 2 | வசிஷ்டா | மணிவிழுந்தான் முதல் தியாகனூர் வரை | 10 | I |
| 3 | அடையார் | தாம்பரம் முதல் நந்தனம் வரை | 30.1 | I |
| 4 | கூவம் | ஆவடி முதல் சத்யா நகர் வரை | 31.7 | I |
| 5 | சரபங்கா | தாத்தையம்பட்டி முதல் டி.கோனகபாடி வரை | 15 | II |
| 6 | காவிரி | மேட்டூர் முதல் மயிலாடுதுறை வரை | 200 | III |
| 7 | தாமிரபரணி | பாப்பான்குளம் முதல் ஆறுமுகனேரி வரை | 80 | IV |
| 8 | பவானி | சிறுமுகை முதல் காலிங்கராயன் வரை | 60 | V |
| 9 | அமராவதி | மடத்துக்குளம் முதல் கரூர் வரை | 108 | V |
| 10 | பாலாறு | கொடையாஞ்சி முதல் மாரப்பட்டு வரை | 16.30 | V |

மாசுபட்ட ஆற்று நீரின் தரம் குறித்த தரவுகள் தெரியப்படுத்துவது யாதெனின் சுத்திகரிக்கப்படாத வீட்டுக் கழிவுநீர்/சள்ளைகள் ஆறுகளில் வெளியேற்றப்படுவதாலும், மக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் திடக்கழிவுகளை ஆற்றுப் படுகை மற்றும் ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கொட்டுவதாலும் ஆறுகள் மாசடைகின்றன. 2018 ஆம் ஆண்டில் மாசுபட்ட நதிகள் குறித்த CPCB வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில். 'தி இந்து' ஆங்கில செய்தித்தாளில் திரு. ஜேக்கப் கோஷி எழுதிய "அதிக நதிப்பகுதிகள் இப்போது மிகவும் மாசுபட்டுள்ளன: CPCB" என்ற செய்திக் கட்டுரை வெளியானது. மாண்புமிகு தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (NGT), புது தில்லி, முதன்மை அமர்வு, மேற்கண்ட செய்தியின் அடிப்படையில் தானாக முன்வந்து வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்து, 20.09.2018 & 19.12.2018 தேதியிட்ட அசல் விண்ணப்ப எண். 673/2018ல் வழங்கப்பட்ட உத்தரவுகளின் மூலம் பின்வரும் வழிமுறைகளை வெளியிட்டது.

"அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களும் மாசுபட்ட ஆறுகளை குறைந்தபட்சம் குளிக்கும் நோக்கத்திற்காகவாவது பொருத்தமாக்குவதற்கான செயல் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும்."

### VI. சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டங்கள்

திருமணிமுத்தாறு, வசிஷ்டா, சரபங்கா, காவேரி, பவானி, அமராவதி, தாமிரபரணி மற்றும் பாலாறு ஆகிய எட்டு ஆறுகளை மீட்டுருவாக்கம் செய்ய காலக்கெடுவுடன் கூடிய செயல் திட்டங்களைத் த.நா.ம.க.வ அது தொடர்புடைய அரசுத் துறைகளின் ஒத்துழைப்போடு தயாரித்து அதற்கு ஒப்புதலும் பெறப்பட்டு, தற்போது செயலாக்கத்தில் உள்ளது. அடையாறு மற்றும் கூவம் ஆறுகளின் மாசுபட்ட பகுதிகளை மீட்டுருவாக்கம் செய்யும் செயல்திட்டங்களை த.நா.ம.க.வ அது தொடர்புடைய அரசுத் துறைகளின் ஒத்துழைப்போடு தயாரித்து வருகிறது.

தமிழ்நாடு மாசுபட்ட நதிப் பகுதிகளின் நீரின் தரம் NWMP திட்டத்தின் கீழ் மாதந்தோறும் கண்காணிக்கப்பட்டு, நீர் தரத் தரவுகள் த.நா.மா.க.வாரிய வலைத்தளத்திலும், CPCB வலைத்தளத்திலும் பதிவேற்றப்படுகின்றன. தற்போது, தாமிரபரணி, பவானி, பாலாறு மற்றும் அமராவதி ஆகிய ஆறுகளின் நீர்தரம், CPCBயின் குளியல் தரநிலைகளைப் பூர்த்தி செய்கிறது.

### *6.3* தேசிய சுற்றுப்புற ஒலி அளவு கண்காணிப்பு திட்டம்

சுற்றுப்புற ஒலியானது பல்வேறு வகையான செயல்களால் உண்டாக்கப்படுகிறது. அதாவது, தொழிற்சாலைகள், வாகனம் போக்குவரத்து, கட்டுமானப் பணிகள், ஜெனரேட்டர்கள், பட்டாசு வெடித்தல் போன்ற செயல்களினால் வெளிப்படுகின்றது. மத்திய அரசின் சுற்றுச் சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986–ன் கீழ் ஒலி மாசு (முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடு) விதிகள் 2000–னை அறிவிக்கை செய்து, ஜனவரி 2010–ல்அவ்விதிகளில் சில திருத்தங்களை செய்துள்ளது. ஒலி மாசு குறித்து தர நிர்ணயம் செய்வதற்கும், தரத்தினை எட்டுவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கும் மற்றும் ஒலி மாசு குறித்து கொள்கை முடிவு எடுப்பதற்கும் ஒலி அளவின் புள்ளிவிவரம் தேவையான ஒன்றாகும்.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியமும் இணைந்து எழும்பூர், தி.நகர், பெரம்பூர், கிண்டி, திருவல்லிக்கேணி, பள்ளிக்கரணை, வேளச்சேரி, வண்ணாரப்பேட்டை, அண்ணாநகர் மற்றும் சௌகார்பேட்டை ஆகிய 10 இடங்களில் சுற்றுப்புற ஒலி அளவினை தொடர்ந்து கண்காணிக்கும் கருவிகளை பொருத்தி ஒலி அளவினை பதிவு செய்து வருகின்றது. பதிவு செய்யப்பட்ட புள்ளி விவரப்படி சென்னை மாநகரின் ஒலி அளவு நிர்ணயிக்கப்பட்ட அளவினைவிட கூடுதலாக காணப்படுகிறது. இதற்கு வாகனப் போக்குவரத்தும்,

கட்டுமானப் பணிகளும் முக்கிய காரணமாகும். ஏப்ரல் 2024–மார்ச் 2025–ம் ஆண்டின் சென்னை மாநகரின் ஒலி அளவு இணைப்ப XVIII A & XVIIIB ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### *6.4* வாகனப்புகை கண்காணிப்பு

தமிழ்நாட்டில், மோட்டார்வாகனவிதி 116(பி) 1989–ன்படி, போக்குவரத்து துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் வாகனப்புகை சோதனை மையங்களில் அனைத்து வகையான வாகனங்களுக்கும் புகைசோதனை செய்யப்பட்டு வாகனப்புகை கட்டுப்பாட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுவருகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தற்போது வாகனபுகை சோதனை மையங்களில் வாகனங்களிலிருந்து வெளிப்படும் மாசினை கண்டறியும் கருவியினை இயக்குபவர்களுக்கு பயிற்சிஅளிக்கிறது. தனியார் வாகனப்புகை பரிசோதனை மையங்களால் புதியதாக வாங்கும் புகைகண்காணிப்பு கருவிகளுக்கு செயல்திறன் சான்றிதழினை வாரியம் வழங்குகிறது 2024–2025 ஆம் ஆண்டில் வாரியம் பயிற்சி வகுப்பு நடத்தி 244 நபர்களுக்குபயிற்சிஅளித்தது, மற்றும் 145 புதிய வாகனப்புகை கண்காணிப்பு கருவிகளுக்கு சான்றிதழ் வழங்கியுள்ளது.

-oOo-

# அத்தியாயம்– VII

## சட்ட நடவடிக்கைகள்

### 7.1 முன்னுரை:

காற்று (மாசுதடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 இன் பிரிவு 21 மற்றும் நீர் (மாசுதடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 இன் பிரிவுகள் 25 மற்றும் 26 ஆகியவற்றின் கீழ், தொழிற்சாலைகள் நிறுவுதல்/இயங்குதல்/புதுப்பித்தல் இசைவாணை வழங்குவதற்கான அதிகாரம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு உள்ளது. ஏதேனும் தொழிற்சாலை நடைமுறையிலுள்ள விதிமுறைகளை மீறுவதாகக் கண்டறியப்படும் பட்சத்தில், நீர் சட்டம், 1974 இன் பிரிவு 33A மற்றும் காற்று சட்டம், 1981 இன் பிரிவு 31A ஆகியவற்றின் கீழ், அந்த தொழிற்சாலையை மூடவும் மற்றும் அதன் மின்சார விநியோகத்தை நிறுத்தவும் வாரியம் உத்தரவிட அதிகாரம் பெற்றுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட தொழிற்சாலைகள், பின்வருமாறு மேல்முறையீடு செய்யலாம்:

- காற்று சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவுகளுக்கு எதிராக, மேல்முறையீட்டு அதிகாரி (Appellate Authority) ஆணையரிடம் முறையீடு செய்யலாம்.
- நீர் சட்டத்தின் பிரிவுகள் 25, 26 அல்லது 27 ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவுகளுக்கு எதிராக, மேல்முறையீட்டு ஆணையரிடம் முறையீடு செய்யலாம்.
- நீர் சட்டத்தின் பிரிவு 33A இன் கீழ் வழங்கப்பட்ட உத்தரவுகளுக்கு எதிராக, பிரிவு 33Bஇன் படி தேசிய பசுமை தீர்ப்பாய (National Green Tribunal) ஆணையரிடம் முறையீடுசெய்யலாம்.

மேலும், வாரியம், நீர் சட்டம், காற்று சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் ஆகியவற்றின் கீழ் வழக்குகளைத் தாக்கல் செய்கிறது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு எதிராக பல்வேறு நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களில் தாக்கல் செய்யப்படும் அனைத்து சுற்றுச்சூழல் வழக்குகளையும், வாரியம் தாக்கல் செய்யும் வழக்குகளையும், வாரியத்தின் சட்டப் பிரிவு (Law Section) மேற்கொண்டு நடத்தி வருகிறது.

### 7.2 பசுமை தீர்ப்பாயம்

சென்னை உயர்நீதி மன்றம் 28.8.1996ஆம் நாள் உச்சநீதிமன்ற நீதிப் பேராணை மனு எண்.914/1991 ஆணையின் படி பசுமை தீர்ப்பாயத்தை 1996 ஆம் ஆண்டு அமைத்தது. இந்த பசுமை தீர்ப்பாயம் சுற்றுச்சூழல் தொடர்புடைய வழக்குகளை விசாரிக்கின்றது.

### 7.3 மேல்முறையீட்டு ஆணையம்

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 பிரிவு 28–ன் கீழ் அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி அவர்கள் தலைமையின் கீழ் இரண்டு தொழில்நுட்ப உறுப்பினர்களைக் கொண்டு மேல்முறையீட்டு ஆணையத்தை ஏற்படுத்தியுள்ளது. திருத்தப்பட்ட 1974ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் பிரிவு 25, 26 அல்லது 27 மற்றும் திருத்தப்பட்ட 1981ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் பிறப்பிக்கப்பட்ட எந்தவொரு ஆணைக்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் எந்தவொரு நபரும், மேற்கூறிய ஆணையத்திடம் மேல்முறையீடு விண்ணப்பம் செய்யலாம்.

### 7.4 தேசிய பசுமைத் தீர்ப்பாயம்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வனபாதுகாப்புக்குரிய வழக்குகளை பயனுள்ளதாகவும், விரைவாகவும் முடித்து வைக்க 18.10.2010 அன்று புதுடில்லியில் தேசிய பசுமை தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. தேசிய தீர்ப்பாயம் சட்டம் 2010ன் படி, பிரிவு 28, 29 மற்றும் 33Aன்படி நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974, பிரிவு 13 நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி சட்டம் 1977, பிரிவு 31 காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981 மற்றும் பிரிவு 5 சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986ன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை மற்றும் முடிவுகளின்பால் பாதிக்கப்பட்ட நபர்கள் மேற்கூறிய ஆணைகள் பெறப்பட்ட 30 தினங்களுக்குள் தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யலாம். சென்னையில் தென் மண்டலத்திற்கான தேசிய பசுமை தீர்ப்பாயம் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம், தேசிய பசுமை தீர்ப்பாயம் – முதன்மை அமர்வு, தேசிய பசுமை தீர்ப்பாயம் – தென் மண்டலம், மேல் முறையீட்டு ஆணையம் ஆகியவற்றில் 2024–2025 ஆண்டு பதிவு செய்யப்பட்ட மற்றும் தீர்வு செய்யப்பட்ட வழக்குகள் விவரம்

| வழக்கு மன்றம் | 31.03.2024 வரைநிலுவையில் உள்ள வழக்குகள்எண்ணிக்கை | 01.04.2024 முதல் 31.03.2025 வரை பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எண்ணிக்கை | தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (முந்தய ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் உள்பட) | 31.03.2025நாளன்று நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மாண்புமிகு உச்சநீதி மன்றம் | 31 | 2 | 1 | 32 |
| மாண்புமிகு உயர்நீதி மன்றம் | 286 | 239 | 35 | 490 |
| மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம் – முதன்மை அமர்வு | 2 | 7 | 6 | 3 |
| மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம் – தென் மண்டலம் | 273 | 113 | 4 | 382 |
| மாண்புமிகு மேல் முறையீட்டு ஆணையம் | 101 | 83 | 25 | 159 |
| **மொத்தம்** | **693** | **444** | **71** | **1066** |

# VII. சட்ட நடவடிக்கைகள்

### 7.5 சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு விதி மீறல் வழக்குகள்

திருத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006ன் படி (S.O.804 (E) தேதி 14.03.2017), மீறும் சந்தர்ப்பங்களில், அந்தந்த மாநிலம் அல்லது மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மூலம் திட்ட முன்மொழிபவருக்கு எதிராக பிரிவு 19 இன் விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986–ன் கீழ் திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்படும் வரை தொழிற்சாலை துவங்குவதற்கான இசைவாணை வழங்கப்பட மாட்டாது.

அதன்படி, சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறாமல் கட்டுமானம் துவங்கிய தொழில்முனைவோருக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு முன், சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 இன் பிரிவு 19 இன் விதிகளின் கீழ் குற்றவியல் நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் / மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், மாநில அரசைக் கோரும். இக் கோரிக்கையின் அடிப்படையில், திட்ட முன்மொழிபவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தை மாநில அரசு கேட்டுக்கொள்கிறது, அதன்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை அறிக்கையை நேரடியாக மத்திய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் / மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பிவைத்து அதன் விபரத்தினை மாநில அரசுக்கு வாரியம் தெரிவிக்க வேண்டும்.

இதுவரை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட கோரிக்கையின்படி, சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 இன் பிரிவு 19(a) இன் விதிகளின் கீழ் திட்ட முன்மொழிபவருக்கு எதிராக வாரியத்தால் தொடரப்பட்ட வழக்குகள், தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

| வரிசை எண் | நீதிமன்றத்தின் பெயர் | 31.03.2024 அன்று தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 01.04.2024 முதல் 31.03.2025 வரை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (முந்தைய ஆண்டுகளில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் உட்பட) | 31.03.2025 நிலுவையில் உள்ள மொத்த எண்ணிக்கை (3 + 4 – 5) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | பெருநகர/தலைமை நீதித்துறை/ நீதித்துறை மாஜிஸ்திரேட் நீதிமன்றங்கள் | 149 | 3 | 1 | 151 |

### 7.6 முக்கியமான தீர்ப்புகள் / உத்தரவுகள்

#### 7.6.1 மாண்புமிகு உச்ச நீதிமன்றம்.

(i) சிவில் அப்பீல் எண்.23633–34 of 2010 – வேலூர் மாவட்ட ஆட்சியருக்கு எதிராக, வேலூர் மாவட்ட சுற்றுசூழல் கண்காணிப்புக் குழு

## VII. சட்ட நடவடிக்கைகள்

ஏற்கனவே இழப்பீட்டு தொகை வழங்கப்படாத பட்சத்தில், 07.03.2001 மற்றும் 24.08.2009 தேதியிட்ட நிலம் கையகப்படுத்தும் அதிகாரியின்ப ரிந்துரைகளின்படி, பாதிக்கப்பட்ட தனிநபர்கள்/குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து நிலுவைத் தொகைகளையும் ஆறு வாரங்களுக்குள் வழங்குமாறு மாநில அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

காற்று (ம) நீர் மாசுபடுத்துபவர்களிடமிருந்து வருவாய் மீட்புச் சட்டம் அல்லது பிற சட்டப்பூர்வ வழிகள் மூலம் மாநில அரசு இழப்பீட்டை வசூலிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணையிடுகிறது, மேலும் இதன் மூலம் 'மாசுபடுத்துபவரே இழப்பீடு செலுத்த வேண்டும்' என்ற கொள்கையை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

வேலூர் மாவட்டத்தில் சுற்றுச்சூழல் நலனை தணிக்கை செய்யவும், கண்காணிக்கவும் மற்றும் மீட்டெடுக்கவும், ஒரு ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையில், மாநில மற்றும் மத்திய அரசு அதிகாரிகள், சுற்றுச்சூழல் வல்லுநர்கள் மற்றும் சமூகப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு உயர்மட்டக் குழுவை (நான்கு வாரங்களுக்குள்) அமைக்க உத்தரவிடப்படுகிறது.

பின்வரும் பொறுப்புகள் குழுவிடம் ஒப்படைக்கப்படுகின்றன:

- 1998–க்குப் பின்பு பெறப்பட்ட கோரிக்கைகளை ஆராய்ந்து இழப்பீடு வழங்குதல்
- ஒரு விரிவான சூழலியல் மறுசீரமைப்புத் திட்டத்தை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல்;
- பாலாறு மற்றும் பிற நீர்நிலைகளில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீரை வெளியேற்றுவதைத் தடுத்தல்
- நிலத்தடி நீரைப் வெளியேற்றம் இல்லாத பாதுகாக்கப்பட்டமண்டலங்களாக அறிவித்தல்
- புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட CETPகள்/IETPகளுக்கான தேவைகளைக் கண்டறிந்து, ஏற்கனவே உள்ள அமைப்புகளில் உள்ள குறைபாடுகளை சரிசெய்வதன் மூலம் மாசுக் கட்டுப்பாட்டு உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல்

உத்தரவின்படி, பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், 28.02.2025 தேதியிட்ட அரசாணை எண். 43 மூலம் மாநில அரசால் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் வழிகாட்டுதலின்படி, உத்தரவின் மீதான மேல் நடவடிக்கைகள் மாநில அரசாலும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தாலும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 7.6.2 மாண்புமிகு உயர்நீதிமன்றம்

(i) ரிட் மனு எண் 34307 of 2022&**மற்றும் தொகுப்பு வழக்குகள்– செங்கல் சூளை வழக்குகள் சம்மந்தமான**

## VII. சட்ட நடவடிக்கைகள்

கோயம்புத்தூர் மாவட்டம், தடாகம் & தடாகம் அல்லாத பள்ளத்தாக்கில் அமைந்துள்ள செங்கல் சூளை தொழிற்சாலைகள் தாக்கல் செய்த இந்த ரிட் மனுக்களில், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 2022 ஆம் ஆண்டின் W.P.எண்.34307 இன் படி 27.04.2023 அன்று பிறப்பித்த உத்தரவின்படி

1. சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 இன் பிரிவு 5 r/w 23 இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவரால் சேதம் / அபராதம் / இழப்பீடு விதிக்க உரிமை உண்டு,
2. சேதத்திற்கான காலம், குறிப்பிட்ட செங்கல் சூளையின் செயல்பாட்டைத் தொடங்கிய நாளிலிருந்து கணக்கிடப்படும். இது அவர்களால் செலுத்தப்படும் வருடாந்திர செங்கல் கட்டணத்திலிருந்து அல்லது தலைவர் / குழு தீர்மானிக்கும் பொருட்களிலிருந்து அறியப்படலாம். மேலும், கோவை மாவட்ட ஆட்சியர், 13.06.2021 அன்று நிறைவேற்றிய மூடல் தேதிஅறிவித்த பின்பு முடிவடையும்.

(ii) ரிட் மனு எண் 34065 of 2018 &**மற்றும் தொகுப்பு வழக்குகள்– பிளாஸ்டிக் வழக்குகள் சம்மந்தமானது**

தமிழ்நாடு பாண்டி பிளாஸ்டிக் சங்கம், சென்னை, அரசு முதன்மை செயலாளர் மற்றும் பிறருக்கு எதிராக, 25.06.2018 தேதியிட்ட அரசாணை எண்.84 ஐ எதிர்த்து, உணவுப் பொட்டலம் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் தாள்கள், சாப்பாட்டு மேசையில் பரப்புவது, பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட தேநீர் கோப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் டம்ளர், தண்ணீர் பைகள் மற்றும் பாக்கெட்டுகள், பிளாஸ்டிக் நீர் உறிஞ்சி, பிளாஸ்டிக் கேரி பேக் மற்றும் பிளாஸ்டிக் கொடிகள் ஆகியவற்றின் தடிமன் எதுவாக இருந்தாலும், அவற்றை உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், வழங்குதல், போக்குவரத்து, விற்பனை செய்தல் அல்லது விநியோகித்தல் ஆகியவற்றைத் தடை செய்யுமாறு கோரி 2018 ஆம் ஆண்டின் W.P.No.34065 என்ற புகாரை தாக்கல் செய்துள்ளது. மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் தனது 27.12.2018 தேதியிட்ட உத்தரவில், அந்த ரிட் மனுக்களைத் தள்ளுபடி செய்து, மேலும் இது குறித்து தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட அரசாணை (எம்.எஸ்) எண் 84, நாள் 25.06.2018–ஐ உறுதி செய்யப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டின் W.P.No.34065 இல் 2019 ஆம் ஆண்டின் 89 ஆம் எண் விண்ணப்பத்தை மறுஆய்வு செய்வது தொடர்பாக, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 20.10.2022 தேதியிட்ட உத்தரவில், நாட்டிலேயே முதல்முறையாக *சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களின் விவரப்பட்டியலை வெளியிடுவதற்கு* TNPCB மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டியுள்ளது.

*"6. தமிழ்நாட்டில் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்குகளுக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் மற்றும்*

*விநியோகஸ்தர்களின் விவரப்பட்டியலை வெளியிடுவதற்காக 3வது பிரதிவாதியான (தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்) எடுத்த முயற்சிகளுக்கு இந்த நீதிமன்றம் தனது பாராட்டுகளைப் பதிவு செய்கிறது. மேற்கூறிய ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக்குகளுக்குப் பதிலாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பல்வேறு மாற்றுப் பொருட்களைக் காண்பிப்பது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள உற்பத்தியாளர்கள்/சில்லறை விற்பனையாளர்களின் விவரங்களையும் வழங்குகிறது.*

*7. இந்த அடைவுப் (Directory) பட்டியல் நாடு முழுவதிலும் இது போன்ற முதல் முயற்சி என்பதை அறிந்து நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். மேலும், இந்தத் திட்டத்தை வடிவமைத்தவர்கள் பாராட்டுக்குரியவர்கள். இந்த அடைவு சில்லறை விற்பனையாளர்களுக்கு மட்டுமல்லாமல், உள்நாட்டு நுகர்வோர்களுக்கும்உதவும்; ஆகையால் இந்த அடைவுப் பட்டியல் இணையத்தில் கிடைக்கிறது என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

**(iii) ரிட் (MD) மனு எண் 23412 of 2024 – எஸ்.பி. முத்துராமனால் தாக்கல் செய்யப்பட்டது முக்கியமான தீர்ப்பு– குறித்து**

கன்னியாகுமரி மாவட்டத்தில் அணுசக்தி கனிமவளசுரங்கத்திற்கு எதிராக திரு.எஸ்.பி.முத்துராமன் திருநெல்வேலி 2024 ஆம் ஆண்டு **WP (MD)** எண்.23412 ஐ தாக்கல் செய்தார், மேலும் 8 கிராமங்களில் பொது கருத்துக்கேட்பு கூட்டத்தை திட்ட இடத்திலேயே நடத்த பிரதிவாதிக்கு உத்தரவிட வேண்டும் என்ற கோரிக்கையும் அதில் இடம்பெற்றுள்ளது. மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வு, பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தை நடத்துவதற்கான நடைமுறை குறித்த விதியை பின்வருமாறு மேற்கோள் காட்டியுள்ளது:

*"பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முறையான வழிகாட்டுதலின் படி, ஒளிவு மறைவு இன்றி உறுதி செய்யும் பொருட்டு திறந்த வெளியில் அமைந்த கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் – சம்பந்தப்பட்ட மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் அல்லது யூனியன் பிரதேச மாசு கட்டுப்பாட்டு குழுவால். இது தொடர்பாக, இந்த விதியைப் படிப்பது, அந்த இடத்தில் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்த குறிப்பிட்ட இடம் கட்டாயமில்லை என்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. கருத்து கேட்பு கூட்டம் திட்ட இடத்திலோ அல்லது அதன் அருகாமையிலோ நடத்தப்பட வேண்டும். அதை முடிவு செய்வது மாவட்ட நிர்வாக அதிகாரியின் பொறுப்பாகும். பொது விசாரணை தளத்திலிருந்து **100** கி.மீ தொலைவில் நடத்தப்பட்டால், மனுதாரர் அதையே கேள்வி கேட்கலாம்."*

(iV) ரிட் **(MD)** மனு எண் 5776 of 2025 – **எஸ்.டி.சிவஞானத்தால் தாக்கல் செய்யப்பட்டது முக்கியமான தீர்ப்பு**

**திரு. எஸ்.டி.சிவஞானம்** 2025 **ஆம் ஆண்டின்** WP.**எண்**.5776 **ஐ தாக்கல் செய்து**,

## VII. சட்ட நடவடிக்கைகள்

"சுத்திகரிக்கப்படாத கழிவுநீரை வெளியேற்றுவதற்கு போதுமான கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகள் இல்லாமல் கழிவு நீரை வெளியேற்றுவது 7வது பிரதிவாதிக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்க 1 முதல் 6 வரையிலான பிரதிவாதிகளுக்கு உத்தரவிடுதல், ஒலி மாசுபாடு (ஒழுங்குமுறை மற்றும் கட்டுப்பாடு) விதிகள் 2000 ஐ மீறி கடுமையான ஒலி மாசுபாட்டை ஏற்படுத்தியதற்காக மற்றும் 26.02.2025 மற்றும் 27.02.2025 ஆகிய தேதிகளில் திட்டமிடப்பட்ட அதன் மகா சிவராத்திரியை நடத்துவதற்கு போதிய வசதிகள் குறைவாக உள்ளதால் 7வது பிரதிவாதிக்கு எந்த அனுமதியையும் வழங்குவதைத் தவிர்க்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது"

மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் தனது 24.02.2025 தேதியிட்ட உத்தரவில் பின்வருமாறு தெரிவித்துள்ளது:

*"10. மனுதாரரின் வழக்கறிஞர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்மனுவில் உள்ள வாதங்களை மறுத்தார். குற்றச்சாட்டு சில சந்தேகங்களை அடிப்படையாகக் கொண்டது என்பதாலும், மாசுக் கட்டுப்பாடு வாரிய உறுப்பினர் செயலாளர் 26.02.2025 மற்றும் 27.02.2025 ஆகிய தேதிகளில் நிகழ்ச்சியைப் பார்க்க தேவையான நடவடிக்கை எடுப்பதாகக் கூறி எதிர்மனு தாக்கல் செய்ததாலும், இந்த நீதிமன்றம் ரிட் மனுதாரரின் கோரிக்கையை ஏற்க விரும்பவில்லை*

*11. 26.02.2025 மற்றும் 27.02.2025 ஆகிய தேதிகளில் மகா சிவராத்திரி விழாவை நடத்துவதற்கு 7வது பிரதிவாதிக்கு தடை விதித்து நிவாரணம் வழங்க மனுதாரர் எந்த உரிமையையும் நிறுவவில்லை. எனவே, இந்த நீதிமன்றம் தலையிடுவதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய எந்த காரணத்தையும் காணவில்லை, இதன் விளைவாக, ரிட் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுகள் குறித்து எந்த உத்தரவும் இல்லை. இதன் விளைவாக, தொடர்புடைய இதர மனுக்களும் தள்ளுபடி செய்யப்படுகின்றன"*

### 7.6.3 மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம் (தென்மண்டலம்), சென்னை

**(i) மனு எண்.107/2023 (தென்மண்டலம்) & மனு எண்.39/2024 (தென்மண்டலம்) – "NLC–யைச்** சுற்றியுள்ள 8 கி.மீ. பரப்பளவில் மிகப்பெரிய மாசுபாடு அபாயம்" என்ற தலைப்பின் கீழ், டைம்ஸ் ஆஃப் இந்தியாவின் சென்னை பதிப்பில் 09.08.2023 அன்று "**NLC**–யைச் சுற்றியுள்ள நீர் பாதரசத்தால் நிரம்பியுள்ளது" என்ற தலைப்பின் கீழ், 2023 ஆம் ஆண்டின் 107 ஆம் எண், **NLC**–யைச் சுற்றியுள்ள செய்தியின் அடிப்படையில் தாமாக முன்வந்து **(Suo–moto)** எடுக்கப்பட்டது"

மாண்புமிகு தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (தென் மண்டலம்), சென்னை, தனது **10.08.2023** தேதியிட்ட உத்தரவில் வழங்கிய வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் **(TNPCB)** அந்தப் பகுதியை ஆய்வு செய்யவும், என்எல்சி–க்கு அருகிலுள்ள நீர்நிலைகளின் நீரின் தரத்தை பகுப்பாய்வு செய்யவும், மேலும் அந்தச் செய்தி சரியானதுதானா என்பதை

உறுதிப்படுத்தவும் பணிக்கப்பட்டது. இந்த உத்தரவின் அடிப்படையில், ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் ஆய்வு செய்து நீர் மற்றும் மண் மாதிரிகளை சேகரிக்க வாரியம் **10.08.2023** அன்று ஒரு குழுவை அமைத்துள்ளது, மேலும் **TNPCB** குழு **11.08.2023, 16.08.2023, 17.08.2023, 23.08.2023, 29.08.2023** மற்றும் **28.09.2023** ஆகிய தேதிகளில் அப்பகுதியை ஆய்வு செய்தது.

**(ii)** மனு எண்.180/2023 (தென்மண்டலம்) தாமாக முன்வந்து – மிக்ஜாம் புயலின் போது எண்ணூரில் ஏற்பட்ட எண்ணெய் கசிவு

தேசிய பசுமைத் தீர்ப்பாயம் மனு எண் 180/2023, தாமாக முன்வந்து பதிவு செய்யப்பட்ட வழக்கு – விகடன் டிவியில் 06.12.2023 அன்று ஒளிபரப்பப்பட்ட 'சென்னை மழை – எண்ணெய் நிறுவனங்கள் – அதிர்ச்சி தரும் கதை – மிக்ஜாம் கள அறிக்கை' என்ற தலைப்பிலான காட்சி ஊடகச் செய்தியாக வெளியிடப்பட்டுள்ளது

டிசம்பர் **2023** இல் எண்ணெய் கசிவு காரணமாக ஏற்பட்ட சுற்றுச்சூழல் சேதங்கள் மற்றும் சமூக–பொருளாதார சேதங்களுக்கு, **1986** ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு **5** இன் கீழ், சுற்றுச்சூழல் இழப்பீடு ரூ.**73,68,00,906/–** (ரூபாய் எழுபத்து மூன்று கோடியே அறுபத்தெட்டு இலட்சத்து தொள்ளாயிரத்து ஆறு மட்டும்) ஏன் விதிக்கப்படக்கூடாது என்பதற்கான காரணத்தை **15** நாட்களுக்குள் தெரிவிக்குமாறு, **24.10.2024** அன்று, **TNPC** வாரிய நடைமுறை எண்: **TNPCB / T6/ F.12753 / MNL / RL / 2024,** தேதியிட்ட **21.11.2024** இல், சென்னை மாவட்டம், திருவொற்றியூர் தாலுகா, மணலி கிராமத்தில் அமைந்துள்ள **தி/ள்.** சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு முகாந்திர கடிதம் அனுப்பப்பட்டது.

**7.7 விதிமீறும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை.**

சுற்றுச்சூழல் தரநிலைகளைத் தொழிற்சாலைகள் பின்பற்றுவதை வாரியம் கண்காணித்து வருகிறது. விதிமீறல் கண்டறியப்பட்டால், விளக்கம் கோரி அறிவிப்புகள் அனுப்பப்படுகின்றன. தொழிற்சாலைகள் குறைபாடுகளைச் சரிசெய்தவுடன், மேல் நடவடிக்கை கைவிடப்படும். விதிமீறல் தொடர்ந்தால், அந்த தொழிற்சாலைகள் தனிப்பட்ட விசாரணைக்கு அழைக்கப்பட்டு, குறைபாடுகளைச் சரிசெய்ய அவகாசம் வழங்கப்படும். ஒருவேளை, அந்த தொழிற்சாலைகள் தொடர்ந்து விதிமீறலில் ஈடுபட்டு சுற்றுச்சூழலை மாசுபடுத்தினால், நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974, காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 மற்றும் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 ஆகியவற்றின் விதிகளின் கீழ், வாரியம் அந்த நிறுவனங்களை மூடுவதற்கும் மின்சார இணைப்பைத் துண்டிப்பதற்கும் உத்தரவுகளைப் பிறப்பிக்கும். அந்த நிறுவனம் தம் குறைபாடுகளைச் சரிசெய்தவுடன், மூடல் உத்தரவு ரத்து செய்யப்பட்டு மின்சார இணைப்பு மீண்டும் வழங்கப்படும்.

## VII. சட்ட நடவடிக்கைகள்

| வரிசை எண். | நடவடிக்கை | 31.03.2024 வரை (*) | 2024 – 25 ஆம் ஆண்டில் | 31.03.2025 நிலவரப்படி மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | முகாந்திர கடிதம் அனுப்பப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | 1,25,827 | 2,928 | 1,28,755 |
| 2. | மூடுவதற்கும் மற்றும் மின் விநியோகம் துண்டிப்பதற்கும் வாரியத்தால் ஆணை வழங்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | 14,234 | 150 | 14,384 |
| 3. | மூடல் உத்தரவு ரத்து செய்யப்பட்டு மின் விநியோகம் மீண்டும் கொடுக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | 7,321 | 198 | 1,519 |
| * 1999–2000 முதல் எடுக்கப்பட்ட தகவல்கள். | | | | |

### 7.7.1 அங்கீகரிக்கப்படாத தொழிற்சாலைகள் அகற்றப்பட்ட விவரம்

2024–2025 காலகட்டத்தில், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவானது (அரசாணை (நிலை) எண் 23, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை (இசி.1) துறை, தேதி: 01.03.2018–இன் படி) 60 அங்கீகரிக்கப்படாத தொழிற்சாலைகளை இடித்து அகற்றியுள்ளது. இடித்து அகற்றப்பட்ட இந்த தொழிற்சாலைகளில் பெரும்பாலானவை, காவேரி ஆற்றங்கரையில் உள்ள குமாரபாளையம் பகுதியில் அமைந்திருந்த அங்கீகரிக்கப்படாத ஜவுளி சாயப்பட்டறைகள் மற்றும் தொழிற்சாலைகள் ஆகும்.

### 7.7.2 சுற்றுச்சூழல் இழப்பீடு வசூலித்தல்

சுற்றுச்சூழல் இழப்பீடு என்பது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான ஒரு கொள்கைக் கருவியாக செயல்படுத்தப்படுகிறது "மாசுபடுத்துவோரே மாசினைத் நீக்குவதற்கான தொகையினை ஏற்க வேண்டும்" (Polluter pay Principle) என்ற கொள்கையின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது. மாண்புமிகு பசுமை தீர்ப்பாயம் (முதன்மை அமர்வு அசல் விண்ணப்ப எண்593/2017 (பேராணை மனுஎண்375/2012)ல் வழங்கப்பட்ட ஆணையின் பேரில் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சுற்றுச்சூழல் இழப்பீடு மதிப்பீடு செய்வதற்கான கணக்கீட்டு முறை பின்வருமாறு.:–

(அ). இசைவாணை நிபந்தனைகளுக்கு எதிரான கழிவு நீர் வெளியேற்றங்கள் / முக்கியமாக தர அளவுகள் / நிபந்தனை அளவுகள்,

(ஆ). தொடர் காற்று கண்காணிப்பு அமைப்பு நிறுவப்படாமல், செயல் திட்டங்களை சரிவர செயல்படுத்தாதது, நீர் நிலைகளில் கழிவு நீர் வெளியேற்றத்தை தடுக்காதது, சரிவர திடக்கழிவு மேலாண்மை செயல்படுத்தப்படாதது போன்ற காரணங்களுக்காக கொடுக்கப்பட்ட முகாந்திர கடிதங்களுக்கு பதிலுரை வழங்காமையால்.

(இ) தகவல்களை வேண்டும் என்றே தர மறுத்தல் அல்லது தொடர் கண்காணிப்பு காற்று மற்றும் கழிவு நீர் கண்காணிப்பு அமைப்புகளை சேதப்படுத்துதல்/ தவறான தகவல்களை மாற்றி சமர்ப்பித்தல்,

(ஈ) எதிர்பாராமல் / தற்செயலாக சுற்றுச்சூழலுக்கு சேதம் விளைவிக்கும் குறுகிய கால கழிவு நீர் வெளியேற்றங்கள்,

(உ) வேண்டும் என்றே வெளியேற்றப்படும் கழிவுகளால் நிலம், நீர் மற்றும் காற்று மாசுபடுதல் மற்றும் சுற்றுச்சூழல் சேதம் அடைதல்,

(ஊ) சுத்திகரிக்கப்பட்ட / ஓரளவு சுத்திகரிக்கப்பட்ட / சுத்திகரிக்கப்படாத கழிவுநீரை நிலத்தடி நீரில் செலுத்துதல்.

அரசு, அரசாணை (நிலை) எண்.77, சுற்றுச்சூழல் மற்றும் வளத்துறை, நாள் 28.10.2020–ல் மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகளை சரிவர பின்பற்றாத மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கழிவு மேலாண்மை செய்யும் பொது வசதிகள் மீது மத்திய மாசு கட்டுபாடு வாரியம் கொடுத்துள்ள வழிகாட்டுதலின்படி சுற்றுச்சூழல் இழப்பீட்டு தொகையினைக் கணக்கிட்டு வசூல் செய்வதற்கு வாரியத்திற்கு அனுமதியளித்து உத்திரவிட்டுள்ளது,

அதன்படி 01.04.2024 முதல் 31.03.2025 வரையிலான காலகட்டத்தில், தொழில் நிறுவனங்களிடமிருந்து ரூ.9,05,43,957/–(ஒன்பது கோடியே ஐந்து இலட்சத்து நாற்பத்து மூவாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தேழு ரூபாய் மட்டும்) சுற்றுச்சூழல் இழப்பீட்டு தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

–oOo–

## அத்தியாயம் – VIII

## சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம்

### 8.1 சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 1994ஆம் ஆண்டில் டேனிஷ் ஆதரவுடன் சுற்றுச்சூழல் பயிற்சி நிலையத்தினை (ETI) நிறுவியது. இந்நிறுவனம், வாரிய அதிகாரிகள், தொழில் நிறுவன பிரதிநிதிகள், மாநகராட்சி/நகராட்சி நிர்வாகிகள், சார்நிலை நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளுக்கு மாசு கட்டுப்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்குகிறது. இப்பயிற்சிகள் சுற்றுச்சூழல் சட்டங்கள், விதிகள் மற்றும் மேலாண்மை தொழில்நுட்பங்களை மேம்படுத்தும் நோக்குடன் வழங்கப்படுகின்றன. மேலும், மன அழுத்த மேலாண்மை, நேர மேலாண்மை, சுய வளர்ச்சி போன்ற தலைப்புகளிலும் வாரிய அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த பயிற்சிகள், அத்துறையில் முன்னணியில் உள்ள அமைப்புகளின் நிபுணர்களால் நடத்தப்படுகின்றன.

கூடுதலாக, அரசுத் துறைகளின் அதிகாரிகள் மற்றும் துணை ஆட்சியர்கள் ஆகியோருக்கும் வாரியம் பயிற்சி வழங்குகிறது. இதேபோன்று, பல்வேறு தொழில்நுட்ப நிபுணத்துவ நிறுவனங்கள் வழங்கும் பயிற்சிகளிலும் வாரிய அதிகாரிகள் பங்கேற்கின்றனர். ETI ஆல்நடத்தப்பட்ட திட்டங்கள் மூலம் மொத்தம் 769 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

# III. வாரியத்தால் அமைக்கப்பட்ட குழுக்கள்

**8.2 ஏப்ரல் 2024 – மார்ச் 2025 காலகட்டத்தில் சுற்றுச்சூழல் பயிற்சி நிலையத்தில் நடத்திய பயிற்சிகள்**

| வ.எண் | பயிற்சி திட்டம் | பயிற்சி நாள் | பயிற்சி பெற்றவர்கள் விவரம் | பயனாளிகள் விவரம் |
|---|---|---|---|---|
| 1 | பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் திறன் மேம்பாட்டுப் பயிற்சி | 27.04.2024 & 28.04.2024 | வேலூர் மண்டலத்தில் உள்ள அனைத்து வாரிய அதிகாரிகள் | – |
| 2 | உயிரி மருத்துவக் கழிவு எரியூட்டிகள், அபாயகரமான கழிவு எரியூட்டிகள், சிமெண்ட் தொழிற்சாலைகள், உலோக உருக்கும் ஆலைகள், அனல் மின் நிலையம் ஆகியவற்றைப் பார்வையிடுதல் – NIP–யின் மதிப்பாய்வு மற்றும் புதுப்பிப்பு. | 22.07.2024 to 02.08.2024 | NIIST குழு, CSIR | 5 |
| 3 | துணை ஆட்சியர்களுக்கான பயிற்சித் திட்டம் | 18.09.2024 to 20.09.2024 | திரு. எம். சந்தோஷ் குமார், தகுதிகாண் துணை ஆட்சியர் | 1 |
| 4 | புதிதாக பணியமர்த்தப்பட்ட உதவி பொறியாளர்களுக்கான பயிற்சித் திட்டம | 07.10.2024 to 30.10.2024 & 11.12.2024 to 17.12.2024 | புதிதாக பணியமர்த்தப்பட்ட உதவி பொறியாளர்கள் | 46 |
| 5 | நிர்வாகம், கணக்கியல் மற்றும் தகவல் அறியும் உரிமை குறித்த பயிற்சி | 29.11.2024 & 30.11.2024 | திருச்சி, கடலூர் மற்றும் மதுரை மண்டல அதிகாரிகள் | 50 |
| 6 | கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பு 2019 | 12.12.2024 | கடலோர மாவட்ட ஆட்சியர்கள் | 14 |
| 7 | மாசு கட்டுப்பாட்டு பயிற்சி | 18.12.2024 | NCC வருடாந்திர பயிற்சி முகாமிலுள்ள பயிற்சி மாணவர்கள் | 500 |

## III. வாரியத்தால் அமைக்கப்பட்ட குழுக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | மாசு கட்டுப்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் – சுற்றுச்சூழல் அனுமதியின் கீழ் பல்வேறு NOC சிக்கல்கள் – CRZ அனுமதி – விதிகள் மற்றும் நடைமுறைகள் | 23.12.2024 | துணைச் செயலாளர்கள், தலைமைச் செயலகம் | – |
| 9 | CEMS, OCEMS மற்றும் CAAQMS ஆகியவற்றின் செயல்பாட்டுக் கொள்கைகள் | 25.02.2025 & 26.02.2025 | அனைத்து மண்டலங்கள் மற்றும் தலைமை அலுவலகத்திலிருந்து வாரியத்தினால் பரிந்துரைக்கப்பட்ட பொறியாளர்கள் | 20 |
| | | | **Total** | **636** |

**8.3 ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை இந்தியாவில் உள்ள பல்வேறு தொழில்நுட்ப நிபுணர் நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட TNPCB அதிகாரிகள் கலந்து கொண்ட பயிற்சி திட்டங்கள்.**

| வ. எண் | பயிற்சி திட்டம் | பயிற்சி நாள் | பயனாளிகள் விவரம் | நிறுவனம் |
|---|---|---|---|---|
| 1 | சென்னையில் பூஜ்ஜிய உமிழ்வு பகுதிகள் | 10.04.2024 | 2 | C40 நகரங்கள், சென்னை |
| 2 | பிராந்திய மாசுபாட்டிற்கான தயார்நிலை பதில் பயிற்சிக்கான இறுதி திட்டமிடல் மாநாடு – 2024 | 06.05.2024 | 3 | இந்திய கடலோர காவல்படை, சென்னை |
| 3 | சென்னை பெருநகரப் பகுதிகள் (CMA) மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கான பசுமை இல்ல எரிவாயு இருப்பு பட்டியலை உருவாக்குதல். | 21.05.2024 | 1 | C40 நகரங்கள், சென்னை |

## III. வாரியத்தால் அமைக்கப்பட்ட குழுக்கள்

| வ. எண் | பயிற்சி திட்டம் | பயிற்சி நாள் | பயனாளிகள் விவரம் | நிறுவனம் |
|---|---|---|---|---|
| 4 | காற்று மாசுபாட்டைக் குறைத்தல் குறித்த பயிற்சி | – | 1 | தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் |
| 5 | தகவல் அறியும் உரிமைச் சட்டங்கள் மற்றும் விதிகள் குறித்த பயிற்சித் திட்டம் | 14.06.2024 | 30 | அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி, சென்னை |
| 6 | தகவல் அறியும் உரிமைச் சட்டங்கள் மற்றும் விதிகள் குறித்த பயிற்சித் திட்டம் | 21.06.2024 | 30 | அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி, சென்னை |
| 7 | தகவல் அறியும் உரிமைச் சட்டங்கள் மற்றும் விதிகள் குறித்த பயிற்சித் திட்டம் | 28.06.2024 | 30 | அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி, சென்னை |
| 8 | கழிவுகளிலிருந்து எரிசக்தி ஆலையைப் பார்வையிடுதல் | 12.06.2024 to 14.06.2024 | 4 | ரீ சஸ்டைனபிலிட்டி லிமிடெட், ஹைதராபாத் |
| 9 | வனம் மற்றும் வனவிலங்கு சட்டங்கள் | 17.07.2024 to 19.07.2024 | 4 | மாநில வன சேவைக்கான மத்திய அகாடமி (CASFOS), கோயம்புத்தூர் |
| 10 | CEMS குறித்த தேசிய அளவிலான பயிற்சி | 06.08.2024 to 09.08.2024 | 2 | அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CSE), நிம்லி, ராஜஸ்தான் |
| 11 | கார்பன் கணக்கியல், தணிக்கை மற்றும் வர்த்தகம் குறித்த பயிற்சி | 10.09.2024 to 13.09.2024 | 2 | அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CSE), நிம்லி, ராஜஸ்தான் |

## III. வாரியத்தால் அமைக்கப்பட்ட குழுக்கள்

| வ. எண் | பயிற்சி திட்டம் | பயிற்சி நாள் | பயனாளிகள் விவரம் | நிறுவனம் |
|---|---|---|---|---|
| 12 | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு குறித்த பயிற்சி | 17.09.2024 to 20.09.2024 | 2 | அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CSE), நிம்லி, ராஜஸ்தான் |
| 13 | எண்ணெய் மாசுபாட்டிற்கான தயார்நிலை பதில் மற்றும் ஒத்துழைப்பு | 23.09.2024 to 26.09.2024 | 1 | இந்திய கடலோர காவல்படை, மும்பை |
| 14 | TNPCB–க்கான அலுவலக நடைமுறை | 27.09.2024 | 21 | அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி, சென்னை |
| | | **Total** | 133 | |

–oOo–

# அத்தியாயம் – IX

## சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பொது மக்கள் பங்கேற்பு

### 9.1 சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

சுற்றுச்சூழலின் தன்மை மற்றும் அதன் பாதுகாப்பின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வதே சுற்றுச்சூழல் விழிப்புணர்வாகும். சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஊக்குவித்தல் என்பது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான ஒரு எளிய வழியாகும், மேலும், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பயிற்சி என்பது வரும் தலைமுறையினருக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கிறது. பல்வேறு மாசுக் கட்டுப்பாடு விதிமுறைகளை திறம்பட கடைப்பிடிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு ஒரு முக்கிய கருவியாக மாறியுள்ளது. மிகப் பெரிய அளவிலான ஈடுபாடு மூலம் சுற்றுச்சூழலுக்கு உகந்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை மிகவும் சிறந்த முறையில் செயல்படுத்தி, சுற்றுச்சூழல் இயக்கங்களை வலுப்படுத்த இயலும். ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு வகையான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பின்வரும் விழாக் காலங்களில் வாரியத்தால் நடத்தப்படுகிறது. 2023–24 ஆம் ஆண்டு, விழாக் காலங்களில் வாரியத்தால் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

#### 9.1.1 விநாயகர் சதுர்த்தி

சிலைகளைக் கரைப்பதற்கான வழிகாட்டுதல்கள் – 2020–க்கு இணங்க, சுற்றுச்சூழலுக்கு உகந்த விநாயகர் சதுர்த்தி விழாவைக் கொண்டாடுவது குறித்து மாவட்ட அலுவலகங்கள் மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. விநாயகர் சதுர்த்தி விழாவினை பாதுகாப்பான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் கொண்டாட தேவையான நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறைகளுக்கு கடிதம் அனுப்பட்டது. விநாயகர் சதுர்த்தி விழாவை சுற்றுச்சூழலுக்கு உகந்தவகையில் கொண்டாடுவது குறித்து நாளிதழ்களில் ஆங்கிலம் மற்றும் தமிழில் செய்தி வெளியிடப்பட்டது, மேலும் தமிழக அரசு அறிவித்துள்ள நீர்நிலைகளில் மட்டுமே சிலைகளைக் கரைக்குமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சிலைகளைக் கரைப்பதற்கு முன்பும், கரைத்தலின் பொழுதும் மற்றும் கரைத்த பின்பும் அறிவிக்கப்பட்ட நீர் நிலைகளின் நீர் மாதிரிகளைச் சேகரித்து, நீரின் தரத்தை வாரியம் கண்காணித்தது. மேலும் நீரின் தரம் குறித்த பகுப்பாய்வு அறிக்கை மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

#### 9.1.2 தீபாவளி

ஒவ்வொரு ஆண்டும் தீபாவளியின் போது ஒலி மற்றும் புகை மாசு இல்லாத தீபாவளியை கொண்டாடுமாறு மக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி வாரியத்தால் நடத்தப்படுகிறது. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் நீதிப்பேராணை மனு எண். 728/2015 இல் அளித்த 23.10.2018 தேதியிட்ட

தீர்ப்பில், குறைவான உமிழ்வு கொண்ட பட்டாசுகள் (மேம்படுத்தப்பட்ட பட்டாசுகள்) மற்றும் பசுமை பட்டாசுகள் மட்டுமே தயாரிக்க அனுமதிக்கப்படும் என்று இடைக்கால உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது. பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களுக்கு தெரிவிக்கும் வகையில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு, பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் மூலம் பொதுமக்களுக்கு விரிவான விழிப்புணர்வு பரப்புரைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. மேலும், மாண்புமிகு நீதிமன்றம் பட்டாசு வெடிக்கும் நேரத்தை இரண்டு மணி நேரம் வரை கட்டுப்படுத்தியுள்ளது. அதன்படி, தீபாவளியன்று (அக்டோபர் 31, 2024) காலை 6.00 மணி முதல் 7.00 மணி வரையும், இரவு 7.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையும் பொதுமக்கள் பட்டாசுகளை வெடிக்க தமிழக அரசு அனுமதி அளித்தது. மாண்புமிகு உச்ச நீதிமன்றம், மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்கள் தங்கள் அதிகார எல்லையில் உள்ள நகரங்களில் 14 நாட்களுக்கு (தீபாவளிக்கு 7 நாட்களுக்கு முன்பு தொடங்கி, தீபாவளிக்குப் பிறகு 7 நாட்கள் வரை) குறுகிய கால சுற்றுப்புற காற்றின் தர கண்காணிப்பை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளது. அதன்படி இந்த ஆண்டும், 14 நாட்களுக்கான கண்காணிப்பு வாரியத்தால் நடத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

சுற்றுச்சூழல் சங்கங்கள், தேசிய பசுமைப்படை, பள்ளிக் கல்வி, உயர்கல்வி மற்றும் காவல் துறைகள் மற்றும் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து ஆண்டுதோறும் தீபாவளி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இதையொட்டி, விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்த அனைத்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களுக்கும் மொத்தம் ரூ.10,28,160/- (ரூபாய் பத்து லட்சத்து இருபத்தெட்டாயிரத்து நூற்று அறுபது) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 27.10.2024 to முதல் 30.10.2024 வரை நான்கு நாட்களுக்கு சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, வேலூர், சேலம் மற்றும் ஈரோடு ஆகிய 9 நகரங்களில் ஹலோ எஃப்எம் ரேடியோ மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

### 9.1.3 போகி பண்டிகை-2025

ஜனவரி மாதம் போகி பண்டிகையின் போது, கழிவுப் பொருள்களான டயர்கள், டியூப்கள், பிளாஸ்டிக் பொருட்கள், துணிகள் போன்ற கழிவுப்பொருட்களை எரிப்பதால் ஏற்படும் காற்று மாசுபாட்டின் தீமைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அனைத்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களும் மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து வாரியத்தால் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. 12.01.2025 முதல் 13.01.2025 வரை இரண்டு நாட்களுக்கு சென்னை, திருச்சி, கோவை, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, ஈரோடு, சேலம் மற்றும் வேலூர் ஆகிய 9 நகரங்களில் ஹலோ எஃப்எம் ரேடியோ மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. போகி பண்டிகை தினத்தன்று, சென்னையில் டயர்கள், டியூப்கள், பிளாஸ்டிக்

பொருட்கள் எரிப்பதை தடுக்கும் வகையில், வாரிய அதிகாரிகள் இரவு ரோந்து பணியில் ஈடுபட்டனர். சென்னை மாநகரில் கத்திவாக்கம், மணலி, தில்லை நகர் (கொளத்தூர்), தண்டையார்பேட்டை, ராயபுரம், திரு.வி.கா.நகர், அம்பத்தூர், அண்ணாநகர், பெசன்ட் நகர், தியாகராய நகர், பெருங்குடி, காரம்பாக்கம், மீனம்பாக்கம், கோடம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய 15 இடங்களில் போகி மற்றும் போகி தினத்திற்கு முந்தைய நாள் சுற்றுப்புற காற்றின் தர ஆய்வு வாரியத்தால் நடத்தப்பட்டது. இதன் ஆய்வறிக்கை வாரிய இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது. முடிவுகள் இணைப்பு–8B கொடுக்கப்பட்டுள்ளன.

## 9.2 பொதுமக்கள் பங்கேற்பு

### 9.2.1 தமிழ்நாடு பசுமை முதன்மையாளர் விருது 2024

தமிழ்நாடு அரசின், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை 2021 ஆம் முதல் ஒவ்வொரு வருடமும் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்த பங்களிப்பை வழங்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு பசுமை சாம்பியன் விருதுகளை வழங்கி வருகின்றது. விருதுக்காக ஒவ்வொரு ஆண்டும் 100 நபர்கள்/நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஒவ்வொரு விருதுக்கும் ரூ.1 லட்சம் பரிசுத் தொகை வழங்கப்படும். சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் கல்வி மற்றும் பயிற்சி உட்பட, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, புதிய புதுமையான பசுமை தயாரிப்புகளுக்கான ஆராய்ச்சி மற்றும் அறிவியல் ஆய்வுகள்/பசுமை தொழில்நுட்பம், நிலையான வளர்ச்சி, திடக்கழிவு மேலாண்மை, நீர் பாதுகாப்பு மற்றும் நீர்நிலைகள் பாதுகாப்பு, காலநிலை மாற்றம் தழுவல் மற்றும் தணிப்பு, உமிழ்வு குறைப்பு, கட்டுப்பாடு மற்றும் மறுசுழற்சி, சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு, பாதுகாப்பு நடவடிக்கைகள், கடலோரப் பகுதி பாதுகாப்பு போன்றவற்றிற்கு முன்மாதிரியான பங்களிப்பை வழங்கிய அமைப்பு / கல்வி நிறுவனங்கள் / பள்ளிகள் / கல்லூரிகள்/ குடியிருப்பு நல சங்கங்கள் / தனிநபர்கள் / உள்ளூர் அமைப்புகள்/தொழில்களுக்கு பசுமை முதன்மையாளர் விருது வழங்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பரிசீலனை செய்து தேர்ந்தெடுக்கப்பட்ட 94 நபர்கள்/நிறுவனங்களுக்கு உலக சுற்றுச்சூழல் தினத்தன்று பசுமை சாம்பியன் விருதுகள் வழங்கப்பட்டன. சென்னை மண்டலத்தை சேர்ந்தவர்களுக்கு மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற துறை அமைச்சர் விருதுகளை வழங்கினார்; பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் பசுமை சாம்பியன் விருதுகளை வழங்கினர்.

### 9.2.2 மாவட்ட ஆட்சியர்களுக்கு பசுமை விருது

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஒவ்வொரு ஆண்டும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்காக முன்மாதிரியான பங்களிப்பை வழங்கிய மாவட்ட ஆட்சியர்களைப் பாராட்டி பசுமை விருதுகளை வழங்கி வருகிறது.

## IX. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பொது மக்கள் பங்கேற்பு

11.11.2011 தேதியிட்ட வாரிய செயல்முறை ஆணை எண் 21 இன் அடிப்படையில் சுற்றுச்சூழல் துறையில் பாராட்டத்தக்க செயல்பாடுகளுக்காக 2011 ஆம் ஆண்டு முதல் வாரியம் மாவட்ட ஆட்சியர்களுக்கு இவ்விருதினை வழங்கி வருகிறது. 2024 ஆம் ஆண்டிற்கான விருதுக்குரிய முன்மொழிவுகள் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்டு வருகின்றன.

**-oOo-**

# அத்தியாயம் – X

## வாரியம் ஆற்றும் இதர முக்கிய பணிகள்

**10.1 மிக்–ஜாம் புயல் காரணமாக தி/ள். சென்னை பெட்ரோலிய கார்ப்பரேஷன் நிறுவன (CPCL) வளாகத்திலிருந்து எண்ணெய் கசிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய குறிப்பு**

2023–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் உருவான மிக்–ஜாம் புயல், சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவன (சிபிசிஎல்) வளாகம் உள்ளிட்ட மணலி தொழில்துறை பகுதியில் பெரும் வெள்ளத்தை ஏற்படுத்தியது. இவ்வெள்ளத்தால் சிபிசிஎல் நிறுவனத்திலிருந்து வெளியேறிய எண்ணெய் கழிவுகள் பக்கிங்காம் கால்வாய் மற்றும் கொசஸ்தலையாறு வழியாக எண்ணூர் முகத்துவார பகுதிகளில் படிந்து நிறுவனத்தை சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை பெரிதும் பாதித்தது.

அரசு மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய (TNPCB) வழிகாட்டுதலின் கீழ், சிறப்பு சுத்திகரிப்பு நிறுவனங்கள், திறமையான மனிதவளம் மற்றும் நவீன இயந்திரங்கள் / உபகரணங்களின் உதவியுடன், பக்கிங்காம் கால்வாய், கொசஸ்தலையார் ஆறு மற்றும் எண்ணூர் கழிமுகப் பகுதியில் 12.12.2023 முதல் 31.12.2023 வரை CPCL நிறுவனத்தால் மாசு நீக்கப் (Remediation) பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க, தமிழ்நாடு அரசு 10.12.2023 தேதியிட்ட அரசாணை எண் 178, ஒரு தொழில்நுட்ப குழுவினை அமைத்தது. இக்குழுவானது, களஆய்வுகள் மேற்கொண்டு சிபிசிஎல் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகைகளுடன் கூடிய தங்களது இறுதி அறிக்கையை சமர்ப்பித்தது. தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரையின்படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974 இன் பிரிவு 33 A இன் கீழ், 11.01.2024 மற்றும் 05.02.2024 தேதியிட்ட நடப்பாணை மூலம், மணலி மற்றும் எண்ணூர் பகுதியின் மறுசீரமைப்பு தொடர்பான தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு சில

நிபந்தனைகளுடன்கூடிய வழிகாட்டுதல்களை சிபிசில் நிறுவனத்திற்கு வழங்கியது.

சென்னை, இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (ஐஐடி), அப்பகுதியில் கசிந்த எண்ணெய்யின் அளவை கணக்கிட்டு 01.07.2024 அன்று இறுதி அறிக்கையை சமர்ப்பித்தது. இந்த அறிக்கையை மதிப்பீடு செய்த தொழில்நுட்பக் குழு, கசிந்த மொத்த எண்ணெய் அளவு 647 கன மீட்டர் அல்லது 517 டன் என தீர்மானித்தது. பின்னர், குழு, கசிவு காரணமாக ஏற்பட்ட சேதங்களைக் கணக்கிட்டு, ரூ.73,68,00,906/–ஐ (ரூபாய் எழுபத்து மூன்று கோடியே அறுபத்தெட்டு இலட்சத்து தொள்ளாயிரத்து ஆறு மட்டும்) சமூக–பொருளாதார சேதங்கள் மற்றும் சுற்றுச்சூழல் சேதங்களாக சிபிசிஎல் நிறுவனத்திடமிருந்தது வசூலிக்கப் பரிந்துரைத்தது.

இதன் அடிப்படையில், 21.11.2024 அன்று சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 இன் பிரிவு 5 இன் கீழ், ரூ.73,68,00,906/– தொகையை ஏன் எண்ணெய் கசிவினால் ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீடாக விதிக்கக்கூடாது என முகாந்திர கடிதம் அனுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளிக்கும் விதமாக 05.12.2024 தேதியிட்ட கடித்ததில் சிபிசிஎல் நிறுவனம், இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அளவு அதிகமாக இருப்பதால், மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் முன் ஆட்சேபனைகள் தாக்கல் செய்யப்படும் என்று பதிலைச் சமர்ப்பித்தது. எவ்வாறாயினும், சிபிசிஎல், எண்ணெய் அளவு மதிப்பீட்டு அறிக்கை எதையும் சமர்ப்பிக்காததாலும், எண்ணெய் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும், ரூ.73,68,00,906/– (ரூ.73.68 கோடி) தொகையை சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 இன் பிரிவு 5 இன் கீழ் செலுத்துமாறு சிபிசிஎல் நிறுவனத்திற்கு 20.02.2025 தேதியிட்ட வாரிய நடப்பாணை மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**10.2 தி/ள். கோரமண்டல் இண்டர்நேஷனல் லிமிடெட், எண்ணூர், தொழிற்சாலையில் ஏற்பட்ட அம்மோனியா வாயு கசிவு பற்றிய குறிப்பு**

26.12.2023 அன்று இரவு 11.30 மணியளவில் எண்ணூரில் உள்ள M/s.கோரமண்டல் இன்டர்நேஷனல் லிமிடெட் உரத்தொழிற்சாலையின், கடலுக்கு அடியில் உள்ள அமோனியா கொண்டு செல்லும் குழாயில், குளிரூட்டலுக்கு முந்தைய செயல்பாட்டின் போது அம்மோனியா வாயு கசிவு ஏற்பட்டது.

தொழிற்சாலை உடனடியாக அம்மோனியா வாயுவை தீப்பிழம்புக்கு (Flared) திருப்பி குழாய்க்கு அழுத்தத்தைக் குறைக்க தொடங்கி அதிகாலை 12.30 மணியளவில் அதை முடித்தது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய அலுவலர்கள், சம்பவ இடத்திற்கு விரைந்து தொழிற்சாலை மற்றும் எரிவாயு குழாய் அமைக்கும் இடங்களை ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின் அடிப்படையில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 27.12.2023 நாளிட்ட நடவடிக்கையில், சில நிபந்தனைகளுக்கு இணங்கவும், கடலுக்கு அப்பால் குழாய் செயல்பாடுகள் மற்றும் அம்மோனியா பரிமாற்ற செயல்பாட்டை உடனடியாக நிறுத்தி வைக்கவும் உத்தரவுகளைப் பிறப்பித்தது.

மேலும், வாரியம், 27.12.2023 நாளிட்ட நடவடிக்கையில், அம்மோனியா கசிவுக்கான காரணத்தைக் கண்டறியவும், நிகழ்வு குறித்த விரிவான அறிக்கையை பரிந்துரைகளுடன் வாரியத்திற்கு வழங்கவும், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை–இந்திய தொழில்நுட்ப நிறுவனம், மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம், தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தொழில்துறை பாதுகாப்பு மற்றும் சுகாதார துறை மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூத்த அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவை அமைத்தது.

இக்குழு தனது அறிக்கையை சில பரிந்துரைகளுடன் சமர்ப்பித்தது; அதை வாரியம் அரசுக்கு அனுப்பியது. அரசு அனைத்துப் பரிந்துரைகளையும் அமல்படுத்துமாறு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு அறிவுறுத்தியது.

## X வாரியம் ஆற்றும் இதர முக்கிய பணிகள்

மேற்கூறியவற்றின் அடிப்படையில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 11.03.2024 நாளிட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986 இன் பிரிவு 5 இன் கீழ் விதிமீறலுக்கான இடைக்கால சுற்றுச்சூழல் இழப்பீடாக ரூ.5,92,50,888/-ஐ செலுத்த வேண்டும் என உத்தரவு பிறப்பித்தது. தொழிற்சாலை 14.03.2024 நாளிட்ட ரசீது எண் 988, கோரப்பட்ட தொகையை செலுத்தியுள்ளது.

மேலும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 14.02.2024 நாளிட்ட நடவடிக்கையில், நீர் சட்டம், 1974 இன் பிரிவு 33A இன் கீழ் மற்றும் பிரிவு 31A இன் காற்று சட்டம், 1981 இன் கீழ் தொழில்நுட்பக் குழுவின் மற்ற பரிந்துரைகளுக்கு இணங்க தொழிற்சாலைக்கு ஆணை வழங்கியுள்ளது.

மேலும் தொழில்நுட்பக் குழுவின் அறிக்கையில், "காற்றுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒப்புதல் உத்தரவின் நிபந்தனைகளுக்கு இணக்கமின்மை காரணமாக தொழிற்சாலை மற்றும் அதன் ஆக்கிரமிப்பாளர் மீது கிரிமினல் வழக்கைப் பதிவு செய்ய தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்பது பரிந்துரைகளில் ஒன்றாகும். இது தொடர்பாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்கிடையில், சென்னையில் உள்ள மாண்புமிகு தேசிய பசுமைத் தீர்ப்பாயம் இந்த அம்மோனியா வாயு கசிவு விவகாரத்தை தானாக முன்வந்து வழக்கு தாக்கல் செய்தது.

தற்போது மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம் (SZ), சென்னை அதன் 21.05.2024 தேதியிட்ட ஆணையில் (2023-இன் அசல் விண்ணப்ப எண்.195/2023 (SZ) & அசல் விண்ணப்ப எண்.81/ 2024 (SZ) - ல் பின்வரும் வழிகாட்டுதல்களோடு இவ்வழக்கை முடித்து வைத்துள்ளது.

I. தி/ள். கோரமண்டல் இண்டர்நேஷனல் லிட் தொழிற்சாலை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர் குழுவால் (Technical committee) வழங்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

II. தி/ள். கோரமண்டல் இண்டர்நேஷனல் லிட் தொழிற்சாலை, கடலில் பதித்துள்ள அம்மோனியா குழாயின் செயல்பாட்டினை, தொழில்துறை

பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகம் (DISH) , இந்திய கப்பல் பதிவு (IRS) மற்றும் தமிழ்நாடு கடல்சார் வாரியம் ஆகியோரிடமிருந்து ஆட்சேபனை இல்லா சான்றிதழ் பெற்ற பிறகே துவக்க வேண்டும்.

III. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இத்தொழிற்சாலையின் செயல்பாட்டினை கூர்ந்து கண்காணிக்க வேண்டும்.

IV. தொழில்துறை பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகம் (DISH) மற்றும் தமிழ்நாடு கடல்சார் வாரியம், கடலில் பதித்துள்ள அம்மோனியா குழாயின் செயல்பாட்டினை, ஆய்வுசெய்த பிறகே ஆட்சேபனை இல்லா சான்றிதழ் வழங்க வேண்டும்.

V. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தி/ள். கோரமண்டல் இண்டர்நேஷனல் லிட் தொழிற்சாலை அவர்களால் செலுத்தப்பட்ட ரூ.5.92 கோடி சுற்றுச்சூழல் இழப்பீட்டு தொகையினை எண்ணூர் தொழிற்சாலை பகுதியில் சுற்றுச்சூழலை தணிப்பதற்காக உபயோகப்படுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தீர்ப்பாயத்தின் ஆணையை பின்பற்றுமாறு தொழிற்சாலைக்கு வாரியம் 04.06.2024 தேதியிட்ட கடிதத்தில் அறிவுறித்தியுள்ளது.

தற்போது, பாஸ்போரிக்/சல்பூரிக் அமில ஆலைகளின் செயல்பாடுகளை மட்டும் மீண்டும் தொடங்குவதற்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடம் தொழிற்சாலை அனுமதி கோரியுள்ளது. இத்தொழிற்சாலையின் கோரிக்கையின் பேரில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தொழில்நுட்ப குழுவிடம், உர ஆலை பற்றிய விரிவான ஆய்வை மேற்கொண்டு, மேல் நடவடிக்கைக்கான பரிந்துரைகளுடன் விரிவான அறிக்கையை ஒரு வாரத்திற்குள் அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

19.06.2024 அன்று தொழில்நுட்பக் குழு தொழிற்சாலையை ஆய்வு செய்து, சில நிபந்தனைகளுக்கு இணங்க பாஸ்போரிக் ஆசிட் ஆலை மற்றும் சல்பூரிக் அமில ஆலையின் செயல்பாடுகளை அனுமதிக்கப் பரிந்துரைக்கும்

அறிக்கையை அளித்துள்ளது. அதன்படி, தொழில்நுட்பக் குழு பரிந்துரைத்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அம்மோனியா சேமிப்பு வசதி இல்லாத பாஸ்போரிக் அமில ஆலை மற்றும் சல்பூரிக் அமில ஆலையை மட்டும் மீண்டும் இயக்குவதற்கு TNPCB 12.08.2024 தேதியிட்ட கடிதம் மூலம் அனுமதி அளிக்கப்பட்டது.

மேலும், மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் 21.05.2024 தேதியிட்ட ஆணைக்கிணங்க, சுற்றுச்சூழல் இழப்பீடு ரூ.5.92 கோடியை உரிய முறையில் பயன்படுத்த, எண்ணூரில் தொழில்துறை பகுதியில் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து வாரியத்தின் 05.09.2024 தேதியிட்ட கடிதத்தில் விரிவான முன்மொழிவு சென்னை மாவட்ட ஆட்சியரிடம் இருந்து கோரப்பட்டது. அதைத் தொடர்ந்து, மணலி & எண்ணூர் பகுதியின் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக மணலி–எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துயிரமைப்பு மன்றம் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், தொழில்நுட்ப குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்க, சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அலட்சியம் காட்டியதற்காக தி/ள். கோரமண்டல் இன்டர்நேஷனல் லிட்–க்கு எதிராக திருவொற்றியூர் குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு இதுவரை எண்ணிடப்படவில்லை.

### 10.3 மணலி–எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துயிரமைப்பு மன்றம்

மணலி மற்றும் எண்ணூர் பகுதிகளில் ஏற்பட்ட எண்ணெய் கசிவு மற்றும் அமோனியா வாயு கசிவு சம்பவங்களின் விளைவாக, மணலி மற்றும் எண்ணூர் பகுதிகளின் விரிவான வளர்ச்சிக்காக, பசுமையாக்குதல், நீர்நிலை மற்றும் சதுப்புநில மறுசீரமைப்பு, திடக்கழிவு மேலாண்மை, மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் சமூக உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றை மேற்கொள்வதற்காக மணலி–எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துயிரமைப்பு மன்றத்தை உருவாக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்து, 15.03.2024 அன்று அரசாணை எண் 43 வெளியிட்டுள்ளது.

## X வாரியம் ஆற்றும் இதர முக்கிய பணிகள்

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் கீழ் இயக்கப்படும் இம்மன்றமானது இலாப நோக்கற்ற நிறுவனமாக, நிறுவனங்கள் சட்டம் 2013 இன் பிரிவு 8 இன் கீழ் நிறுவப்பட்டுள்ளது.

மணலி–எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துயிரமைப்பு மன்றம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாசுக் கட்டுப்பாடு, சுற்றுச்சூழல் புனரமைப்பு மற்றும் சமூக ஆதரவு முன்னுரிமைகள் குறித்து விவாதிக்க 06.09.2024 மற்றும் 07.11.2024 ஆகிய நாட்களில் பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர குடி நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம், நீர்வளத் துறை, வனத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு முக்கிய துறைகளுடன் பங்குதாரர் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இவ்விவாதங்கள் மற்றும் முன் ஆயத்த நடவடிக்கைகளின் அடிப்படையில், இக்குழு 19.12.2024 அன்று முறையாக அமைக்கப்பட்டது.

மணலி மற்றும் எண்ணூர் பகுதியில் உள்ள துறைகள் முழுவதும் ஒருங்கிணைந்த செயலாக்கத்தைத் தொடங்குவதற்காக, முதல் இயக்குநர்கள் குழுக் கூட்டமும் மூன்றாவது பங்குதாரர்கள் கூட்டமும் 10.01.2025 அன்று நடைபெற்றன.

சுற்றுச்சூழல் கண்காணிப்பு மற்றும் அவசரகால நடவடிக்கையை வலுப்படுத்த, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 30.09.2024 அன்று மணலி–எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துயிரமைப்பு மன்றத்தின் கீழ், ஒரு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மற்றும் மணலி மற்றும் எண்ணூருக்கான இரண்டு பறக்கும் படைகளைக் கொண்ட ஒரு பிரத்யேக மையத்தை நிறுவியது. அக்டோபர் 2024 முதல், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மற்றும் பறக்கும் படைகள் இணைந்து, மணலி–எண்ணூர் தொழில்துறை மண்டலங்களில் தொடர்ச்சியான சுற்றுச்சூழல் கண்காணிப்பு மற்றும் விரைவான நடவடிக்கையை உறுதி செய்கின்றன.

பங்குதாரர்கள் கூட்டங்களின் போது, மணலி மற்றும் எண்ணூர் பகுதியின் விரிவான மேம்பாட்டிற்காக திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு துறை

சார்ந்த அலுவலகங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டன. அதன்படி, மணலி–எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துயிரமைப்பு திட்டத்தின் கீழ், சாலை ஓர மரக்கன்றுகள் நடவு மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட சாலை சுத்தம் செய்தல் ஆகியவற்றிற்காக பெருநகர சென்னை மாநகராட்சி விரிவான முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தது. முன்மொழிவுகளின் அடிப்படையில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், 25.03.2025 அன்று ரூ.17.85 கோடி நிதியை விடுவித்தது.

**10.4 தமிழ் நாட்டில் உள்ள கல் உடைக்கும் தொழிற்சாலைகள் மற்றும் எம்–சாண்டு தொழிற்சாலைகள் நிலை தொடர்பான குறிப்பு**

வாரியம், தனது 31.07.2019 நாளிட்ட நடப்பாணை மூலம் இரு கல் உடைக்கும் தொழிற்சாலைகளுக்கு இடையேயான 1 கிலோ மீட்டர் தூர அளவுகோலை தளர்த்தியது. இதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்ப எண்.26786/2019 வழக்கில், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் தளர்த்தப்பட்ட நிபந்தனைக்கு தடை விதித்து, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட்டது. அதன்படி, வாரியம் சென்னை தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் (NEERI) நிறுவனத்திற்கு ஆய்வுப் பணியை ஒப்படைத்ததுடன், அதன் அறிக்கை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

தொடர்ந்து, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 07.02.2024 அன்று வழங்கிய உத்தரவின் மூலம் விண்ணப்ப எண் 26786/2019 மனுவை முடித்து வைத்து, மனுதாரரை மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயத்தை (NGT) அணுகுமாறு உத்தரவிட்டது. அதன்படி, மனுதாரர் மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம் (தெற்கு மண்டலம்) முன்பு அசல் மனு எண் 12/2024 எனும் மனுவை தாக்கல் செய்தார். இம்மனு 08.08.2024 அன்று வழங்கப்பட்ட உத்தரவின் மூலம் முடிக்கப்பட்டு, அதில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு சில வழிமுறைகள் வழங்கப்பட்டன.

## X வாரியம் ஆற்றும் இதர முக்கிய பணிகள்

மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவுகளின் அடிப்படையில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியமானது, மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (CPCB), வனத்துறை, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை NEERI மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய அதிகாரிகள் அடங்கிய கூட்டு குழுவை அமைத்து, மேற்கண்ட உத்தரவினைத் திறம்பட அமல்படுத்துவதற்கான அறிக்கை மற்றும் பரிந்துரைகளை வழங்க உத்தரவிட்டது.

இக்கூட்டு குழு தனது அறிக்கையை சில பரிந்துரைகளுடன் சமர்ப்பித்தது. இவ்வறிக்கை 25.11.2024 அன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தில் பரிசீலனைக்கு வைக்கப்பட்டது. அக்கூட்டத்தில், வரைவு வழிகாட்டுதல்களை வனத்துறை, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, புவியியல் மற்றும் சுரங்கத்துறை உள்ளிட்ட பிற பங்குதாரர்களின் கருத்துகளைப் பெறுவதற்காக முன்வைத்து, அவற்றை வழிகாட்டுதல்களில் இணைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் தலைமையில் 23.01.2025 அன்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கூட்டம் நடத்தப்பட்டது. பின்னர், இவ்விஷயம் மீண்டும் வாரியக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு, வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இதன் அடிப்படையில், 06.05.2025 அன்று வெளியிடப்பட்ட நடவடிக்கை எண் 116 மூலம் கல் உடைக்கும் தொழிற்சாலைகளுக்கான திருத்திய வழிகாட்டுதல்கள் வாரியத்தால் வெளியிடப்பட்டன.

### 10.5 செங்கல் சூளைகள் பற்றிய குறிப்பு

#### 10.5.1 கோயம்புத்தூர் மாவட்டத்தின் தடாகம் பகுதிகளில் அமைந்துள்ள செங்கல் சூளைகள்:

**மாண்புமிகு தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் 13.05.2022 நாளிட்ட அசல் மனு எண்.119/2021 ஆணை அடிப்படையில், சுற்றுச்சூழலுக்கு சேதம் விளைவித்ததற்காக சுற்றுச்சூழல் இழப்பீடு விதிக்கும் நோக்கில், கோயம்புத்தூர் மாவட்டத்தின் தடாகம் பகுதியில் அமைந்துள்ள 185 செங்கல் சூளைகளுக்கு தமிழ்நாடு மாசுன் கட்டுப்பாடு வாரியம் முகாந்திரக் கடிதத்தை வெளியிட்டுள்ளது. இதில் அதிருப்தியடைந்த செங்கல் சூளைகள், 2022 ஆம் ஆண்டின் WP எண் 34793 இல் மாண்புமிகு சென்னை**

**உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுவைத் தாக்கல் செய்துள்ளன. மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் 27.03.2024 நாளிட்ட உத்தரவின்படி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தனது 22.12.2023 நாளிட்ட பணி ஆணை மூலம், "தடாகம் பகுதியில் அமைந்துள்ள செங்கல் சூளைகளுக்கான சுற்றுச்சூழல் இழப்பீடு மதிப்பீடு" செய்வதற்கான பணியை எரிசக்தி மற்றும் வள நிறுவனத்திற்கு ஒதுக்கியது.**

**10.5.2 கோயம்புத்தூர் மாவட்டத்தின் பிற பகுதிகளில் அமைந்துள்ள செங்கல் சூளைகள்**

**2019 ஆம் ஆண்டின் W.P. எண் 27356 இல், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 24.11.2022 நாளிட்ட உத்தரவுகளின் அடிப்படையில், 2021–ஆம் ஆண்டு 9090 மற்றும் 2019–ஆம் ஆண்டு 28475–ஆம் எண் கொண்ட உத்தரவுகளின் அடிப்படையில், கோயம்புத்தூர் வடக்கு, தெற்கு மற்றும் தடாகம் பகுதிகளில் இயங்கி வரும் 118 செங்கல் சூளைகளை மூடி, மின் இணைப்பை துண்டிக்க வாரியம் 20.12.2022 அன்று நடப்பாணை வழங்கியுள்ளது.**

**தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் முறையான அனுமதியின்றி செங்கல் சூளைகள் இயக்கப்படவில்லை என்பதை உறுதிசெய்யும் வகையில் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குநருக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. மேலும், மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட போதிலும் தொடர்ந்து இயக்கியதற்காக, செங்கல் சூளைகளுக்கு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 27.04.2023 அன்று வெளியிட்ட நடைமுறை ஆணையின்படி மாவட்ட ஆட்சியருக்கு மூடுதல் உத்தரவு பிறப்பித்தது.**

**இதற்கிடையில், மாண்புமிகு உயர் நீதிமன்றம் 10.01.2025 தேதியிட்ட, 2019 ஆம் ஆண்டின் W.P. எண் 27356 மற்றும் பிற வழக்குகளில், எரிசக்தி மற்றும் வள நிறுவனம் நடத்தி வரும் சுற்றுச்சூழல் இழப்பீட்டு குறித்த தற்போதைய ஆய்வில் பேரூர் பகுதி செங்கல் சூளைகளையும் சேர்க்குமாறு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன.**

**10.6 தி/ள். தமிழ்நாடு குரோமேட்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட்**

தி/ள்.தமிழ்நாடு குரோமேட்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் (டி.சி.சி.எல்) என்பது ராணிப்பேட்டையில் உள்ள குரோமியம் மாசுபட்ட தொழிற்சசாலை. இத்தொழிற்சாலை இயக்கப்பட்ட காலத்தில் (1975 – 1995), 2.27 லட்சம் டன் குரோமியம் கலந்த அபாயகரமான கழிவு இத்தொழிற்சாலையின் பின்புறத்திலுள்ள 2 ஹெக்டேர் திறந்தவெளி நிலத்தில் கொட்டி வைக்கப்பட்டுள்ளது. குரோமியம் கலந்த கழிவுகளில் இருந்து வரும் கசிவினால் அந்த பகுதியில் நிலம், நிலத்தடிநீர் மாசுபடுகிறது.

## X வாரியம் ஆற்றும் இதர முக்கிய பணிகள்

தற்போதைய மற்றும் முந்தைய நிர்வாகத்தைன் கண்டறிய முடியாததால், மேலும் மாசுபடுவதைத் தடுக்க தமிழ்நாடு மாசுக் கட்டுபாடு வாரியம், தி/ள். ஈ ஆர் எம் இந்தியா பிரைவேட் லிமிடெட் சமர்ப்பித்த விரிவான திட்ட அறிக்கையில் (Detailed Project Report) பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, இவ்விடத்தை சீர்படுத்துவதற்கான இடைக்கால சீரமைப்பு நடவடிக்கையை செயல்படுத்த முடிவு செய்துள்ளது.

வாரிய தீர்மானம் எண். 285-2-2 dt: 30.11.2021 இடைக்கால சீரமைப்பு நடவடிக்கையை ரூ.12 கோடி செலவில் தி/ள். இர்ஆம் (ERM) பிரைவேட் லிமிடெட்டின் விரிவான திட்ட அறிக்கையின்படி செயல்படுத்த ஒப்புதல் அளித்தது.

இதற்கிடையில், மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம் (தெற்கு மண்டலம்) தானாக முன்வந்து O.A.No. 186/2020 இல், வழக்குப்பதிவு செய்தது, மேலும் 02.09.2022 தேதியிட்ட அதன் இறுதி உத்தரவில் ஒருவருட காலத்திற்குள் இடைக்கால சீரமைப்பு நடவடிக்கையை அமல்படுத்துமாறு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு உத்தரவைப் பிறப்பித்தது.

அதன்படி, இடைக்கால நடவடிக்கையை செயல்படுத்த தொழில்நுட்ப ஆவணம் மற்றும் டெண்டர் ஆவணம் தயாரிக்கும் பணிகள் தி/ள். ஸ்ட்ராடஸ் என்விரான்மென்டல் பிரைவேட் லிமிடெட்-க்கு வழங்கப்பட்டது. அதன்படி, சமர்பிக்கப்பட்ட தொழில்நுட்ப ஆவணத்தின்படி 15 கோடி மதிப்பீட்டில், தற்போதுள்ள அபாயகரமான கழிவுகளை மூடுதல், வடிகால் அமைத்தல், மழைநீர் சேகரிப்பு குளம் அமைத்தல் மற்றும் புதிய சுற்றுச்சுவர் கட்டுதல் ஆகியவை அடங்கிய திட்டம் செயல்படுத்தபட உள்ளது.

16.10.2023 தேதியிட்ட வாரிய தீர்மானம் எண். 292-2-4-ல் சுற்றுச்சூழல் இழப்பீடு (EC) நிதியிலிருந்து இடைக்கால சீரமைப்பு நடவடிக்கையை செயல்படுத்த ரூ.15 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

குரோம் மாசுபட்ட இடத்தில், இடைக்காலத் தீர்வு நடவடிக்கையை செயல்படுத்துவதற்கான திட்ட மற்றும் ஏல மேலாண்மை ஆலோசனை சேவைகளுக்கு பொருத்தமான ஏஜென்சியைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டது. அதன்படி தி/ள். சென்னை சுற்றுச்சூழல் மேலாண்மை நிறுவனமானது (CEMCOT) தேர்ந்தெடுக்கப்பட்டு, பணி ஆணை 11.11.2024 அன்று வாரியத்தால் ரூ.46,02,000/- (ஜி.எஸ்.டி.யுடன்) மதிப்பீட்டிற்கு வழங்கப்பட்டது.

21.11.2025 தேதியிட்ட B.P. எண். 191 இல், ராணிப்பேட்டையில் உள்ள TCCL-இல் ஜிஎஸ்டி உட்பட மொத்தம் ரூ.19.35 கோடி செலவில் இடைக்கால சீரமைப்பு

நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கான முன்மொழிவை வாரியம் அங்கீகரித்துள்ளது. மேலும், ஜிஎஸ்டி உட்பட ரூ.19,34,93,526.18 என்ற திருத்தப்பட்ட விலைப்புள்ளியில், தி/ள். Jathin Infra Pvt Ltd.–இன் முன்மொழிவை வாரியம் தேர்ந்தெடுத்துள்ளது. மேலும், ஏலதாரருக்கான பணி உத்தரவு செயல்பாட்டில் உள்ளது.

**10.7 தி/ள். ஹிந்துஸ்தான் யூனிலிவர் லிமிடெட் (HUL), கொடைக்கானல் பாதரசம் கசிவினால் பாதிக்கப்பட்ட பகுதியினை சீர்செய்தல்**

தி/ள். ஹிந்துஸ்தான் யுனிலீவர் லிமிடெட் (HUL) (முன்னர் M/s பாண்ட்ஸ் இந்தியா லிமிடெட் என்ற பெயரில்) அதன் செயல்பாட்டுக் காலத்தில் (1984–2001) மருத்துவ கண்ணாடி பாதரச வெப்பமானியை தயாரித்தது. மார்ச் 2001 இல், பாதரசம் கலந்த கண்ணாடி துணுக்குகளை முறையாக அகற்றாததால் புகார்கள் பெறப்பட்டன. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், மார்ச் 2001 இல் தொழிற்சாலையை மூடுவதற்கான உத்தரவைப் பிறப்பித்தது.

தொழிற்சாலையில் உள்ள அபாயகரமான கழிவுகளை அமெரிக்காவில் உள்ள மறுசுழற்சியாளர் தி/ள்.பெத்லகாம் அப்பராட்டஸ் கம்பெனிக்கு மார்ச் 2003 ஆம் ஆண்டு அனுப்பப்பட்டது. தொழிற்சாலையில் உள்ள பாதரசம் உபயோகப்படுத்தப்பட்ட இயந்திரங்கள் மற்றும் செயல்முறைப் பகுதிகள் விஞ்ஞான முறைப்படி மே 2006–ம் ஆண்டு தொழிற்சாலையில் சுத்திகரிப்பு செய்யப்பட்டது. தொழிற்சாலை செயல்பாடுகள் மூடப்பட்ட பின் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் மதிப்பீடு ஆய்வுகளின்படி, தொழிற்சாலை வளாகத்திற்குள் உள்ள மண் பாதரசத்தால் மாசுபட்டுள்ளது என்பது கண்டறியப்பட்டது. அறிவியல் ஆய்வுகளின் அடிப்படையில், அறிவியல் நிபுணர்குழு, தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் (NEERI), மத்திய மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலம், சீரமைப்புத்தரம் 20mg/Kg என நிர்ணயிக்கப்பட்டது.

மேலும், மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயம் மற்றும் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால், மண்ணில், பாதரசத்தின் அளவு 20 mg/kg என்ற சீரமைப்புத்தரத்தை, 01.11.2018 & 05.03.2019 தேதியிட்ட உத்தரவின் படி ஒப்புக்கொள்ளப்பட்டது.

தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் (NEERI) மண் சீரமைப்புக்கு பின்வரும் ஐந்து நிலை பணிகளான மண் அகழ்வு, கழுவுதல், மறுசீரமைப்பு, ஒரே தன்மையாக மாற்றி நிரப்புதல் போன்றவற்றை பரிந்துரைத்துள்ளது. இதனை மேற்கொள்வதற்கான இசைவாணையை 31.03.2025 வரை வாரியம் வழங்கியுள்ளது. NEERI மேற்பார்வையின் கீழ் மண் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்ட செயலாக்கத்தை மேற்பார்வையிட அறிவியல் நிபுணர் குழு (SEC)

அமைக்கப்பட்டுள்ளது. அறிவியல் நிபுணர் குழுவின் உறுப்பினர்கள், மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய அதிகாரிகளின் கண்காணிப்பு மற்றும் பரிந்துரையின் கீழ் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனை வாரியம் கண்காணித்து வருகிறது.

17,858 சதுர மீட்டர் பரப்பளவில் வரையறுக்கப்பட்ட மாசுபட்ட பகுதிகளை சரிசெய்துள்ளது. இது தொடர்பாக, ஐஐடி மெட்ராஸ், தமிழ்நாட்டின் கொடைக்கானலில் உள்ள தி/ள். ஹிந்துஸ்தான் யுனிலீவர் லிமிடெட் (HUL இல் மாசுபட்ட மண்ணை சரிசெய்வதன் செயல்திறனை மதிப்பிடுவதற்கான தள சீரமைப்பு சரிபார்ப்பு ஆய்வு அறிக்கையை (பகுதி–I) சமர்ப்பித்துள்ளது. மேலும், கட்டிடம் மற்றும் கட்டிடத்தைச் சுற்றியுள்ள பகுதியைத் தவிர, முழு தொழிற்சாலைப் பகுதியும் சீரமைக்கப்பட்டுள்ளதாக அறிக்கை அளித்துள்ளது. மேலும், சுத்திகரிக்கப்பட்ட மண் 20 மி.கி//கிலோ என்ற சீரமைப்பு அளவுகோல்களைப் பூர்த்தி செய்கிறது. மேலும், கட்டிடம் இடிக்கப்பட்ட பிறகு, கீழே உள்ள மண் சரிபார்க்கப்பட்டு, கட்டிடத்தைச் சுற்றியுள்ள சுமார் 5960 ச.மீ. பரப்பளவு உள்ள இடம் சீரமைப்பு செய்யப்படும் என்றும் கூறியுள்ளது.

மேலும், தி/ள்.ஹிந்துஸ்தான் யுனிலீவர் லிமிடெட் (HUL) கொடைக்கானலில் உள்ள மண் சுத்திகரிப்பு தளத்திலிருந்து மீட்கப்பட்ட பாதரசத்தைப் பயன்படுத்தி ஆயுர்வேத மருந்து தயாரிப்பதற்கு அனுமதி வழங்குமாறு MoEF&CC–யிடம் கோரிக்கை விடுத்திருந்தது. தி/ள். Shree Dhootapapeshwar Ltd. மண் சுத்திகரிப்பு தளத்திலிருந்து மீட்கப்பட்ட பாதரசத்தின் அளவு, தரம் மற்றும் சேமிப்பு குறித்த மதிப்பீட்டை மேற்கொண்டு, தி/ள்.ஹிந்துஸ்தான் யுனிலீவர் லிமிடெட் (HUL) –இன் கோரிக்கையைப் பரிசீலிப்பதற்காக ஒரு அறிக்கையை வழங்குமாறு MoEF&CC TNPCB–யிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மண் சுத்திகரிப்பு செய்யப்பட்ட இடத்திலிருந்து மீட்கப்பட்ட பாதரசத்தின் அளவு, தரம் மற்றும் சேமிப்பு குறித்த மதிப்பீட்டை மேற்கொள்ளவும், தி/ள்.ஹிந்துஸ்தான் யுனிலீவர் லிமிடெட் (HUL) இன் கோரிக்கையைப் பரிசீலிப்பதற்காக ஒரு அறிக்கையை சமர்ப்பிக்கவும் TNPCB–யிடம் MoEF&CC கேட்டுக் கொண்டுள்ளது. மேலும், DEE/DGL, தி/ள்.இந்துஸ்தான் யூனிலீவர் லிமிடெட்டின் சுத்திகரிப்பு இடத்தை ஆய்வு செய்து, அந்த இடத்தில் சுத்திகரிப்பு செயல்முறையிலிருந்து மீட்கப்பட்ட பாதரசத்தை சரிபார்த்து, தளத்தில் சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் சோதனை அறிக்கைகளை வாரியத்திற்கு வழங்கியுள்ளது, மேலும், இது, தேவையான நடவடிக்கைகளுக்காக MoEF&CC–க்கு அனுப்பப்படுகிறது.

## X வாரியம் ஆற்றும் இதர முக்கிய பணிகள்

### 10.8 தி/ள். பாரத் பெட்ரோலியம் கார்பரேஷன் லிமிடெட், தண்டையார்பேட்டை, சென்னை பற்றிய குறிப்பு

2013–ம் ஆண்டு சென்னை தண்டையார்பேட்டை பகுதியில், தி/ள். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமான சென்னை துறைமுகத்திலிருந்து தண்டையார்பேட்டையில் உள்ள எண்ணெய் கிடங்கிற்கு எடுத்துச் செல்லும் பூமிக்கடியில் புதைக்கப்பட்ட எண்ணெய் குழாயில் கசிவு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சென்னை ஐ.ஐ.டி. நிறுவனத்தின் மூலம் எண்ணெய் கசிவு ஏற்பட்ட பகுதியில் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, எண்ணெய் கலந்த நிலத்தடி நீரை அகற்றுதல் பணி தொடங்கப்பட்டது. அதன்படி, 18 ஆழ்குழாய் கிணறுகளிலிருந்து 208 கிலோலிட்டர் மாசுபட்ட நிலத்தடி நீரும், 7.3 கிலோலிட்டர் மிதக்கும் எண்ணெயும் பிரிக்கப்பட்டது.

அதுமட்டுமல்லாமல், மறுசீரமைப்பு பணியின் ஒரு பகுதியாக, மண்ஆவியாதல் பிரித்தெடுத்தல் (SVE) அமைப்புகள் இரண்டும் இயக்கப்பட்டன.

மாண்புமிகு பசுமை தீர்ப்பாயத்தின் (தென் மண்டலம்) மனு எண் 176/2013–ன் 07.09.2022 தேதியிட்ட ஆணையில், (i) தி/ள். இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் (ICMR) கள ஆய்வை முடிக்க பொதுமக்கள் ஒத்துழைக்காததால் ஏற்படும் தடையை கருத்தில் கொண்டு, பாதிக்கப்பட்ட பகுதியில் தரமான சுகாதார ஆய்வை முடிக்க கூடுதல் ஆறு மாத கால அவகாசம் வழங்கலாம். (ii) தி/ள். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் மண்ஆவியாதல் பிரித்தெடுத்தல் அமைப்பு–I இன் செயல்பாடு தற்போதைய இடத்திலிருந்து நீக்கப்பட்டு, நிலத்தடி நீரில் பெட்ரோலிய கலவைகள் இருப்பதாகக் கூறப்படும் அருகிலுள்ள குடியிருப்பு பகுதிக்கு மாற்றலாம். (iii) SVE II அமைப்பு மேலும் 6 மாதங்களுக்கு இயக்கப்படலாம் அல்லது மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் அதன் செயல்பாடு நீட்டிக்கப்படலாம். (iv) தி/ள். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம், பாதிக்கப்பட்ட பகுதியின் நிலத்தடி நீரை சீரான இடைவெளியில் வெளியேற்றி, தற்போதுள்ள சுத்திகரிப்பு அமைப்பில் குறைந்தபட்சம் ஆறு மாத காலத்திற்கு சுத்திகரிக்க அறிவுறுத்தலாம் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பபாடு மற்றும் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் 13.06.2024 அன்று சீரமைப்புப் பணிகளை மதிப்பாய்வு செய்தனர். மாசுபட்ட பகுதியில் இருந்து 98% TPH (Total Petroleum Hydro Carbon) அகற்றப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதியைச் சுற்றி நாளொன்றுக்கு 15 கிலோலிட்டர் என்ற விகிதத்தில் தொடர்ந்து நிலத்தடி நீரை பம்ப் செய்து சுத்திகரிக்க BPCL–க்கு அறிவுறுத்தப்பட்டது.

குறைந்த TPH காரணமாக, SVE–II அமைப்பிற்குப் பதிலாக கார்பன் உறிஞ்சுதல் வடிகட்டி அமைப்பை நிறுவி இயக்கவும், மாசுபட்ட நிலத்தின் மேற்பகுதியில் உள்ள புதிய கண்காணிப்பு கிணறுகளிலிருந்து மாதிரிகளை சேகரிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில், "சென்னை, தண்டையார்பேட்டையில் வசிப்பவர்களிடையே பெட்ரோலிய எண்ணெய் கசிவின் காரணமாக ஏற்பட்ட தாக்கம்" குறித்த ஆய்வு அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. வாரியம், இந்த ஆய்வின் பரிந்துரையின் அடிப்படையில், ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவ மையத்தின் ஆலோசனையைப் பெற அணுகியுள்ளது.

மேலும், கார்பன் உறிஞ்சுதல் அமைப்பைப் பயன்படுத்தி SVE அமைப்பை மீண்டும் நிறுவும் பணி 07.02.2025 அன்று தி/ள். Stratus Environmental Pvt Ltd நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதாக தி/ள். BPCL தெரிவித்துள்ளது; மற்றும் பிற ஆரம்ப நடவடிக்கைகள் நடந்து வருகின்றன.

### 10.9 சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்யப்பட்ட அறிவிப்புகளின் நிலை

2023–2024 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் கோரிக்கைகள் தொடர்பாக சட்டமன்றத்தில் மதிப்பிற்குரிய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகளின் நிலைமை பின்வருமாறு:

| வ.எண் | அறிவிப்பு விவரம் | நிலை |
|---|---|---|
| 1 | மணலி–எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துயிரமைப்பு மன்றம் (MERRC) | MERRC 19.12.2024 அன்று பதிவு செய்யப்பட்டது. இரண்டு பறக்கும் படைகளுடன் (Flying Squads) கூடிய பிரத்யேக மையம் (Dedicated Command Centre) அமைக்கப்பட்டுள்ளது. தொடர்புடைய துறை அதிகாரிகளுடன் 06.09.2024, 07.11.2024 மற்றும் 10.01.2025 ஆகிய தேதிகளில் மூன்று பங்குதாரர் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மணலி தொழில்துறை சங்கம் இதுவரை 77,250 மரக்கன்றுகளை நட்டுள்ளது. |
| 2 | தமிழ்நாட்டின் ஒரு மில்லியனுக்கும் | சென்னை பெருநகர மாநகராட்சியின் |

## X வாரியம் ஆற்றும் இதர முக்கிய பணிகள்

| வ.எண் | அறிவிப்பு விவரம் | நிலை |
|---|---|---|
| | மேற்பட்ட மக்கள் தொகையுள்ள நகரங்களில் ஒலி மாசு வரைபடம் (Noise Mapping) தயாரித்தல் | 15 மண்டலங்களில் சென்சார்கள் நிறுவுதல் தொடர்பாக IIT–M நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டுள்ளது. திருவொற்றியூர், மணலி, மாதவரம், அம்பத்தூர், வளசரவாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய 6 மண்டலங்களில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. |
| 3 | காற்று மற்றும் நீர் பகுப்பாய்விற்காக எடுத்துச் செல்லக்கூடிய கையடக்க / நவீன உபகரணங்களுடன் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய (TNPCB) ஆய்வகங்களை மேம்படுத்துதல் | நிறைவு பெற்றது |
| 4 | தமிழ்நாடு கடலோர மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் மாசு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் | நடைபெற்று வருகின்றன |

| | | |
|---|---|---|
| 5 | அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு மாதமும் மாபெரும் நெகிழிக் கழிவு சேகரிப்பு இயக்கம் நடத்துதல் | பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு இயக்கம்: முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிகழ்ச்சிகள் முறையே 25.01.2025, 22.02.2025 மற்றும் 22.03.2025 அன்று நடத்தப்பட்டன. மொத்தம் 271 டன் பிளாஸ்டிக் சேகரிக்கப்பட்டு, அதில் 178 டன் பிளாஸ்டிக் மறுசுழற்சி மற்றும் இணை செயலாக்க நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| 6 | தமிழ்நாடு குறுங்காடுகள் திட்டம் – காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள தொழில்துறை நிறுவனங்களின் மூலம் 1,000 குறுங்காடுகளை (உள்நாட்டுத் தாவரங்களை மட்டும் கொண்ட) உருவாக்க ஊக்குவித்தல் | 1,000 குறுங்காடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. 4 பகுதிகளுக்கான புவிசார் குறியிடும் பணிகள் நிறைவடைந்துள்ளன. மூன்றாம் தரப்பு மதிப்பீடு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் (TNAU) மூலம் மேற்கொள்ளப்பட உள்ளது. |
| 7 | ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் (Research and Development Center) அமைத்தல் | இத்திட்டத்தை தமிழ்நாடு காவல்துறை வீடமைப்பு கழகம் (TNPHC) மேற்பார்வை செய்து வருகிறது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்குத் (CMDA) தேவையான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. |
| 8 | கைவிடப்பட்ட / நிராகரிக்கப்பட்ட மீன்பிடி வலைகளை சேகரித்து மறுசுழற்சிக்கு அனுப்பும் திட்டம் (தமிழ்நாடு மீன்பிடி வலை (Fishnet) முயற்சிகள் (TANFI) | 14.08.2025 அன்று காசிமேட்டில் சேகரிப்பு மையம் அமைக்கப்பட்டது. 31.03.2025 நிலவரப்படி, மொத்தம் 13.3 டன் பயன்படுத்தப்படாத மீன்பிடி வலைகள் சேகரிக்கப்பட்டு, அதில் 10.71 டன் மறுசுழற்சி நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. |
| 9 | சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம், 1986–ன் செயல்படுத்தல் மற்றும் மேம்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு தேசிய அங்கீகார வாரியத்தின் (NABL) அங்கீகாரம் பெறுதல் | தேசிய அங்கீகார வாரியத்தின் (NABL) மதிப்பீடு நிறைவடைந்து, அங்கீகாரம் பெறப்படுவது நிலுவையில் உள்ளது. |
| 10 | தமிழ்நாட்டின் தொழில்துறை பகுதிகளின் சுற்றுவட்டாரங்களில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துடன் (TNAU) இணைந்து மண் தர வரைபடம் (Soil Quality Mapping) தயாரித்தல் | நடைபெற்று வருகிறது. |

# X வாரியம் ஆற்றும் இதர முக்கிய பணிகள்

**10.10 பொது மக்கள் கேட்புரை**

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006–ன் படி சில குறிப்பிட்ட வகையான தொழிற்சாலைகள் அதன் உற்பத்தி அளவினைப் பொறுத்து இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் அல்லது மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு குழுமத்திடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதியினை முன்னதாகப் பெறுவது அவசியமாகும். சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தினை அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடத்துகின்றது. கூட்டத்தில் பொது மக்களின் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு அதன் அறிக்கை மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகம் அல்லது மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை வாரியம் 199 திட்டங்களுக்கு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டங்களை நடத்தியுள்ளது. அதன் விவரங்கள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் www.tnpcb.gov.in பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை நடத்தப்பட்ட குறிப்பிடத்தக்க பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் முகவரி | பொது விசாரணை தேதி |
|---|---|---|
| 1 | தர்மபுரி மாவட்டம், தர்மபுரி வட்டம், ஆதகபாடி கிராமத்திலும் மற்றும் நல்லம்பள்ளி வட்டம், அதியமான்கோட்டை, தடங்கம் மற்றும் பாலஜங்கமனஹள்ளி கிராமங்களிலும் அமைந்துள்ள தி/ள். தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டு கழகம் லிமிடெட் (SIPCOT) மூலம் தொழில் பூங்கா மேம்பாட்டு திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 11.06.2024<br>காலை 11. 00 மணி |
| 2 | காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், மேற்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள S.F. எண் 12, 14, 17, 22, 23, 25, 51, 52, 53 மற்றும் 57 (பி) கொண்ட தி/ள். நோபிள் டெக் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின், எம்.எஸ். பிலெட்ஸ் மற்றும் ரோல்டு தயாரிப்புகள் உற்பத்தி திறன் 1,08,000 TPA இலிருந்து 5,76,000 TPA ஆகவும், தற்போதுள்ள ஸ்பாஞ்ச் இரும்பு (90,000 TPA) மற்றும் கைப்பற்றிய மின்நிலையம் (12 மெகாவாட்) உடன், கூடுதல் 15.32 ஹெக்டேர் நிலப்பரப்பில் விரிவாக்கத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 07.08.2024<br>காலை 10.30 மணி |
| 3 | கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், சிக்காரம்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள S.F. எண் 76/1A மற்றும் 76/1B (பி) கொண்ட தி/ள். ஸ்ரீ ப்ளூ மெட்டல்ஸ், 5.07.22 ஹெக்டேர் பரப்பளவில் ரஃப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 21.08.2024<br>காலை 11. 00 மணி |
| 4 | கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், தோரப்பள்ளி அக்ரஹாரம் கிராமத்தில் அமைந்துள்ள S.F. எண் 679/2 (பி) கொண்ட தி/ள். ஸ்ரீ நவலடியான் எஞ்சினியர்ஸ், 5.00.0 ஹெக்டேர் பரப்பளவில் ரஃப் ஸ்டோன் குவாரி குத்தகைத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 27.08.2024<br>காலை 11. 30 மணி |

## X வாரியம் ஆற்றும் இதர முக்கிய பணிகள்

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் முகவரி | பொது விசாரணை தேதி |
|---|---|---|
| 5 | கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், தோரப்பள்ளி அக்ரஹாரம் கிராமத்தில் அமைந்துள்ள S.F. எண் 679/2 (பகுதி–5) கொண்ட தி/ள். பி. பாலசுப்ரமணியன், 5.00.0 ஹெக்டேர் பரப்பளவில் ரஃப் ஸ்டோன் குவாரி குத்தகைத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 27.08.2024 காலை 10.30 மணி |
| 6 | திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், பழைய கும்மிடிப்பூண்டி கிராமத்தில் அமைந்துள்ள S.F. எண் 629 (பி), 631 (பி), 630/2 (பி), 630/3 (பி), 630/4, 632/4 (பி) மற்றும் 634 (பி) ஆகிய நிலங்களில் அமைந்த SIPCOT தொழிற்பேட்டையில் உள்ள தி/ள். விகி இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தற்போதைய ஸ்டீல் ரோலிங் மில்லில் ஸ்டீல் மெல்டிங் ஷாப் இணைப்புடன் விரிவாக்கத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 27.08.2024 காலை 10.30 மணி |
| 7 | திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், நூத்துலாபுரம் கிராமத்தில் அமைந்துள்ள S.F. எண் 133/1A2 மற்றும் 154/11 (பட்டா நிலம்) கொண்ட தி/ள். திண்டுக்கல் வேஸ்ட் மேனேஜ்மென்ட் பிரைவேட் லிமிடெட் (CBMWTF), 0.7165 ஹெக்டேர் பரப்பளவில் செயல்படும் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 28.08.2024 காலை 11. 00 மணி |
| 8 | கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், தோரப்பள்ளி அக்ரஹாரம் கிராமத்தில் அமைந்துள்ள S.F. எண் 679/2 (பகுதி–3) கொண்ட தி/ள். திரிவேணி எர்த் மூவர்ஸ் பிரைவேட் லிமிடெட், 5.00.0 ஹெக்டேர் பரப்பளவில் ரஃப் ஸ்டோன் குவாரி குத்தகைத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 28.08.2024 காலை 10.30 மணி |
| 9 | கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், தோரப்பள்ளி அக்ரஹாரம் கிராமத்தில் அமைந்துள்ள S.F. எண் 679/2 (பகுதி–4) கொண்ட தி/ள். திரிவேணி எர்த் மூவர்ஸ் பிரைவேட் லிமிடெட், 5.00.0 ஹெக்டேர் பரப்பளவில் ரஃப் ஸ்டோன் குவாரி குத்தகைத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 28.08.2024 காலை 11. 30 மணி |
| 10 | திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை வட்டம், கஸ்தூரிரெங்காபுரம் பகுதி–II கிராமத்தில் அமைந்துள்ள S.F. எண் 196/2B (பி), 197/2B (பி), 195/2A (பி), 195/2B (பி) மற்றும் 195/3 (பி) கொண்ட தி/ள். எஸ். வேலு, 8.34.40 ஹெக்டேர் பரப்பளவில் ரஃப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 29.08.2024 காலை 10.00 மணி |
| 11 | தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வட்டம், முள்ளக்காடு கிராமத்தில் அமைந்துள்ள வி.ஓ.சி துறைமுகத்தில், தி/ள். வி.ஓ. சிதம்பரனார் துறைமுக ஆணையத்தின் மூலம் DBFOT முறையில் துறைமுகப் புனரமைப்பு, அகழ்வாராய்ச்சி மற்றும் தடுப்பணை கட்டுமானத்துடன், வெளிப்புற துறைமுகப் படகுத்துறை எண் I முதல் IV வரை கன்டெய்னர் முனையங்களாக மேம்படுத்தும் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 03.09.2024 காலை 11. 00 மணி |
| 12 | திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், சிறுபுழல்பேட்டை மற்றும் கெட்னமல்லீ கிராமங்களில் அமைந்துள்ள S.F. எண் 997/1A, 1B, 1C மற்றும் 501/1, 2, 3A முதலிய நிலங்களில், தி/ள். சென்னை யுனைடெட் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் ஸ்டீல் மெல்டிங் ஆலை திறன் 23,720 TPA இலிருந்து 2,00,000 TPA ஆகவும், ரோலிங் மில் திறன் 61,200 TPA இலிருந்து 2,00,000 TPA ஆகவும் மேம்படுத்தும் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 03.09.2024 காலை 10.30 மணி |
| 13 | விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், பெள்ளக்குப்பம் கிராமத்தில் அமைந்துள்ள TANSIDCO தொழிற்பேட்டையின் பிளாட் எண் 27 மற்றும் 28–ல், தி/ள். ஓமேக்ஸா ஃபார்முலரி பிரைவேட் லிமிடெட் மூலம், ஆண்டுக்கு 520 கிலோ திறனில் மோனோக்ளோனல் ஆண்டிபாடிகள் உற்பத்தி மற்றும் மாதத்திற்கு 1,64,000 எண்ணிக்கையில் (சிரிஞ்ச் மற்றும் வைல்) மருந்துத் தயாரிப்பு திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 18.09.2024 காலை 11. 00 மணி |

| | | |
|---|---|---|
| 14 | கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டம், ஜகதேவிபாளையம் கிராமத்தில் அமைந்துள்ள S.F. எண் 294/4, 295/2A, 295/2B, 295/2C, 298/2, 298/1C2, 301/1 (பி), 301/2 மற்றும் 301/3A கொண்ட தி/ள். கருணை கிரானைட்ஸ் பிரைவேட் லிமிடெட், 11.59.0 ஹெக்டேர் பரப்பளவில் சாம்பல் நிற கிரானைட் குவாரி குத்தகைத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 18.09.2024<br>நண்பகல் 12.00 மணி |
| 15 | கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டம், சூலமலை கிராமத்தில் அமைந்துள்ள S.F. எண் 283 (பகுதி) கொண்ட தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட், 34.35.5 ஹெக்டேர் பரப்பளவில் சாம்பல் நிற கிரானைட் குவாரி குத்தகைத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 26.09.2024<br>காலை 11. 00 மணி |
| 16 | புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், உடையலிபட்டி கிராமத்தில் அமைந்துள்ள பல்வேறு S.F. எண்கள் கொண்ட தி/ள். ஆர். குமார், 6.73.0 ஹெக்டேர் பரப்பளவில் ரஃப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி குழுமத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 01.10.2024<br>காலை 11. 00 மணி |
| 17 | சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், சின்னகௌண்டனூர் கிராமத்தில் அமைந்துள்ள S.F. எண் 48, 63 மற்றும் 66 கொண்ட தி/ள். தி இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், 8.00.5 ஹெக்டேர் பரப்பளவில் (அரசாணை எண் 76) மோத்தையனூர் சுண்ணாம்பு சுரங்கத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 01.10.2024<br>காலை 10.30 மணி |
| 18 | சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், சின்னகௌண்டனூர் கிராமத்தில் அமைந்துள்ள S.F. எண் 15/1, 16/2, 18, 19/3, 19/4, 19/5B, 20/2B, 21, 22/1, 23/2, 23/3A, 24/2, 24/3, 24/4, 25/2, 25/3, 25/4, 32, 33/1A, 34/1, 34/5, 37/1, 37/3, 37/4, 50/8, 50/9, 50/10, 51/2B, 51/3, 52/6B, 52/7B, 54/3B, 55/4, 62/4, 62/5, 64/4A, 67/1A, 68/1, 1654/1 மற்றும் 154/2 கொண்ட தி/ள். தி இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், 50.84 ஹெக்டேர் பரப்பளவில் (அரசாணை எண் 211) மோத்தையனூர் சுண்ணாம்பு சுரங்கத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 01.10.2024<br>காலை 10.30 மணி |
| 19 | விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், சிறுவளை கிராமம், S.F. எண் 170/1 கருப்பு கிரானைட் குவாரி திட்டம் 20.28.0 ஹெக்டேர், M/s. தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட். | 03.10.2024<br>காலை 11. 00 மணி |
| 20 | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம் (தற்போது நம்பியூர் வட்டம்), கரபாடி கிராமத்தில் அமைந்துள்ள S.F. எண் 348/1 (பி) 348/2 (பி) 348/5, 348/6, 349/1, 349/3, 349/4, 350/1, 350/2, 350/3, 350/5 (பி) மற்றும் 350/6 கொண்ட தி/ள். மீனாட்சி கிரானைட்டுகள், 8.96.6 ஹெக்டேர், பரப்பளவில் பல வண்ண கிரானைட் குவாரி திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 17.10.2024<br>காலை 10. 00 மணி |
| 21 | கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் தாலுகாவின் ஆதனூர் கிராமத்தில் உள்ள RD 74/3 மைலில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே (கீழ் அணைக்கட்டில் இருந்து 12 கி.மீ. கீழ்நோக்கி) தலை மதகுகள் கொண்ட தடுப்பணை கட்டுதல். சாகுபடி செய்ய கூடிய கட்டளைப் பகுதி – 6601 ஹெக்டேர் (53 கிராமங்கள்) மற்றும் மயிலாடுதுறை தாலுகா மற்றும் மாவட்டத்தின் குமாரமங்கலம் கிராமம். சாகுபடி செய்ய கூடிய கட்டளைப் பகுதி – 2558 ஹெக்டேர் (35 கிராமங்கள்) மற்றும் மொத்த சாகுபடி செய்ய கூடிய கட்டளைப் பகுதி – 9159 ஹெக்டேர். வடக்கு மற்றும் தெற்கு ராஜன் கால்வாய்கள் வழியாக ஆயக்கட்டுக்கான வளர்ச்சி மேம்பாடு. | 23.10.2024<br>காலை 11. 00 மணி |
| 22 | கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் தாலுகாவின் ஆதனூர் கிராமத்தில் உள்ள RD 74/3 மைலில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே (கீழ் அணைக்கட்டில் இருந்து 12 கி.மீ. கீழ்நோக்கி) தலை மதகுகள் கொண்ட தடுப்பணை கட்டுதல். சாகுபடி செய்ய கூடிய கட்டளைப் பகுதி – 6601 ஹெக்டேர் (53 கிராமங்கள்) மற்றும் மயிலாடுதுறை தாலுகா மற்றும் மாவட்டத்தின் குமாரமங்கலம் கிராமம். சாகுபடி செய்ய கூடிய கட்டளைப் பகுதி – 2558 | 29.10.2024<br>காலை 11. 00 மணி |

| | | |
|---|---|---|
| | ஹெக்டேர் (35 கிராமங்கள்) மற்றும் மொத்த சாகுபடி செய்ய கூடிய கட்டளைப் பகுதி – 9159 ஹெக்டேர். வடக்கு மற்றும் தெற்கு ராஜன் கால்வாய்கள் வழியாக ஆயக்கட்டுக்கான வளர்ச்சி மேம்பாடு. | |
| 23 | விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தாலுகா, தீவனூர் கிராமத்தில் அமைந்துள்ள S.F. எண்கள் 30/2, 30/3, 30/4 கொண்ட M/s. சக்திபிரியன் சிமென்ட்ஸ், 500 TPD திறன் கொண்ட தனித்த சிமெண்ட் அரைக்கும் அலகு திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 13.11.2024 காலை 11. 00 மணி |
| 24 | அரியலூர் மாவட்டம், அரியலூர் தாலுகா, ஒட்டக்கோவில் கிராமத்தில் அமைந்துள்ள தி/ள். ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட், S.F. எண்கள் 204/10, 204/11, 204/12, 204/13, 204/14, 204/15 57.36.0 ஹெக்டேர் பரப்பளவுள்ள சுண்ணாம்பு சுரங்க திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 19.11.2024 காலை 11. 00 மணி |
| 25 | அரியலூர் மாவட்டம், அரியலூர் தாலுகா, பெரியநாகலூர் கிராமத்தில் அமைந்துள்ள தி/ள். ராம்கோ சிமென்ட்ஸ் லிமிடெட், 53.32.0 ஹெக்டேர் பரப்பளவுள்ள சுண்ணாம்புச் சுரங்கங்கள் மற்றும் S.F. எண்கள் 51/2, 51/3, 51/4, 51/5A, 51/5B, 51/C மற்றும் தொடர்புடைய பகுதிகளை ஒருங்கிணைக்கும் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 22.11.2024 காலை 11. 00 மணி |
| 26 | செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் தாலுகா, நெல்வாய்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள தி/ள்.சுந்தரமூர்த்தி, அகழப்பட்ட கனிம பொருட்களை சேமித்து வைப்பதற்கோ அல்லது நிராகரிக்கப்பட்ட பொருட்களை கொட்டுவதற்கோ அல்லது வாகனங்களை நிறுத்துவதற்கோ அல்லது சுரங்க அலுவலகம் அமைப்பதற்கோ முன்மொழியப்பட்ட 1.63.98 ஹெக்டேர் (S.F. எண்கள்.88/1, 88/2A மற்றும் 88/4A, சுரங்கப் பகுதி) மற்றும் 0.72.0 ஹெக்டேர் (S.F. எண்கள். 75/6, 75/7, 75/8, 75/9, 85/1, 85/2, தொகுதி–II) பரப்பளவுள்ள திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 03.12.2024 காலை 11. 00 மணி |
| 27 | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் தாலுகா, குரும்பபாளையம் கிராமத்தில் அமைந்துள்ள S.F. எண்.151 பகுதி & 152/4, தி/ள். என்.டி. சாய்சாடா, 10.49.36 ஹெக்டேர் பரப்பளவுள்ள சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி முன்மொழியப்பட்டுள்ளது. | 04.12.2024 காலை 11. 00 மணி |
| 28 | சென்னை மாவட்டம், திருவொற்றியூர் தாலுகா, எர்ணாவூர் கிராமத்தில் அமைந்துள்ள தி/ள். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு அரசு நிறுவனத்தின் எண்ணூர் TPS–இல், 1×660 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலைய விரிவாக்கத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. | 20.12.2024 காலை 11. 00 மணி |
| 29 | சேலம் மாவட்டம், மேட்டூர் தாலுகாவில் அமைந்துள்ள தி/ள் கெம்பிளாஸ்ட் சன்மார் லிமிடெட் நிறுவனத்தில், பாலி வினைல் குளோரைடு (PVC) ஒட்டு ரெசின் உற்பத்தி அளவை 66,000 TPA இலிருந்து 1,45,000 TPA ஆக உயர்த்துவதற்கான விரிவாக்கம் முன்மொழியப்பட்டுள்ளது. | 23.12.2024 காலை 11. 30 மணி |
| 30 | சேலம் மாவட்டம், மேட்டூர் தாலுகாவில் அமைந்துள்ள தி/ள் கெம்பிளாஸ்ட் சன்மார் லிமிடெட் நிறுவனத்தின் குளிர்பதன வாயுக்கள் உற்பத்தி பிரிவில், உற்பத்தி திறன் உயர்த்துவதற்கான விரிவாக்கம் முன்மொழியப்பட்டுள்ளது. | 23.12.2024 காலை 11.00 மணி |
| 31 | கரூர் மாவட்டம், குளித்தலை தாலுக்கா, நல்லூர் கிராமத்தில் அமைந்துள்ள S.F. எண்.351 பகுதியில், 251.5 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள தி/ள் கே. சக்திவேல் நிறுவனத்தின் பல வண்ண கிரானைட் குவாரி | 24.12.2024 நண்பகல் 12.00 மணி |
| 32 | கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை தாலுக்கா, ஜக்கேரி கிராமத்தில் அமைந்துள்ள S.F..எண். 486 (பகுதி) மற்றும் 736/4 ஆகிய நிலங்களில், 27.04.5 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள். தமிழ்நாடு மினெரல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் வண்ண கிரானைட் குவாரி குத்தகை முன்மொழியப்பட்டுள்ளது. | 07.01.2025 காலை 11.00 மணி |

| | | |
|---|---|---|
| 33 | காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, மாத்தூர் கிராமம், ஒரகடம் SIPCOT தொழில்துறை வளர்ச்சி மையத்தில் அமைந்துள்ள தி/ள். அப்பல்லோ டயர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் கேப்டிவ் பவர் பிளாண்ட் பகுதியில், நிலக்கரி அடிப்படையிலான வெப்ப மின் நிலையத்தின் மின் உற்பத்தி திறனை 4.6 மெகாவாட் இலிருந்து 14.6 மெகாவாட் ஆக உயர்த்துவதற்கான விரிவாக்கம் முன்மொழியப்பட்டுள்ளது. | 20.02.2025<br>காலை 10.30 மணி |
| 34 | 5.53.0 ஹெக்டேர் பரப்பளவில் முன்மொழியப்பட்ட சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி, தி/ள். .A K ப்ளூ மெட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட், S.F.எண்.204/1, 204/2, 204/3, 205, 206/1, 206/2,206/3, 206/4, 206/5, 206/6, 206/7, 206/8, 206/9, பெரியவெண்மணி கிராமம், மதுராந்தகம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம். | 05.03.2025<br>காலை 11.00 மணி |
| 35 | ராமசாமி ராஜா நகர் சிமென்ட் ஆலையின் விரிவாக்கம் முன்மொழியப்பட்டது, மேலும் புதுப்பிக்கப்பட்ட பழைய பாதை–II – யைச் சேர்ப்பதன் மூலம் ஏற்கனவே உள்ள பாதைகள் I & IIIக்கான செயல்பாடுகள் (மேம்படுத்தப்பட்டபடி அனைத்து 3 பாதைகளின் செயல்பாடுகள்) & செயல்பாட்டு நாட்களை 320 நாட்களில் இருந்து 345 நாட்களாக அதிகரித்தல்.<br><br>தி/ள். ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட் நிறுவனம், விருதுநகர் மாவட்டம் மற்றும் தாலுகாவில் உள்ள தம்மநாயக்கன்பட்டி மற்றும் வச்சகாரப்பட்டி கிராமங்களில், கிளிங்கர் உற்பத்தியை 1.44 MTPA இலிருந்து 2.76 MTPA ஆகவும், சிமெண்ட் உற்பத்தியை 2.70 MTPA இலிருந்து 4.00 MTPA ஆகவும் உயர்த்த திட்டமிட்டுள்ளது. | 11.03.2025<br>காலை 11.00 மணி |
| 36 | 7 முன்மொழியப்பட்ட சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி 13.89.40 ஹெக்டேர் பரப்பளவில், தி/ள். கோடங்கிபாளையம் & இச்சிபட்டி சாதாரண கற்கள் மற்றும் கிராவல் குவாரி– குழுமம், S.F.எண்.35/2B, 35/2C, 27/2A, 63/3A(பகுதி), 54/1(பகுதி), 55/1A1(பகுதி), 38/3, 39/1, 26/2, 26/3, கோடங்கிபாளையம் 26/4, 26/5A, 26/5B, & 11/2A பல்லடம் தாலுகா, திருப்பூர் மாவட்டம், இச்சிபட்டி கிராமத்தின் கிராமம் 150/2A, 150/2C, 150/2D & 150/2E. | 27.03.2025<br>காலை 11.00 மணி |

### 10.11 புகார் பிரிவு

#### 10.11.1 பொது இணையதள புகார்கள்

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு காரணமாக நீர், காற்று, ஒலி மற்றும் வாகனப்புகை மாசு தொடர்பாக தனிநபர்கள், அரசு சாரா மற்றும் பல்வேறு அமைப்புகளிடமிருந்து புகார்கள் பெறப்படுகின்றன. புகார்களின் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்வதற்காக, சென்னையில் உள்ள தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகத்தில் "புகார் மையம்" ஒன்று எல்லா வேலை நாட்களிலும் செயல்பட்டு வருகிறது.

பொது மக்கள் இந்த மையத்தினை எளிதில் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்க மற்றும் தகுந்த வழிமுறைகள் பெற கட்டணமில்லா தொலைபேசி எண். 18004256750 மற்றும் மின்னஞ்சல் complaint@tnpcb.gov.in ஒதுக்கப்பட்டுள்ளது. கள அலுவலர்களிடமிருந்து புகார்களின் மீதான அறிக்கைகள் மற்றும் பரிந்துரைகள் பெறப்பட்டு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

## X வாரியம் ஆற்றும் இதர முக்கிய பணிகள்

மின் ஆளுமையின் ஒரு பகுதியாக, இணையதளம் மூலமாக பொது மக்கள் புகார் தீர்வு காணும் முறையை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மார்ச் 1, 2016 முதல் அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகின்றது (www.pcbolgprs.in). புகார்களின் நிலையை நிகழ்நிலை (ஆன்லைன்) மூலமாகவும் கண்காணிக்க முடியும். 2024–25 ஆம் ஆண்டில் மொத்தம் 3,597 புகார்கள் பெறப்பட்டு, அவை விசாரணை செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டு முடிக்கப்பட்டன.

**10.11.2 உள்ளடக்கிய ஒருங்கிணைந்த மற்றும் எளிமையான பொதுமக்கள் குறைதீர்க்கும் உதவி மையம் (IIPGCMS)**

வாரியம் தனது தலைமை அலுவலகத்தில் IIPGCMS வகை புகார்களை கையாள தனி பிரிவு ஒன்றை அமைத்துள்ளது. ஏப்ரல் 1, 2024 முதல் மார்ச் 31, 2025 வரை மொத்தம் 3,199 புகார்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**10.12 மற்ற துறைகளுக்கு நிதியளித்தல்**

25.07.2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பின்வரும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டங்களுக்கு வாரிய செயல்முறை ஆணை எண்.82, நாள்: 22.10.2022 –இன் படி மற்ற அரசுத் துறைகள் மற்றும் அரசின் மூன்று முதன்மைப் திட்டங்களுக்கு ரூ.496.64 கோடி நிதியளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

## X வாரியம் ஆற்றும் இதர முக்கிய பணிகள்

பின்வரும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டங்களுக்கு ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் நிதியளிக்கப்பட்டது.

| 31.03.2025 நிலவரப்படி பிற துறைகளுக்கு வழங்கப்பட்ட நிதி விவரங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| **வரிசை எண்** | **திட்டத்தின் பெயர்** | **ஒதுக்கீடு (₹ கோடி)** | **விடுவிக்கப்பட்ட தொகை (₹ கோடி)** | **அரசாணை எண் & தேதி** | **வாரிய செயல் முறை ஆணையின் நாள்** |
| **வனத்துறை** | | | | | |
| 1 | பசுமை தமிழ்நாடு இயக்கம் (GTM) | 50 (2024–2025) | 50 | அரசாணை எண் 169 ECCF FR.6 Dt. 18.11.2023 | 10.01.2025 |
| 2 | நீலகிரி வரையாடு (மொத்தம்– 25.14 கோடி) | 2.02 (2022–2023) | 0.6* | அரசாணை எண் சு.சூ.வ.கா.நி.மா துறை 222 நாள் 28.12.2022 | 18.10.2024 |
| | | 14.39 (2023–2024) | 1.442 | | 04.11.2024 |
| 3 | வனவிலங்கு மீட்பு மற்றும் மறுவாழ்வு மையம் நிறுவுதல் | 19.5 (2022–2023) | 14.7728 | அரசாணை எண் சு.சூ.வ.கா.நி.மா துறை No.11 நாள் 12.01.2024 | 21.08.2024 |
| 4 | ஆமை பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு மையம், சென்னை | 6.3 (2023–2024) | 0.2478 | அரசாணை எண் சு.சூ.வ.கா.நி.மா துறை 20 நாள் 20.01.2023 | 09.08.2024 |
| 5 | கண்ணகி நகர் பசுமை தூதர்கள் – 2 நாள் நிகழ்ச்சி, புதுச்சேரி | 0.0325 (2024–2025) | 0.0325 | D.F.O. Cennai Letter C. No. 2859/2023 P, நாள் 23.10.2024 | 08.10.2024 |
| 6 | கண்ணகி நகர் பசுமை தூதர்கள் – 2 நாள் நிகழ்ச்சி, கோயம்புத்தூர் | 0.0375 (2024–2025) | 0.0375 | | 17.10.2024 |
| 7 | நீலகிரி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் E-Pass அமைப்பு | 0.29 (2024–25) | 0.29 | அரசாணை எண் சு.சூ.வ.கா.நி.மா துறை No.44 நாள் 17.02.2025 | 24.03.2025 |

| 31.03.2025 நிலவரப்படி பிற துறைகளுக்கு வழங்கப்பட்ட நிதி விவரங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| **வரிசை எண்** | **திட்டத்தின் பெயர்** | **ஒதுக்கீடு (₹ கோடி)** | **விடுவிக்கப்பட்ட தொகை (₹ கோடி)** | **அரசாணை எண் & தேதி** | **வாரிய செயல் முறை ஆணையின் நாள்** |
| | அமலாக்கத்திற்கான கைப்பேசி செயலி | | | | |
| 8 | கெய்ர்ன் மலை பகுதியில் சோலை பாதுகாப்பு மையம் நிறுவுதல் | 4.60 | 4.60 | அரசாணை எண் சு.சூ.வ.கா.நி.மா துறை 101 நாள் 18.06.2024 | 28.02.2025 |
| 9 | நீலகிரி மற்றும் கொடைக்கானல் சுற்றுலா தாங்கும் திறன் (Carrying Capacity) ஆய்வு | 1.84 | 1.84 | அரசாணை எண் சு.சூ.வ.கா.நி.மா துறை 209 நாள் 29.10.2024 | 29.01.2025 |
| **சுற்றுச்சூழல் துறை** | | | | | |
| 10 | பசுமை பள்ளி | 4.4 (2023–2024) II phase | 4.4 | அரசாணை எண் சு.சூ.வ.கா.நி.மா துறை 140 நாள் 18.01.2024 | 05.09.2024 |
| | | 20 (2024–2025) | 20 | அரசாணை எண் சு.சூ.வ.கா.நி.மா துறை 156 நாள் 13.09.2024 | 10.12.2024 |
| 11 | தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் | 2.5 (2023–24) | 2.5 | அரசாணை எண் சு.சூ.வ.கா.நி.மா துறை 06 நாள் 04.01.2023 | 03.04.2024 |
| 12 | தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் (TNCCM) – "Lifestyle for Climate" under Mission LiFE | 0.5 (2023–2024) | 0.5 | அரசாணை எண் சு.சூ.வ.கா.நி.மா துறை 218 நாள் 14.11.2023 | 09.08.2024 |
| | **Total** | **126.41** | **101.2626** | | |

### 10.13 அலுவலகக் கட்டிடங்கள் கட்டுமானம்

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களுக்கு புதிய அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், ஏற்கனவே கட்டப்பட்டுள்ள அலுவலக கட்டிடங்களின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கும் வாரிய தலைமை அலுவலகத்தில் கட்டுமான பிரிவு இயங்கி வருகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாட்டில் 38 மாவட்ட அலுவலகங்களையும், சென்னையில் 1 தலைமையிடத்தையும் கொண்டுள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தலைமையகம் 1994 ஆம் ஆண்டு முதல் தனது சொந்த கட்டிடத்தில் இயங்குகிறது. அதன் 38 மாவட்ட அலுவலகங்களில், 29 மாவட்ட அலுவலகங்கள் சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) மற்றும் ஆய்வகங்கள் அந்தந்த மாவட்ட அலுவலகக் கட்டிடங்களிலேயே இயங்கி வருகின்றன.

**38 மாவட்ட அலுவலக கட்டிடங்களின் விவரங்கள் கீழ்வருமாறு:.**

| வ. எண் | சொந்த கட்டடங்களின் நிலை | கட்டடங்களின் எண்ணிக்கை | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் இருக்கும் இடம் |
|---|---|---|---|
| 1 | சொந்த கட்டிடத்தில் இயங்கும் அலுவலகங்கள் | 30 | அம்பத்தூர், சென்னை, மறைமலை நகர், ஸ்ரீபெரும்புதூர், திருவள்ளூர், திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், கடலூர், வேலூர், விழுப்புரம், ஓசூர், வாணியம்பாடி, கோயம்புத்தூர் (வடக்கு), கோயம்புத்தூர் (தெற்கு), மதுரை, சிவகங்கை, திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், பெருந்துறை, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், நாகப்பட்டிணம், திருவண்ணாமலை, அரியலூர், கும்மிடிபூண்டி, தர்மபுரி, மற்றும் சேலம்.. |
| 2 | கட்டப்பட்டு வரும் அலுவலக கட்டடங்கள் | 4 | நாகர்கோவில், திருப்பூர் (வடக்கு), திருப்பூர் (தெற்கு) மற்றும் தேனி |
| 3 | நிலம் வாங்கப்பட்டது | 2 | ராமநாதபுரம் மற்றும் குமாரபாளையம் |
| 3 | நில அடையாளம் / கொள்முதல் செய்யும் தருவாயில் உள்ள இடங்கள் | 2 | கரூர் மற்றும் ஊட்டி |

### 10.14 தகவல் பெறும் உரிமை சட்டப் பிரிவு

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005, ஒவ்வொரு குடிமகனும் எந்தவொரு தகவலையும் கோரவும், ஆவணங்கள் அல்லது பதிவுகளின் குறிப்புகளை எடுக்கவும், பிரதிகளைப் பெறவும், சான்றளிக்கப்பட்ட நகல்களைப் பெறவும்; பொருட்களின் சான்றளிக்கப்பட்ட மாதிரிகளை எடுக்கவும் அதிகாரம் அளிக்கிறது. தகவல் அறியும் உரிமைச் சட்டம், ஒரு பொது அலுவலர் வைத்திருக்கும் தகவல்களை அணுகும் உரிமையை வழங்குகிறது.

## X வாரியம் ஆற்றும் இதர முக்கிய பணிகள்

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான விண்ணப்பங்களைக் கையாள, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தலைமை அலுவலகத்தில் ஒரு தனிப் பிரிவைக் கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதல்களின்படி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத் தலைமை அலுவலகத்தில் உள்ள கூடுதல் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளரை மாநில தகவல் அலுவலராக (மேல்முறையீட்டு அலுவலர்) நியமித்துள்ளது. மேலும், தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–இன் கீழ் தகவல் கோரும் நபருக்குத் தகவல் வழங்குவதற்காக, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத் தலைமை அலுவலகத்தில் உள்ள இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் மற்றும் 44 மாவட்ட அலுவலகங்களில் உள்ள மாவட்டச் சுற்றுச்சூழல் பொறியாளர்கள் ஆகியோரைப் பொதுத் தகவல் அலுவலர்களாக நியமித்துள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 22.09.2025 முதல் https://rtionline.gov.in/RTIMIS/login/ என்ற இணையதளம் வாயிலாக தகவல் அறியும் உரிமை விண்ணப்பங்களைப் பெறுவதற்கான இணைய வசதியை அறிமுகப்படுத்தி செயல்முறைப்படுத்தியுள்ளது.

2024–25 ஆம் ஆண்டில், இணையவழி மற்றும் அகல்நிலை வழி உட்பட மொத்தம் 643 தகவல் அறியும் உரிமை விண்ணப்பங்கள் மற்றும் 173 முதல் மேல்முறையீடுகள் பெறப்பட்டன, மேலும் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தேவையான தகவல்கள் வழங்கப்பட்டன.

| வ. எண் | மாதம் | தகவல் உரிமை அதிகாரி (P.I.O.) | மேல்முறையீடு |
|---|---|---|---|
| 1 | ஏப்ரல் 2024 | 52 | 18 |
| 2 | மே 2024 | 64 | 12 |
| 3 | ஜூன் 2024 | 35 | 14 |
| 4 | ஜூலை 2024 | 42 | 11 |
| 5 | ஆகஸ்ட் 2024 | 42 | 21 |
| 6 | செப்டம்பர் 2024 | 191 | 17 |
| 7 | அக்டோபர் 2024 | 55 | 10 |
| 8 | நவம்பர் 2024 | 37 | 15 |
| 9 | டிசம்பர் 2024 | 29 | 13 |
| 10 | ஜனவரி 2025 | 35 | 11 |
| 11 | பிப்ரவரி 2025 | 25 | 20 |
| 12 | மார்ச் 2025 | 36 | 11 |
| | **மொத்தம்** | **643** | **173** |

### 10.15 நூலகம்

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய நூலகம் 1989ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தற்போது இந்நூலகம் 12,362 புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை கொண்டுள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நீர் மாசு, காற்று மாசு, வாகன மாசு, கழிவுநீர் சுத்திகரிப்பு, நகர திடக்கழிவு மேலாண்மை, ஒலி மாசு, கடல் மாசு, தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மை, மருத்துவ கழிவு மேலாண்மை, தொழிற்சாலை மாசு, சுற்றுச்சூழல் பொறியியல், பேரழிவு மேலாண்மை, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு, சுற்றுச்சூழல் இரசாயன தொழில்நுட்பம், பொருளாதாரம், சுற்றுச்சூழல் ஆரோக்கியம், பூச்சிக்கொல்லி, உயிரி தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் நலம், சுற்றுச்சூழல் கல்வி, காடுகள், நிலைத்த நீடித்த வளர்ச்சி, சுற்றுச்சூழல் சட்டங்கள், மண், சக்தி, பெண்கள் மற்றும் சுற்றுப்புறச் சூழல் தொழிற்சாலைகளில் சுற்றுச்சூழல் மேலாண்மை, மாசுக் கட்டுப்பாடு வாரிய அறிவிக்கைகள் போன்ற தலைப்புகளில் புத்தகங்கள் டியூவி இலக்க வகைப்பாடு முறைப்படி வகைப்படுத்தப்பட்டு பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட 10 (தமிழ் மற்றும் ஆங்கிலம்) இதழ்கள், 16 செய்தித்தாள்கள், 10 வார / மாத புத்தகங்கள் தருவிக்கப்படுகின்றன. இவற்றைத் தவிர, இந்திய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் ஆண்டறிக்கைகள், செய்தி வெளியீடுகள், இதழ்கள் மற்றும் அறிவிக்கைகள் பெறப்படுகின்றன. வருடம் வாரியாக இதழ்கள் கோர்க்கப்பட்டு நூலக உபயோகிப்பாளர்கள் தங்களுக்குத் தேவையான தகவல்களை விரைவில் கண்டறியும் வகையில் முறைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. நூலகம் வாரிய உயர் அதிகாரிகள், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை மற்றும் இந்திய தொழில்நுட்ப கழகம், சென்னை ஆகியவற்றின் பேராசிரியர்களை உள்ளடக்கிய நூலகக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. சுற்றுச்சூழல் குறித்த விவரங்கள் சேகரிப்போர் இந்த நூலகத்தில் உறுப்பினராகலாம். உபயோகிப்பாளர்கள் நகல் எடுக்கவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட பணியிலிருப்போர், தொழில் நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் போன்றோர் நூலகத்தைப் பயன்படுத்துகின்றனர். சென்னை மட்டுமின்றி தமிழகம் முழுவதும் இருந்தும், அண்டை மாநிலங்களில் இருந்தும் வாசகர்கள் நூலகத்திற்கு வந்து படித்துப் பயனடைகின்றனர்.

### 10.16 சுற்றுச்சூழல் அறிக்கை

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974, காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981 அல்லது தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து எடுத்துச் செல்லுதல்) விதிகள், 2016 ஆகிய விதிகளின் கீழ் வரும் தொழிற்சாலைகள் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகள், 1986ன் கீழ் உள்ள விதி 14ன் அடிப்படையில் கட்டாயமாக சுற்றுச்சூழல் அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும்.

தொழிற்சாலைகள், ஒவ்வொரு நிதியாண்டிற்கும், சுற்றுச்சூழல் அறிக்கையினை, செப்டம்பர் மாதம் 30ம் தேதிக்குள் மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் படிவம்–Vல் சமர்பிக்க வேண்டும். அதிக மாசு விளைவிக்கும், 17 வகை தொழிற்சாலைகளிடமிருந்து சுற்றுச்சூழல் அறிக்கைகளை வாரியம் பெற்று வருகிறது. நீர், ஆற்றல் மற்றும் இதர வளங்களின் பயன்பாட்டினையும், மாசு அளவினை குறைக்க தொழிற்சாலைகள் எடுத்த நடவடிக்கைகளையும், இவ்வறிக்கைகள் மூலம் வாரியம் ஆய்வு செய்கிறது. அதன் விளைவாக, மாசு கட்டுப்பாடு கருவிகளின் செயல்பாட்டை மேம்படுத்த தொழிற்சாலைகள் அறிவுறுத்தப்படுகின்றன.

### 10.17 வாரியத்தின் இணையவழி சேவைகள்

தொழில்கள் மற்றும் பொதுமக்களுக்கு வணிகம் செய்வதை எளிதாக்குதல் மற்றும் வெளிப்படைத்தன்மையின் ஒரு பகுதியாக, வாரியத்தின் செயல்பாடுகள் கணினிமயமாக்கப்பட்டு இணையவழி மூலம் சேவைகள் வழங்கபடுகிறது.

| வ. எண் | இணையவழி மென்பொருள் | சேவை |
|---|---|---|
| 1 | இணையதள ஒப்புதல் மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு (OCMMS) | தொழில்களின் ஒப்புதல் மற்றும் அங்கீகார விண்ணப்பங்களை செயலாக்குவதற்கான சேவை |
| 2 | ஆன்லைன் குறை தீர்க்கும் அமைப்பு (OLGPRS) | சட்ட வழக்குகளை செயலாக்குவதற்கான சேவை |
| 3 | ஆன்லைன் சட்ட வழக்கு மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு (OLMMS) | சட்ட வழக்குகளை செயலாக்குவதற்கான சேவை |
| 4 | நேரில் புகார்களை அணுகும் முறை | பொதுமக்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க மாதம் ஒரு முறை நேரில் அணுகலாம் |
| 5 | தொழில்துறைகளுக்கான தன்னார்வ பசுமை மதிப்பீடு | சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நிலைத்த செயல்பாடுகளை மேற்கொள்ளும் தொழில்துறைகளை அங்கீகரிக்கும் தன்னார்வ முறை. |
| 6 | இணையக் கழிவு பரிமாற்ற மையம் | கழிவுகளை பரிமாற்றம் / வர்த்தகம் செய்வதற்கான மையப்படுத்தப்பட்ட இணையதளம். |

#### 10.17.1 ஒருங்கிணைந்த ஒற்றைச் சாளர இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை (Online Consent Management and Monitoring System)

தொழில் முனைவோர், வாரிய இசைவாணை விண்ணப்பங்களை சுலபமாக ஒருங்கிணைந்த ஒற்றைச் சாளர இணையதளத்தின் மூலம் சமர்ப்பிக்கும் பொருட்டு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமையை செயல்படுத்திவருகின்றது. இதன் மூலம், ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், 150 ஒப்புதல் / அனுமதி விண்ணப்பங்களை பெற்றது. இதில் 144 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டன; 3 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன மற்றும் 3

விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பப்பட்டன. திருப்பி அனுப்பப்பட்ட / நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் மீதான தொடர்ச்சியான நடவடிக்கைகளுக்கும் வாரியம் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.

**10.18 நீடித்த வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals)**

நீடித்த வளர்ச்சி இலக்குகள் வறுமையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், பூமியை பாதுகாப்பதற்கும், அனைத்து மக்களும் அமைதி மற்றும் செழிப்பை அனுபவிப்பதை உறுதி செய்வதற்கும் அரசாங்கங்களுக்கு இடையே ஒப்புக்கொள்ளப்பட்ட சர்வதேச வளர்ச்சி தொடர்பான இலக்குகளின் தொகுப்பாகும். செப்டம்பர் 2015ல் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபை உச்சிமாநாட்டில் முடிவு செய்தபடி 17 குறிக்கோள்கள் மற்றும் 169 இலக்குகளை, நிலையான வளர்ச்சி இலக்குகள் உள்ளடக்கியுள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDG) அடைவதற்காக உறுதியளிக்கப்பட்ட 2030 நிகழ்ச்சி நிரலில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

வாரியம் தொடர்பான இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் குறியீடுகள் அவற்றின் தற்போதைய நிலை பின்வருமாறு:

**இலக்கு–6:** "சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம் (Clean Water and Sanitation)" – அனைவருக்கும் தண்ணீர் மற்றும் சுகாதாரம் கிடைப்பதையும் அவற்றின் நீடித்த மேலாண்மையையும் உறுதி செய்தல்

இந்த இலக்கை எட்டுவதற்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நீரின் தரத்தினை உயர்த்துவதற்காக நீர் மாசினை குறைத்தல், கழிவுகள் கொட்டப்படுவதைத் தவிர்த்தல், தீங்கு விளைவிக்கும் கழிவுகள் வெளியேற்றத்தை குறைத்தல் ஆகியவற்றை மேற்கொள்ள முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. மேலும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மறுசுழற்சி மற்றும் மறு உபயோகம் செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ள முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதன் மீதான முன்னேற்றம், சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்துள்ள தொழிற்சாலைகளின் சதவிகிதத்தைக் கொண்டு கணக்கிடப்படுகிறது. மாநிலத்தில் கழிவுநீரினை அதிக அளவில் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அனைத்தையும், பூஜ்ஜிய திரவு வெளியேற்ற (Zero Liquid Discharge) அமைப்புடன் கூடிய சுத்திகரிப்பு நிலையம் அமைத்து கழிவுநீரினை மறுசுழற்சி செய்ய வேண்டும் என வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

**இலக்கு–9:** "தொழிற்சாலைகளில் புதுமை மற்றும் சிறந்த உள்கட்டமைப்பு (Industries Innovation and Infrastructure)" – உறுதியான உள்கட்டமைப்பை உருவாக்குதல், அனைத்தையும் உள்ளடக்கிய நீடித்த தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல், புதுமையானவற்றை வளர்த்தல்

## X வாரியம் ஆற்றும் இதர முக்கிய பணிகள்

இதன் இலக்கு தேசிய அளவில் வேலை வாய்ப்பு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தொழிற்சாலைகளின் பங்களிப்பினை 2030 ஆம் ஆண்டிற்குள் குறிப்பிடும்படியாக உயர்த்துவது ஆகும். இதனை சாத்தியமாக்க, காற்றின் தர அளவுகள் கண்காணிப்பை ஒரு முக்கிய குறியீடாக நிர்ணயித்து, இக்குறிக்கோள் கணக்கிடப்படுகிறது. தொடர்ச்சியாக காற்றின் தர அளவுகளை கண்காணித்து இக்குறியீட்டை அடைய வாரியம் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

**இலக்கு–12:** 'நுகர்வு மற்றும் உற்பத்தியில் நீடித்தத்தன்மை (Sustainable Consumption and Production)'–நீடித்த நுகர்வையும், உற்பத்தி முறையையும் உறுதி செய்தல்

தீங்கு விளைவிக்கும் வேதிப்பொருட்கள் மற்றும் கழிவுகள் வெளியேற்றத்தை 2020–ம் ஆண்டிற்குள் குறைப்பதை, இந்த இலக்கு கட்டாயமாக்குகிறது. இந்த இலக்கை எட்டுவதற்கு சுற்றுச்சூழல் கண்காணிப்பு நிலையங்கள் மூலமாக சுற்றுச்சூழல் தரம் கண்காணிப்பு என்ற குறியீட்டின் மூலம் இந்த குறிக்கோள் கணக்கிடப்படுகிறது. மாநிலத்தில் தற்போது 177 இடங்களில் உள்நாட்டு நீர்நிலைகளின் தன்மையும் 120 இடங்களில் சுற்றுப்புற காற்று தன்மையும் வாரியத்தால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**இலக்கு–13:** 'காலநிலை நடவடிக்கை' (Climate Action)' – பருவநிலை மாற்றத்தையும் அதன் தாக்கத்தையும் எதிர்கொள்ள அவசர நடவடிக்கையினை மேற்கொள்ளுதல்

கல்வி அறிவினை மேம்படுத்துதல், விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துதல், பின்பற்றுதல், தாக்கத்தை குறைத்தல் மற்றும் முன்னெச்சரிக்கை ஆகியவற்றில் தனிநபர் மற்றும் நிறுவன அமைப்பின் தரத்தை உயர்த்துதல் முதலியவை இந்த இலக்கின் நோக்கம் ஆகும். அதன்படி வாரியம், சுற்றுச்சூழல் பயிற்சி மையம் மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்புகளையும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் தொடர்ந்து நடத்தி வருகிறது. அதனடிப்படையில், 2024–25–ம் ஆண்டில் 23 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, 1285 பேர் பயனடைந்துள்ளனர்.

## X வாரியம் ஆற்றும் இதர முக்கிய பணிகள்

இலக்குகளை அடைவதில் தமிழ்நாடு மாசுக் கட்டுபாடு வாரியத்தின் முன்னேற்றம் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

<table>
<tr><th>துணை வகை</th><th>2015 – 2016</th><th>2016 – 2017</th><th>2017 – 2018</th><th>2018 – 2019</th><th>2019 – 2020</th><th>2020 – 2021</th><th>2021 – 2022</th><th>2022 – 2023</th><th>2023 – 2024</th><th>2024 – 2025</th></tr>
<tr><td colspan="11">இலக்கு 6 சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம்<br>குறிக்கோள் 6.3 2030 ஆம் ஆண்டளவில், மாசுபாட்டைக் குறைப்பதன் மூலம் நீரின் தரத்தை மேம்படுத்துதல், அபாயகரமான இரசாயனங்கள் மற்றும் பொருட்களின் வெளியேற்றத்தைக் குறைத்தல், சுத்திகரிக்கப்படாத கழிவு நீரின் விகிதத்தை பாதியாகக் குறைத்தல் மற்றும் உலகளாவிய மறுசுழற்சி மற்றும் பாதுகாப்பான பயன்பாட்டை கணிசமாக அதிகரித்தல்<br>குறியீடு 6.3.2 கழிவு நீர் சுத்திகரிப்புக்கு இணங்கும் தொழிற்சாலைகளின் சதவீதம் (அதிக மாசுபடுத்தும் தொழில்கள் / மொத்தமாக மாசுபடுத்தும் தொழில்கள் / சிவப்பு வகை தொழில்கள்)</td></tr>
<tr><td>–</td><td>96%</td><td>96.5%</td><td>97%</td><td>97.97 %</td><td>98.5%</td><td>98.6%</td><td>99%</td><td>99.2 %</td><td>99.7%</td><td>99.74 %</td></tr>
<tr><td colspan="11">இலக்கு 9 தொழில், புத்தாக்கம்மற்றும்உள்கட்டமைப்பு<br>குறிக்கோள் 9.4<br>2030 ஆம் ஆண்டிற்குள், அனைத்து நாடுகளும் தத்தமது திறன்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுப்பதன் மூலம், அதிகரித்த வளப் பயன்பாட்டுதிறன், சுத்தமான சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்துறை செயல்முறைகளை அதிக அளவில் ஏற்றுக் கொள்வதன்மூலம், உள்கட்டமைப்பு மற்றும் மறுசீரமைப்புத் தொழில்களை நிலையானதாக மாற்றுவது.<br>குறியீடு 9.4.1aசுற்றுப்புற காற்றின் தர கண்காணிப்பு நிலையங்களின் எண்ணிக்கை</td></tr>
<tr><td>–</td><td>36 (28 NAMP ன் கீழ் + 7 CAAQMS + 1 மொபைல் CAAQMS)</td><td>36 (28 NAMP ன் கீழ் + 7 CAAQMS + 1 மொபைல் CAAQMS)</td><td>38 (28 NAMP ன் கீழ் + 9 CAAQMS + 1 மொபைல் CAAQMS)</td><td>38 (28 NAMP ன் கீழ் + 9 CAAQMS + 1 மொபைல் CAAQMS)</td><td>38 (28 NAMP ன் கீழ் + 9 CAAQMS + 1 மொபைல் CAAQMS)</td><td>87 (52 NAMP ன் கீழ் + 34 CAAQMS + 1 மொபைல் CAAQMS)</td><td>87 (52 NAMP ன் கீழ் + 34 CAAQMS + 1 மொபைல் CAAQMS)</td><td>87 (52 NAMP ன் கீழ் + 34 CAAQMS + 1 மொபைல் CAAQMS)</td><td>87 (52 NAMP ன் கீழ் + 34 CAAQMS + 1 மொபைல் CAAQMS</td><td>120 (82 NAMP ன் கீழ் + 34 CAAQMS + மொபைல் CAAQMS</td></tr>
</table>

# X வாரியம் ஆற்றும் இதர முக்கிய பணிகள்

**இலக்கு 12 பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி**

**குறிக்கோள் 12.4** 2020 ஆம் ஆண்டிற்குள், ஒப்புக்கொள்ளப்பட்ட சர்வதேச கட்டமைப்பின்படி, இரசாயனங்கள் மற்றும் அனைத்து கழிவுகளையும் அவற்றின் வாழ்க்கைச் சுழற்சியில் சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறு மேலாண்மை செய்து, மனித ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழலில் அவற்றின் பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்காக காற்று, நீர் மற்றும் மண்ணில் வெளியிடுவதைக் கணிசமாகக் குறைக்க வேண்டும்.

**குறியீடு 12.4.2 தர கண்காணிப்புஅறிமுகம் மூலம் மாநிலம் முழுவதும் கண்காணிப்பு நிலையங்கள்**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செயல்படும்சுற்றுப்புற காற்றின் தர கண்காணிப்பு நிலையங்களின் எண்ணிக்கை | 36 (28 NAMP ன் கீழ் + 7 CAAQMS + 1 மொபைல் CAAQMS) | 36 (28 NAMP ன் கீழ் + 7 CAAQMS + 1 மொபைல் CAAQMS) | 38 28 NAMP ன் கீழ் + 9 CAAQMS + 1 மொபைல் CAAQMS) | 38 (28 NAMP ன் கீழ் + 9 CAAQMS + 1 மொபைல் CAAQMS) | 38 28 NAMP ன் கீழ் + 9 CAAQMS + 1 மொபைல் CAAQMS) | 87 (52 NAMP ன் கீழ் + 34 CAAQMS + 1 மொபைல் CAAQMS) | 87 (52 NAMP ன் கீழ் + 34 CAAQMS + 1 மொபைல் CAAQMS) | 87 (52 NAMP ன் கீழ் 34 CAAQMS + 1 மொபைல் CAAQMS) | 87 (52 NAMP ன் கீழ் + 34 CAAQMS + 1 மொபைல் CAAQMS | 120 (52 NAMP ன் கீழ் + 34 CAAQMS + மொபைல் CAAQMS |
| செயல்படும் நீர் தர கண்காணிப்பு நிலையங்களின் எண்ணிக்கை | 94 (55 ஜெம்ஸ் &மினார்ஸ் கீழ் + 30 CCWMP கீழ் + 9 CWQMS) | 94 (55 ஜெம்ஸ் &மினார்ஸ் + 30 கீழ் CCWMP கீழ் + 9 CWQMS) | 97 (55 ஜெம்ஸ் &மினார்ஸ் கீழ் + 30 CCWMP கீழ் + 12 CWQMS) | 97 (55 ஜெம்ஸ் &மினார்ஸ் கீழ் + 30 CCWMP கீழ் + 12 CWQMS) | 99 (55 ஜெம்ஸ் &மினார்ஸ் கீழ் + 30 CCWMP கீழ் + 14 CWQMS) | 89 (58 ஜெம்ஸ் &மினார்ஸ் கீழ் + 30 CCWMP கீழ் + 1** CWQMS) | 194 (113 NWMP கீழ் + 64 NWMP கீழ் + 17 CCWM கீழ்) | 175 (158 NWMP கீழ் + 17 CCWM கீழ்) | 177 (158 NWMP கீழ் + 19 CCWM கீழ்) | 177 (158 NWMP கீழ் + 19 CCWM கீழ்) |
| செயல்படும் சுற்றுப்புற இரைச்சல் கண்காணிப்பு நிலையங்களின் எண்ணிக்கை | 10 (NANMNP இன் கீழ்) | 10 (NANMNP இன் கீழ்) | 10 (NANMNP இன் கீழ்) | 10 (NANMNP இன் கீழ்) | 10 (NANMNP இன் கீழ்) | 10 (NANMNP இன் கீழ்) | 10 (NANMNP இன் கீழ்) | 10 (NANMNP இன் கீழ்) | 10 (NANMNP இன் கீழ்) | 10 (NANMNP இன் கீழ்) |
| தேசியநீர்தர கண்காணிப்பு திட்டத்தின்கீழ் கண்காணிக்கப்படும் ஆறுகளின் எண்ணிக்கை | 4 | 4 | 4 | 4 | 8 | 8 | 8 | 12 | 12 | 12 |
| அளவீடுகளை எட்டா நகரங்களின் எண்ணிக்கை | 0 | 0 | 0 | 1 | 2 | 2 | 4 | | 4 | 4 |
| செயல்படும் CETPகளின் எண்ணிக்கை | 35 | 35 | 35 | 35 | 36 | 36 | 33 | 36 | 34 | 35 |
| பூஜ்ஜியதிரவம் வெளியேற்ற அமைப்புகளுடன் செயல்படும் CETPகளின் எண்ணிக்கை | 31 | 31 | 31 | 31 | 32 | 32 | 30 | 33 | 30 | 31 |

## X வாரியம் ஆற்றும் இதர முக்கிய பணிகள்

<table>
<tr><td colspan="11">NAMP–தேசியகாற்று தரகண்காணிப்பு திட்டம்<br>CAAQMS– தொடர்சுற்றுப்புற காற்றுதரகண்காணிப்பு நிலையம்<br>GEMS– புவிச்சுற்றுச்சுழல் கண்காணிப்பு திட்டம்<br>MINARS– இந்திய தேசிய நீர்வளஆதாரங்கள் கண்காணிப்பு திட்டம்<br>CCWMP– சென்னை மாநகர நீர்வழி கண்காணிப்பு திட்டம்<br>CWQM–கடற்கரையோர நீர்தரகண்காணிப்பு<br>NANMNP–தேசிய சுற்றுப்புற ஒலிஅளவு கண்காணிப்பு திட்டம்</td></tr>
<tr><td colspan="11">குறியீடு – 12.5.4 தீங்குவிளைவிக்கும் கழிவுகளின் தலா உற்பத்தி</td></tr>
<tr><td>–</td><td>8.95</td><td>5.31</td><td>7.99</td><td>12.88</td><td>13.37</td><td>10.96</td><td>11.38</td><td>15.8</td><td>18.2</td><td>15.5</td></tr>
<tr><td colspan="11">குறியீடு – 12.5.5 செயலாக்கம் செய்யப்பட்ட தீங்குவிளைவிக்கும் கழிவுகள் மற்றும் உற்பத்தியான மொத்த தீங்குவிளைவிக்கும் கழிவுகளுக்குமான விகிதாசாரம்</td></tr>
<tr><td>–</td><td>0.4</td><td>0.32</td><td>0.63</td><td>0.74</td><td>0.89</td><td>0.88</td><td>0.86</td><td>0.86</td><td>0.898</td><td>0.86</td></tr>
<tr><td colspan="11">குறிக்கோள் 13<br>காலநிலை நடவடிக்கை<br>இலக்கு 13.3<br>காலநிலை மாற்றத்தைத் தணித்தல், தழுவல், தாக்கத்தைக் குறைத்தல் மற்றும் முன்கூட்டிய எச்சரிக்கை ஆகியவற்றில் கல்வி, விழிப்புணர்வு மற்றும் மனித மற்றும் நிறுவன திறனை மேம்படுத்துதல்<br>குறியீடு 13.3.2<br>மாநிலத்தில் தழுவல், தணிப்பு மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை செயல்படுத்த நிறுவன, அமைப்பு மற்றும் தனிப்பட்ட திறன்களை வலுப்படுத்துதல்.</td></tr>
<tr><td>மாசு கட்டுப்பாடு: திறன் மேம்படுத்துதல் மூலம் பயனடைந்தவர்–களின் எண்ணிக்கை</td><td>1746</td><td>522</td><td>388</td><td>761</td><td>1689</td><td>327</td><td>863</td><td>1192</td><td>412</td><td>769</td></tr>
<tr><td>மாசு கட்டுப்பாடு: விழிப்புணர்வு நிகழ்ச்சி (எண்கள்)</td><td>100</td><td>109</td><td>111</td><td>172</td><td>190</td><td>193</td><td>196</td><td>732</td><td>1070</td><td>1285</td></tr>
</table>

# இணைப்புகள்

# இணைப்பு – I: நிர்வாக அமைப்பு




| | |
|---|---|
| ACEE | Additional Chief Environmental Engineer<br>கூடுதல் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் |
| JCEE | Joint Chief Environmental Engineer<br>இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் |
| JCEE (M) | Joint Chief Environmental Engineer (Monitoring)<br>இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) |
| EE | Environmental Engineer<br>சுற்றுச்சூழல் பொறியாளர் |
| DEE | District Environmental Engineer<br>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் |
| AEE | Assistant Environmental Engineer<br>உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் |
| AE | Assistant Engineer<br>உதவி பொறியாளர் |
| FA | Financial Advisor<br>நிதி ஆலோசகர் |
| Sr. M | Senior Manager<br>முதுநிலை மேலாளர் |
| M (P&A) | Manager (Personal & Administration)<br>மேலாளர் (பணி மற்றும் நிர்வாகம்) |

| | |
|---|---|
| M (I.A) | Manager (Internal Audit)<br>மேலாளர் (உள் தணிக்கை) |
| DM | Deputy Manager<br>துணை மேலாளர் |
| ADM | Additional Manager<br>கூடுதல் மேலாளர் |
| DD | Deputy Director<br>இணை இயக்குனர் |
| AD | Additional Director<br>உதவி இயக்குனர் |
| CSO | Chief Scientific Officer<br>தலைமை விஞ்ஞான அலுவலர் |
| DCSO | Deputy Chief Scientific Officer<br>துணை தலைமை விஞ்ஞான அலுவலர் |
| ES | Environmental Scientist<br>சுற்றுச்சூழல் விஞ்ஞானி |
| AEL | Advanced Environmental Laboratory<br>மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம் |
| DEL | District Environmental Laboratory<br>மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம் |

# இணைப்புகள்

## இணைப்பு – II: வாரியத்தின் அலுவலகங்கள்




| எண் | கண்காணிப்பு அலுவலகம் | | மாவட்ட அலுவலகம் |
|---|---|---|---|
| 1 | சென்னை | 1 | அம்பத்தூர் |
| | | 2 | சென்னை வடக்கு |
| | | 3 | திருவள்ளூர் |
| | | 4 | கும்மிடிப்பூண்டி |
| | | 5 | மணலி |
| 2 | செங்கல்பட்டு | 6 | மறைமலை நகர் |
| | | 7 | ஸ்ரீபெரும்புதூர் |
| | | 8 | சென்னை தெற்கு |
| 3 | கோயம்புத்தூர் | 9 | கோயம்புத்தூர் வடக்கு |
| | | 10 | கோயம்புத்தூர் தெற்கு |
| | | 11 | திருப்பூர் வடக்கு |
| | | 12 | திருப்பூர் தெற்கு |
| | | 13 | ஊட்டி |
| 4 | கடலூர் | 14 | கடலூர் |
| | | 15 | நாகப்பட்டினம் |
| | | 16 | திருவாரூர் |
| | | 17 | விழுப்புரம் |
| 5 | மதுரை | 18 | மதுரை |
| | | 19 | தேனி |
| | | 20 | சிவகங்கை |
| | | 21 | விருதுநகர் |
| | | 22 | இராமநாதபுரம் |
| | | 23 | திண்டுக்கல் |
| 6 | சேலம் | 24 | ஈரோடு |
| | | 25 | நாமக்கல் |
| | | 26 | பெருந்துறை |
| | | 27 | சேலம் |
| | | 28 | தருமபுரி |
| | | 29 | குமாரபாளையம் |
| 7 | திருநெல்வேலி | 30 | திருநெல்வேலி |
| | | 31 | தூத்துக்குடி |
| | | 32 | நாகர்கோவில் |
| | | 33 | தென்காசி |
| 8 | திருச்சி | 34 | திருச்சி |
| | | 35 | அரியலூர் |
| | | 36 | புதுக்கோட்டை |
| | | 37 | தஞ்சாவூர் |
| | | 38 | பெரம்பலூர் |
| | | 39 | கரூர் |
| 9 | வேலூர் | 40 | வேலூர் |
| | | 41 | ஒசூர் |
| | | 42 | திருவண்ணாமலை |
| | | 43 | வாணியம்பாடி |
| | | 44 | ராணிப்பேட்டை |

| பறக்கும் படை அலுவலகங்கள் ◆ |
|---|
| செங்கல்பட்டு |
| ஈரோடு |
| சேலம் |
| திருப்பூர் |
| வேலூர் |
| மணலி |
| எண்ணூர் (MERRC) |

| மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் ★ |
|---|
| சென்னை |
| வேலூர் |
| கடலூர் |
| சேலம் |
| திருச்சி |
| கோயம்புத்தூர் |
| மதுரை |
| திருநெல்வேலி |

| மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் ▲ |
|---|
| அம்பத்தூர் |
| மணலி |
| மறைமலை நகர் |
| ஒசூர் |
| பெருந்துறை |
| திருப்பூர் |
| திண்டுக்கல் |
| தூத்துக்குடி |
| ஸ்ரீபெரும்புதூர் |
| நாகப்பட்டினம் |

# இணைப்புகள்

## இணைப்பு – III A: ஆய்வகங்களின் செயல்பாடு (ஏப்ரல் 2024 – மார்ச் 2025) – நீர் மாதிரிகள்

